உள்ளடக்கம்.

31-3-1990

பக்கங்கள்.

1. வினாக்கள்-விடைகள் .. 285—312

உடுக்குறியிட்ட வினாக்கள் ..

2. வினா நேரம் முடிவுற்றபின் பேரவைத் தலைவரின் அனுமதி பெற்றுச் சில பொதுப் பிரச்சினைகளை எழுப்பும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து. 312—319

3. உரிமை மீறல் பிரச்சினை—

'தினமலர்' நாளிதழ் மீது—அவை நடவடிக்கைகள் பற்றி வெளியிடப்பட்டுள்ள செய்தி குறித்து. 319—321

4. அறிவிப்பு—

இந்திய ஐக்கியப் பொதுவுடைமைக் கட்சி சட்டமன்றப் பேரவையில் ஒரு அணியாகச் செயல்படுதல். 321—322

5. கவன ஈர்ப்பு—

(அ) பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்குத் தமிழ் மொழியில் பாட நூல்கள் இல்லாதது குறித்து. 322—324

(ஆ) கோவையில் பேருந்து நிலையங்களுக் கிடையே சுரங்கப் பாதை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து. 324—327

6. அறிக்கை அளித்தல்—

பொதுக் கணக்குக் குழு ... 327

விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்—

(அ) நாகப்பட்டினத்திலிருந்து படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற சிலர் பாதுகாப்புடன் திரும்பியுள்ளது குறித்து. 327—329

பக்கங்கள்

(ஆ) விடுதலைப் புலிகள் நிலை பற்றி இந்தியாவில், 'நகைமுகன்' என்பவர் பேசியதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து. 329

8. சட்ட முன்வடிவு—(ஆய்வு செய்தல்)—

நிதி ஒதுக்க (எண். 2) சட்டமுன் வடிவு, 1990 329—330

9. மானியக் கோரிக்கைகள், 1990–91—விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 25—சின்கோனா ..
(ஆ) கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை
(இ) கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்
(ஈ) கோரிக்கை எண். 56—காட்டுவளம் குறித்தமூலதனச் செலவு.
} 330—435

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி .. 330—333, 388—390, 403—417
மாண்புமிகு திரு. கே. என். நேரு .. 393—432, 433
*திரு. எம். அண்ணாமலை .. 333—340
திரு. என். தங்கவேல் .. 340—345
திரு. இளம்வழுதி .. 345—350
*திரு. ராம. நாராயணன் .. 350—354
திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் .. 354—364
*திரு. பி. காளியப்பன் .. 364—366
திரு. பி.எச். பாண்டியன் .. 366—377
திரு. எம். முகமது சித்திக் .. 378—382
*திரு. சோ. அழகர்சாமி .. 382—388
திரு. பி. என். வல்லரசு .. 390—393

10. டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு ''பாரத ரத்னா'' விருது வழங்கப்பெற்றுள்ள செய்தி. 428—429

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 435—437

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பங்குனி 17, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021

1990, மார்ச் 31, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்''.

மயில் இறகு ஏற்றிய வண்டியே ஆனாலும் அந்தப் பண்டமும் அளவோடு ஏற்றப்படாமல், அளவு கடந்து அதிகமாக ஏற்றப் படுமானால் அச்சு முறிந்து போகும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வினாக்கள் 2556 மற்றும் 3026 தள்ளி வைக்கப்படு கின்றன.

'நேரு' அறிவியல் நூல் வழங்கும் திட்டம்.

*1783—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அறிவியல் பாடங்களைப் படிக்கும் மாணவர்களை ஊக்குவிப்பதற்கென்று குடியரசுத் தலைவர் ஆட்சியில் தொடங் கப்பட்ட 'நேரு' அறிவியல் நூல் வழங்கும் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே,

(அ) மேலும் விரிவுபடுத்தும் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1990 மார்ச் 31

மத்தியப் பல்கலைக் கழகம்.

*4056—திரு. ஆ. அறிவழகன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் மத்தியப் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்துமாறு மைய அரசைக் கோரும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க அன்பழகன் : தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தமிழகத்தில் மாநில சார்பில் மத்திய பல்கலைக் கழகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, மத்தியப் பல்கலைக் கழகம் ஆந்திரப் பிரதேசத்திலும் பாண்டிச்சேரியிலும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைப்போல தமிழ்நாட்டிலும் ஒரு மத்தியப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்த நம்முடைய மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தினால் நம்முடைய தமிழ்நாட்டில் வந்து இந்தியா முழுவதும் உள்ள மாணவர்கள் கல்வி கற்பதற்கும், தேசிய ஒருமைப்பாடு வளருவதற்கும் ஏதுவாக இருக்கும். ஆகையால் மாநில அரசு மத்திய அரசுக்கு இப்படிப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தை ஏற்படுத்த சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, பல்கலைக் கழகங்கள் போதுமான அளவுக்கு இல்லை என்ற நிலையோ அல்லது மத்தியப் பல்கலைக் கழகம் ஏற்பட்டால் தான் இந்தக் குறை தீரும் என்ற கருத்தோ அரசுக்கு இருக்குமானால் வலியுறுத்தலாம். தமிழ்நாட்டில் போதுமான அளவுக்குப் பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. ஆகையால் அடிப்படையான கல்வி வளர்ச்சிக்கு மத்திய அரசு தரக்கூடிய உதவிகளைப் பெறுவதற்கு வலியுறுத்துவதிலே இந்த அரசு மிகுந்த அக்கறையோடு இருக்கிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : தலைவரவர்களே, மத்தியப் பல்கலைக் கழகம் வருமானால், ''ஸ்டான்டர்ட் ஆஃப் எஜுகேஷன்'' அதிகமாக இருக்கும். ''ஆல் இந்தியா'' அளவில் ''காம்படிஷனுக்கு'' செல்லும் மாணவர்களில் தமிழ்நாட்டின் பங்கு அதிகமாக இருக்கும். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற தேர்வுகளில் தமிழ்நாட்டு மாணவர்களின் தேர்வு அதிகமாக இருக்கும். மற்ற மாநில மாணவர்களோடு பழகவும் இதனால்

1990 மார்ச் 31]

வாய்ப்பு ஏற்படும் ஆகையால் ஹைதராபாத், பாண்டிச்சேரியில் இருக்கின்ற பல்கலைக் கழகத்தைப்போல தமிழ்நாட்டிலும் நிறுவ தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, மத்தியப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டால் ஐ.ஏ.எஸ்., ஐ.பி. எஸ். போன்ற தேர்வுகளில் அதிகம் பேர் வெற்றிபெறுவார்கள் என்று பேசுவதோ, கருதுவதோ அவ்வளவு ஆதாரத்தோடு கூடியது அல்ல. ஏதோ மத்தியப் பல்கலைக் கழகம் என்று சொல்லுகிற காரணத்தால் மாநிலப் பல்கலைக் கழகங்கள் எல்லாம் தரம் குறைந்தவை என்று வேறுபடுத்துவது நியாயம் அல்ல. அவையவை, கல்வித் துறையிலே எந்தெந்த வகையிலே சிறப்பாகப் பணியாற்ற முடியுமோ அந்த அளவுக்கு அவற்றிற்குள்ள வசதிக்கு ஏற்ப ஆற்றிக் கொண்டிருக்கின்றன.

திரு. வ. முல்லைவேந்தன் : தலைவரவர்களே, பல்கலைக் கழகத்தை ஒட்டிய ஒரு கேள்வி. சென்னைப் பல்கலைக் கழகத்தில் தற்போது நியமிக்கப்பட்டிருக்கிற ஐ.ஏ.எஸ். பதிவாளரைப் போன்றே எதிர் காலத்தில் மற்ற பல்கலைக் கழகங்களிலும் பதிவாளர்கள் நியமிக்கப்படுவார்களா அல்லது பழைய மரபுப்படி பேராசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் பதிவாளராக நியமிக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை அல்ல. சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்ட குறைபாடுகள், விதிமுறைகளை மீறிய சில தவறுகள், செயல் முறைகள் இவை பற்றி ஆய்வு நடத்தக் கூடிய நிலையிலே அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி பதிவாளராக இருக்கிறார். அதுவே அரசாங்கத்தினுடைய கொள்கை அல்ல.

புதிய தொழில்கள் துவங்க மத்திய அரசு அனுமதி.

*2556—திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1989-ல் தமிழகத்தில் புதிய தொழில்கள் துவங்க மத்திய அரசு அனுமதித்துள்ள தொழில்கள் எத்தனை ?

(ஆ) அவை எந்தவிதமான தொழில்கள் ?

(இ) அவற்றில் தனியார் துறை, பொதுத்துறை தொழில்கள் எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1990 மார்ச் 31]

வாய்ப்பு ஏற்படும் ஆகையால் ஹைதராபாத், பாண்டிச்சேரியில் இருக்கின்ற பல்கலைக் கழகத்தைப்போல தமிழ்நாட்டிலும் நிறுவ தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, மத்தியப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டால் ஐ.ஏ.எஸ்., ஐ.பி. எஸ். போன்ற தேர்வுகளில் அதிகம் பேர் வெற்றிபெறுவார்கள் என்று பேசுவதோ, கருதுவதோ அவ்வளவு ஆதாரத்தோடு கூடியது அல்ல. ஏதோ மத்தியப் பல்கலைக் கழகம் என்று சொல்லுகிற காரணத்தால் மாநிலப் பல்கலைக் கழகங்கள் எல்லாம் தரம் குறைந்தவை என்று வேறுபடுத்துவது நியாயம் அல்ல. அவையவை, கல்வித் துறையிலே எந்தெந்த வகையிலே சிறப்பாகப் பணியாற்ற முடியுமோ அந்த அளவுக்கு அவற்றிற்குள்ள வசதிக்கு ஏற்ப ஆற்றிக் கொண்டிருக்கின்றன.

திரு. வ. முல்லைவேந்தன் : தலைவரவர்களே, பல்கலைக் கழகத்தை ஒட்டிய ஒரு கேள்வி. சென்னைப் பல்கலைக் கழகத்தில் தற்போது நியமிக்கப்பட்டிருக்கிற ஐ.ஏ.எஸ். பதிவாளரைப் போன்றே எதிர் காலத்தில் மற்ற பல்கலைக் கழகங்களிலும் பதிவாளர்கள் நியமிக்கப்படுவார்களா அல்லது பழைய மரபுப்படி பேராசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் பதிவாளராக நியமிக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை அல்ல. சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்ட குறைபாடுகள், விதிமுறைகளை மீறிய சில தவறுகள், செயல் முறைகள் இவை பற்றி ஆய்வு நடத்தக் கூடிய நிலையிலே அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி பதிவாளராக இருக்கிறார். அதுவே அரசாங்கத்தினுடைய கொள்கை அல்ல.

புதிய தொழில்கள் துவங்க மத்திய அரசு அனுமதி.

*2556—திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1989-ல் தமிழகத்தில் புதிய தொழில்கள் துவங்க மத்திய அரசு அனுமதித்துள்ள தொழில்கள் எத்தனை ?

(ஆ) அவை எந்தவிதமான தொழில்கள் ?

(இ) அவற்றில் தனியார் துறை, பொதுத்துறை தொழில்கள் எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) கீழ்க்கண்ட 110 புதிய தொழில்கள் துவங்க மத்திய அரசு அனுமதியளித்துள்ளது :

1.	மின்சாரம் மற்றும் மின்னணு தொழில்கள் ..	15
2.	பொறியியல் தொழில்கள் (இன்ஜினியரிங்) ..	17
3.	லேடக்ஸ் மற்றும் ரப்பர் தொழில்கள் ..	12
4.	சிமெண்ட் தொழில்	3
5.	உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழில்கள்	9
6.	சர்க்கரை ஆலை	1
7.	தோல் மற்றும் தோல் பொருட்கள் ..	9
8.	இரசாயனப் பொருட்கள்	27
9.	சுத்திகரிக்கப்பட்ட தாவர எண்ணை	2
10.	தானியங்கி உபகரணங்கள்	6
11.	மருந்துகள்	5
12.	இதர தொழில்கள்	4
	ஆக மொத்தம் ..	110

9-05 மணி.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில்களில் திருவண்ணாமலை—சம்புவராயர் போன்ற மாவட்டங்களில் அரசிடம் தனியார் நிறுவனங்கள் அனுமதிக்கக் கேட்டுள்ளார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த எந்த மாவட்டங்கள், எந்த எந்த இடம் என்கின்ற விவரங்கள் என்னிடத்திலே இல்லை. இவற்றிற்கெல்லாம் ''லெட்டர் ஆப் இன்டென்ட்'' தரப்பட்டு இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்திலாவது எங்கள் மாவட்டத்திற்கு முன்னுரிமை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :- மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிகழ்காலத்திலேயே வழங்கலாம்.

1990 மார்ச் 31]

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார நிலையம் அனுமதிக்கப்பட்டு இருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதில் கோவைக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்காக, இந்தத் தொழில்களுக்காக ''லெட்டர் ஆப் இன்டென்ட்'' பெறப்பட்டு இருக்கின்றது.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தஞ்சை மாவட்டத்திலே நரிமணம் மற்றும் பல இடங்களில் கச்சா எண்ணெய் கிடைப்பதை இந்த ஜாபிதாவோடு சேர்த்து ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைப்பதற்கு அரசு யோசித்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான ஒரு கருத்துரு பரிசீலனையில் இருக்கிறது. மத்திய அரசோடு அது குறித்து தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பழனி போன்ற கோவில்களில் முடி காணிக்கையாக தரப்படுகிறது. அந்த முடியிலிருந்து கிடைக்குள் வருமானத்தின் மூலம் குழந்தைகள் உணவு தயாரிக்கும் தொழிற்சாலையைத் தமிழகத்தில் தொடங்க அனுமதி கோருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''முடி''யும். (சிரிப்பு)

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதியில் புதியதாக ஏற்படுத்தி இருக்கும் சிப்காட் தொழில் வளாகத்தில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறிய தொழில்கள் ஏதேனும் தொடங்க இருக்கிறதா ? எந்த எந்தத் தொழில்கள் தொடங்க இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 110 தொழில்களுக்கான ''லெட்டர் ஆப் இன்டென்ட்'' பெறப்பட்டுள்ள வகையில் எல்லா இடங்களிலும் அமைந்துள்ள தொழில் பேட்டைகளில் பரவலாக இந்தத் தொழில்கள் தொடங்கப் பெறலாம்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலை ஒன்று துவங்குவதற்கு மத்திய அரசு அனுமதித்துள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

சொன்னார்கள். இந்தச் சர்க்கரை ஆலை தனியார் துறையிலா? கூட்டுறவுத் துறையிலா? அது எந்த மாவட்டத்தில் அமைய இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''லெட்டர் ஆப் இன்டென்ட்'' தான் பெறப்பட்டிருக்கிறது. அதற்கான மற்ற ஆயத்தங்கள் எதுவும் இப்போது நடைபெறவில்லை.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மணவாளக்குறிச்சியில் அபூர்வ மணல் கிடைத்து அது ஏராளமான கோடி ரூபாய் அன்னியச் செலாவணி ஈட்டுகின்ற வகையில் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. அந்த அபூர்வ மணல் தொழிற்சாலை மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஆகவே, அந்த அபூர்வ மணலைப் பயன்படுத்தி ''டைட்டானியம் டையாக்சைடு'' தொழிற்சாலை ஒன்று துவங்குகின்ற வகையில் மத்திய அரசிடம் நம்முடைய அரசு வற்புறுத்துமா என தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தொழிற்சாலைகள் பலவற்றை அமைப்பதற்கு மத்திய அரசோடு மாநில அரசு தொடர்ந்து இந்த ஒரு ஆண்டுக் காலமாக தொடர்பு கொண்டிருக்கிறது; கடிதப் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

திரு. இளவழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மேலும் எந்த எந்தத் தொழில்கள் துவங்க மத்திய அரசிடம் மாநில அரசு அனுமதி கோரியிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியம் விவாதிக்கப்படும்போது அவை பற்றி விரிவாகப் பேசலாம் என்று கருதுகிறேன்.

9-10 மணி

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெமிக்கல் தொழிற்சாலைகள் வடநாட்டிலேதான் முழுவதுமாக இருக்கின்றன. தென்னாட்டில் அதிலும் குறிப்பாக நம்முடைய தமிழகத்தில், கெமிக்கல் தொழிற்சாலைகள் இன்னும் சரியான முறையில் துவக்கப்படாத நிலைமையிலே இருக்கின்றன. ஆகவே, நம்முடைய அரசு அதிலே கவனம் செலுத்தி,

1990 மார்ச் 31]

மத்திய அரசோடும் தொடர்பு கொண்டு அதிகப்படியாக கெமிக்கல் தொழிற்சாலைகளை நம்முடைய தமிழகத்திலே உருவாக்குவதற்குச் செயல் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அண்மையில் இதற்கான முயற்சிகள் விரிவாகவும், விரைவாகவும் செயல்பட்டு வருகின்றன.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தமிழ்நாட்டிலே செயற்கை வைரம் உற்பத்தி செய்வதற்கு ரா மெட்டீரியல், மூலப்பொருளாகத் தேவைப்படும் '' தளம் '' உற்பத்திக்கு ஏற்கெனவே மேட்டுப்பாளையத்தில் ஒரு தொழிற்சாலை இருக்கிறது. இருப்பினும் 70 பர்சென்ட் பற்றாக்குறை இருக்கிறது. எனவே இந்தப் பற்றாக்குறையை நீக்குவதற்கு ஒரு தள தொழிற்சாலையை ஆரம்பிக்க சர்க்கார் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது மூலக்கேள்வியோடு தொடர்புடையது அல்ல. எனினும் திரு. தீட்சிதர் அவர்களுடைய தொகுதியோடு தொடர்புடையது என்ற காரணத்தால் கவனிக்கப்படும்.

அரவக்குறிச்சியில் தீயணைப்பு நிலையம் அமைத்தல்

*3026—திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி :

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரவக்குறிச்சியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). திருச்சி மாவட்டம், கரூர் வட்டம், அரவக்குறிச்சியில் ஒற்றை ஊர்தி கொண்ட தீயணைப்பு நிலையம் 28—7—1989 அன்று திறக்கப்பட்டு, நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தீயணைப்புத் துறையிலே இருக்கின்ற வண்டிகள் பழுதடைந்து இருக்கின்ற நிலைமையிலே அவற்றைச் சரி செய்தும், அதே நேரத்தில் அங்கே ஆம்புலன்ஸ் போன்ற வசதிகளைச் செய்து தருவதற்கும் அரசு உகந்த நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

1990 மார்ச் 31]

மத்திய அரசோடும் தொடர்பு கொண்டு அதிகப்படியாக கெமிக்கல் தொழிற்சாலைகளை நம்முடைய தமிழகத்திலே உருவாக்குவதற்குச் செயல் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அண்மையில் இதற்கான முயற்சிகள் விரிவாகவும், விரைவாகவும் செயல்பட்டு வருகின்றன.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தமிழ்நாட்டிலே செயற்கை வைரம் உற்பத்தி செய்வதற்கு ரா மெட்டீரியல், மூலப்பொருளாகத் தேவைப்படும் ''தளம்'' உற்பத்திக்கு ஏற்கெனவே மேட்டுப்பாளையத்தில் ஒரு தொழிற்சாலை இருக்கிறது. இருப்பினும் 70 பர்சென்ட் பற்றாக்குறை இருக்கிறது. எனவே இந்தப் பற்றாக்குறையை நீக்குவதற்கு ஒரு தள தொழிற்சாலையை ஆரம்பிக்க சர்க்கார் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது மூலக்கேள்வியோடு தொடர்புடையது அல்ல. எனினும் திரு. தீட்சிதர் அவர்களுடைய தொகுதியோடு தொடர்புடையது என்ற காரணத்தால் கவனிக்கப்படும்.

அரவக்குறிச்சியில் தீயணைப்பு நிலையம் அமைத்தல்

*3026—திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி :

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரவக்குறிச்சியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). திருச்சி மாவட்டம், கரூர் வட்டம், அரவக்குறிச்சியில் ஒற்றை ஊர்தி கொண்ட தீயணைப்பு நிலையம் 28—7—1989 அன்று திறக்கப்பட்டு, நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தீயணைப்புத் துறையிலே இருக்கின்ற வண்டிகள் பழுதடைந்து இருக்கின்ற நிலைமையிலே அவற்றைச் சரி செய்தும், அதே நேரத்தில் அங்கே ஆம்புலன்ஸ் போன்ற வசதிகளைச் செய்து தருவதற்கும் அரசு உகந்த நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளாகப் பழுதடைந்தவற்றை சரி செய்யத் தான் இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சிக் காலத்தில் நெல்லிக்குப்பத்தில் தீயணைப்பு நிலையம் ஒன்று பொராளவிந்து எற்படுத்தப்பட்டது. அந்த இடமும் தனியாரிடத்திலே இருக்கிறது. அதற்கு ஊர்தியும் கிடையாது. வாடகை இடத்தில் போடப்பட்டுள்ள அந்தத் தீயணைப்பு நிலையத்தை எடுத்து, அங்கே நிரந்தரமான தீயணைப்பு நிலையத்திற்கான எல்லாவிதமான ஏற்பாடுகளைச் செய்யவும் அதற்குத் தனியாக தீயணைப்பு ஊர்தி அளிக்கவும் அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட 17 தீயணைப்பு நிலையங்களும் அப்போது அறிவித்தவாறு இப்போது தொடங்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற அந்தத் தீயணைப்பு நிலையத்தைப் பற்றி தனியாக எழுதுவாரேயானால் அது கவனிக்கப்படும்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அவையில், இந்தத் தீயணைப்பு நிலையங்களிலுள்ள வாகனங்கள் நவீனப்படுத்தப்படுவது குறித்து ஒரு கேள்வி எழுப்பப்பட்டபோது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவல் துறை அதிகாரியின் தலைமையிலே அமைக்கப்பட்டிருக்கின்ற ஒரு குழு அவற்றைப்பற்றி ஆய்வு செய்யும் என்று இங்கே தெரிவித்ததாக எனக்கு நினைவு. ஆனால், சம்பந்தப்பட்ட அந்தத் துறையைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள், அந்தக் காவல் துறை அதிகாரி தலைமையிலே அமைக்கப்பட்டிருக்கிற குழு, தீயணைப்பு சம்பந்தப்பட்ட விவரங்களை ஆய்வில் எடுத்துக் கொள்ளவில்லை ; காவல் துறை சம்பந்தப்பட்டவை தான் ஆய்வு செய்யப்படுகின்றன என்ற விவரங்களைச் சொல்கிறார்கள். அது சரிதானா என்பதை அறிய விரும்புவதோடு, இதையும் சேர்த்து அந்த ஆய்வு நடத்தப்பட்டு சீர்செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாக காவல் துறை மானியத்தோடு இணைத்து தான் இந்தத் தீயணைப்புத் துறை மானியமும் விவாதிக்கப்படுகிறது. எனவே காவல் துறைக்கும், இந்தத் தீயணைப்புப் பணியிலே பங்குண்டு. அப்படி அமைக்கப்பட்டுள்ள குழு இதையும் கவனிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

1990 மார்ச் 31]

திரு. கொ. மாதப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பாலக்கோடு தொகுதியில் கடந்த மாதம் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டு, அந்த தீயணைப்பு வண்டியில் பைப் பழையது, புதியதாக மாற்ற (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி அரவக்குறிச்சி தொடர்புடையது.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரியில் பழைய (மணியடிக்கப்பெற்றது).

திரு. அன்பில் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேகமாகப் பரவும் தீயை அணைக்க தமிழக அரசு புதிய, நவீன இயந்திரங்களை எதுவும் வாங்கி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்குத்தான் காவிரி ஒப்பந்தத்தை விரைவுபடுத்திக்கொண்டு இருக்கிறோம்.

தாயகம் திரும்பிய மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா.

*2134—திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நீலகிரி மாவட்டத்தில் வாழ்கின்ற நிலமற்ற தாயகம் திரும்பிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் வாழும் நிலமற்ற தாயகம் திரும்பிய மக்களுக்கு நத்தம் புறம்போக்கு நிலத்தில் வீட்டுமனைப்பட்டா வழங்கப்படுகிறது. நத்தம் புறம்போக்கு மற்றும் ஆட்சேபணையற்ற நிலங்களில் ஆக்கிரமித்து வீடுகள்/குடிசைகள் கட்டியுள்ளதை வீட்டுமனைப் பட்டா வழங்கி வரன்முறை செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஆலங்குளம் தாலுக்கா.

*7750—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

1990 மார்ச் 31]

திரு. கொ. மாதப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பாலக்கோடு தொகுதியில் கடந்த மாதம் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டு, அந்த தீயணைப்பு வண்டியில் பைப் பழையது, புதியதாக மாற்ற (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி அரவக்குறிச்சி தொடர்புடையது.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரியில் பழைய (மணியடிக்கப்பெற்றது).

திரு. அன்பில் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேகமாகப் பரவும் தீயை அணைக்க தமிழக அரசு புதிய, நவீன இயந்திரங்களை எதுவும் வாங்கி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்குத்தான் காவிரி ஒப்பந்தத்தை விரைவுபடுத்திக்கொண்டு இருக்கிறோம்.

தாயகம் திரும்பிய மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா.

*2134—திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நீலகிரி மாவட்டத்தில் வாழ்கின்ற நிலமற்ற தாயகம் திரும்பிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் வாழும் நிலமற்ற தாயகம் திரும்பிய மக்களுக்கு நத்தம் புறம்போக்கு நிலத்தில் வீட்டுமனைப்பட்டா வழங்கப்படுகிறது. நத்தம் புறம்போக்கு மற்றும் ஆட்சேபணையற்ற நிலங்களில் ஆக்கிரமித்து வீடுகள்/குடிசைகள் கட்டியுள்ளதை வீட்டுமனைப் பட்டா வழங்கி வரன்முறை செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஆலங்குளம் தாலுக்கா.

*7750—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அம்பை தாலுக்காவைச் சார்ந்த மருதம்புத்தூர் புதுப் பட்டி, குத்தப்பாஞ்சான் போன்ற பஞ்சாயத்துக்களை ஆலங் குளம் தாலுக்காவோடு இணைக்கவேண்டும் என்று பொதுமக்க ளிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நட வடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், தென் காசி வட்டத்தைச் சீரமைத்து ஆலங்குளத்தைத் தலைமையிட மாகக் கொண்டு ஏற்படுத்த பரிசீலிக்கப்பட்டு வரும் வட்டத்துடன் மருதம்புத்தூர் ஊராட்சிப் பகுதியை இணைக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளது.

(ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

எழுமலைப் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுதல்.

*3133—திரு. ஆ. அதியமான் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேடப்பட்டித் தொகுதியிலுள்ள எழுமலைப் பேரு ராட்சியில் பேருந்து நிலையம் கட்டப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

9-15 மணி

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எழுமலை என்பது பேரூராட்சி மட்டுமல்ல, அதைச் சுற்றியுள்ள 10, 15 ஊர்களுக்கும் எழுமலையில்தான் பேருந்து நிலையம் இருக்கிறது. மதுரையிலிருந்தும், தேனியிலிருந்தும் தினமும் அநேக பேருந்துகள் அங்கே வருகின்றன. அங்கேயிருக்கிற பேருந்து நிலையம் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. மக்கள் அடிக்கடி கூடும் இடமாக அது இருப்பதால் அந்த இடத் தில் நிலையான பேருந்து நிலையத்தை அமைக்க முன்னுரிமை கொடுத்து அதற்கு ஒப்புதல் அளிக்க, தமிழக அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : எழுமலையில் பேருந்து நிலையம் கட்டுவதற்கான இடங்களை ஆய்வு செய்ததில், அதற்குப் போதுமான, தேவையான இடம் அங்கே இல்லாததால், மாவட்ட

(அ) அம்பை தாலுக்காவைச் சார்ந்த மருதம்புத்தூர் புதுப்பட்டி, குத்தப்பாஞ்சான் போன்ற பஞ்சாயத்துக்களை ஆலங்குளம் தாலுக்காவோடு இணைக்கவேண்டும் என்று பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி வட்டத்தைச் சீரமைத்து ஆலங்குளத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஏற்படுத்த பரிசீலிக்கப்பட்டு வரும் வட்டத்துடன் மருதம்புத்தூர் ஊராட்சிப் பகுதியை இணைக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளது.

(ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

எழுமலைப் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுதல்.

*3133—திரு. ஆ. அதியமான் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேடப்பட்டித் தொகுதியிலுள்ள எழுமலைப் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

9-15 மணி

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எழுமலை என்பது பேரூராட்சி மட்டுமல்ல, அதைச் சுற்றியுள்ள 10, 15 ஊர்களுக்கும் எழுமலையில்தான் பேருந்து நிலையம் இருக்கிறது. மதுரையிலிருந்தும், தேனியிலிருந்தும் தினமும் அநேக பேருந்துகள் அங்கே வருகின்றன. அங்கேயிருக்கிற பேருந்து நிலையம் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. மக்கள் அடிக்கடி கூடும் இடமாக அது இருப்பதால் அந்த இடத்தில் நிலையான பேருந்து நிலையத்தை அமைக்க முன்னுரிமை கொடுத்து அதற்கு ஒப்புதல் அளிக்க, தமிழக அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : எழுமலையில் பேருந்து நிலையம் கட்டுவதற்கான இடங்களை ஆய்வு செய்ததில், அதற்குப் போதுமான, தேவையான இடம் அங்கே இல்லாததால், மாவட்ட

1990 மார்ச் 31]

ஆட்சித் தலைவர் அந்த இடத்தில் பேருந்து நிலையம் கட்ட இயலாது என்ற செயற்குறிப்பை அனுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன் நின்று, அங்கே அதற்கான இட ஏற்பாட்டைச் செய்து கொடுத்தால், நிச்சயமாக பேருந்து நிலையம் கட்ட நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

தாரமங்கலம் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுதல்

* 6325—திரு. கே. அர்ஜுனன்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், தாரமங்கலம் பேரூராட்சியில் நிலம் ஆர்ஜிதம் செய்து பேருந்து நிலையம் கட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாரமங்கலம் பேரூராட்சியில் தற்போது உள்ள பேருந்து நிலையத்தை இடித்துவிட்டு புதிய பேருந்து நிலையத்தை பேரூராட்சிக்குச் சொந்தமான நிலத்திலேயே கட்டுவதற்குத் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இப்பேருந்து நிலையத்திற்குக் கூடுதலாக நிலம் ஏதும் ஆர்ஜிதம் செய்யத் தேவையில்லை.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதிருக்கிற இடம் வசதி போதாது என்ற காரணத்தாலும், அங்கே 10 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் புறப்படக்கூடிய அளவுக்கு நிறைய போக்குவரத்து நெருக்கடி உருவாகியிருக்கிற காரணத்தாலும், சேலத்தைச் சுற்றியிருக்கிற இடங்களுக்குச் செல்கிற லாரிகள் நேரத்தை மிச்சப்படுத்தும் வகையில், போக்குவரத்துக்கள் அங்கே செல்கிற காரணத்தாலும், சங்ககிரியிலிருந்து ஓமலூருக்கும் தர்மபுரிக்கும் செல்கிற வண்டிகள் அவ்வழியாக செல்கிற காரணத்தாலும், அங்கே இடம் போதாமல் இருக்கிறது. ஆகவே, அங்கே இருக்கிற கடைக்காரர்களை அப்புறப்படுத்திவிட்டு பஸ் நிலையத்தை விரிவாக மாற்றியமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் பேரூராட்சி பேருந்து நிலையத்திற்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டுமோ அந்தத் தகுதிகளுக்குரிய பேருந்து நிலையத்திற்கான இடம், பேரூராட்சி மன்றத்தின் வசமே இருக்கிறது. அதாவது தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற இடம், புல எண். 176/1, ஏ-1, 1பி1 1பிஏ, மற்றும் 2-ல் உள்ள நிலத்திலேயே கட்டுவதற்கு ஒருங்கிணைந்த

1990 மார்ச் 31]

ஆட்சித் தலைவர் அந்த இடத்தில் பேருந்து நிலையம் கட்ட இயலாது என்ற செயற்குறிப்பை அனுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன் நின்று, அங்கே அதற்கான இட ஏற்பாட்டைச் செய்து கொடுத்தால், நிச்சயமாக பேருந்து நிலையம் கட்ட நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

தாரமங்கலம் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுதல்

* 6325—திரு. கே. அர்ஜுனன்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், தாரமங்கலம் பேரூராட்சியில் நிலம் ஆர்ஜிதம் செய்து பேருந்து நிலையம் கட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாரமங்கலம் பேரூராட்சியில் தற்போது உள்ள பேருந்து நிலையத்தை இடித்துவிட்டு புதிய பேருந்து நிலையத்தை பேரூராட்சிக்குச் சொந்தமான நிலத்திலேயே கட்டுவதற்குத் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இப்பேருந்து நிலையத்திற்குக் கூடுதலாக நிலம் ஏதும் ஆர்ஜிதம் செய்யத் தேவையில்லை.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதிருக்கிற இடம் வசதி போதாது என்ற காரணத்தாலும், அங்கே 10 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் புறப்படக்கூடிய அளவுக்கு நிறைய போக்குவரத்து நெருக்கடி உருவாகியிருக்கிற காரணத்தாலும், சேலத்தைச் சுற்றியிருக்கிற இடங்களுக்குச் செல்கிற லாரிகள் நேரத்தை மிச்சப்படுத்தும் வகையில், போக்குவரத்துக்கள் அங்கே செல்கிற காரணத்தாலும், சங்ககிரியிலிருந்து ஓமலூருக்கும் தர்மபுரிக்கும் செல்கிற வண்டிகள் அவ்வழியாக செல்கிற காரணத்தாலும், அங்கே இடம் போதாமல் இருக்கிறது. ஆகவே, அங்கே இருக்கிற கடைக்காரர்களை அப்புறப்படுத்திவிட்டு பஸ் நிலையத்தை விரிவாக மாற்றியமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் பேரூராட்சி பேருந்து நிலையத்திற்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டுமோ அந்தத் தகுதிகளுக்குரிய பேருந்து நிலையத்திற்கான இடம், பேரூராட்சி மன்றத்தின் வசமே இருக்கிறது. அதாவது தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற இடம், புல எண். 176/1, ஏ-1, 1பி1 1பிஏ, மற்றும் 2-ல் உள்ள நிலத்திலேயே கட்டுவதற்கு ஒருங்கிணைந்த

நகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் கோரி, நகர வளர்ச்சித் துறைக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டு, நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளன.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேலை துவக்கப்பட்டு சுமாராக எவ்வளவு காலத்திற்குள் முடிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்து வந்திருக்கிறது. இடம் போதுமா, போதாதா என்ற பிரச்சினை வேறு. அந்த வேலைக்காக 20 லட்சம் ரூபாய் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. அதற்குப் பிறகு 13 கடைகளும், 45 தினசரி மார்க்கெட்டுக்குரிய கடைகளும் கட்டுவதற்கான திட்டம் அதிலே புகுத்தப்பட்டது. அந்தத் திட்டத்திற்கு 10 லட்சம் ரூபாய் கடன் கொடுத்தால் கூட, ஆண்டுக்கு 1.50 லட்சம் ரூபாய் வருமானம் வரவேண்டும். அது வருமா என்பதற்காக விளக்கம் கேட்டு திருப்பி விடப்பட்டது. அதற்குப் பிறகு பேரூராட்சி மன்றத்தலைவர் பேரூராட்சி மன்றத்தின் வருவாயை உத்தேசித்தும், மக்களின் நலனைக் கருதியும் அந்தக் கடைகளையும், அந்த தினசரி மார்க்கெட்டுக்குரிய கடைகளையும் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதையும் அதற்கான வருவாய் கிடைக்கும் என்பதையும் தெரிவித்ததன் பேரில் இப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. துரிதமான நடவடிக்கை எடுக்கப்படும்.

9.20 மணி

பரனூர் தொழு நோயாளிகள் விடுதி.

*3085—டாக்டர் து. திருமூர்த்தி :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரனூர் தொழு நோயாளிகள் விடுதியிலிருந்து நோயாளிகளைத் தகாத முறையில் வெளியேற்ற நிர்வாக அதிகாரி முற்படுவது அரசுக்கு தெரியுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்திலிருந்து எந்த ஒரு இல்லவாசியையும் தகாத முறையில் வெளியேற்ற அரசு அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

1990 மார்ச் 31]

ஆட்சித் தலைவர் அந்த இடத்தில் பேருந்து நிலையம் கட்ட இயலாது என்ற செயற்குறிப்பை அனுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன் நின்று, அங்கே அதற்கான இட ஏற்பாட்டைச் செய்து கொடுத்தால், நிச்சயமாக பேருந்து நிலையம் கட்ட நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

தாரமங்கலம் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுதல்

* 6325—திரு. கே. அர்ஜுனன்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், தாரமங்கலம் பேரூராட்சியில் நிலம் ஆர்ஜிதம் செய்து பேருந்து நிலையம் கட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாரமங்கலம் பேரூராட்சியில் தற்போது உள்ள பேருந்து நிலையத்தை இடித்துவிட்டு புதிய பேருந்து நிலையத்தை பேரூராட்சிக்குச் சொந்தமான நிலத்திலேயே கட்டுவதற்குத் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இப்பேருந்து நிலையத்திற்குக் கூடுதலாக நிலம் ஏதும் ஆர்ஜிதம் செய்யத் தேவையில்லை.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதிருக்கிற இடம் வசதி போதாது என்ற காரணத்தாலும், அங்கே 10 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் புறப்படக்கூடிய அளவுக்கு நிறைய போக்குவரத்து நெருக்கடி உருவாகியிருக்கிற காரணத்தாலும், சேலத்தைச் சுற்றியிருக்கிற இடங்களுக்குச் செல்கிற லாரிகள் நேரத்தை மிச்சப்படுத்தும் வகையில், போக்குவரத்துக்கள் அங்கே செல்கிற காரணத்தாலும், சங்ககிரியிலிருந்து ஓமலூருக்கும் தர்மபுரிக்கும் செல்கிற வண்டிகள் அவ்வழியாக செல்கிற காரணத்தாலும், அங்கே இடம் போதாமல் இருக்கிறது. ஆகவே, அங்கே இருக்கிற கடைக்காரர்களை அப்புறப்படுத்திவிட்டு பஸ் நிலையத்தை விரிவாக மாற்றியமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் பேரூராட்சி பேருந்து நிலையத்திற்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டுமோ அந்தத் தகுதிகளுக்குரிய பேருந்து நிலையத்திற்கான இடம், பேரூராட்சி மன்றத்தின் வசமே இருக்கிறது. அதாவது தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற இடம், புல எண். 176/1, ஏ-1, 1பி1 1பிஏ, மற்றும் 2-ல் உள்ள நிலத்திலேயே கட்டுவதற்கு ஒருங்கிணைந்த

நகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் கோரி, நகர வளர்ச்சித் துறைக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டு, நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளன.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேலை துவக்கப்பட்டு சுமாராக எவ்வளவு காலத்திற்குள் முடிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்து வந்திருக்கிறது. இடம் போதுமா, போதாதா என்ற பிரச்சினை வேறு. அந்த வேலைக்காக 20 லட்சம் ரூபாய் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. அதற்குப் பிறகு 13 கடைகளும், 45 தினசரி மார்க்கெட்டுக்குரிய கடைகளும் கட்டுவதற்கான திட்டம் அதிலே புகுத்தப்பட்டது. அந்தத் திட்டத்திற்கு 10 லட்சம் ரூபாய் கடன் கொடுத்தால் கூட, ஆண்டுக்கு 1.50 லட்சம் ரூபாய் வருமானம் வரவேண்டும். அது வருமா என்பதற்காக விளக்கம் கேட்டு திருப்பி விடப்பட்டது. அதற்குப் பிறகு பேரூராட்சி மன்றத்தலைவர் பேரூராட்சி மன்றத்தின் வருவாயை உத்தேசித்தும், மக்களின் நலனைக் கருதியும் அந்தக் கடைகளையும், அந்த தினசரி மார்க்கெட்டுக்குரிய கடைகளையும் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதையும் அதற்கான வருவாய் கிடைக்கும் என்பதையும் தெரிவித்ததன் பேரில் இப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. துரிதமான நடவடிக்கை எடுக்கப்படும்.

9.20 மணி

பரனூர் தொழு நோயாளிகள் விடுதி.

*3085—டாக்டர் து. திருமூர்த்தி :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரனூர் தொழு நோயாளிகள் விடுதியிலிருந்து நோயாளிகளைத் தகாத முறையில் வெளியேற்ற நிர்வாக அதிகாரி முற்படுவது அரசுக்கு தெரியுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்திலிருந்து எந்த ஒரு இல்லவாசியையும் தகாத முறையில் வெளியேற்ற அரசு அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

[1990 மார்ச் 31

நகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் கோரி, நகர வளர்ச்சித் துறைக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டு, நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளன.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேலை துவக்கப்பட்டு சுமாராக எவ்வளவு காலத்திற்குள் முடிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்து வந்திருக்கிறது. இடம் போதுமா, போதாதா என்ற பிரச்சினை வேறு. அந்த வேலைக்காக 20 லட்சம் ரூபாய் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. அதற்குப் பிறகு 13 கடைகளும், 45 தினசரி மார்க்கெட்டுக்குரிய கடைகளும் கட்டுவதற்கான திட்டம் அதிலே புகுத்தப்பட்டது. அந்தத் திட்டத்திற்கு 10 லட்சம் ரூபாய் கடன் கொடுத்தால் கூட, ஆண்டுக்கு 1.50 லட்சம் ரூபாய் வருமானம் வரவேண்டும். அது வருமா என்பதற்காக விளக்கம் கேட்டு திருப்பி விடப்பட்டது. அதற்குப் பிறகு பேரூராட்சி மன்றத்தலைவர் பேரூராட்சி மன்றத்தின் வருவாயை உத்தேசித்தும், மக்களின் நலனைக் கருதியும் அந்தக் கடைகளையும், அந்த தினசரி மார்க்கெட்டுக்குரிய கடைகளையும் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதையும் அதற்கான வருவாய் கிடைக்கும் என்பதையும் தெரிவித்ததன் பேரில் இப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. துரிதமான நடவடிக்கை எடுக்கப்படும்.

9.20 மணி

பரனூர் தொழு நோயாளிகள் விடுதி.

*3085—டாக்டர் து. திருமூர்த்தி :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரனூர் தொழு நோயாளிகள் விடுதியிலிருந்து நோயாளிகளைத் தகாத முறையில் வெளியேற்ற நிர்வாக அதிகாரி முற்படுவது அரசுக்கு தெரியுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்திலிருந்து எந்த ஒரு இல்லவாசியையும் தகாத முறையில் வெளியேற்ற அரசு அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

1990 மார்ச் 31]

இராமிய நூற்பு நிலையம்.

* 5372—திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் திம்மராஜபுரத்திலும் மற்றும் ஸ்ரீவைகுண்டம் தாலுக்கா இடையர்காடு கிராமத்திலும் பெண்களுக்கான கிராமிய நூற்பு நிலையம் அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வ.உ.சி. மாவட்டம் திம்மராஜபுரம் மற்றும் இடையர்காடு கிராமங்களில் கிராமிய நூற்பு நிலையங்கள் அமைக்கின்ற பரிசீலனை அரசினிடத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாய நிலங்கள் பாதிப்பு.

* 893—திரு. ஆ. நடராசன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கேரள மாநிலம் வாளையாறு பகுதியிலுள்ள மலபார் சிமெண்ட் ஆலையிலிருந்து வரும் புகையிலுள்ள தூசியால் கோவை மாவட்டம், மாவுத்தம்பதி கிராமத்திலுள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கேரள மாநிலம் வாளையாறு பகுதியிலுள்ள மலபார் சிமெண்ட் ஆலையிலிருந்து வரும் புகையில் உள்ள தூசியால் கோவை மாவட்டம், மாவுத்தம்பதி கிராமத்திலுள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாக பொது மக்களிடமிருந்து எந்தவிதமான முறையீடுகளும் வரவில்லை.

(ஆ) எனினும் இதுபற்றி கேரள அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. கேரளா மாசு கட்டுப்பாட்டு வாரியம் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

1990 மார்ச் 31]

இராமிய நூற்பு நிலையம்.

* 5372—திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் திம்மராஜபுரத்திலும் மற்றும் ஸ்ரீவைகுண்டம் தாலுக்கா இடையர்காடு கிராமத்திலும் பெண்களுக்கான கிராமிய நூற்பு நிலையம் அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வ.உ.சி. மாவட்டம் திம்மராஜபுரம் மற்றும் இடையர்காடு கிராமங்களில் கிராமிய நூற்பு நிலையங்கள் அமைக்கின்ற பரிசீலனை அரசினிடத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாய நிலங்கள் பாதிப்பு.

* 893—திரு. ஆ. நடராசன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கேரள மாநிலம் வாளையாறு பகுதியிலுள்ள மலபார் சிமெண்ட் ஆலையிலிருந்து வரும் புகையிலுள்ள தூசியால் கோவை மாவட்டம், மாவுத்தம்பதி கிராமத்திலுள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கேரள மாநிலம் வாளையாறு பகுதியிலுள்ள மலபார் சிமெண்ட் ஆலையிலிருந்து வரும் புகையில் உள்ள தூசியால் கோவை மாவட்டம், மாவுத்தம்பதி கிராமத்திலுள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாக பொது மக்களிடமிருந்து எந்தவிதமான முறையீடுகளும் வரவில்லை.

(ஆ) எனினும் இதுபற்றி கேரள அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. கேரளா மாசு கட்டுப்பாட்டு வாரியம் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

[1990 மார்ச் 31

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையிலே E. S. P. இயந்திரம் நிறுவப்பட்டிருந்தும், மின்சாரத்தைக் குறைப்பதற்காக அதனை இயக்காத காரணத்தால் அங்கே இருக்கிற புகையிலே இருக்கின்ற தூசிகளின் காரணத்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசோடு தொடர்பு கொண்டதில் ராமில்-எலக்ட்ரோ ஸ்டேடிக் பிரிசிப்பிட்டேட்டர், சிமெண்ட் உரை-எலக்ட்ரோ ஸ்டேட்டிக் பிரிசிப்பிட்டேட்டர், கோல்மில்-மல்டி சைக்ளோன்ஸ், தூசிகள் சேகரிப்பான், கிளிங்கர் கலர்-மல்டி சைக்ளோன்ஸ், பேச்சிங் கவுஸ்-தூசிகளை சேகரிப்பான் போன்ற 5 கருவிகளை நிறுவி இருப்பதாக அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மேற்படி கருவிகளின் திறன் குறித்து கேரள அரசின் மாசு கட்டுப்பாட்டு வாரியம் கண்காணித்து வருகிறது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மலபார் சிமெண்ட் தொழிற்சாலை என்பது கோவை மாவட்டத்தின் எல்லையிலே இருக்கிறது. அதையடுத்து மூன்று மைல் வித்தியாசத்தில்தான் மதுக்கரை சிமெண்ட் தொழிற்சாலை இருக்கிறது. ஏதோ கட்டெறும்பு கடிக்கின்றது என்று பயந்து தேள் குழியில் விழுந்ததைப் போன்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே மதுக்கரை சிமெண்ட் தொழிற்சாலையில் இருந்து வரக்கூடிய புகையினால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பூமிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தென்னந்தோப்புகள் எல்லாம் கருகி பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதனை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் முறையிட்டு அதற்கு இப்போதுதான் போதிய பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மலபார் சிமெண்ட் பேக்டரியிலிருந்து வரக்கூடிய புகையினால் எந்த அளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்று புகார் எதுவும் பொது மக்களிடத்திலிருந்து வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் பதிலில் சொன்னார்கள். ஆனால் அந்தப் பகுதியிலே பயிர் பச்சை எல்லாம் பாழாகி, அந்த சிமெண்ட் படிவங்களால் விவசாயிகள் ரொம்பவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வினா. விளக்கவுரை அல்ல.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, 5 வகையான இயந்திரங்கள் இவற்றைக் கட்டுப்படுத்துகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும்

1990 மார்ச் 31]

அதைக் கண்காணித்து விவசாயிகள் பாதிக்கப்படாத அளவுக்கு, உரிய நடவடிக்கை அரசின் சார்பில் மேற்கொள்ளப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தைக் கருத்தில் கொண்டு கேரள அரசோடு தொடர்பு கொள்வதற்கான முயற்சியை அரசு எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிக ஏற்பாடாக 5 வகையான இயந்திரங்கள் வைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவற்றின் மூலம் நிச்சயமாக அந்தத் தூசியைத் தடுக்க முடியாது. இதே பிரச்சினை தமிழ்நாடு சிமெண்ட் ஃபேக்டரியிலும் இருக்கிறது. அரசு நடத்துகிறது அதை. மத்திய அரசை அணுகி சிமெண்ட் ஆலைகளைப் பொறுத்தவரையில் வெட் ப்ராசஸ் என்பதை அடியோடு காலி செய்துவிட்டு டிரை பிராசஸ்-க்கு மாற்றவேண்டும் என்ற முயற்சியை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

9–25 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சரவையிலே இருந்துகூட ஒவ்வொரு மாநிலத்திற்கும் கடிதம் எழுதப்பட்டிருக்கின்றது. நம்முடைய மாநிலத்திற்குக்கூட இது குறித்து எடுத்த நடவடிக்கைகள் குறித்து கடிதம் வந்து அதற்கான பதிலை எழுதியிருக்கிறோம். ஆகவே அவர்களும் தொடர்பு கொண்டிருக்கின்ற காரணத்தினாலே இது குறித்து விரைவில் சுமுகமான முடிவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயிற்சி மருத்துவர்களுக்கு உதவிப்பணம்.

* 2083—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பயிற்சி மருத்துவர்களின் உதவிப் பணத்தை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

1990 மார்ச் 31]

அதைக் கண்காணித்து விவசாயிகள் பாதிக்கப்படாத அளவுக்கு, உரிய நடவடிக்கை அரசின் சார்பில் மேற்கொள்ளப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தைக் கருத்தில் கொண்டு கேரள அரசோடு தொடர்பு கொள்வதற்கான முயற்சியை அரசு எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிக ஏற்பாடாக 5 வகையான இயந்திரங்கள் வைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவற்றின் மூலம் நிச்சயமாக அந்தத் தூசியைத் தடுக்க முடியாது. இதே பிரச்சினை தமிழ்நாடு சிமென்ட் ஃபேக்டரியிலும் இருக்கிறது. அரசு நடத்துகிறது அதை. மத்திய அரசை அணுகி சிமென்ட் ஆலைகளைப் பொறுத்தவரையில் வெட் ப்ராசஸ் என்பதை அடியோடு காலி செய்துவிட்டு டிரை பிராசஸ்-க்கு மாற்றவேண்டும் என்ற முயற்சியை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

9–25 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சரவையிலே இருந்துகூட ஒவ்வொரு மாநிலத்திற்கும் கடிதம் எழுதப்பட்டிருக்கின்றது. நம்முடைய மாநிலத்திற்குக்கூட இது குறித்து எடுத்த நடவடிக்கைகள் குறித்து கடிதம் வந்து அதற்கான பதிலை எழுதியிருக்கிறோம். ஆகவே அவர்களும் தொடர்பு கொண்டிருக்கின்ற காரணத்தினாலே இது குறித்து விரைவில் சுமுகமான முடிவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயிற்சி மருத்துவர்களுக்கு உதவிப்பணம்.

* 2083—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பயிற்சி மருத்துவர்களின் உதவிப் பணத்தை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

[1990 மார்ச் 31

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி மருத்துவர்களுடைய உதவித்தொகை ஆந்திராவில் ஆயிரம் ரூபாயாகவும், கேரளாவில் ஆயிரத்து இருநூறு ரூபாயாகவும் பல ஆண்டுகளாக வழங்கப்படுகிறது. வேலைப்பளு பயிற்சி மருத்துவர்களுக்கு அதிகமாக இருக்கிறது. காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை வேலை செய்ய வேண்டியதாக இருக்கிறது. டியூட்டி காலங்களில் காலை 7 மணி முதல் மறுநாள் காலை 7 மணி வரை அவர்கள் வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் வினாவாகக் கேட்க வேண்டும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவுஸ் சர்ஜன் பணி பயிற்சி காலங்களில் அவர்களுக்குத் திருமணம் போன்ற நல்ல காரியங்கள் நடக்கின்றன. இதையெல்லாம் கருத்தில் கொண்டு, அவுஸ் சர்ஜன் உதவித் தொகையை மேலும் அதிகரிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த நல்ல காரியம் திருமணத்தோடு நிற்கிறதா, இன்னும் மேலே போகிறதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வ சிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக பயிற்சி மருத்துவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த தொகையை கலைஞர் அவர்கள் அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகுதான் உயர்த்தியது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். முதலில் 550 ரூபாயாக இருந்தது, ரூ. 750 ஆகவும், மேற்படிப்பு மருத்துவ மாணவர்களுக்கு ரூ. 600-லிருந்ததை ரூ. 800 ஆகவும், ரூ. 750 என்று இருந்ததை ரூ. 950 ஆகவும் ரூ. 850 என்று இருந்ததை ரூ 1,050 ஆகவும் இந்த அரசு 17-8-1989-ல் ஆணைகள் பிறப்பித்து உயர்த்தியிருக்கிறது. மீண்டும் அந்த மாணவர்கள் 9-9-1989-ல் இந்தத் தொகை மற்ற மாநிலங்களை ஒப்பிடுகின்றபோது குறைவாக இருக்கிறது. ஆகவே அதை உயர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அந்த அடிப்படையிலே இந்தத் தொகை வருகின்ற இந்த நிதிநிலை அறிக்கையிலே உயர்த்தப்படும் என்று சொல்லி அவர்களுடன் பேசித்தான் அவர்களுடைய போராட்டம் விலக்கிக்கொள்ளப்பட்டது. மருத்துவத் துறையினுடைய மானியக் கோரிக்கை வரும்போது, உயர்த்தப்பட்ட தொகைகள் பற்றிய குறிப்புகளை இந்த அரசு அறிவிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

1990 மார்ச் 31]

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீனியர் அவுஸ் சர்ஜன், போஸ்ட் கிராஜு வேட் போன்ற மருத்துவர்கள் பயிற்சி மருத்துவர்கள் தங்கும் விடுதியில் தங்கி இருப்பதால் பயிற்சி மருத்துவர்கள் தங்கு வதற்கு அறைகள் இல்லாமல் மெடிகல் காலேஜிலே தங்கி யுள்ளார்கள். இது குறித்து அரசுக்குத் தகவல் வந்துள்ளதா? பயிற்சி மருத்துவர்கள் இல்லங்கள் மேற்கொண்டு விஸ்தரிக்கப் படும் குறிப்பு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன் :

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி உதவித்தொகையைப் பற்றியது. விடுதிகள் பற்றி தெரிய வேண்டுமானால் தனிக் கேள்வி கேட்கவும்.

கழிவு நீர் சுத்திகரிப்புத் திட்டம்.

*7946—திரு. ஜெ. அசேன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராணிப்பேட்டையில் உள்ள தோல் பதனிடும் தொழிற் சாலைகளுக்கான பொதுவான கழிவுநீர் (Common effluent Treatment plant) சுத்திகரிப்புத் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : இராணிப்பேட்டை தோல் பதனிடுவோர் சங்கமும், தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகமும் இணைந்து ஏற்படுத்தியுள்ள ''இராணி டெக்'' (Ranitec) என்ற நிறுவனம் மூலம் அமைக்கவிருக்கும் பொதுவான கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்திற்குத் தேவை யான நிலம் வாங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதி உதவி கிடைத்தவுடன் நிர்மாணப் பணிகள் தொடங்கப்படும்.

பீடித் தொழிலாளர் நல வாரியம்.

*5039—திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்களின் குறைகளைப் போக்க பீடித் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பீடித் தொழிலாளர்களின் நலனிற்காக 1976ஆம் ஆண்டு பீடித்தொழிலாளர் நல நிதிச் சட்டம் என்று ஒரு சட்டம் மத்திய அரசால் இயற்றப்பட்டுள்ளது. பீடித் தொழிலாளர் நல நிதி யிலிருந்து மருத்துவ வசதி, கல்வி வசதி, வீட்டு வசதி முதலிய

1990 மார்ச் 31]

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீனியர் அவுஸ் சர்ஜன், போஸ்ட் கிராஜுவேட் போன்ற மருத்துவர்கள் பயிற்சி மருத்துவர்கள் தங்கும் விடுதியில் தங்கி இருப்பதால் பயிற்சி மருத்துவர்கள் தங்குவதற்கு அறைகள் இல்லாமல் மெடிகல் காலேஜிலே தங்கியுள்ளார்கள். இது குறித்து அரசுக்குத் தகவல் வந்துள்ளதா? பயிற்சி மருத்துவர்கள் இல்லங்கள் மேற்கொண்டு விஸ்தரிக்கப்படும் குறிப்பு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன் :

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி உதவித்தொகையைப் பற்றியது. விடுதிகள் பற்றி தெரிய வேண்டுமானால் தனிக் கேள்வி கேட்கவும்.

கழிவு நீர் சுத்திகரிப்புத் திட்டம்.

*7946—திரு. ஜெ. அசேன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராணிப்பேட்டையில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கான பொதுவான கழிவுநீர் (Common effluent Treatment plant) சுத்திகரிப்புத் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : இராணிப்பேட்டை தோல் பதனிடுவோர் சங்கமும், தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகமும் இணைந்து ஏற்படுத்தியுள்ள ''இராணிடெக்'' (Ranitec) என்ற நிறுவனம் மூலம் அமைக்கவிருக்கும் பொதுவான கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்திற்குத் தேவையான நிலம் வாங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதி உதவி கிடைத்தவுடன் நிர்மாணப் பணிகள் தொடங்கப்படும்.

பீடித் தொழிலாளர் நல வாரியம்.

*5039—திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்களின் குறைகளைப் போக்க பீடித் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பீடித் தொழிலாளர்களின் நலனிற்காக 1976ஆம் ஆண்டு பீடித்தொழிலாளர் நல நிதிச் சட்டம் என்று ஒரு சட்டம் மத்திய அரசால் இயற்றப்பட்டுள்ளது. பீடித் தொழிலாளர் நல நிதியிலிருந்து மருத்துவ வசதி, கல்வி வசதி, வீட்டு வசதி முதலிய

1990 மார்ச் 31]

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீனியர் அவுஸ் சர்ஜன், போஸ்ட் கிராஜுவேட் போன்ற மருத்துவர்கள் பயிற்சி மருத்துவர்கள் தங்கும் விடுதியில் தங்கி இருப்பதால் பயிற்சி மருத்துவர்கள் தங்குவதற்கு அறைகள் இல்லாமல் மெடிகல் காலேஜிலே தங்கியுள்ளார்கள். இது குறித்து அரசுக்குத் தகவல் வந்துள்ளதா ? பயிற்சி மருத்துவர்கள் இல்லங்கள் மேற்கொண்டு விஸ்தரிக்கப்படும் குறிப்பு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன் :

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி உதவித்தொகையைப் பற்றியது. விடுதிகள் பற்றி தெரிய வேண்டுமானால் தனிக் கேள்வி கேட்கவும்.

கழிவு நீர் சுத்திகரிப்புத் திட்டம்.

*7946—திரு. ஜெ. அசேன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராணிப்பேட்டையில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கான பொதுவான கழிவுநீர் (Common effluent Treatment plant) சுத்திகரிப்புத் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : இராணிப்பேட்டை தோல் பதனிடுவோர் சங்கமும், தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகமும் இணைந்து ஏற்படுத்தியுள்ள ''இராணிடெக்'' (Ranitec) என்ற நிறுவனம் மூலம் அமைக்கவிருக்கும் பொதுவான கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்திற்குத் தேவையான நிலம் வாங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதி உதவி கிடைத்தவுடன் நிர்மாணப் பணிகள் தொடங்கப்படும்.

பீடித் தொழிலாளர் நல வாரியம்.

*5039—திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்களின் குறைகளைப் போக்க பீடித் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பீடித் தொழிலாளர்களின் நலனிற்காக 1976ஆம் ஆண்டு பீடித்தொழிலாளர் நல நிதிச் சட்டம் என்று ஒரு சட்டம் மத்திய அரசால் இயற்றப்பட்டுள்ளது. பீடித் தொழிலாளர் நல நிதியிலிருந்து மருத்துவ வசதி, கல்வி வசதி, வீட்டு வசதி முதலிய

வசதிகள் இத்தொழிலாளர்களுக்கு செய்து தரப்படுகின்றன. பீடித்தொழிலாளர் நல நிதி குறித்து ஆலோசனை வழங்க மாநில அளவில் ஆலோசனைக் குழு ஒன்றும், மத்திய அரசால் ஏற் படுத்தப்பட்டுள்ளது.

மேற்சொன்ன சூழ்நிலையில், பீடித் தொழிலாளர்களுக் கென தனி வாரியம் அமைக்கும் தேவை ஏற்படவில்லை.

திரு. சு. குருநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சற்றேறக்குறைய 10 இலட்சம் ஆண்களும் பெண்களும் இந்தத் தொழிலிலே ஈடு பட்டுள்ளார்கள். அப்பேர்ப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த தொழிலிலே அவர்களுக்குப் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்ற காரணத்தினால் தனியாக வாரியம் அமைத்தால்தான் அவர்க ளுடைய குறைகளைப் போக்குகின்ற அளவுக்கு அரசு பணிகளைக் கவனிக்க முடியும் என்ற காரணத்தினால் அரசு மீண்டும் தனி வாரியம் அமைக்க பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள் நல நிதிச் சட் டத்தின் கீழ் மாநில அரசின் தொழிலாளர் துறை துணைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு மாநில ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. இக்குழு பீடித் தொழிலாளர் கள் பிரதிநிதிகளையும், பீடித் தொழில் நிர்வாகத்தினரையும் உறுப்பினராகக் கொண்டதான குழுவாகும். இந்தக் குழு மட்டு மல்லாமல் தொழிலாளர் நலத்துறை அமைச்சரைத் தலைவராகக் கொண்டு மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழு என்று ஒன்றும் இருக்கிறது. இதையெல்லாம் அமுல்படுத்துவதற்காகத் தொழிலாளர் துறைச் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்றும் இருக்கின்றது. இந்த 3 குழுக்களும் தனித்தனியாகச் செயல்படுகின்ற காரணத்தினால் தனி வாரியம் அமைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

9-30 மணி

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர் நலச் சட்டத்தின்கீழ் பீடித் தொழிலாளர்கள் நலன் கவனிக்கப்படுவதாக இங்கே சொன்னார் கள். அதோடு பீடித் தொழில் சம்பந்தப்பட்ட சுருட்டுத் தொழி லாளர்களும் நலத் திட்டத்தின் கீழ் கவனிக்கப்படுகிறார்களா ? அல்லது கவனிப்பீர்களா ? சட்டப்படி பாதுகாப்பு சுருட்டுத் தொழிலாளர்களுக்கும் சேர்த்து கிடைக்குமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கு உள்ள அத்தனை சலுகைகளும் சுருட்டுத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

1990 மார்ச் 31]

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்கள் குறையினைப் போக்க வாரியத்தினை மத்திய அரசு மற்றும் மாநில அரசு அமைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். மாநிலத்தில் அமைக்கப்பட்ட குழு எத்தனை தடவை கூடி ஆலோசனை நடத்தியது? பீடித் தொழிலாளர்கள் மற்றும் உரிமையாளர்களோடு கூலி சம்பந்தமாக பேசப்பட்டதா? அதன் மூலம் இதற்கு முன்பு அந்த வகையில் ஏதாவது செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கு பிரச்சினை ஏற்படும்போது எல்லாம் குழு கூட்டப்பட்டு ஆராயப்பட்டு வந்திருக்கிறது. குறிப்பாக பீடித் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி பேசும்பொழுது மத்திய மாநில அரசின் உதவியோடு இலவசமாக வீடுகள் கட்டித் தர வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டது. அந்த வகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆயிரம் வீடுகள் பீடித் தொழிலாளர்களுக்காக கட்டிக் கொடுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கு நலத் திட்டங்களை அமுல்படுத்தக் குழு அமைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். பீடித் தொழிலாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் பள்ளிகளில், கல்லூரிகளில் ஸ்காலர்ஷிப் பெற முடியவில்லை, காரணம் பல நிபந்தனைகள் வைத்திருக்கின்றார்கள். அதனால் அவர்கள் இந்த உதவியைப் பெற முடியவில்லை. அதோடு இந்தத் தொழிலாளர்கள் காச நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அதிகமாகத் தொழிலாளர்கள் இருக்கிற திருநெல்வேலி, வட ஆற்காடு போன்ற மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் அங்கே மார்பு நோய்க்காக தனியாக மருத்துவமனை வைக்க வேண்டுமென்று கோரி வந்திருக்கிறார்கள். இந்த இடங்களில் இலட்சக்கணக்கான மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். காச நோய்க்காக மத்திய அரசு அளிக்கின்ற நிதியைப் பெற்று இதற்கு ஆவன செய்வதோடு, இலவசமாக இந்தத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவும் ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, வட ஆற்காடு மற்றும் திருச்சி போன்ற மாவட்டங்களில் அரசிடமிருந்து பீடித் தொழிலாளர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தரும் திட்டம் இருக்கிறது. ஆகவே, நிலங்களைக் கையகப்படுத்தித் தாருங்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கேட்டபோது, மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பதில் வரவில்லை. ஆனால், திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து மட்டும் ஆயிரம்

வீடுகள் கட்டிக் கொடுக்க நிலம் கையகப்படுத்தித் தந்தார்கள். ஆக, அது இந்த வருடம் நிறைவேற்றப்பட இருக்கிறது. மற்றும் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு உள்ள படிப்பு வசதி போன்ற உறுப்பினருடைய கருத்தை இந்த அரசு ஆலோசித்து ஆவன செய்யும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலில் திருநெல்வேலி மாவட்டத்தில் நிறைய பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தில் இது முக்கியமாக இருக்கிறது. பல பெண்களும் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பாஸ் புத்தகம் தராமல் அவர்களுடைய கணவன் பெயரில் அதைத் தருகிறார்கள். ஏனென்றால் அவர்களின் பெயரில் தந்தால் மெட்டர்னிட்டி லீவ் மற்றும் சலுகைகளைத் தரவேண்டியிருக்கும், தராமல் இருப்பதற்காக அதை இப்படிச் செய்கிறார்கள். மற்றும் இதுபோன்ற பல குறைபாடுகள் இருக்கின்றன. இக்குறைகளை நீக்குகின்ற வகையில் இந்த அரசு வந்ததற்குப் பிறகு கூலியை $9\frac{1}{2}$ ரூபாய் என்று இருந்ததை 14 ரூபாயாக ஆக்கியிருக்கிறது. கூலி மட்டுமல்ல, இதுபோன்ற பல சலுகைகள் தரத் தனியாக ஒரு வாரியம் அல்லது குழு அமைத்து அவர்களுடைய குறைகளைப் போக்க இந்த அரசு முன்வருமா ?

9-35 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். தனியாக நல வாரியம் அமைக்கத் தேவையில்லை, ஆலோசனைக் குழு மூலமாகவே, நல்ல முறையில் செயல்படுமென்று. பீடி சுற்றும் பெண் தொழிலாளர்களுக்குள்ள குறைகளைக் குறைப்பதற்கும் இந்த அரசு முயற்சி எடுக்கும்.

திருமதி எஸ். பி. சற்குணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலில் பெண்களும், சிறுவர்களும் அதிகமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து, அரசு நியமித்து இருக்கின்ற குழுக்களில், பெண் தொழிலாளர்களுக்கு வாய்ப்பு தரப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது.

கண்டமங்கலத்தில் ஐ.டி.ஐ. ஏற்படுத்துதல்.

*5183 திரு. ச. அழகுவேலு :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வீடுகள் கட்டிக் கொடுக்க நிலம் கையகப்படுத்தித் தந்தார்கள். ஆக, அது இந்த வருடம் நிறைவேற்றப்பட இருக்கிறது. மற்றும் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு உள்ள படிப்பு வசதி போன்ற உறுப்பினருடைய கருத்தை இந்த அரசு ஆலோசித்து ஆவன செய்யும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலில் திருநெல்வேலி மாவட்டத்தில் நிறைய பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தில் இது முக்கியமாக இருக்கிறது. பல பெண்களும் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பாஸ் புத்தகம் தராமல் அவர்களுடைய கணவன் பெயரில் அதைத் தருகிறார்கள். ஏனென்றால் அவர்களின் பெயரில் தந்தால் மெட்டர்னிட்டி லீவ் மற்றும் சலுகைகளைத் தரவேண்டியிருக்கும், தராமல் இருப்பதற்காக அதை இப்படிச் செய்கிறார்கள். மற்றும் இதுபோன்ற பல குறைபாடுகள் இருக்கின்றன. இக்குறைகளை நீக்குகின்ற வகையில் இந்த அரசு வந்ததற்குப் பிறகு கூலியை $9\frac{1}{2}$ ரூபாய் என்று இருந்ததை 14 ரூபாயாக ஆக்கியிருக்கிறது. கூலி மட்டுமல்ல, இதுபோன்ற பல சலுகைகள் தரத் தனியாக ஒரு வாரியம் அல்லது குழு அமைத்து அவர்களுடைய குறைகளைப் போக்க இந்த அரசு முன்வருமா ?

9-35 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். தனியாக நல வாரியம் அமைக்கத் தேவையில்லை, ஆலோசனைக் குழு மூலமாகவே, நல்ல முறையில் செயல்படுமென்று. பீடி சுற்றும் பெண் தொழிலாளர்களுக்குள்ள குறைகளைக் குறைப்பதற்கும் இந்த அரசு முயற்சி எடுக்கும்.

திருமதி எஸ். பி. சற்குணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலில் பெண்களும், சிறுவர்களும் அதிகமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து, அரசு நியமித்து இருக்கின்ற குழுக்களில், பெண் தொழிலாளர்களுக்கு வாய்ப்பு தரப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது.

கண்டமங்கலத்தில் ஐ.டி.ஐ. ஏற்படுத்துதல்.

*5183 திரு. ச. அழகுவேலு :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1990 மார்ச் 31]

தென் ஆற்காடு மாவட்டம் கண்டமங்கலத்தில் ஒரு ஐ.டி.ஐ. நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டமங்கலம் பகுதி என்பது, புதுவை மாநிலத்தினுடைய அண்டைப் பகுதியில் இருக்கக்கூடிய, தொழில் நகரங்கள் அடங்கியிருக்கக் கூடிய ஒரு பகுதி. இந்த அரசு படித்த வேலையில்லாத இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற வகையிலே, ஒரு ஐ.டி.ஐ. தொடங்க உத்தேசித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டமங்கலம் பகுதியிலே அதைத் தொடங்க இந்த அரசுக்கு உத்தேசம் ஏதும் இல்லை. ஏனென்றால், தென்னாற்காடு மாவட்டத்தில், 5 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களும், 10 தனியார் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களும் இருக்கின்ற காரணத்தால், புதிதாக அங்கு தொடங்க உத்தேசம் இல்லை.

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு உத்தேசம் இல்லையென்றாலும் கூட, தென்னாற்காடு மாவட்டத்திலே இருக்கக்கூடிய மற்ற பயிற்சி நிலையங்களிலாவது, கூடுதலாக இடங்களை ஒதுக்கீடு செய்ய இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்தைப் பரிசீலித்து, அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கும் இடம் கிடைக்கின்ற வகையிலே, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீன் பிடிக்க பயன்படுத்தும் சாதனங்கள்.

*1315 திரு. இரா. மதிவாணன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மீன் பிடிக்கப் பயன்படுத்தும் கட்டுமரம், வலை, நூல் மற்றும் விசைப் படகுகளுக்குத் தேவையான டீசல் போன்ற சாதனங்களை மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1990 மார்ச் 31]

தென் ஆற்காடு மாவட்டம் கண்டமங்கலத்தில் ஒரு ஐ.டி.ஐ. நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டமங்கலம் பகுதி என்பது, புதுவை மாநிலத்தினுடைய அண்டைப் பகுதியில் இருக்கக்கூடிய, தொழில் நகரங்கள் அடங்கியிருக்கக் கூடிய ஒரு பகுதி. இந்த அரசு படித்த வேலையில்லாத இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற வகையிலே, ஒரு ஐ.டி.ஐ. தொடங்க உத்தேசித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டமங்கலம் பகுதியிலே அதைத் தொடங்க இந்த அரசுக்கு உத்தேசம் ஏதும் இல்லை. ஏனென்றால், தென்னாற்காடு மாவட்டத்தில், 5 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களும், 10 தனியார் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களும் இருக்கின்ற காரணத்தால், புதிதாக அங்கு தொடங்க உத்தேசம் இல்லை.

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு உத்தேசம் இல்லையென்றாலும் கூட, தென்னாற்காடு மாவட்டத்திலே இருக்கக்கூடிய மற்ற பயிற்சி நிலையங்களிலாவது, கூடுதலாக இடங்களை ஒதுக்கீடு செய்ய இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்தைப் பரிசீலித்து, அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கும் இடம் கிடைக்கின்ற வகையிலே, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீன் பிடிக்க பயன்படுத்தும் சாதனங்கள்.

*1315 திரு. இரா. மதிவாணன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மீன் பிடிக்கப் பயன்படுத்தும் கட்டுமரம், வலை, நூல் மற்றும் விசைப் படகுகளுக்குத் தேவையான டீசல் போன்ற சாதனங்களை மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் மானியத் திட்டத்தின் மூலமும், தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்தின் நிதி உதவியுடனும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் உதவியுடனும் மற்றும் ஆதி திராவிடர் துறையின் சிறப்புத் திட்டங்கள் மூலமும் மீனவர்களுக்கு விசைப் படகு, கட்டு மரம், வலை நூல் இவை மானிய அடிப்படையில் வழங்கப்படுகின்றன. மீன்பிடி விசைப் படகுகளுக்குப் பயன்படுத்தப்படும் டீசல் மானிய விலையில் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, செங்கை-அண்ணா மாவட்ட கடற்கரைப் பகுதியில், விஷ சக்தி வாய்ந்த கழிவு நீர் கடலில் கலப்பதால், மீன் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டு இருப்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசுக்குக் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அதுபற்றி இந்த அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை மருத்துவமனை ஏற்படுத்துதல்.

*5429 திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கற்பட்டு தொகுதியில் திருக்கழுக்குன்றம் யூனியனில் குழிப்பாந்தண்டலம் ஊராட்சியில் மீண்டும் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு தொகுதி திருக்கழுக்குன்றம் யூனியன் குழிப்பாந்தண்டலம் ஊராட்சி மற்றும் அதைச் சார்ந்த 10 கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை, குறைந்த பட்சத் தேவைக்கும் குறைவாக உள்ளதாலும் தற்போது இப்பகுதியில் உள்ள கால்நடைகளின் தேவைக்கு திருக்கழுக்குன்றம் கால்நடை மருத்துவமனை போதுமானதாக உள்ளதாலும் மீண்டும் இக்கிளை நிலையத்தினைத் துவக்குகின்ற உத்தேசம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் மானியத் திட்டத்தின் மூலமும், தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்தின் நிதி உதவியுடனும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் உதவியுடனும் மற்றும் ஆதி திராவிடர் துறையின் சிறப்புத் திட்டங்கள் மூலமும் மீனவர்களுக்கு விசைப் படகு, கட்டு மரம், வலை நூல் இவை மானிய அடிப்படையில் வழங்கப்படுகின்றன. மீன்பிடி விசைப் படகுகளுக்குப் பயன்படுத்தப்படும் டீசல் மானிய விலையில் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, செங்கை-அண்ணா மாவட்ட கடற்கரைப் பகுதியில், விஷ சக்தி வாய்ந்த கழிவு நீர் கடலில் கலப்பதால், மீன் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டு இருப்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசுக்குக் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அதுபற்றி இந்த அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை மருத்துவமனை ஏற்படுத்துதல்.

*5429 திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கற்பட்டு தொகுதியில் திருக்கழுக்குன்றம் யூனியனில் குழிப்பாந்தண்டலம் ஊராட்சியில் மீண்டும் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு தொகுதி திருக்கழுக்குன்றம் யூனியன் குழிப்பாந்தண்டலம் ஊராட்சி மற்றும் அதைச் சார்ந்த 10 கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை, குறைந்த பட்சத் தேவைக்கும் குறைவாக உள்ளதாலும் தற்போது இப்பகுதியில் உள்ள கால்நடைகளின் தேவைக்கு திருக்கழுக்குன்றம் கால்நடை மருத்துவமனை போதுமானதாக உள்ளதாலும் மீண்டும் இக்கிளை நிலையத்தினைத் துவக்குகின்ற உத்தேசம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1990 மார்ச் 31]

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் கால்நடை மருத்துவமனைக்கு வரவேண்டுமானால், 10 கிலோ மீட்டர் தொலைவிற்கு மேல் ஆகிறது. அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் இன்றைக்கு, பால் வளத்தைப் பெருக்குகின்ற அளவுக்கு புதிய சங்கங்கள் அதிகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தச் சங்கங்கள் மூலமாக ஒவ்வொரு பால்வள சங்கத்திற்கும் 50 மாடுகளுக்கு மேல் இன்றைக்கு வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மாடுகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அங்கே மீண்டும் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழிப்பாந்தண்டலம் மற்றும் அதைச் சார்ந்த 10 கிராமங்களிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 4,340 தான் என்று என்னிடம் குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ''இப்போது அதிகமாக கால்நடைகள் வாங்கப்பட்டு வழங்கப்பட்டு இருக்கின்றன; அதன் அடிப்படையிலே, மீண்டும் மருத்துவமனை துவங்கப்பட வேண்டும்'' என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அவ்வாறு, இப்போதுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு மீண்டும் துவக்குவதற்கான சாத்தியக் கூறுகளை இந்த அரசு ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-40 மணி

திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஆண்டில் புதிதாகத் துவங்க இருக்கிற 10 கால்நடை மருந்தகங்களில் ஒன்றாக இது இணைத்துக் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை ஆய்வு செய்து, அதற்குப் பின்புதான் முடிவெடுக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கால்நடை மருத்துவமனை திறப்பதற்குக் குறைந்த பட்சக் கால்நடைகள் இல்லை என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். எனவே குறைந்த பட்சக் கால்நடைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன். கால்நடைகள் என்று சொல்கிறபோது, எந்தெந்தக் கால்நடைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குறைந்தபட்சம் 20,000 கால்நடைகளுக்கு மேலாக இருக்குமானால் அதற்கு முன்னுரிமை வழங்கப்படும். 20,000 கால் நடைகள் என்று சொல்லும்போது, Breedable cattle population என்று சொல்லக் கூடிய இன விருத்திக்குத் தகுதி வாய்ந்த கால்நடைகளைக் கணக்கில் எடுத்து, ஆய்வு செய்யப்படுகிறது. உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னால், அவசியத் தேவையிருப்பின், முன்னுரிமை கொடுத்து அங்கே இருக்கும் அவசியத் தேவையை உணர்ந்து, இதில் அரசு முடிவெடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ''கால்நடைகள்'' என்று சொல்லும்போது, அந்தக் கால்நடைகளுக்கு எத்தனை கால்கள் இருக்க வேண்டுமென்பதையும் கணக்கில் எடுப்பீர்களா? (சிரிப்பு)

திருபுவனம் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்.

*3144—திரு. செ. இராமலிங்கம் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், திருபுவனம் கைத்தறி பட்டுக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் திருபுவனம் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதா ?

(ஆ) Common good fund என்னென்ன பணிகளுக்குப் பயன் படுத்தப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் பொதுநல நிதியில் இருந்து அங்கத்தினர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை (Medical) பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு சீருடை, கல்வி, உதவித் தொகை, பயிற்சிக் கட்டணம், பத்தாம் வகுப்பு, +2 மாணவர் முதல் மதிப்பெண் உதவித் தொகை, தினசரி பேப்பர்கள் போன்ற கல்வி இனங்களுக்கும், இலங்கைத் தமிழர் நிதி உதவி, நெசவாளர் நல்வாழ்வு அரசு அறக்கட்டளை போன்ற இனங்களுக்கும் செலவிட்டுள்ளது.

திரு. இரே. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருபுவனம் கைத்தறி பட்டுக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் ''காமன் குட்ஃபண்ட்'' மூலமாகக் கட்டுவதற்கு அனுமதி கோரப்பட்டதற்கு

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குறைந்தபட்சம் 20,000 கால்நடைகளுக்கு மேலாக இருக்குமானால் அதற்கு முன்னுரிமை வழங்கப்படும். 20,000 கால் நடைகள் என்று சொல்லும்போது, Breedable cattle population என்று சொல்லக் கூடிய இன விருத்திக்குத் தகுதி வாய்ந்த கால்நடைகளைக் கணக்கில் எடுத்து, ஆய்வு செய்யப்படுகிறது. உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னால், அவசியத் தேவையிருப்பின், முன்னுரிமை கொடுத்து அங்கே இருக்கும் அவசியத் தேவையை உணர்ந்து, இதில் அரசு முடிவெடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ''கால்நடைகள்'' என்று சொல்லும்போது, அந்தக் கால்நடைகளுக்கு எத்தனை கால்கள் இருக்க வேண்டுமென்பதையும் கணக்கில் எடுப்பீர்களா? (சிரிப்பு)

திருபுவனம் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்.

*3144—திரு. செ. இராமலிங்கம் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், திருபுவனம் கைத்தறி பட்டுக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் திருபுவனம் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதா ?

(ஆ) Common good fund என்னென்ன பணிகளுக்குப் பயன் படுத்தப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் பொதுநல நிதியில் இருந்து அங்கத்தினர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை (Medical) பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு சீருடை, கல்வி, உதவித் தொகை, பயிற்சிக் கட்டணம், பத்தாம் வகுப்பு, +2 மாணவர் முதல் மதிப்பெண் உதவித் தொகை, தினசரி பேப்பர்கள் போன்ற கல்வி இனங்களுக்கும், இலங்கைத் தமிழர் நிதி உதவி, நெசவாளர் நல்வாழ்வு அரசு அறக்கட்டளை போன்ற இனங்களுக்கும் செலவிட்டுள்ளது.

திரு. இரே. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருபுவனம் கைத்தறி பட்டுக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் ''காமன் குட்ஃபண்ட்'' மூலமாகக் கட்டுவதற்கு அனுமதி கோரப்பட்டதற்கு

1990 மார்ச் 31]

எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது ? ஒவ்வொரு சங்கமும் எவ்வளவு தொகை இந்த நலக் காரியத்திற்காக வழங்கலாம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க வெள்ளி விழா நினைவு அரசு உயர்நிலைப் பள்ளிக்காக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் 2,000 ரூபாய் வீதமும், மத்திய மற்றும் தலைமைச் சங்கங்கள் 5,000 ரூபாய் வரையிலும் செலவு செய்துகொள்ளலாம். அதற்கு மேற்பட்ட தொகை செலவு செய்ய வேண்டுமானால் பதிவாளர் அனுமதி பெற்றுத்தான் அந்தந்த சங்கங்கள் அந்தந்த இனங்களுக்குச் செலவிடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைமலை நகரில் வீட்டுமனை மற்றும் எல். ஐ. ஜி. வீடுகளின் விலை.

*3409—திரு. உ. ரா. வரதராசன் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மறைமலை நகரில் வீட்டுமனை மற்றும் எல்.ஐ.ஜி. வீடுகளின் விலையை 100 சதவீதமாக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உயர்த்தி இருப்பதைக் குறித்து, அந்நகர் வாழ் மக்களின் Arbitration கோரிக்கை மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே,

மறைமலை நகரில் வீட்டுமனை மற்றும் எல்.ஐ.ஜி. வீடுகளின் விலையை 100 சதவிகிதம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உயர்த்தியிருப்பதைக் குறித்து அந்நகர் வாழ் மக்களிடமிருந்து (Arbitration) கோரிக்கை ஏதும் இக்குழுமத்திற்கு வரவில்லை. ஆனால், விலை ஏற்றம் குறித்து ஒதுக்கீட்டுதாரர்கள் தொடுத்த வழக்கு ஒன்று செங்கல்பட்டு முனிசீப் கோர்ட்டில் உள்ளது. கோர்ட்டின் தீர்ப்பிற்குப்பின் இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த விலையேற்றத்திற்குக் காரணமான ஒரு அம்சம், மறைமலை நகருக்குப் பாலாற்றிலிருந்து குடிநீர் கொண்டு வர திட்ட மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 4.15 கோடி, அங்கே மனைகள், வீடுகள் வாங்கிய மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது என்று நான் அறிகிறேன். குடிநீர் விநியோகத்திற்கான செல

1990 மார்ச் 31]

எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது ? ஒவ்வொரு சங்கமும் எவ்வளவு தொகை இந்த நலக் காரியத்திற்காக வழங்கலாம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க வெள்ளி விழா நினைவு அரசு உயர்நிலைப் பள்ளிக்காக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் 2,000 ரூபாய் வீதமும், மத்திய மற்றும் தலைமைச் சங்கங்கள் 5,000 ரூபாய் வரையிலும் செலவு செய்துகொள்ளலாம். அதற்கு மேற்பட்ட தொகை செலவு செய்ய வேண்டுமானால் பதிவாளர் அனுமதி பெற்றுத்தான் அந்தந்த சங்கங்கள் அந்தந்த இனங்களுக்குச் செலவிடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைமலை நகரில் வீட்டுமனை மற்றும் எல். ஐ. ஜி. வீடுகளின் விலை.

*3409—திரு. உ. ரா. வரதராசன் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மறைமலை நகரில் வீட்டுமனை மற்றும் எல்.ஐ.ஜி. வீடுகளின் விலையை 100 சதவீதமாக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உயர்த்தி இருப்பதைக் குறித்து, அந்நகர் வாழ் மக்களின் Arbitration கோரிக்கை மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே,

மறைமலை நகரில் வீட்டுமனை மற்றும் எல்.ஐ.ஜி. வீடுகளின் விலையை 100 சதவிகிதம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உயர்த்தியிருப்பதைக் குறித்து அந்நகர் வாழ் மக்களிடமிருந்து (Arbitration) கோரிக்கை ஏதும் இக்குழுமத்திற்கு வரவில்லை. ஆனால், விலை ஏற்றம் குறித்து ஒதுக்கீட்டுதாரர்கள் தொடுத்த வழக்கு ஒன்று செங்கல்பட்டு முனிசீப் கோர்ட்டில் உள்ளது. கோர்ட்டின் தீர்ப்பிற்குப்பின் இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த விலையேற்றத்திற்குக் காரணமான ஒரு அம்சம், மறைமலை நகருக்குப் பாலாற்றிலிருந்து குடிநீர் கொண்டு வர திட்ட மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 4.15 கோடி, அங்கே மனைகள், வீடுகள் வாங்கிய மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது என்று நான் அறிகிறேன். குடிநீர் விநியோகத்திற்கான செல

வைப் பொதுவாக அரசோ அல்லது உள்ளாட்சி நிறுவனமோ ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது வழக்கில் உள்ள ஒன்று. அதைத் தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம் 20 (6) (ஏ) மற்றும் 25 (4) (ஏ) பிரிவுகள் வலியுறுத்துகின்றன. இச் செலவினை அரசு ஏற்க வேண்டுமென்கின்ற எம்.எம்.டி.ஏ.வின் கோரிக்கை முந்தைய அரசால் நிராகரிக்கப்பட்டதன் காரணத்தால்தான் இந்த விலை உயர்வு செய்யப்பட்டதாக அறிகிறேன். அது உண்மையானால் அது குறித்து இப்போதைய அரசு மறுபரிசீலனை செய்யுமா? இந்த அரசின் நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

9-45 மணி

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த வீட்டினுடைய மதிப்பு என்பது வீட்டுமனையும் அந்தக் கட்டிடமும் சேர்ந்து 18 ஆயிரம் ரூபாய் என்று தோராயமாகக் கணக்கிடப்பட்டது. ஆனால், வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் இந்த விலை உயர்வுக்கு அந்த வீட்டுமனையும், அந்தக் கட்டிட மதிப்பும், வசூல் செய்கின்ற நிர்வாகச் செலவு எல்லாம் சேர்த்து ரூ. 34,382 என்று கணக்கிடப்பட்டு இருக்கின்றது. ஆனால், விலை உயர்வுக்குக் காரணம் சிமெண்ட், ஸ்டீல் போன்ற கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு என்றும், ஒவ்வொரு வீட்டுக்கும் குடிநீர் வழங்குவதற்கு, வாட்டர் மீட்டர் பொருத்துவதற்கு 500 ரூபாய் செலவிடப்பட்டு இருக்கின்றது என்றும் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் கொடுக்கப்பட்டு இருக்கின்றது.

திரு. உ. ரா. வரதராசன் ; மாண்புமிகு தலைவர் அவர்களே, வீட்டின் விலை உயர்வுக்கு வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் சொல்வது காரணமாக இருக்கலாம். ஆனால், வீட்டு மனை விலையே பெரு மடங்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதோடுகூட தாம்பரம் சானடோரியத்திலுள்ள எம்.இ.பி. இஸட் வணிகப் பகுதிக்கு இந்தத் திட்டத்திலிருந்துதான் குடிநீர் வழங்கிய போதிலும், முதலீட்டுச் செலவை அந்தப் பகுதி எம்.இ.பி. இஸட் வணிகர்களிடமிருந்து வசூலிக்கப்படாது மறைமலை நகர் மக்கள் மீது மட்டும் அந்தச் செலவு சுமத்தப்பட்டு இருப்பதை இந்த அரசு அறியுமா? இச்செலவினை அரசோ அல்லது உள்ளாட்சி மன்றமோ ஏற்று மனைகள், வீடுகள் விலையைக் குறைக்க இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு ; மாண்புமிகு தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக வழக்கு ஒன்று நடைபெற்றுக் கொண்டு இருப்பதால் அந்த வழக்கினுடைய தீர்ப்பைப் பொறுத்து மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1990 மார்ச் 31]

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மறைமலை நகர்ப் பகுதியில் எம்.எம்.டி.ஏ. மூலம் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன? ஹவுசிங் போர்டு மூலம் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன? அந்த இரண்டு பகுதிகளிலும் விற்கப்படாமல் அல்லது வாடகைக்கு விடப்படாமல் காலியாக இருக்கின்ற வீடுகள் எத்தனை என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 504 வீடுகளும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு 30 வீடுகளும் கட்டப்பட்டு இருக்கின்றன. இந்த வீடுகளில் 216 வீடுகள் 1981-ஆம் ஆண்டிலும், 288 வீடுகள் 1982-ஆம் ஆண்டிலும் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. அந்தப் பகுதியில் காலியான வீடுகள் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கான காப்பீடு தொகை.

*4047—திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்படும் காப்பீடு தொகை ரூ. 3,000-ஐ மேலும் உயர்த்தித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், உயர்த்த உத்தேசித்துள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நெசவாளர்கள் காப்புறுதித் திட்டத்தின் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் நிதிநிலை அறிக்கையில், அவர்களுக்கு 3 ஆயிரத்தில் இருந்து 10 ஆயிரமாக உயர்த்தப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்குத் தரப்படுகிற இந்தத் தொகை 3 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரமாக உயர்த்தித் தந்தமைக்காக, நெசவாளர்கள் மீது அக்கறை கொண்டு அவர்களுக்காகவே பாடுபட்டுக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர்.....

1990 மார்ச் 31]

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மறைமலை நகர்ப் பகுதியில் எம்.எம்.டி.ஏ. மூலம் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன ? ஹவுசிங் போர்டு மூலம் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன ? அந்த இரண்டு பகுதி களிலும் விற்கப்படாமல் அல்லது வாடகைக்கு விடப்படாமல் காலியாக இருக்கின்ற வீடுகள் எத்தனை என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 504 வீடுகளும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு 30 வீடுகளும் கட்டப்பட்டு இருக்கின்றன. இந்த வீடுகளில் 216 வீடுகள் 1981-ஆம் ஆண்டி லும், 288 வீடுகள் 1982-ஆம் ஆண்டிலும் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. அந்தப் பகுதியில் காலியான வீடுகள் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கான காப்பீடு தொகை.

*4047—திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்படும் காப்பீடு தொகை ரூ. 3,000-ஐ மேலும் உயர்த்தித்தர அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், உயர்த்த உத்தேசித்துள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நெசவாளர்கள் காப்புறுதித் திட்டத்தின் அடிப்படை யில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர் களால் நிதிநிலை அறிக்கையில், அவர்களுக்கு 3 ஆயிரத்தில் இருந்து 10 ஆயிரமாக உயர்த்தப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்குத் தரப்படுகிற இந்தத் தொகை 3 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரமாக உயர்த்தித் தந்தமைக்காக, நெசவாளர்கள் மீது அக்கறை கொண்டு அவர் களுக்காகவே பாடுபட்டுக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர்......

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நன்றி தெரிவிப்பது, பாராட்டுவது எல்லாம் கிடையாது ; உரையாற்றும்போது சொல்லிக்கொள்ளலாம். வினா இருக்கிறதா ?

திரு. இரெ. இராசமாணிக்கம் : அந்த 10 ஆயிரம் தொகையை இன்னும் கொஞ்சம் அதிகம் உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போதுதான் 3 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரமாக உயர்த்தப்பட்டு இருக்கின்றது. அதை மேலும் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக எத்தனை நெசவாளர்கள் பயன் பெறுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் காப்புறுதித் திட்டத்தின் மூலமாக கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கின்ற நெசவாளர்கள்தான் பயன்பெறுகிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் 1 இலட்சத்து 50 ஆயிரம் நெசவாளர்கள் பயன்பெறுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

9-50 மணி

2. வினா நேரம் முடிவுற்றபின் பேரவைத் தலைவரின் அனுமதி பெற்று சில பொதுப் பிரச்சினைகளை எழுப்பும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்திய இராணுவத்தினுடைய கடைசிப் பிரிவு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்கள் உட்காரலாம். (குறுக்கீடு) உட்காருங்கள். சொல்கிறேன். ஓர் அறிப்பு (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். அறிவிப்பைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நன்றி தெரிவிப்பது, பாராட்டுவது எல்லாம் கிடையாது ; உரையாற்றும்போது சொல்லிக்கொள்ளலாம். வினா இருக்கிறதா ?

திரு. இரெ. இராசமாணிக்கம் : அந்த 10 ஆயிரம் தொகையை இன்னும் கொஞ்சம் அதிகம் உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போதுதான் 3 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரமாக உயர்த்தப்பட்டு இருக்கின்றது. அதை மேலும் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக எத்தனை நெசவாளர்கள் பயன் பெறுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் காப்புறுதித் திட்டத்தின் மூலமாக கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கின்ற நெசவாளர்கள்தான் பயன்பெறுகிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் 1 இலட்சத்து 50 ஆயிரம் நெசவாளர்கள் பயன்பெறுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

9-50 மணி

2. வினா நேரம் முடிவுற்றபின் பேரவைத் தலைவரின் அனுமதி பெற்று சில பொதுப் பிரச்சினைகளை எழுப்பும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்திய இராணுவத்தினுடைய கடைசிப் பிரிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்கள் உட்காரலாம். (குறுக்கீடு) உட்காருங்கள். சொல்கிறேன். ஓர் அறிவிப்பு (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். அறிவிப்பைச் சொல்கிறேன்.

1990 மார்ச் 31] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். அறிவிப்புச் சொல்லவேண்டி யிருக்கிறது. இது தொடர்பாக அறிவிப்பு ஒன்று சொல்ல வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) உட்காருங்கள் இல்லை, எப்படி? உட்காரமுடியுமா, உட்கார முடியாதா? உட்காருங்கள். நான் ஓர் அறிவிப்புச் சொல்ல வேண்டியிருக்கிறது என்று சொல்லிவிட்டேன் அல்லவா? ஓர் அறிவிப்புச் சொல்ல வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) உறுப்பினரவர்கள் உட்காரலாம்.

உறுப்பினர்களுடைய கவனத்திற்கு. வினா நேரம் முடிந்த பிறகு, இதர அலுவல்களைத் தொடங்குவதற்கு முன்னால் சில உடனடிக் கவனங்களுக்காக இந்த நேரத்தை நாம் ஒதுக்கி, சில செய்திகளை எழுப்புகிறோம். அமைச்சர்கள் பகுதியிலிருந்து அதற்கான விடை தரப்படுகிறது. இது எந்த விதிகளிலும் இடம் பெறாத ஒன்று. நாம் சில மரபுகளுக்காக, சம்பிரதாயங்களுக் காக உடனடியாகக் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்ற அக்கறை காரணமாகத்தான் இதை எழுப்புவதற்கு அனுமதி வழங்கி இருக்கிறோம். அது, பேரவைத் தலைவரவர் களுடைய ஓர் அனுமதி என்ற அளவில்தான் இருக்கிறதே தவிர, எந்த விதியின்பால் உட்பட்டும் அது இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

பொதுவாகவே, இதுபோன்ற பிரச்சினைகளை எழுப்புகின்ற பொழுது இதற்கும், கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கும் உள்ள வேறுபாட்டையும் கொஞ்சம் உணர வேண்டும். கவன ஈர்ப்புத் தீர்மானம் என்பது 55-வது விதியின் கீழ் தற்போது, பேரவைச் செயலகத்திலிருந்து துறையினுடைய செயலகத்திற்கு அனுப்பப் பட்டு, விடை வந்து, முறைப்படி விடை வந்தாலும்கூட ஒரு நாளைக்கு இரண்டு என்று போட்டு, ஓர் அளவுபடுத்தி, அந்த இரண்டையும்கூட அந்தக் கவன ஈர்ப்பைக் கொண்டு வருகிறவர் என்ன கவன ஈர்ப்பைச் செய்ய வேண்டுமோ அதை மட்டுமே படிக்கக்கூடிய வாய்ப்பை மட்டுமே கொடுத்து, அதற்கு மேல் எந்த விளக்கத்திற்கும், விவாதத்திற்கும் இடமில்லாமல் செய்து, அதன் பிறகு அமைச்சரவர்கள் அறிக்கை படித்த பிறகே, விடை தந்த பிறகே, இரண்டு வினாக்களை மட்டும் எழுப்புவதற்குத் தான் வாய்ப்புத் தரப்படுகிறது.

என்றாலும், உடனடிக் கவன ஈர்ப்பு என்ற முறையில் அதை விட முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால் அமைச்சர்களின் உடனடிக் கவனத்தை ஈர்ப்பதற்கான வாய்ப்புத்தான் தரப்படு கிறது என்பதை நாம் மறந்துவிட்டு, அதை நீண்ட விவாதப் பொருளாக்கி, விவாதத்திற்கு விவாதம், விளக்கத்திற்குப் பதில் என்ற அளவில் விரிந்து போவதை இந்த அவை ஏற்றுக்கொள்ள

முடியாது என்பது மட்டுமல்லாமல், அதனால் இந்த அவையினுடைய முறையான அலுவல் நேரம் பெரிதும் பாதிக்கப்படுகிறது என்பதையும் உணர்ந்து, அதற்கான வாய்ப்புகளை மறுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது என்பதைச் சொல்லி, இதற்கு மேலும் உறுப்பினர்கள் இப்பொழுது எந்தப் பிரச்சினையையும் எழுப்ப வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவரவர்களே, நேற்று என்னை நீங்கள் பேச அனுமதித்தீர்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு என்னுடைய விளக்கத்தைச் சொல்லி விடுகிறேன், உட்காரலாம். (குறுக்கீடு) இல்லை, சொல்லிவிடுகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன் அல்லவா, நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்பது தெரியும். நான் விடை சொல்கிறேன் உங்களுக்கு.

நேற்றுக்கூட, பொதுவாக நான் முதலிலே சொன்னபடி திரு. பீட்டர் ஆல்போன்ஸ் 78-வது விதி (குறுக்கீடு) உட்காருங்கள். விளக்கம் சொல்கிறேன். நான் விளக்கம் சொல்வதைக் கேட்டுக் கொள்ளுங்கள். கேட்டுக்கொண்டதற்குப் பிறகு பேசுவதா இல்லையா என்பதை நீங்கள் முடிவெடுக்க வேண்டும். (குறுக்கீடு) விளக்கம் சொல்வதைக் கேட்க முடியுமா என்ன? (குறுக்கீடு) இல்லை. விளக்கம் சொல்வதைக் கேட்க முடியுமா?

திரு. குமரி அனந்தன் : எழுந்துகொள்ளும்பொழுதெல்லாம் விளக்கம் என்றால்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை நீங்கள் எழுந்துகொள்ளும் பொழுதெல்லாம் நான் அனுமதிக்க வேண்டுமென்று ஒன்றும் அவசியமில்லை. அதையும் பார்க்க வேண்டும். நீங்கள் எழுந்துகொள்ளும் பொழுதெல்லாம் அனுமதிக்க வேண்டுமென்று எந்த விதியிலும் கிடையாது.

திரு. குமரி அனந்தன் : இது நியாயம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நியாயம் இருக்கிறது. பேரவைத் தலைவரவர்கள் நினைத்தால் அனுமதிக்கலாம். நினைத்தால் மறுக்கலாம். இப்பொழுது இதிலே விவாதமே வேண்டாம். நீங்கள் உட்காருகிறீர்களா என்ன என்பதுதான் கேள்வி.

திரு. குமரி அனந்தன் ; எழுந்திருக்கின்ற நேரமெல்லாம் விளக்கம்.......

பெற்றுச் சில பொதுப் பிரச்சினைகளை எழுப்பும்போது
கடைப்பிடிக்க வேண்டிய நடை
முறைகள் குறித்து

1990 மார்ச் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நான் சொல்லுகின்ற விளக்கத்தைக் கேட்க வேண்டும் (குறுக்கீடு) உட்காருகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) இல்லை. அப்புறம் நான் வெளியேற்ற வேண்டி வரும். கடுமையாக நடக்க வேண்டியிருக்கும். (கூச்சல்-குழப்பம்) உட்கார வேண்டுமென்பதற்காகத் தான் சொல்கிறேன். (குறுக்கீடு) விளக்கத்தைக் கேட்டுக் கொள்ளுங்கள்.

திரு. குமரி அனந்தன்: எதற்காக வெளியேற்றுகிறீர்கள்?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: எங்களை நீங்கள் மிரட்டுவதாக இருக்கிறது. இதைத் தவிர்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள் முதலிலே. உட்கார முடியுமா, முடியாதா? தவிர்க்க வேண்டியது இல்லை. தேவைப்பட்டால் அவையினுடைய அமைதியைக் காப்பதற்கும், ஒழுங்கைக் காப்பதற்கும் அதையும் செய்ய வேண்டியிருக்கிறது என்பதை நினைவூட்ட வேண்டியது என்னுடைய கடமை. (கூச்சல்-குழப்பம்) நானே விளக்கம் சொல்கிறேன் என்று சொன்ன பிறகு உட்கார வேண்டியதுதானே. (கூச்சல்-குழப்பம்).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: விளக்கத்தைக் கேட்கத்தான் எழுந்திருந்தோம். (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோருமே உட்காருங்கள். அவர் எழுப்பிய பிரச்சினைக்கு நான் விளக்கம் சொல்கிறேன் என்று சொன்ன பிறகும், உட்காரவில்லை என்று சொன்னால், (குறுக்கீடுகள்) அடுத்த கட்டத்திற்குத்தான் போக வேண்டியிருக்கிறது. நான் சொல்ல விரும்புவது, விளக்கத்தைச் சொல்வதைக் கேட்டுக்கொண்ட பிறகு உங்கள் முடிவுகளை நீங்கள் தெரிவிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இப்பொழுது நான் சொல்கிறேன், உங்களுக்கு. (கூச்சல் குழப்பம்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களும் உட்காரலாம். நான் விளக்கம் சொன்ன பிறகு நீங்கள் பேசுங்கள். நேற்று திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் 78-வது விதியின்கீழ் ஓர் அறிவிப்புக் கொடுத்திருந்தார். முறைப்படி சரியானபடி பார்த்தால், ஏற்கனவே அது அவையில் பேசப்பட்டது என்று அதை நான் மறுத்திருக்கலாம்.

9-55 மணி

என்றாலும் அவருக்குப் பேசுவதற்கு, அந்தச் செய்தியைத் தெரிவிப்பதற்கு ஒரு வாய்ப்புத் தரப்பட்டு, முதலமைச்சர் அவர்களும் அதற்கு விளக்கம் சொல்வதற்குத் தயாரான நிலையில்

விளக்கம் சொன்னார்கள். இடையில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எழுந்து, திரு. பொன்னுசாமி அவர் களும் இதுபோன்ற ஓர் அறிவிப்பை 74-வது விதியின்கீழ் கொடுத் திருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டினார்கள். நான் உடனே செயலாளர் அவர்களிடத்தில் கேட்டேன். '' ஆமாம் கொடுத் திருக்கிறார் '' என்று அவர் சொன்னதும், அவருக்கும் அந்த வாய்ப்புத் தரப்பட்டது. இதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. அந்த வாய்ப்புத் தந்த பிறகு, முறைப்படி கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு மாறாக இரண்டு பேரும் விரிவான வாதமே வைத் தார்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. எந்த வகை யான குற்றச்சாட்டுகளுக்கும் இடம் இல்லாமல், வேறுவகையான வாதங்களுக்கோ விளக்கங்களுக்கோ இடம் இல்லாமல்தான் கவன ஈர்ப்பு அமைய வேண்டும் என்பதற்கு மாறாக நான் அவர்கள் செய்தியைச் சொல்லட்டும் என்று பெருந்தன்மையோடு அனுமதித்து இருந்தேன். அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை ஒட்டி நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஒரு விளக்க உரை ஆற்றினார்கள். அதையும்கூட நம்மு டைய முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், எதிர்க் கட்சித் தலைவருக்கே உள்ள தனி உரிமையின் பேரில் நீங்கள் அதை எடுத்துக்கொண்டது சரி, என்றாலும் தொடர்ந்து இதிலே வாதம் வைத்துக் கொள்ளலாமா என்று.

திரு. குமரி அனந்தன் அவர்களுக்கும் நான் பெருந்தன்மை காரணமாகத்தான் வாய்ப்பு அளித்தேன். அதை நீங்கள் மறந்து விடக்கூடாது. ஆனால் அதே நேரத்தில் இந்த அவையினுடைய உறுப்பினர் மாண்புமிகு திரு. ரமணி அவர்களும், அமைச்சர் மாண்புமிகு திரு. துரை முருகன் அவர்களும் எழுந்து ஓர் ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார்கள். இப்படித் தொடர்ந்து இதன் பேரில் வாதம் வைத்துக் கொள்ளலாமா என்று கேட்டார்கள். எனவே, ஓர் ஒழுங்குப் பிரச்சினை என்று வருகிறபோது நான் தந்திருப்பது தீர்ப்பு அல்ல, வாய்ப்பு. அந்த வாய்ப்புகள் ஒழுங் குப் பிரச்சினைபால் உட்படுத்தப்பட்டு, அந்த ஒழுங்குப் பிரச்சி னையும் நியாயமானதுதான் என்று நான் கருதுகிற போது, அந்த வாய்ப்பு மறுக்கப்படுவது தவிர்க்க முடியாதது என்பது தான் என்னுடைய விளக்கம். இப்போது நீங்கள் சொல்லலாம்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, நீங்கள் கொடுத்திருக்கிற விளக்கத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறோம். ஆனால் ஒன்றை நீங்கள் கவனிக்க வேண்டும். ஒரு அடிப்படையான, முக்கியத்துவம் வாய்ந்த இந்திய நாட்டினு

1990 மார்ச் 31] [திரு. எஸ். ஆர். இராதா]

டைய பாதுகாப்பை கருதிய ஒரு பெரிய பிரச்சினை மக்களிடத்தில் எழுந்திருக்கிற ஒரு நிலையைத்தான் இங்கே அவையில் பேசுகிறோம். பேசுவதற்கு நீங்கள் அனுமதித்து விட்டீர்கள். எங்கள் தரப்பில் எங்களுடைய நிலையை சொல்லிவிட்டோம். ஆனால் அரசு தரப்பிலே முதலமைச்சர் அவர்கள் விளக்கத்தைச் சொன்னார்கள். அப்படி விளக்கம் சொல்கிற நிலையில் தான் குழப்பங்கள் வர ஆரம்பித்தன. அந்த குழப்பங்களுக்கு நாங்கள் எங்கள் நிலைகளைச் சொல்ல வேண்டும் என்பதில் தான் இன்றைக்கு நான் அவை உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை கொடுத்திருக்கிறேன். ஆனால் வாதத்திற்காக நான் சொல்கிறேன். ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டதற்கு நாங்கள் பதில் சொல்ல அனுமதிக்க வேண்டும். எங்கள் தரப்பில் பதிலே கிடையாது. தாங்கள் சொல்வதைத் தான் கேட்க வேண்டும் என்றால் நாங்கள் அவையில் இருக்க வேண்டிய அவசியமே கிடையாது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்றை நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு உணர்த்த வேண்டும். உட்காருங்கள் சொல்கிறேன். உங்களுக்கு, பிரச்சினை எழுப்புவதற்கு ஏராளமான வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் எழுப்புகிறீர்கள். ஓர் அமைச்சர் பேசுகிற போதோ, முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கிற போதோ அல்லதுவேறு உறுப்பினர்கள் பேசுகிறபோதோ உங்களுக்கு உங்கள் தரப்பிலான நியாயங்களை எடுத்துச் சொல்வதற்கு விவாதங்களின்போது வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஆனால் இது போன்ற ''Mention'' என்ற அடிப்படையிலே கவன ஈர்ப்புச் செய்கிறபோது — ஒரு கருத்தை முதலமைச்சர் சொன்ன பிறகு அதிலே வாதத்திற்கு இடமில்லை என்பதுதான் என்னுடைய நிலை.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, வாதத்திற்கு இடமில்லை என்று நீங்கள் விதியைக் காட்டி சொல்வீர்கள் என்பதால் தான் இன்றைக்கு அவையினுடைய உரிமையை மீறினார் என்பதற்காக உரிமை மீறல் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. அது எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பது குறித்து உங்களுக்கு முறைப்படி அறிவிக்கப்படும். இப்போது அதன்மீது நீங்கள் பேசமுடியாது.

வினா நேரம் முடிவுற்றபின் பேரவைத் தலைவரின் அனுமதி பெற்றுச் சில பொதுப் பிரச்சினைகளை எழுப்பும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடை முறைகள் குறித்து

[1990 மார்ச் 31

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, நான் உங்களுக்கு சொல்லிக் கொள்கிறேன். விதியின்படி பார்த்து, ஆய்வு செய்து செய்ய வேண்டும் என்பதல்ல. விதியிலே ஒரு அவையுரிமை மீறல் என்று சொன்னால், அவையினுடைய உரிமை எந்த நேரத்திலும் மீறப்படலாம். அப்படி ஒரு உரிமை மீறல் வருகிறது என்றால் அது என்ன என்று கேட்டு, அதற்கு பிறகு தான் நீங்கள் தீர்ப்பு தர முடியுமே தவிர..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்றை நீங்கள் மறந்து விடக்கூடாது. எந்த விதியின் கீழ் நீங்கள் கொடுத்தாலும், பேரவைத் தலைவர் உசிதம் என்றும், பொருத்தம் என்றும் கருதினால் மட்டும் தான் அதை அவையில் எடுத்துக்கொள்ள முடியும்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, அந்த விதிகளை மீற வேண்டுமென்று நான் விரும்பவில்லை. அந்த விதிகளின்படி எந்த நேரத்திலும் இந்த அவையை கூட நீங்கள் கலைத்துவிட்டுப் போகலாம். உங்களுக்கு இருக்கிற உரிமை அது. ஆனால் அதனால் நீங்கள் அதை செய்துவிட முடியுமா என்றால் முடியாது. ஆனால் அதுவல்ல, இன்றைக்கு இருக்கிற பிரச்சினை தமிழ்நாட்டில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற ஒரு பதட்டநிலை முதலமைச்சர்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேலும் இதுபற்றிப் பேசுவதற்கு நான் அனுமதிக்கவில்லை. உரிமை மீறல் பிரச்சினையை எழுப்ப பேரவைத் தலைவர் அனுமதியளித்த பின் அவ்வுரிமைப் பிரச்சினை வினாக்களுக்குப் பின்னரும், அந்நாள் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப் பெற்றுள்ள அலுவல்களுக்கு முன்னரும், எழுப்பப்பெற வேண்டும். எனினும் பேரவைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கையில் எழும் ''உரிமைப் பிரச்சினை'' ஒன்று உடனடியாக மற்ற எல்லா அலுவல்களையும் விட முன்னிடம் பெறும் என்றாலும், பேரவைத் தலைவருக்கு எழுதிக் கொடுத்த பிறகு, அனுமதித்தால் மட்டும் தான் அதைப் பேச முடியும். இப்போது நீங்கள் அமரலாம்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, நீங்கள் இவ்வளவு சொன்னதற்குப் பிறகும் உங்களுக்கு அறிவுரை சொல்வதைப் போல, உங்களுடைய ஆணையை மறுப்பதைப் போல எதிர்க் கட்சித் தலைவரும், மற்றவர்களும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இது இந்த சபையினுடைய மரபை முற்றிலும் மீறுவதாகும். அவையினுடைய உரிமையை மீறுவதாகும். இதற்கு தாங்கள் ஒரு விளக்கம் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1990 மார்ச் 31]

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பேசிய பேச்சுக்களின் கருத்துக்களிலிருந்து சில செய்தி களை, என்னுடைய நிலைபாட்டை, காங்கிரஸ் கட்சியினுடைய நிலைபாடுகளை எடுத்துச் சொல்ல......(குறுக்கீடு)

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் முதலிலேயே சொல்லிவிட்டேன், இதன்மீது எந்த விவாதமும் கூடாது என்று. திரு. ரமணி அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையை ஏற்று, அதில் இருக்கிற நியாயத்தை உணர்ந்துதான் உங்களுக்கு அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டதே தவிர, உங்கள் வாதத்தை தக்க நேரத்தில் தாராளமாக உங்களுக்கு வாய்ப்பு வருகிறபோது எடுத்துச் சொல்லலாம். இன்னும் சொல்லப் போனால், ஏற்கெனவே கூட நீங்கள் எடுத்துச் சொன்ன பிறகும்கூட, திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களை அனுமதித்து இருக்கிறேன் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள், நினைவுபடுத்திக் கொள்வீர்கள் என்று கருதுகிறேன் (குறுக்கீடுகள்). விளக்கம் ஏற்கனவே சொல்லியாகிவிட்டது. நான் திருப்பித் திருப்பி விளக்கம் சொல்ல விரும்பவில்லை. இதுதான் நிலைமை (குறுக்கீடுகள்). இப்போது நான் அடுத்த அலுவலுக்குப் போகிறேன் திரு. குமரி அனந்தன் அவர்கள் உட்காரலாம் (குறுக்கீடுகள்).

3. உரிமை மீறல் பிரச்சினை.

தினமலர் நாளிதழ் மீது—அவைநடவடிக்கைகள் பற்றி வெளியிடப் பட்டுள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது உரிமை மீறல் பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் அவர்கள், திருநெல்வேலி பதிப்பு ' தினமலர் ' நாளிதழில் பேரவை நிகழ்ச்சி குறித்து (கூச்சல்-குழப்பம்) வெளியிடப் பட்டுள்ள ஒரு செய்தி, பேரவையின் உரிமையை மீறிய செயலாகும் என்று ஓர் உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். (கூச்சல்-குழப்பம்). இது எவ்வாறு உரிமை மீறல் பிரச்சினையில் அடங்கும் என்பதற்குச் சுருக்கமான விளக்கம் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் (கூச்சல்-குழப்பம்).

*திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதி — —....(கூச்சல்-குழப்பம்).

1990 மார்ச் 31]

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பேசிய பேச்சுக்களின் கருத்துக்களிலிருந்து சில செய்தி களை, என்னுடைய நிலைபாட்டை, காங்கிரஸ் கட்சியினுடைய நிலைபாடுகளை எடுத்துச் சொல்ல......(குறுக்கீடு)

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் முதலிலேயே சொல்லிவிட்டேன், இதன்மீது எந்த விவாதமும் கூடாது என்று. திரு. ரமணி அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையை ஏற்று, அதில் இருக்கிற நியாயத்தை உணர்ந்துதான் உங்களுக்கு அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டதே தவிர, உங்கள் வாதத்தை தக்க நேரத்தில் தாராளமாக உங்களுக்கு வாய்ப்பு வருகிறபோது எடுத்துச் சொல்லலாம். இன்னும் சொல்லப் போனால், ஏற்கெனவே கூட நீங்கள் எடுத்துச் சொன்ன பிறகும்கூட, திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களை அனுமதித்து இருக்கிறேன் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள், நினைவுபடுத்திக் கொள்வீர்கள் என்று கருதுகிறேன் (குறுக்கீடுகள்). விளக்கம் ஏற்கனவே சொல்லியாகிவிட்டது. நான் திருப்பித் திருப்பி விளக்கம் சொல்ல விரும்பவில்லை. இதுதான் நிலைமை (குறுக்கீடுகள்). இப்போது நான் அடுத்த அலுவலுக்குப் போகிறேன் திரு. குமரி அனந்தன் அவர்கள் உட்காரலாம் (குறுக்கீடுகள்).

3. உரிமை மீறல் பிரச்சினை.

தினமலர் நாளிதழ் மீது—அவைநடவடிக்கைகள் பற்றி வெளியிடப் பட்டுள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது உரிமை மீறல் பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் அவர்கள், திருநெல்வேலி பதிப்பு ' தினமலர் ' நாளிதழில் பேரவை நிகழ்ச்சி குறித்து (கூச்சல்-குழப்பம்) வெளியிடப் பட்டுள்ள ஒரு செய்தி, பேரவையின் உரிமையை மீறிய செயலாகும் என்று ஓர் உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். (கூச்சல்-குழப்பம்). இது எவ்வாறு உரிமை மீறல் பிரச்சினையில் அடங்கும் என்பதற்குச் சுருக்கமான விளக்கம் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் (கூச்சல்-குழப்பம்).

*திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதி — —....(கூச்சல்-குழப்பம்).

[1990 மார்ச் 31

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் நின்று பேசிக்கொண்டே இருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது அனைவரும் அமர வேண்டும். ஒரு தரம் கேட்டுக்கொள்கிறேன். அனைவரும் அமைதியாக அமர வேண்டும். (கூச்சல்-குழப்பம்). இரண்டாவது தடவையும் கேட்டுக்கொள்கிறேன். அனைவரும் அமைதியாக அமர வேண்டும் (கூச்சல்-குழப்பம்). மூன்றாவது தடவையாகக் கேட்டுக்கொள்கிறேன். எல்லோரும் அமைதியாக அமர வேண்டும் (கூச்சல்-குழப்பம்). இப்போது,
"Under Rule 120, I name the Hon. Opposition Leader, and his Colleagues and Mr. Kumari Anandan and his Colleagues"

அனைவரும் அவையைவிட்டு வெளியேறுமாறு கேட்டுக்கொள்கிறேன் (கூச்சல்-குழப்பம்). சார்ஜன்ட், எல்லோரையும் அவையிலிருந்து வெளியேற்றலாம் (கூச்சல்-குழப்பம்).

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப் பட்டனர்.)

10-05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்துப் பத்திரிகையில் கடந்த 2, 3 நாட்களுக்கு முன்பு இந்த மாமன்றத்தைப் பற்றி ஒரு கட்டுரை வெளிவந்தபோதே எனக்குத் தெரியும், இது போன்று ஏதாவது செய்ய வேண்டும், அப்போதுதான் தாங்கள் வேகமாக இருப்பது நாட்டுக்குத் தெரியும் என்கின்ற உணர்வோடு செயல்படுவார்கள் என்று நான் அன்றைக்கே கருதினேன். அதைப்பற்றி அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது "இந்துப் பத்திரிகையில்கூட எழுதியிருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டார். எனவே, அதன் விளைவாக இதுபோன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறவேண்டுமென்று அவர்கள் முடிவு எடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்தியாவினுடைய பெருமையைக் காப்பாற்ற வேண்டுமென்று அவையைவிட்டு வெளியேறியவர்கள் யாருடைய தலைமையில் வெளியேறினார்கள் என்றால் பிரதமர் இந்திரா காந்தியினுடைய படத்தை இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தீயிட்டுக் கொளுத்திய நண்பர் குமரி அனந்தன் அவர்களுடைய தலைமையிலேதான் வெளியேறி இருக்கிறார்கள். என்பதுதான் வேடிக்கை, விசித்திரம், வேதனை, வெட்கக் கேடு.

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவரவர்களே,.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.

1990 மார்ச் 31]

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 219-ன் கீழ் உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை கொண்டு வருகின்றேன். திருநெல்வேலி பதிப்பு தினமலர் பத்திரிகையில் 21-3-1990ஆம் நாள் செய்தித் தாளின் முதல் பக்கத்தில் 3ஆம் பத்தியில் சட்டசபையில் ரகளை, அமளி என்ற தலைப்பிட்டு சட்டப் பேரவை நிகழ்ச்சி குறித்து செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அதில் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் குமரி அனந்தன் அவர்கள் கீழ்க்கண்டவாறு பேசியதாக செய்தி வந்துள்ளது. செய்தியாவது—

10-10 மணி.

'' பாண்டியனும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் பேசிய நா கூசும் சொற்களை இந்தச் சபை இதற்கு முன் கேட்டதே இல்லை '' என்று மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் குமரி அனந்தன் அவர்கள் பேசியதாக அந்தச் செய்தி.

ஆனால் உண்மையில் அவ்வாறு நிகழ்ச்சியும் நடைபெறவில்லை. குமரி அனந்தனும் தனது பேச்சில் '' தி.மு.க. உறுப்பினர்களும் '' என்று பேசியதும் இல்லை. ஆக பேசாத ஒன்றை தி.மு. கழக உறுப்பினர்கள் மீது களங்கம் கற்பிக்கும் வகையில் வேண்டும் என்றே திருநெல்வேலி பதிப்பு தினமலர் செய்தியாய் வெளியிட்டுள்ளது. அதனை திருநெல்வேலியில் படித்த பல்வேறு வாசகர்கள் நண்பர்கள் எனக்கு கடிதம் மூலமாக சட்ட மன்றத்திலே இப்படி ஒரு இழி நிலை ஏற்படுகிறதா என்று கேட்கக் கூடிய அளவுக்கு இந்தச் செய்தி அங்கே வலுப்பெற்றிருக்கிறது. ஆகவே இந்தச் செய்தி உண்மைக்கு புறம்பானது. புறம்பானது மட்டுமல்ல, சட்டப் பேரவையினுடைய 219-வது விதியின் கீழ் இது அவை உரிமை மீறிய செயல் ஆகும் என்பதும், ஆகவே பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்ற, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுடைய கண்ணியத்தைக் காப்பாற்ற இப் பிரச்சினையை நீங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்பி நடவடிக்கை எடுத்திட அன்புடன் வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து ''தினமலர்'' நாளிதழ் ஆசிரியரிடம் விளக்கம் கேட்டு, பின்னர் எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

4. அறிவிப்பு.

இந்திய ஐக்கியப் பொதுவுடைமைக் கட்சி சட்டமன்றப் பேரவையில் ஓர் அணியாகச் செயல்படுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தர்மபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதியில் இருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட திரு. ந. நஞ்சப்பன் அவர்களைச்

1990 மார்ச் 31]

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 219-ன் கீழ் உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை கொண்டு வருகின்றேன். திருநெல்வேலி பதிப்பு தினமலர் பத்திரிகையில் 21-3-1990ஆம் நாள் செய்தித் தாளின் முதல் பக்கத்தில் 3ஆம் பத்தியில் சட்டசபையில் ரகளை, அமளி என்ற தலைப்பிட்டு சட்டப் பேரவை நிகழ்ச்சி குறித்து செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அதில் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் குமரி அனந்தன் அவர்கள் கீழ்க்கண்டவாறு பேசியதாக செய்தி வந்துள்ளது. செய்தியாவது—

10-10 மணி.

'' பாண்டியனும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் பேசிய நா கூசும் சொற்களை இந்தச் சபை இதற்கு முன் கேட்டதே இல்லை '' என்று மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் குமரி அனந்தன் அவர்கள் பேசியதாக அந்தச் செய்தி.

ஆனால் உண்மையில் அவ்வாறு நிகழ்ச்சியும் நடைபெறவில்லை. குமரி அனந்தனும் தனது பேச்சில் '' தி.மு.க. உறுப்பினர்களும் '' என்று பேசியதும் இல்லை. ஆக பேசாத ஒன்றை தி.மு. கழக உறுப்பினர்கள் மீது களங்கம் கற்பிக்கும் வகையில் வேண்டும் என்றே திருநெல்வேலி பதிப்பு தினமலர் செய்தியாய் வெளியிட்டுள்ளது. அதனை திருநெல்வேலியில் படித்த பல்வேறு வாசகர்கள் நண்பர்கள் எனக்கு கடிதம் மூலமாக சட்ட மன்றத்திலே இப்படி ஒரு இழி நிலை ஏற்படுகிறதா என்று கேட்கக் கூடிய அளவுக்கு இந்தச் செய்தி அங்கே வலுப்பெற்றிருக்கிறது. ஆகவே இந்தச் செய்தி உண்மைக்கு புறம்பானது. புறம்பானது மட்டுமல்ல, சட்டப் பேரவையினுடைய 219-வது விதியின் கீழ் இது அவை உரிமை மீறிய செயல் ஆகும் என்பதும், ஆகவே பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்ற, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுடைய கண்ணியத்தைக் காப்பாற்ற இப் பிரச்சினையை நீங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்பி நடவடிக்கை எடுத்திட அன்புடன் வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து ''தினமலர்'' நாளிதழ் ஆசிரியரிடம் விளக்கம் கேட்டு, பின்னர் எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

4. அறிவிப்பு.

இந்திய ஐக்கியப் பொதுவுடைமைக் கட்சி சட்டமன்றப் பேரவையில் ஓர் அணியாகச் செயல்படுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தர்மபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதியில் இருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட திரு. ந. நஞ்சப்பன் அவர்களைச்

சட்டமன்றப் பேரவையில் இந்திய ஐக்கிய பொதுவுடைமைக் கட்சியின் சார்பாக ஒரு தனி அணியாக இயங்க அனுமதி அளிக்கிறேன்.

5. கவன ஈர்ப்பு.

(அ) பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கு தமிழ் மொழியில் பாட நூல்கள் இல்லாதது குறித்து.

*திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளில் பட்டமேற் படிப்பு படிக்கும் மாணவர்களுக்குத் தமிழ் மொழியில் பாட நூல்கள் இல்லாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர் களே' தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் எம்.ஏ. வரலாறு ஒன்றில்தான் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு ஒரே ஒரு கல்லூரியில் பயிற்றுவிக்கப் படுகிறது. மற்ற பாடங்கள் தமிழில் பயிற்றுவிக்கப்படுகிற ஒரு முறை இப்போது இல்லை. பல துறைகளிலும் தமிழில் பயிற்றுவிப்பதற்கான நூல்களை வெளியிடுவதில் இடைக்காலத்தில் ஒரு 5, 6 ஆண்டுக்காலம் சுணக்கம் ஏற்பட்டு விட்டது. அந்த நூல்களை இப்போது அப்படியே வெளி யிடலாமா, அல்லது அவற்றை இந்த 5, 6 ஆண்டுகளில் ஏற்பட் டிருக்கிற புதிய தேவைக்கு ஏற்ப மாற்றங்களோடு வெளியிட வேண்டுமா என்பதும், எவ்வளவு விரைவிலே வெளியிட வேண்டும் என்பதும் அரசாங்கத்தினுடைய பரிசீலனையிலேயும் பல்கலைக் கழகங்களுடைய முயற்சியிலேயும் இருக்கிறது. இந்த ஆண்டில் அதற்குத் தேவையான புத்தகங்களை உருவாக்கத் தகுந்த முயற்சியை மேற்கொள்ளலாம் என்று நான் நம்புகிறேன்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத் துறையில் கூட பட்ட மேற்படிப்புக்கு மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்பது நான் அறிந்த அளவிலே தெரிய வருகிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவ்வாறு இல்லை என்று பதில் அளித்திருக் கிறார்கள். பொதுவாக இந்த தமிழ் டெவலப்மெண்ட் டிபார்ட் மெண்டிலே சட்டச் சொற்களையெல்லாம் தமிழிலே ஆக்கியிருக்கிறார்கள். அதேபோல எல்லாத் துறைகளிலும்

ஹிஸ்டரி அல்லது எக்கனாமிக்ஸ் போன்ற துறைகளிலும் கூட பட்ட மேற்படிப்புக்கு போதுமான புத்தகங்களை நம்முடைய இலாகாவிலேயே வெளியிட விடுவதினாலே அரசாங்கத்திற்கு ஒன்றும் அதிக செலவு இருக்காது. இப்போது கல்லூரிகளில் பொதுவாக எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள், எம்.பில். பட்டம் பெற்றவர்களைத்தான் வேலைக்கு எடுக்கிறார்கள். அதனால் இது குறித்து அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல விரைந்து பல நூல்களை வெளியிடுவதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பல்கலைக் கழக கல்லூரி பட்ட மேற்படிப்பு வகுப்புகள் யாவும் தமிழிலேயே நடத்தப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தினுடைய அவா. தகுந்த ஏற்பாடு முன்கூட்டியே செய்யப்படாத காரணத்தால் உடனடியாகத் துவங்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. பொருளாதாரத் துறையில் எம்.ஏ. பயிலுகிற மாணவர்கள் இப்போது தமிழிலே பயிலுவதாக எனக்கு விவரம் இல்லை. இருந்தாலும் வரலாற்றுக்கு அடுத்தபடி முன்னுரிமை தந்து பொருளாதாரப் பாட நூல்களை உடனடியாக வெளியிடப் படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். தொடர்ந்து அம்முயற்சி ஊக்கப்படுத்தப்படும்.

10-15 மணி

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத் துறையிலே இப்போது கல்லூரிகளிலே அல்லது மேல்நிலைப்பள்ளிகளிலே, எம்.ஏ. பட்டதாரிகளுக்குத்தான் பதவி உயர்வு கொடுக்கப்படுகிறது அல்லது வேலை கிடைக்கிறது. அவ்வாறிருக்கின்றபோது, எம்ஃபில் படிக்கின்றபோதுகூட, அவர்கள் சொன்னது போல பொருளாதாரத் துறையிலே தமிழிலே படித்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் சொல்லிக் கொடுக்கின்றபோது அவர்கள் பட்டம் தமிழிலே படித்து, மேற்கொண்டு மேற்பட்டப்படிப்பிற்குப் போகின்றபோது அங்கே ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுத்தால், அவர்கள் புரிந்து கொண்டு பதில் அளிப்பதற்கு, பரீட்சை எழுதுவதற்கு சிரமம் இருப்பதை உணர்வார்கள் என்று கருதுகிறேன். அவர்களுடைய வேலைவாய்ப்பைக் கருதிக்கூட, அடுத்த ஆண்டு இந்த நிலை இல்லாமல் இருப்பதற்கு, இந்த ஆண்டே முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சுருக்கமாக சொன்னால் இந்த வினா எழுப்புகிற மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தும், இந்த அரசாங்கத்தினுடைய கருத்தும் ஏறத்தாழ ஒன்றுதான். ஆனால் செயல்படுவதிலேதான் இந்த ஆண்டு என்று சொல்கிறபோது 90 வது ஆண்டு, ஆகை

யால் அடுத்த ஆண்டான 91-வது ஆண்டிலேதான் நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் உருவாக முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அப்துல்சமத் அவர்கள் கவனிக்கவேண்டும். இடத்திலே உட்காரவேண்டும். பேரவைத் தலைவருக்கும், பேசிக் கொண்டிருக்கிற உறுப்பினருக்கும் இடையில், ஒரு முறை எழுந்து போனீர்கள். மீண்டும் ஒரு முறை திரும்பி வருகிறீர்கள். விதிமுறைகளைக் கவனிக்க வேண்டும்.

(ஆ) கோவையில் பேருந்து நிலையங்களுக்கிடையே சுரங்கப்பாதை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவைமாநகரம் காந்திபுரத்திலுள்ள மத்திய பேருந்து நிலையத்திற்கும் நகரப்பேருந்து நிலையத்திற்கும் இடையில் ஒரு சுரங்க பாதை அமைக்கவேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கோயம்புத்தூர் நகரத்தில் காந்திபுரம் சந்திப்பில், கிராஸ்கட் சாலை, டாக்டர் நஞ்சப்பா சாலை, பாரதியார் சாலை, சக்தி சாலை ஆகியவைகள் சந்திக்கின்றன. பாரதியார் சாலைக்கு வடபுறம் திருவள்ளுவர் பேருந்து நிலையம் உள்ளது. காந்தி புரம் நகர பேருந்து நிலையம் பாரதியார் சாலைக்குத் தென் புறமும், டாக்டர் நஞ்சப்பா சாலைக்கு கீழ் புறமும் அமைந்துள்ளது. காந்திபுரத்தில் உள்ள கோவை வெளியூர் செல்லும் பேருந்து நிலையம் டாக்டர் நஞ்சப்பா சாலைக்கு மேல் புறம் உள்ளது. இந்த இடத்தில் அதிகமாக கடைகளும் இருப்பதால் மக்கள் கூட்டம் எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கிறது.

மக்கள் நடமாட்டம் அதிகமாக இருப்பதாலும் மூன்று பேருந்து நிலையங்கள் அருகருகே இருப்பதாலும் மக்கள் அடிக்கடி குறுக்கே கடந்து செல்ல ஏதுவாகிறது. எனவே விபத்துக்களை தவிர்க்கவும், வாகனங்கள் வேகமாக செல்வதற்கு இரண்டு சுரங்க வழி நடைபாதைகள், ஒன்று டாக்டர் நஞ்சப்பா சாலையில், போக்குவரத்து காவல் நிலையத்திற்கு எதிரிலும், மற்றொன்று பாரதியார் சாலையில் திருவள்ளுவர் பேருந்து நிலையத்திற்கு அருகிலும் அமைக்க வேண்டும்.

[டாக்டர் க. அன்பழகன்] [1990 மார்ச் 31

யால் அடுத்த ஆண்டான 91-வது ஆண்டிலேதான் நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் உருவாக முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அப்துல்சமத் அவர்கள் கவனிக்கவேண்டும். இடத்திலே உட்காரவேண்டும். பேரவைத் தலைவருக்கும், பேசிக் கொண்டிருக்கிற உறுப்பினருக்கும் இடையில், ஒரு முறை எழுந்து போனீர்கள். மீண்டும் ஒரு முறை திரும்பி வருகிறீர்கள். விதிமுறைகளைக் கவனிக்க வேண்டும்.

(ஆ) கோவையில் பேருந்து நிலையங்களுக்கிடையே சுரங்கப்பாதை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவைமாநகரம் காந்திபுரத்திலுள்ள மத்திய பேருந்து நிலையத்திற்கும் நகரப்பேருந்து நிலையத்திற்கும் இடையில் ஒரு சுரங்க பாதை அமைக்கவேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கோயம்புத்தூர் நகரத்தில் காந்திபுரம் சந்திப்பில், கிராஸ்கட் சாலை, டாக்டர் நஞ்சப்பா சாலை, பாரதியார் சாலை, சக்தி சாலை ஆகியவைகள் சந்திக்கின்றன. பாரதியார் சாலைக்கு வடபுறம் திருவள்ளுவர் பேருந்து நிலையம் உள்ளது. காந்திபுரம் நகர பேருந்து நிலையம் பாரதியார் சாலைக்குத் தென்புறமும், டாக்டர் நஞ்சப்பா சாலைக்கு கீழ் புறமும் அமைந்துள்ளது. காந்திபுரத்தில் உள்ள கோவை வெளியூர் செல்லும் பேருந்து நிலையம் டாக்டர் நஞ்சப்பா சாலைக்கு மேல் புறம் உள்ளது. இந்த இடத்தில் அதிகமாக கடைகளும் இருப்பதால் மக்கள் கூட்டம் எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கிறது.

மக்கள் நடமாட்டம் அதிகமாக இருப்பதாலும் மூன்று பேருந்து நிலையங்கள் அருகருகே இருப்பதாலும் மக்கள் அடிக்கடி குறுக்கே கடந்து செல்ல ஏதுவாகிறது. எனவே விபத்துக்களை தவிர்க்கவும், வாகனங்கள் வேகமாக செல்வதற்கு இரண்டு சுரங்க வழி நடைபாதைகள், ஒன்று டாக்டர் நஞ்சப்பா சாலையில், போக்குவரத்து காவல் நிலையத்திற்கு எதிரிலும், மற்றொன்று பாரதியார் சாலையில் திருவள்ளுவர் பேருந்து நிலையத்திற்கு அருகிலும் அமைக்க வேண்டும்.

1990 மார்ச் 31] [திரு. கோ. சி. மணி]

இந்த இரண்டு சுரங்க வழி நடைபாதைகள் அமைப்பதற்கு சுமார் ரூபாய் 90 இலட்சங்கள் மதிப்பீடு ஆகும்.

இப்பணி தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்படவில்லை.

அரசு ஆணை எண் 1268, போக்குவரத்துத் துறை, நாள் 10–11–1988-ல் கோவை நகரில் கிராஸ்கட் சாலை அபிவிருத்திக்கென ரூ. 140 இலட்சங்களும், பெரிய பஜார் தெரு சுரங்கப் பாதை கட்டுவதற்காக ரூ. 150 இலட்சங்களும் மற்றும் கிராஸ்கட் சாலையில் இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்காக ரூ. 800 இலட்சங்களும் மட்டுமே அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

ரூ. 90 இலட்சங்கள் மதிப்பிற்கு மேற்கண்ட இரண்டு சுரங்க வழி நடை பாதைகள் அமைக்கும் பிரேரணைகள், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுத்துச்செய்வதற்கு திட்ட மேம்பாட்டுக் குழுவிற்கு, 9–3–1990 அன்று தலைமைப் பொறியாளர் (நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்) அவர்களால் அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்பு அவற்றிற்கு, போக்குவரத்து ஆய்வு மற்றும் பொருளாதார ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த ஆய்வுகளின் அடிப்படையில்குறிப்பிடப்பட்டுள்ள சுரங்கப் பாதையை கட்டுவதற்குரிய சாத்தியக் கூறுகள் ஆய்வு செய்யப் படும்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இந்த சுரங்கப் பாதையினுடைய தேவையைப் பற்றி நான் ஒன்றும் இங்கே விளக்கம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நமது அமைச்சர்கள் ஒவ்வொருவரும் கோவைக்கு வருகிற காலத்தில் காந்திபுரம், அந்த வழியாகச் செல்வதற்குக் கூட முடியாத அளவுக்கு ஜன நெருக்கம் உள்ள ஒரு இடம். இந்தச் சுரங்கப் பாதை அமைப்பதற்கு, பல ஆண்டுகளாக என்னுடைய தொகுதிக்குள் இருக்கிற முக்கியமான ஒரு சென்டர் இது. பல ஆண்டுகளாக வற்புறுத்தி வந்தும் முன்பிருந்த அரசு அதன் பேரிலேயே நடவடிக்கை எடுத்து அந்தக் காரியத்தை நிறைவேற்றவில்லை. இன்றைக்கு அது பெரிய நெருக்கடியை உருவாக்கி இருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் ஒரு ஆயிரம் பேர்கள் சேர்ந்து சுரங்கப் பாதையை அமைக்க வேண்டுமென்று கோஷத்தோடு பெரும் ஊர்வலமே நடத்தி, கலெக்டர் அவர்களுக்கும் விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். இப்போது அந்தக் காரியத்தைச் செய்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்து, இந்த அபிவிருத்தித் திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஆலோசனைகள் சில உள்ளன என்று

இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. எந்தக் காலத்திற்குள் இந்தக் காரியம் செய்து முடிக்கப்படும் என்பதற்கு ஏதாவது ஆலோசனையை நமது அமைச்சர் அவர்கள் முன் வைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பணிகள் மேற்கொள்ள, போக்குவரத்துத் துறை ஆய்வு செய்து மற்றும் பொருளாதார ஆய்வுகள் இவைகளெல்லாம் நடைபெற்றாக வேண்டும். 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இதை முதலில் நடத்த வேண்டுமென்று திட்டமிடப்பட்டு, பிறகு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்படவில்லை. திரும்பவும் அதை 9–3–1990 அன்று தலைமைப் பொறியாளர் (நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்) அவர்கள் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. அவர்கள் அந்த ஆய்வுகளை மேற்கொண்டவுடன், அதனுடைய பூர்வாங்க விசாரணைக்குப் பிறகு அதை எப்போது ஆரம்பிக்கலாம். முடிக்கலாம் என்பதை நான் இந்த அவையில் மறுமுறை அறிவிக்கிறேன்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்களுடைய புது முயற்சிக்கு நான் எங்களுடைய ஒரு மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனாலும், இதிலே நமக்கு ஒரு பெரிய சந்தேகம், பல வருடங்களாக ஏற்பட்டாகி விட்டது, அங்கே இருக்கிற அபிவிருத்திக் கவுன்சில், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயே, இந்த விஷயத்தை எடுத்துச் சொல்லி, இது நிறைவேற்றப்படும் என்று இன்ஜினியர்கள் உட்படப் பலரும் பல சந்தர்ப்பங்களில் வாக்குறுதிக் கொடுத்தும் இன்று வரை நிறைவேறவில்லை. இப்போது கடைசியாக எனக்கு அங்கே இருந்து கிடைத்த தகவல், இது சரிதானா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னால் நல்லது, இது அமெரிக்க உதவியிலே நடைபெறும்படியான நகர அபிவிருத்தித் திட்டத்துடன் இணைக்கப்பட்டு, அவர்கள் இந்தத் திட்டம் 'வயபிள்' அல்ல, இது நடத்தி முடிப்பது சரியல்ல என்று, இது லாபத்திற்காக நடத்துகிற பிரச்சினை அல்ல, ,லயபிலிட்டியைப்' பார்ப்பதற்கு அப்படி ஒரு பிரச்சினை வந்திருக்கிறது. அப்படி வந்தால் இந்தத் திட்டத்திற்கே ஒரு ஆபத்து ஏற்படும். அது இல்லாமல் இந்தத் திட்டத்தை பாதுகாத்து நிறைவேற்றுவதற்கு அமெரிக்காவின் உதவி இருந்தாலும் இல்லாவிட்டாலும் இதை நிறைவேற்றுவதற்கான காரியங்கள் செய்யப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியிட்டு சொல்வார்களா என அறிய விரும்புகிறேன்.

10–20 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9–3–1990-ல் அனுப்பப்பட்ட கடிதத்தினுடைய சாராம்சமே அது தான். எப்படியும் இந்தப் பணி

மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காகத்தான் முதலில் விடுபட்டுப் போனதை திரும்பவும் அனுப்பியிருக்கிறோம். அதற்காக அவர்கள் ஒரு ஆய்வு நடத்த வேண்டி, திரும்பவும் கேட்டு இருக்கிறோம். அந்த ஆய்வு முடிந்த பிறகுதான் அதைப் பற்றிய முழு விவரமும் இந்த அவையில் சொல்ல முடியும்.

6. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

திரு. டி. சி. விஜயேந்திரையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் சார்பாக 30 முதல் 34 வரையிலுள்ள அறிக்கைகளை இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் 2 அறிவிப்புகளைச் செய்கிறார்கள்.

(அ) நாகப்பட்டினத்திலிருந்து படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற சிலர் பாதுகாப்புடன் திரும்பியுள்ளது குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 நாட்களுக்கு முன்பு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நாகைத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் நண்பர் திரு. வீரையன் அவர்கள் 65 படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 300-க்கும் மேற்பட்ட மீனவர்கள் காணப்படவில்லை என்றும், அவர்களை உடனடியாக காப்பாற்றுகின்ற பொறுப்பில் அரசு ஈடுபட வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறினார்கள். அவர்கள் அந்தச் செய்தியைச் சொன்ன அடுத்த கணமே தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரோடும், அங்குள்ள காவல் துறை அதிகாரிகளோடும் தொடர்பு கொண்டு அங்கிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் உடனடியாக நம்முடைய தமிழக அரசின் தலைமைச் செயலாளர், இலங்கையில் உள்ள கொழும்பு நகரத்திலுள்ள இந்திய தூதுவராலயத்தோடு தொடர்பு கொண்டு அதன் தொடர்ச்சியாக நானும் கொழும்போடு பல வகையிலும் தொடர்புகொண்டு அவசரமாக எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக அந்த 65 படகுகளும் நேற்றைய தினம் தமிழகத்திற்குப் பத்திரமாக திரும்பி வந்து விட்டன. அதிலிருந்த 300 மீனவர்களும் நல்ல பாதுகாப்போடு இங்கே வந்து இருக்கிறார்கள். அவர்களை நம்முடைய தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் துறை அதிகாரிகள் சென்று வரவேற்று அவர்களுடைய குடும்பத்தாரிடத்தில் ஒப்படைத்து மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காகத்தான் முதலில் விடுபட்டுப் போனதை திரும்பவும் அனுப்பியிருக்கிறோம். அதற்காக அவர்கள் ஒரு ஆய்வு நடத்த வேண்டி, திரும்பவும் கேட்டு இருக்கிறோம். அந்த ஆய்வு முடிந்த பிறகுதான் அதைப் பற்றிய முழு விவரமும் இந்த அவையில் சொல்ல முடியும்.

6. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

திரு. டி. சி. விஜயேந்திரையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் சார்பாக 30 முதல் 34 வரையிலுள்ள அறிக்கைகளை இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் 2 அறிவிப்புகளைச் செய்கிறார்கள்.

(அ) நாகப்பட்டினத்திலிருந்து படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற சிலர் பாதுகாப்புடன் திரும்பியுள்ளது குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 நாட்களுக்கு முன்பு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நாகைத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் நண்பர் திரு. வீரையன் அவர்கள் 65 படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 300-க்கும் மேற்பட்ட மீனவர்கள் காணப்படவில்லை என்றும், அவர்களை உடனடியாக காப்பாற்றுகின்ற பொறுப்பில் அரசு ஈடுபட வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறினார்கள். அவர்கள் அந்தச் செய்தியைச் சொன்ன அடுத்த கணமே தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரோடும், அங்குள்ள காவல் துறை அதிகாரிகளோடும் தொடர்பு கொண்டு அங்கிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் உடனடியாக நம்முடைய தமிழக அரசின் தலைமைச் செயலாளர், இலங்கையில் உள்ள கொழும்பு நகரத்திலுள்ள இந்திய தூதுவராலயத்தோடு தொடர்பு கொண்டு அதன் தொடர்ச்சியாக நானும் கொழும்போடு பல வகையிலும் தொடர்புகொண்டு அவசரமாக எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக அந்த 65 படகுகளும் நேற்றைய தினம் தமிழகத்திற்குப் பத்திரமாக திரும்பி வந்து விட்டன. அதிலிருந்த 300 மீனவர்களும் நல்ல பாதுகாப்போடு இங்கே வந்து இருக்கிறார்கள். அவர்களை நம்முடைய தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் துறை அதிகாரிகள் சென்று வரவேற்று அவர்களுடைய குடும்பத்தாரிடத்தில் ஒப்படைத்து மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

990 மார்ச் 31] [திரு. கோ. சி. மணி]

மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காகத்தான் முதலில் விடுபட்டுப் போனதை திரும்பவும் அனுப்பியிருக்கிறோம். அதற்காக அவர்கள் ஒரு ஆய்வு நடத்த வேண்டி, திரும்பவும் கேட்டு இருக்கிறோம். அந்த ஆய்வு முடிந்த பிறகுதான் அதைப் பற்றிய முழு விவரமும் இந்த அவையில் சொல்ல முடியும்.

6. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

திரு. டி. சி. விஜயேந்திரையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் சார்பாக 30 முதல் 34 வரையிலுள்ள அறிக்கைகளை இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் 2 அறிவிப்புகளைச் செய்கிறார்கள்.

(அ) நாகப்பட்டினத்திலிருந்து படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற சிலர் பாதுகாப்புடன் திரும்பியுள்ளது குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 நாட்களுக்கு முன்பு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நாகைத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் நண்பர் திரு. வீரையன் அவர்கள் 65 படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 300-க்கும் மேற்பட்ட மீனவர்கள் காணப்படவில்லை என்றும், அவர்களை உடனடியாக காப்பாற்றுகின்ற பொறுப்பில் அரசு ஈடுபட வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறினார்கள். அவர்கள் அந்தச் செய்தியைச் சொன்ன அடுத்த கணமே தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரோடும், அங்குள்ள காவல் துறை அதிகாரிகளோடும் தொடர்பு கொண்டு அங்கிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் உடனடியாக நம்முடைய தமிழக அரசின் தலைமைச் செயலாளர், இலங்கையில் உள்ள கொழும்பு நகரத்திலுள்ள இந்திய தூதுவராலயத்தோடு தொடர்பு கொண்டு அதன் தொடர்ச்சியாக நானும் கொழும்போடு பல வகையிலும் தொடர்புகொண்டு அவசரமாக எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக அந்த 65 படகுகளும் நேற்றைய தினம் தமிழகத்திற்குப் பத்திரமாக திரும்பி வந்து விட்டன. அதிலிருந்த 300 மீனவர்களும் நல்ல பாதுகாப்போடு இங்கே வந்து இருக்கிறார்கள். அவர்களை நம்முடைய தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் துறை அதிகாரிகள் சென்று வரவேற்று அவர்களுடைய குடும்பத்தாரிடத்தில் ஒப்படைத்து மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

அவர்கள் எப்படி அங்கு கொண்டு போகப்பட்டார்கள் என்பதைக் குறித்தும், வந்தவர்கள் என்ன செய்தியினைச் சொன்னார்கள் என்பதைக் குறித்தும் சில தகவல்கள் வந்துள்ளன. அதையும் இந்த அவைக்கு தெரிவிப்பது கடமை என்று கருதுகிறேன். நான் அன்றைக்குச் சொன்னதைப் போல, எப்படி ஆந்திர கடற்கரை ஓரத்தில் தமிழக மீனவர்கள் தங்கள் எல்லையைக் கடந்து மீன் பிடிக்கச் செல்லும்போது ஆந்திர மீனவர்களால் அவர்கள் பிடிக்கப்படுவதும், தமிழக அரசின் முறையீட்டின் மீது அவர்கள் பின்னர் விடுவிக்கப்படுவதும் கடந்த காலத்தில் சில பல நிகழ்வுகளாக இருந்தனவோ அதே போல் ஒரு நிகழ்வாகத்தான் நம்முடைய மீனவர்கள் சற்று எல்லையைக் கடந்து சென்ற போது அங்கேயுள்ள மீனவர்களால் சுட்டிக் காட்டப்பட்டு இப்போது வட கிழக்கு மாநிலப் பகுதியிலே குறிப்பாக யாழ்ப்பாணம் பகுதியிலே இன்றைக்கு ஆதிக்கத்திற்குப் பெரும் பகுதி வந்து விட்ட விடுதலைப் புலிகள் அவர்களை அழைத்துச் சென்று இருக்கிறார்கள். மீண்டவர்கள் சொன்ன தகவல்கள், எங்களை ''இன்புறுத்தி'' என்ற ஒரு கிராமத்தில் கொண்டு போய் வைத்து இருந்தார்கள். ஊரின் பெயர் இன்புறுத்தி, உங்களை ஒன்றும் செய்ய மாட்டோம், நீங்கள் உங்கள் எல்லையைத் தாண்டியதால் தான் அழைத்து வந்தோம் என்று கூறினார்கள். இரவு தங்க வைத்து நல்ல சாப்பாடு எல்லாம் கொடுத்து, வீடியோ படம் எல்லாம் போட்டுக் காட்டியிருக்கிறார்கள். மேலும் அவர்களிடம் கூறும்போது எங்கள் குறைகளைச் சொல்ல இப்போது வட கிழக்கு மாகாணத்தில் எங்களுக்கு அரசு இல்லை. நாங்கள் விடுதலைப் புலிகள் மூலமாகத்தான் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. நீங்களும் தமிழர்கள் தான், நாங்களும் தமிழர்கள் தான், இந்தக் கடல் தான் நம்மைப் பிரிக்கிறது. இனி மேல் நீங்கள் இங்கே வராதீர்கள். உங்கள் எல்லைக்குள்ளேயே நீங்கள் மீன் பிடித்துக் கொள்ளுங்கள்; நாங்களும் எங்கள் எல்லைக்குள்ளேயே மீன் பிடித்துக் கொள்ளுகிறோம். எங்களுக்கு ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன.

10-25 மணி.

அதனால் எங்கள் எல்லையிலே வந்து மீன் பிடிக்க வேண்டாம் தயவு செய்து அப்படி செய்யாதீர்கள் என்று கூறி இருக்கின்றார்கள். இந்தச் செய்தியைச் சொல்லி, மகிழ்வோடு திரும்பியுள்ள 300-க்கு மேற்பட்ட மீனவப் பெருமக்களை எல்லாம் இந்த அவையிலேயுள்ள மாமன்ற உறுப்பினர்கள் சார்பாக நான் மகிழ்ச்சியோடு வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் என்ன ஆனார்களோ என்று கலங்கித் தவித்துக் கொண்டிருந்த நாகை வட்டாரத்தைச் சேர்ந்த மீனவக் குடும்பங்களுக்கும் ஒரு ஆறுதல் ஏற்பட்டு இருக்கிறது. இந்தச் செய்தியை உடனடியாக இந்த அவைக்குத் தெரிவித்து நல்ல ஏற்பாடுகளைச் செய்யத் தூண்டுகோலாக இருந்த, அந்தத்

தொகுதியிலே, எப்போதுமே சுறுசுறுப்பாக இயங்கக் கூடிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் வீரையன் அவர்களுடைய முயற்சியையும் நான் பாராட்டாமல் இருக்க முடியாது. அவருக்கும் இந்த அவையின் சார்பிலே பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) விடுதலைப் புலிகள் நிலை பற்றி இந்தியாவில் ''நகைமுகன்'' என்பவர் பேசியதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அடுத்து, இன்னொரு அறிவிப்பாக ஒரு செய்தி இன்றைக்கு பத்திரிகைகளிலே பரபரப்பாக வந்திருக்கின்றது. நகைமுகன் என்கின்ற ஒருவர் சொன்னதாக, அவர் டெல்லியிலே சென்று பேசியதாக அந்தச் செய்தி வந்து இருக்கிறது. அது குறித்து, பெரும் பதட்ட நிலை ஏற்படாவிட்டாலும் கூட, இன்றைய மிக முக்கியமான பத்திரிகை ''தினமணி'' பத்திரிகையில் ஒரு தலையங்கமே எழுதப்பட்டிருக்கிற காரணத்தால் நான் அதற்கு விளக்கம் அளிக்க வேண்டியவனாக இருக்கிறேன். அந்த நகைமுகன் பேசியதாக வந்துள்ள செய்தி : தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சார்பில், நகைமுகன் என்பவர் ஒரு கூட்டத்திலே பேசினாராம்; இந்திய ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து சீக்கியர்கள் விடுதலை பெற விடுதலைப் புலிகளின் ஆதரவு உண்டு என்று அவர் குறிப்பிட்டாராம்; சீக்கியர்களும், தமிழர்களும் மறவர் குலத்தவர் என்றும், இந்துக்களுடைய பாசிசத்தை எதிர்ப்பவர்கள் என்றும் அவர் பேசியதாகத் தெரிய வருகிறது, என்று வந்திருக்கிறது. அவர் பிரபாகரனுக்கு வேண்டியவரா இல்லையா என்பதெல்லாம் அல்ல பிரச்சினை. இந்திய நாட்டிற்குள்ளே இருக்கின்ற ஒற்றுமையை ஊனப்படுத்துபவராகவோ அமைதியைக் குலைப்பவராகவோ, பிரிவினையைத் தூண்டுபவராகவோ யாராக இருந்தாலும் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். அவர் நகைமுகனாக இருந்தாலும் சரி, கஜமுகனாக இருந்தாலும் சரி, எந்த முகனாக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். உடனடியாக இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தமிழகக் காவல் துறைக்கு கட்டளை இடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

தொகுதியிலே, எப்போதுமே சுறுசுறுப்பாக இயங்கக் கூடிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் வீரையன் அவர்களுடைய முயற்சியையும் நான் பாராட்டாமல் இருக்க முடியாது. அவருக்கும் இந்த அவையின் சார்பிலே பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) விடுதலைப் புலிகள் நிலை பற்றி இந்தியாவில் ''நகைமுகன்'' என்பவர் பேசியதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அடுத்து, இன்னொரு அறிவிப்பாக ஒரு செய்தி இன்றைக்கு பத்திரிகைகளிலே பரபரப்பாக வந்திருக்கின்றது. நகைமுகன் என்கின்ற ஒருவர் சொன்னதாக, அவர் டெல்லியிலே சென்று பேசியதாக அந்தச் செய்தி வந்து இருக்கிறது. அது குறித்து, பெரும் பதட்ட நிலை ஏற்படாவிட்டாலும் கூட, இன்றைய மிக முக்கியமான பத்திரிகை ''தினமணி'' பத்திரிகையில் ஒரு தலையங்கமே எழுதப்பட்டிருக்கிற காரணத்தால் நான் அதற்கு விளக்கம் அளிக்க வேண்டியவனாக இருக்கிறேன். அந்த நகைமுகன் பேசியதாக வந்துள்ள செய்தி : தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சார்பில், நகைமுகன் என்பவர் ஒரு கூட்டத்திலே பேசினாராம் ; இந்திய ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து சீக்கியர்கள் விடுதலை பெற விடுதலைப் புலிகளின் ஆதரவு உண்டு என்று அவர் குறிப்பிட்டாராம் ; சீக்கியர்களும், தமிழர்களும் மறவர் குலத்தவர் என்றும், இந்துக்களுடைய பாசிசத்தை எதிர்ப்பவர்கள் என்றும் அவர் பேசியதாகத் தெரிய வருகிறது, என்று வந்திருக்கிறது. அவர் பிரபாகரனுக்கு வேண்டியவரா இல்லையா என்பதெல்லாம் அல்ல பிரச்சினை. இந்திய நாட்டிற்குள்ளே இருக்கின்ற ஒற்றுமையை ஊனப்படுத்துபவராகவோ அமைதியைக் குலைப்பவராகவோ, பிரிவினையைத் தூண்டுபவராகவோ யாராக இருந்தாலும் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். அவர் நகைமுகனாக இருந்தாலும் சரி, கஜமுகனாக இருந்தாலும் சரி, எந்த முகனாக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். உடனடியாக இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தமிழகக் காவல் துறைக்கு கட்டளை இடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

தொகுதியிலே, எப்போதுமே சுறுசுறுப்பாக இயங்கக் கூடிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் வீரையன் அவர்களுடைய முயற்சியையும் நான் பாராட்டாமல் இருக்க முடியாது. அவருக்கும் இந்த அவையின் சார்பிலே பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) விடுதலைப் புலிகள் நிலை பற்றி இந்தியாவில் ''நகைமுகன்'' என்பவர் பேசியதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அடுத்து, இன்னொரு அறிவிப்பாக ஒரு செய்தி இன்றைக்கு பத்திரிகைகளிலே பரபரப்பாக வந்திருக்கின்றது. நகைமுகன் என்கின்ற ஒருவர் சொன்னதாக, அவர் டெல்லியிலே சென்று பேசியதாக அந்தச் செய்தி வந்து இருக்கிறது. அது குறித்து, பெரும் பதட்ட நிலை ஏற்படாவிட்டாலும் கூட, இன்றைய மிக முக்கியமான பத்திரிகை ''தினமணி'' பத்திரிகையில் ஒரு தலையங்கமே எழுதப்பட்டிருக்கிற காரணத்தால் நான் அதற்கு விளக்கம் அளிக்க வேண்டியவனாக இருக்கிறேன். அந்த நகைமுகன் பேசியதாக வந்துள்ள செய்தி : தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன சார்பில், நகைமுகன் என்பவர் ஒரு கூட்டத்திலே பேசினாராம் ; இந்திய ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து சீக்கியர்கள் விடுதலை பெற விடுதலைப் புலிகளின் ஆதரவு உண்டு என்று அவர் குறிப்பிட்டாராம் ; சீக்கியர்களும், தமிழர்களும் மறவர் குலத்தவர் என்றும், இந்துக்களுடைய பாசிசத்தை எதிர்ப்பவர்கள் என்றும் அவர் பேசியதாகத் தெரிய வருகிறது, என்று வந்திருக்கிறது. அவர் பிரபாகரனுக்கு வேண்டியவரா இல்லையா என்பதெல்லாம் அல்ல பிரச்சினை. இந்திய நாட்டிற்குள்ளே இருக்கின்ற ஒற்றுமையை ஊனப்படுத்துபவராகவோ அமைதியைக் குலைப்பவராகவோ, பிரிவினையைத் தூண்டுபவராகவோ யாராக இருந்தாலும் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். அவர் நகைமுகனாக இருந்தாலும் சரி, கஜமுகனாக இருந்தாலும் சரி, எந்த முகனாக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். உடனடியாக இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தமிழகக் காவல் துறைக்கு கட்டளை இடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 2 சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

9. மானியக் கோரிக்கைகள், 1990–91—விவாதமும் வாக்கெடுப்பும்
(தொடர்ச்சி.)

(அ) கோரிக்கை எண் 25. சின்கோனா.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,39,60,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு டி. சி. விஜயேந்திரையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,39,60,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 2 சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

9. மானியக் கோரிக்கைகள், 1990–91—விவாதமும் வாக்கெடுப்பும் (தொடர்ச்சி.)

(அ) கோரிக்கை எண் 25. சின்கோனா.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,39,60,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு டி. சி. விஜயேந்திரையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,39,60,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

1990 மார்ச் 31]

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மலையிலும், வால்பாறை மலையிலும் உள்ள சுமார் 3,000 சின்கோனா தொழிலாளர்களுக்கு அதே மலைப் பிரதேசத்தில் அருகாமையில் வேலை செய்யும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கிற கூலி பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 25.— சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,39,60,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

10-30 மணி.

(ஆ) கோரிக்கை எண் 45—காட்டுவளத்துறை

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 45. காட்டுவளத்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 26,73,35, 000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ரப்பர் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்க்கு பெரிய தனியார் தோட்டங்களில் கொடுக்கப் படுவது போன்ற அதிக போனஸ் வழங்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 45.—காட்டுவளத்துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 26,73,35,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(இ) கோரிக்கை எண் 47— செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 47.—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,80,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், வேலூரை அடுத்த அமிர்தி காட்டுப் பகுதியில் சுற்றுலா மையம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 47.—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்—என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,80,52,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஈ) கோரிக்கை எண் 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 56.—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 26,29,87,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 56.—காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 26,29,87,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்காக வைக்கப் பெற்றுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதேனும் கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, இங்கே கோரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் அவையின் முன்* வைக்கப்பட்டுள்ளன. ஒன்றே ஒன்றை மட்டும் விளக்கமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன். கோரிக்கை எண் 47-ல் செய்தி' சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கோரிக்கையில் இந்தத் துறைக்கு இரண்டு அமைச்சர்கள் பொறுப்பில் இருக்கின்றார். செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல்

* 435 முதல் 535 வரையிலான பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.

1990 மார்ச் 31] [திரு. கே. பி. கந்தசாமி]

மாண்புமிகு அமைச்சர் திரு. நேரு அவர்களுடைய பொறுப்பி லும், சுற்றுலாத்துறை என்னுடைய பொறுப்பிலும் இருக்கின் றன. ஆகவே இந்த மானியக் கோரிக்கைகள் மீது எழுப்பப்படுகிற விவாதங்களுக்கு சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில் நானும், செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய விவாதங்களுக்கு அமைச்சர் திரு. நேரு அவர்களும் பதில் அளிக்க இருக்கின்றோம். இது தவிர, சுற்றுலாத் துறை பற்றிய மானியக் கோரிக்கைகள் பற்றிய விவாதத்தின்போது, கடந்த ஆண்டு போலவே நமது மாண்புமிகு திரு. பாண்டியன் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒவ்வொரு ஆண்டும் இந்த மானியக் கோரிக்கையின் மீது உறுப்பினர்களுக்கு தேனீர் வழங்குவது வழக்கம் என்று சொன்னதைப் போல, இந்த வளாகத்திலேயே வழங்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதை உறுப் பினர்கள் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொண்டு, உறுப்பினர்கள் இங்கே தங்களுடைய மதிப்புமிக்க கருத்துக்களை எடுத்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். கணபதி : வெறும் தேனீரா, வேறு ஏதாவது உண்டா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: வேறு பதார்த்தங் களும் உண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதத்தை முதலில் தொடங்கி வைப்பவர் திரு. எம். அண்ணாமலை அவர்கள்.

10-35 மணி

*திரு. எம். அண்ணாமலை ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வைக்கப்பட் டுள்ள வனத்துறை, சின்கோனா, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கைகளின் மீது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எனது கருத்துக்களை நான் முன் வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை

முதன் முதலாவதாக ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமூக வனப் பணியாளர்களும், தோட்டக்கலைப் பணியாளர் களும் அதாவது இந்த இரண்டு பிரிவினரும் கடந்த 19—3—1990 முதல் காலவரையற்ற உண்ணாவிரதம் இருந்து தங்களுடைய கோரிக்கைகளை அரசின் பரிசீலனைக்காக வைத்திருக்கிறார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு விடுதலையானது பற்றியும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்கள் முன் வைக்கப்பட்டுள்ள கோரிக்கையை பரிசீலித்து நிறைவேற்ற வேண்டும் என்று நான் முதலில் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட அவர்களுடைய மாநில மாநாட்டில் கலந்துகொண்டு

அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை இந்த அரசு கவனத்தோடு பரிசீலிக்கும் என்று வாக்குறுதி அளித்து இருக்கிறார்கள். மேலும் அவர்கள் எட்டாவது முதல் எஸ்.எஸ்.எல்.சி. வரையும், அதற்குமேலும் படித்தவர்கள் தான். அவர்களால் வேறு பணிக்குச் செல்ல முடியாது. வயது வரம்பும் கடந்து விட்டார்கள். இன்னும் அவர்கள் தற்காலிகமாக தினக்கூலிகளாக இருக்கிறார்கள். அவர்கள் வைக்கக்கூடிய கோரிக்கையும் மிதமானதல்லவென்றால் புதியதாக உருவாகும் காலியிடங்கள் வருகின்றபோது அவற்றில் அவர்களை நிரப்ப வேண்டும் என்பது உள்ளிட்ட 11 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அரசு அந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் வன வளர்ப்பைப் பொறுத்தவரையில் மொத்தம் இருக்கக்கூடிய 1,30,057 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பில் 23,699 சதுர கிலோ மீட்டர் என்ற அளவுக்குத்தான் வன வளம் இருக்கிறது.

இந்த நாட்டினுடைய தேசிய கொள்கை அளவில் மொத்த நிலப்பரப்பில் 33 சதவீதம் இருக்க வேண்டும். மூன்றில் ஒரு பங்கு காடுகள். ஆனால் தமிழ்நாட்டின் வன வளம் 17.45 விழுக்காடு தான் இருக்கிறது என்று இங்கே நம்முடைய கொள்கை அறிவிப்பில் கூறப்பட்டிருக்கிறது. இந்த நிர்ணயிப்பு சரியானது தான். நாம் ஏற்றுக் கொள்கிறோம். மறுக்கப்படவில்லை. ஆனால் இந்த நிலை எப்படி ஏற்பட்டது என்பது மட்டுமல்ல. கடந்த 10 ஆண்டுக்காலமாகவே இந்த இலக்கினைத் தாண்ட வேண்டுமென்று அவ்வப்போது சொல்லப்பட்டு வருகிறது. அதற்கான பல திட்டங்கள் சமூகக் காடுகள் என்ற பெயரிலும், வன வளர்ப்பு, பாதுகாப்பு, விஸ்தரிப்பு, இன்னும் பல்வேறு பெயர்களாலும் திட்டங்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டு அந்த வகையில் அரசு ஒரு பத்தாண்டு காலமாக முயற்சி எடுத்து வருகிறது. நான் ஒன்றை இங்கே கவனிக்க வேண்டுகிறேன். காடு என்றால் மலை என்றும் மலை என்றால் காடு என்றும் கருதப்பட்டு வந்தது. ஆனால் அந்த நிலை மாறி மலைப்பகுதி பூராவும் பொட்டல் காடாக மாறி இருக்கிறது. இதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. நம்முடைய கவனம் பூராவும் எங்கே இருக்கிறது என்றால் சமவெளிப் பகுதியில் இருக்கிறது. அதாவது சமூகக் காடு என்ற பெயராலும், பல்வேறு பெயர்களாலும், நமக்கு பல்வேறு பொருட்கள் தேவை என்ற காரணத்தாலும் சமவெளிப் பகுதியில் தான் இந்த காடு வளர்ப்பு காரியங்கள் நடந்து வருகின்றன என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேநேரத்தில் காடுகளில் ஒரு பகுதி பல்வேறு காரணங்களாலும், சமூக விரோதிகளாலும் ஆட்சிப் பொறுப்பேற்றவர்களின் உதவியோடு அழிக்கப்பட்டது என்பது ஒன்று. இரண்டாவதாக

மலைப் பகுதிகள் பெருமளவு தோட்டப் பகுதிகளாக, தேயிலைத் தோட்டம், காப்பித் தோட்டம், ரப்பர் தோட்டம் என்று பல்வேறு தோட்டங்களாக ஆக்கிவிட்டு கீழே சமவெளிப் பகுதியிலே காட்டை வளர்க்கிறோம் என்று சொல்வது உள்ளபடியே அடிப்படையிலேயே தவறாகும்.

10-40 மணி

மேலும் இந்த வனத்தைப் பாதுகாக்கக்கூடிய நிலை. ஒரு காலத்தில் ஏதோ அங்கும் இங்கும் சில திருட்டுக்கள், வனப் பொருட்களை மறைவாக எடுப்பது என்ற நிலைமைகள்தான் இருந்தன. ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை? இன்றைக்கு அரசுக்கு எதிராகவே ஒரு மாற்று நிர்வாகம் நடக்கிறது. குறிப்பாக சொன்னால் ஒரு உள்நாட்டு யுத்தமே நடக்கக்கூடிய அளவுக்கு அந்த வனத்துறையினுடைய நிலைமைகள் சென்றுள்ளன. இன்றைய இந்த அணுகுமுறை பரிசீலிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. இன்றைக்கு எடுத்ததற்கெல்லாம் என்ன சொல்லப்படுகிறது? "வீரப்பன், வீரப்பன், வீரப்பன்" என்று. தலைவர் அவர்களே, இந்த வீரப்பன் மட்டுமா? அதற்கு என்ன பின்னணி? பத்திரிகையிலே எழுதுவதும், போட்டோக்கள் போடுவதும் இதுதான் வேலை. ஆனால் ஒரு வீரப்பன் அந்த அளவுக்கு வந்ததற்கு என்ன காரணம்? நிலைமையே வெட்கி தலை குனிய வேண்டிய விஷயம். நிர்வாகமே இதற்கு உடந்தையாக செயல்பட்டு தடித்துப்போய் உள்ளது என்பதுதான் இதற்கு எடுத்துக் காட்டு. அந்த மக்கள் காட்டிக் கொடுப்பது இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. அப்படியானால் அந்த மக்களுக்கும் வனத்துறைக்குமான உறவு நிலை என்ன? ஏதாவது இருக்கிறதா? வனத்துறையில் விதிமுறைகளுக்குட்பட்டுள்ள சலுகைகள் கூட அந்த மக்களுக்கு அனுமதிக்கப்படுகிறதா?

மலைவாழ் ஜனங்கள் விறகு, வீட்டுப்பொருள், இதுபோன்ற பொருட்கள் எல்லாம் எடுத்துக் கொள்ளலாம் என்று வனத்துறை விதியிலே உட்படுத்தியிருக்கிறது. ஆனாலும் நான் சாதாரணமாகக் கேட்டுக் கொள்கிறேன். காட்டுக்கொடி, அதாவது குடிசைகள் போடப்பயன்படுகிற பொருள். அந்தக் காட்டுக்கொடி என்பது இன்றையத் தலைமுறையினருக்கு, பலபேருக்குத் தெரியாது. அந்தக் காட்டுக் கொடியை கையிலே எடுத்துக்கொண்டு போவதற்கு அவர்களுக்கு உரிமையுண்டா? தாங்கள் குடியிருக்கப் போகும் கொட்டகையிலே பயன்படுத்தப் போகும்போதும் வழக்குப் போடுவார்கள். அந்த மலை ஜனங்களில் சிலரது பலவீனங்களைப் பயன்படுத்தி வன வளங்களை அழித்து ஆதாயம் தேடும் சமூக விரோதிகள் செய்யக்கூடிய அந்த வனத்திருட்டுகள் கூட அவர்கள் மேலே அப்பாவி மலைவாழ் ஜனங்கள் மேலேதான் விழுகிறது. பொய்யான வழக்கைப் போடுகிறார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மலை வாழ் ஜனங்களிடத்திலே ஒரு பலவீனம் உண்டு. அதை நான் இங்கே கொண்டு வரவேண்டியது அவசியம். இன்றைக்கு அது நல்லதோ கெட்டதோ (நட்புகொண்டு) முன்பின் அறியா மலை வாழ் ஜனங்களிடத்தில் கரியராமன் பேரில் சத்தியம் வாங்கி விட்டால் கழுத்தை அறுத்தாலும் சொல்ல மாட்டார்கள். அதனாலேதான் கஞ்சா கடத்தல்காரன் அத்தனை பேர்களும் அங்கேதான் இருப்பார்கள். சந்தன மர கடத்தல்காரன் அவர்கள் பலவீனத்தை பயன்படுத்தி அற்பக் கூலியையும், சொந்தப் பொருள்களும் கொடுத்து அவர்கள் தொழிலைச் செய்கிறார்கள். இதை புரிந்து இன்றுள்ள அணுகுமுறையை மாற்றி அந்த மக்களை, வனத் துறையோடு இணைத்து, வனத்தைப் பாதுகாக்கக்கூடிய ஒரு உணர்வை படைத்து, வன வருவாயில் அவர்கள் பங்கு பெறக் கூடிய வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். அப்படி இல்லை என்று சொன்னால் இன்றைக்கு வனத்தைப் பற்றிய சுமுக உறவு நிலைகளை நாம் பாதுகாக்க முடியாது. ஆகவேதான் வனத்துறையின் அணுகுமுறை விஷயமாக அரசு கவனிக்கவேண்டும். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. லெ. சுப்பிரமணியன்) : இன்னும் ஒரு மணித்துளியில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அத்தோடு இந்த மலை வாழ் பகுதியிலே இருக்கக் கூடிய பல்வேறு வட்ட சாகுபடிக்கு தகுதியான நிலங்களை நிச்சயம் அரசு அனுமதிக்கவேண்டும். நீண்ட காலமாக பட்டா செய்ய வேண்டிய நிலங்கள் பட்டா ஆக்கப்படாமல் உள்ளது. பட்டா செய்யாமல் அவர்களுடைய அனுபவத்தில் இருக்கக்கூடிய நிலங்களை அரசு பரிசீலனை செய்து பட்டா கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் சமீபத்தில் நம்முடைய அரூர் தாலுக்கா, அம்மா பாளையம் கிராமம் சர்வே செய்யப்படாத பிளாட் நெ. 1, 2-வது பிளாட், சர்க்கார் தரிசு நிலம் பற்றி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கூட நம்முடைய விவசாய சங்க நிர்வாகிகள் கலந்து பேசி வரக்கூடிய விஷயம்தான் அது. ஆனாலும் இதன் பூர்வீகத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 1891-ஆம் ஆண்டிலே செய்யப்பட்ட செட்டில்மெண்டில் மலைவாழ் ஜனங்கள் 300 குடும்பங்களுக்கு இந்த நிலத்தைப் பிரித்துக் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அதற்கான ரெக்கார்டுகளை எல்லாம் அமைச்சர் அவர்களிடம் ஒப்படைத்திருக்கிறோம். தற்போதும் 300-க்கு மேற்பட்ட நிலமற்ற மக்கள் சாகுபடி செய்து வந்துள்ளார்கள்.

1990 மார்ச் 31] [திரு. எம். அண்ணாமலை]

மேலும் 1972-73-ஆம் ஆண்டு இறுதியாக நடந்தவற்றை சொல்கிறேன். இந்த திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில் அன்றைக்கே செட்டில்மெண்ட் ஆபிசர் உட்பட ஜாயிண்ட் இன்ஸ்பெக்ஷன் பண்ணி இந்த நிலத்தைப் பிரித்துக் கொடுக்கலாம் என்றெல்லாம் அதற்கான ரிக்கார்டுகளை தயார் செய்ய உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது. இருந்தும் அதில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. அந்த மலைவாழ் மக்கள் அரிஜனங்கள், லம்பாடி ஏழை மக்களுக்கு பட்டா செய்து கொடுக்கவேண்டுமென கோரியும் அதற்காகஅரசோடும் அமைச்சர் அவர்களோடும் பேசிக்கொண்டிருக்கின்ற காலக்கட்டத்தில்தான் 21-8-1989-லே 7 பெண்கள் உட்பட 9 பேர்களை கைது செய்திருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்கெல்லாம் தொடரப்பட்டு இருக்கிறது. அரசு இதை உடனடியாக மறு பரிசீலனை செய்து, நிலமற்ற ஏழைகள் மேல் போடப்பட்டுள்ள வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற்று அந்த நிலங்களை மலைவாழ் மக்களுக்கே பட்டா செய்து கொடுக்க வேண்டும் என இந்த அரசை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

10-45 மணி

அடுத்து, சந்தன மர வழக்குகள் சம்பந்தமாக கொள்கை விளக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதிலே என்ன சொல்லப்படுகிறது என்றால், சந்தன மரங்களைப் பொறுத்த மட்டிலும், உலர்ந்த மரங்கள் களைந்து எடுக்கப்படுகிறது என்று தான் சொல்கிறார்கள். நான் இதுபற்றி மாண்புமிகு அமைச்சரிடத்தில் பல விவரங்களைக் கொடுத்திருக்கிறேன். உதாரணத்திற்கு, இன்றைக்கு தர்மபுரி மாவட்டம், சித்தேரி மலைப் பகுதியில் மட்டும் பட்டா நிலங்களில் மட்டும் 8 ஆயிரம் மரங்கள் இருந்ததாக, இன்றைய ஆட்சியில் இருந்த அரசு கணக்குக் கொடுத்திருந்தது. அன்றைக்கு அவை இருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை. உலர்ந்த மரங்களைக் களைந்து எடுக்கலாம் என்று ஹைக்கோர்ட் ஒரு டைரக்சன் கொடுத்ததாக தெரிவித்த காரணத்தால் அவர்கள் இஷ்டப்படி ஆசிடை அந்த மரங்களில் ஊற்றி, மரங்களை சாகவைத்து களைந்து, பெயர்த்து எடுக்க வனத்துறை அதிகாரிகளே இதைச் செய்கிறார்கள்.

மேலும், பட்டா நிலங்களில் இருந்த சந்தன மரங்களை பறித்து எடுப்பதற்கு பேரேரி கிராமம், சித்தேரி மலைப் பகுதிகளிலுள்ள மக்கள் அனுமதி ரசீது கேட்டதற்காக அடித்து, தொல்லைப்படுத்தப்பட்டார்கள் என்பதை இங்கே கவலையோடு பார்க்க வேண்டிய விஷயம். இதை விரும்பத்தகாத சக்திகள் பயன்படுத்தின. பாராளுமன்ற தேர்தலில் பாதிக்ககூடிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நாங்களும் இருந்து முடிந்தவரை உதவினோம். இவை அனைத்தும் அரசுக்கு தெரிந்திருக்க வேண்டும். இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அப்படி இருந்தும்

ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதைத்தான் நான் இங்கே கேட்கிறேன். அது குறித்து சட்டப்படியான நடவடிக்கைகளை இந்த அரசு விரைந்து செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சின்கோனா துறையைப் பொறுத்தவரையில் சின்கோனா மரங்களிலிருந்து குனைன் என்னும் மருந்துப் பொருளை தயாரிக்கிறார்கள். இந்த சின்கோனா காடுகள் 129 ஆண்டுகளுக்கு முன்பு அன்றைய சென்னை அரசாங்கத்தால் துவக்கி வைக்கப்பட்டது. இருந்தாலும், இதிலே பணியாற்றுகிற தொழிலாளர்கள் மொத்தம் 1,630 பேர் பெரும்பகுதி அரிஜனங்கள். இதிலே நிரந்தரம் செய்யப்பட்டவர்கள் 1,520 பேர். தற்காலிகமாக இருப்பவர்கள் 110 பேர். தற்காலிகமாக இருப்பவர்களுக்கு தினசரி கூலி 15 ரூபாய் 95 காசு கொடுக்கப்படுகிறது. 5 காசு குறைத்து கொடுக்கப்படுகிறது. எந்தவிதமான சிக்கனமோ நமக்கு புரியவில்லை. 5 காசை இன்றைய தினம் பிச்சைக்காரன் கூட மதிக்கவில்லை. இதிலே இன்னொரு விஷயம் இதிலும் ஒருசிலருக்குத்தான் பஞ்சப்படியை கொடுக்கிறார்கள், மற்றவர்களுக்குக் கொடுப்பதில்லை. அதோடு அதே பகுதியிலுள்ள தோட்டத்தில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு, சின்கோனா மாதிரி அது அரசுத் துறை அல்ல, தினக் கூலியாக 22 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் இவர்களுக்கு 15 ரூபாய் 95 காசு தான் கொடுக்கிறார்கள். ஆகவே, இது குறித்தும் அரசு பரிசீலிக்க வேண்டும். அந்தத் துறையில் பணியாற்றுகிற அத்தனை கூலி தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்சம் 22 ரூபாயாவது கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

10-50 மணி

அடுத்து, சினிமா துறை, மாண்புமிகு தலைவர் அவர்களே' இந்தத் துறையை கவனிக்கும்போது, தயவுசெய்து ஏதோ பொழுதுபோக்கு துறை, கலைத் துறை என்று மட்டும் பார்க்கின்ற நிலை மாற வேண்டும். எதிர்கால சமூகத்தை நல்லமுறையில் உருவாக்க வேண்டியது சினிமா துறையாக இருக்க வேண்டும். சினிமா துறை என்றால் ஏதோ கதையை சொல்வது மட்டுமல்ல. போஸ்டர் தேசபக்தி, மனித நேய பண்பாடுகளை உணர்த்துவதாக இருக்க வேண்டும். மாறாக அதில் எவ்வளவு துணியை குறைக்க முடியுமோ அவ்வளவு குறைத்து போஸ்டர் வெளியிடுகிறார்கள். இதுதான் இன்றைக்கு நாகரீகம். இன்றைய இளைஞர் சமுதாயத்தை சீரழிக்கும் போக்கில் உள்ளது. இதையும் கவலையோடு அரசு கவனிக்க வேண்டும். இன்றைக்கு சினிமாவை சென்சார் செய்கிறார்கள். நமக்கு புரியவில்லை என்ன சென்சார் செய்கிறார்கள். நல்லபடியாக இருப்பவைகளை சென்சார் செய்கிறார்களா? அவர்களுக்கு தெரியாததல்ல. இன்றைய சினிமா, உணர்ச்சிகளை தூண்டி பணமாக்கும்

1990 மார்ச் 31] [திரு. எம். அண்ணாமலை]

மயக்க மாத்திரையாக உள்ளது. பொது மக்களுக்கு பயனுள்ள செய்திகளைச் சொல்லாமல், எதிர்கால சந்ததியினரை அழிக்கக் கூடிய தரத்தில் சினிமாவை தயாரிக்கின்ற அளவுக்கு இன்றைக்கு கலைத் துறை சென்றுகொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இந்நிலைமையை தவிர்க்க வேண்டும். தேச பக்தியை ஊட்டக்கூடிய படங்களாக சினிமா இருக்க வேண்டும். அதனால் தான் நான் சொல்கிறேன், இன்றைக்கு திண்டுக்கல் அனுபவம் நமக்கு போதிப்பது என்ன? இவை ஆரோக்கியத்தின் அடையாளமா? தேச பக்தி உணர்வுகளையும், சமூக ஒருமைப்பாட்டையும், மனித நியதியையும் உருவாக்கக்கூடிய கதைப் பாத்திரங்களைப் படைக்க வேண்டும். 3 மணி நேரம் சினிமாக் கொட்டகையில் உட்கார்ந்து விட்டு வெளியே வந்தால், மன நிம்மதியோடு, ஆரோக்கியமாக வெளியே வர வேண்டும். அத்தகைய முறையில் சினிமாத் துறையைப் பார்க்க வேண்டும். மற்றும் சினிமாவில் 'ஏ' படத்தில் பெயரை மட்டும் போஸ்டரில் போட்டால் போதும். ஏன் படத்தைப் போட வேண்டும்? நடிகர், நடிகைகள் பெயரைப் போட்டால் போதும், படத்தைப் போடக்கூடாது. (மணி அடிக்கப்பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. லெ. சுப்பிரமணியன்): ஒரு மணித் துளியில் முடிக்க வேண்டும். 15 மணித்துளிகளுக்கு மேல் பேசி விட்டீர்கள். இன்னும் 7 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, சென்னை நகரத்திலே இன்றைக்கு எந்தத் தியேட்டருக்குப் போனாலும்—எனக்கு அனுபவம் இல்லை, போனவர்கள் சொன்னதுதான்—கடைசி கட்டண டிக்கட் இல்லை என்று சொல்லி, ஹவுஸ் புல் போர்ட் போட்டுவிடுகிறார்கள். கூடுதல் சார்ஜ் கொடுத்து டிக்கட் வாங்கிக்கொண்டு, எங்கே வேண்டுமானாலும் உட்கார்ந்து கொள்ளலாம் என்ற நிலை இருக்கிறது. இதை எல்லாம் கண்காணித்து தக்க நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, சுற்றுலா. பழனி மிகப் பெரிய தேவஸ்தானம். அங்கு ஆண்டு ஒன்றுக்கு 20 லட்சத்திற்கும் மேற்பட்ட ஜனங்கள் வருகின்ற நிலை இருக்கிறது. இருந்தும் அங்கு சுற்றுலா மையமில்லை. எனவே மாவட்டத்திற்குக் குறைந்த பட்சம் ஒரு இடத்தை சுற்றுலா மையமாக உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு சுற்றுலா மையங்களில் இருக்கக் கூடிய விடுதிகளில் தங்க முடியாத அளவுக்கு விடுதி கட்டணத்தோடும், ஓட்டல்களில் உள்ள தரம் குறைவு, விலை உயர்வு காரணமாக இந்த மாநில மக்கள் நுழைய முடியவில்லை. மத்திய தர மக்கள்கூட உள்ளேயே போக முடியாது. சுருங்கச்

சொன்னால் இந்த மாநில மக்கள் வேண்டுமானால் சுற்றுலா மையங்களில் உள்ள விடுதிகளைச் சுற்றிவிட்டுத்தான் வர முடியும். அந்த அளவுக்கு விலைவாசி இருக்கிறது. எனவே உணவு தரத்தைக் கண்காணிக்கவும், கட்டுப்படியாகும் விலையை அரசு நிர்ணயிக்க முயற்சி எடுக்கவும் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. லெ. சுப்பிரமணியன்): நேரம் ஆகிவிட்டது. 20 மணித்துளிகள் பேசி விட்டீர்கள். ஒரு மணித் துளியில் முடித்துவிட வேண்டும்.

திரு. எம். அண்ணாமலை : மாற்றுத் தலைவரவர்களே, ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். நம்முடைய அரசு பொறுப்பில் ஒரு ரப்பர் தோட்டம், பண்ணை இருக்கிறது. அதை நான் நேரடியாகப் பார்த்திருக்கிறேன். ஆனால் தனி யாருடைய ரப்பர் தோட்டங்களிலே பால் அதிகம் வருகிறது, லாபம் வருகிறது. சுருங்கச் சொன்னால் 1 ஏக்கர், 2 ஏக்கர் வைத்திருக்கிறவர்களுக்குக்கூட லாபம் வருகிறது. ஆனால் நம்முடைய அரசுத் தோட்டத்திலே நஷ்டம் வருகிறது. காரணம், கொடுக்கக்கூடிய மருந்துகளை வரக்கூடிய நோய்களுக்கு முறையாகப் பயன்படுத்துவதில்லை. இரண்டாவது, படித்து பட்டம் பெற்று வருகிற அதிகாரிகள் பிராக்டிகலாக வேலை செய்யக்கூடியவர்களின் அனுபவங்களைக் கேட்பதில்லை. மூன்றாவது, ரப்பர் ஷீட் பேக்டரியில் ரப்பர் ஷீட் உருவாக்கும் போது அதைக் கெடுத்துவிட்டு, வேஸ்டாக்கி, கான்ட்ராக்டர்களோடு தொடர்புகொண்டு கொள்ளை அடிக்கும் நிலை இருக்கிறது. இதையெல்லாம் கண்காணித்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடிக்கிறேன்.

திரு. என். தங்கவேல் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1990–91 ஆம் ஆண்டு சுற்றுலா, செய்தி, சின்கோனா, வனம் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுகின்ற வாய்ப்பினைத் தந்த தமிழினத் தலைவர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். சின்கோனா தோட்டம் நீலகிரி மாவட்டத்திலே 129 ஆண்டுகளுக்கு முன்னால் சென்னை அரசாங்கத்தால் துவக்கப்பட்டது. இன்று டார்ஜிலிங் என்ற இடத்தில் வங்காள அரசு இதே போன்ற மருந்துச் செடிகளைப் பயிரிட்டது. இன்றைக்கு மலேரியா அதிக அளவுக்கு இல்லாததாலும், அதிக அளவுக்கு கொய்னா தேவைப்படாததாலும், இவற்றின் தேவை குறைந்துள்ளதால் இந்தத் துறைக்கு அதிக லாபமில்லை என்று தெரிகிறது. கொய்னாப் பொருள்கள் வெளிநாட்டுச் சந்தையிலும் நலிவுற்று வருகிறது. இந்தோ

1990 மார்ச் 31] [திரு. என். தங்கவேல்]

னேசியக் காடுகளில் பெய்யும் மழை காரணமாக அதிக அளவுக்கு அங்கே பயிரிட்டு வருவதால், உலக நாடுகளின் கொய்னா தேவையை 90 சதவிகிதம் அளவுக்கு அது பூர்த்தி செய்கிறது.

10-55 மணி.

இங்கு கொய்னா உற்பத்தியில் அரசுக்கு லாபம் இல்லை; நஷ்டம் தான் ஏற்படுகிறது. எனவே, வாசனை தரக்கூடிய பொருள்களை அங்கு பயிரிடலாம். சின்கோனா தோட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பின்தங்கிய மக்கள் நிரந்தரத் தொழிலாளர்களாக 1,500 பேரும், தற்காலிகத் தொழிலாளர்களாக 130 பேரும் வேலை செய்கிறார்கள். மொத்தம் சுமார் 1,600 பேர் வேலை செய்கிறார்கள். அங்கு ஆடவர்-பெண்டிருக்கு கூலியாக ரூ. 15·95 கொடுக்கப்படுகிறது அதே நேரத்தில் அரசு நடத்துகிற தேயிலைத் தோட்டத்தில் ரூ. 22 கூலி கொடுக்கப்படுகிறது. ஆனால் பிரைவேட் தோட்டங்களில் அவர்களுக்கு ரூ. 24·34 கூலியாகக் கிடைக்கிறது. ஆகவே, சின்கோனாவிலே நமக்கு எந்தவித லாபமும் இல்லை. எனவே, நாம் சின்கோனாவை எடுத்துவிட்டு தேயிலையை உற்பத்தி செய்வோமானால், அது உலகச் சந்தையிலே அதிக அளவில் விற்பனையாவதால், கோடிக்கணக்கான லாபம் கிடைக்கும். அதனால் தொழிலாளர்களின் ஊதியம் உயரும் வாய்ப்பும் ஏற்படும். அரசு 'டேன்டீ' வைத்து இருப்பது போல சின்கோனாத் தோட்டத்தையும் மாற்றி தேயிலை பயிரிட்டு நலம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் கவனத்திற்கு ஒரு வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன். நீலகிரி மாவட்டத்திலே தேயிலை ஒரு தேசியப் பயிராக இருக்கிறது. அந்த மாவட்டத்திலே தேயிலைத் தோட்டங்களைத் துண்டாடுகிறார்கள். அப்படித் துண்டாடுவதால் தொழிலாளர்கள் தங்களின் அனைத்துச் சலுகைகளையும் இழந்து விடுகிறார்கள். வெள்ளைக்காரர்கள் காலத்தில் 30 பைசா அல்லது 50 பைசா கூலிக்கு தொழிலாளர்கள் அங்கு சென்றார்கள். 1947-க்குப் பிறகு அவர்கள் தொழிற்சங்கம் உருவாக்கி, பேச்சுவார்த்தைகள் மூலமாக, வருடா வருடம் அவர்களுக்குக் கூலி உயர்வு ஏற்பட்டு, இன்றைய தினம் ரூ. 24.34 பெறுகிறார்கள். எனவே, தாய் உள்ளம் கொண்ட தலைவர் அவர்கள் அங்கு எஸ்டேட் துண்டாடப்படுவதைத் தடுக்க சட்டம் கொண்டுவந்து தடுத்து அங்குள்ள தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டுமாய் மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். எஸ்டேட் தொழிலாளர்கள் துண்டாடப்படுவதால் அவர்கள் பல வகையிலே அவர்களுடைய சலுகைகளை இழந்து விடுகிறார்கள். அதன் காரணமாக அவர்களுக்கு பிராவிடண்ட் பண்டு, கிராஜுவிட்டி மற்றும் சம்பளத்துடன்

கூடிய விடுப்பு ஆகிய சலுகைகள் அனைத்தும் கிடைக்காமல் போய்விடுகிறது. எனவே, அதைத் தடுக்க சட்டம் கொண்டுவர வேண்டுமென்று தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

60 வயது வரை வாழ்ந்துவிட்டு, அந்த எஸ்டேட்டை நம்பி வாழ்கின்ற தொழிலாளர்களுக்கு குடி இருப்பதற்கு இடம் இல்லை. எனவே, அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு அரசு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் தொழிலாளர்கள்—முதலாளிகள் சங்கம் இன்று அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்தச் சங்கம் நூற்றாண்டு விழா கொண்டாடுகிறது. அந்த நூற்றாண்டு விழாவில் தொழிலாளர்கள் தாங்கள் பெற்ற நன்மைகளுக்காகவும், தேயிலையை உற்பத்தி செய்தவர்கள் என்ற முறையிலேயும், அவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்துகின்ற வகையிலே 65 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பாலிடெக்னிக் கட்டித் தருவதற்கு முதலாளிகள் முன்வந்திருக்கிறார்கள். அந்தப் பாலிடெக்னிக் கட்டித் தருவதற்கு, அரசு அனுமதி வழங்கி, நிலம் கொடுத்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பாலிடெக்னிக்கை 'உபாசி' மூலமாக நடத்துவதற்கு அரசு அனுமதி வழங்கினாலும், அதை அவர்கள் ஏற்று நடத்தத் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சுற்றுலாத் துறையை எடுத்துக்கொண்டால், நமது நாட்டில் வெளிநாட்டுப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் சுற்றுலாத் துறை இருக்கிறது. குறிப்பாக நீலகிரி மாவட்டம், வெள்ளைக்காரர்கள் காலத்திலேயே, அதன் தட்ப வெப்ப நிலையைப் பார்த்து உலகத்திலேயே மிகச் சிறந்த இடம் நீலகிரி தான் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட நீலகிரி மாவட்டத்திலே, வன விலங்குகள் வாழ்கின்ற முதுமலைக் காடுகளிலே ஏராளமான யானைகள், மான்கள் மற்றும் விலங்கினங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அங்கு வருகிற சுற்றுலாப் பயணிகள், யானைகள் மீது சென்று பல விலங்குகளைப் பார்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கிறது. அந்த சுற்றுலாப் பயணிகள் வெளிநாடுகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் வருகிறார்கள். அவர்கள் அங்கு தங்குவதற்கு நவீன வசதி உள்ள சுற்றுலா மையம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே அந்த வனப் பகுதியிலே ஏராளமான தேக்கு மரங்கள், ஈட்டி மரங்கள், சந்தன மரங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட விலை உயர்ந்த மரங்களை எல்லாம் கடந்த காலத்திலே வெட்டிச் சென்றுவிட்டார்கள். எனவே, அந்தத் துறை மிகவும் கண்காணிக்கப்பட வேண்டும். நம்முடைய

1990 மார்ச் 31] [திரு. என். தங்கவேல்]

நாட்டிலே வனம் சிறப்பாக இருந்தால் தான் பருவ மழை பெய்யும். அந்த வனம் இருக்கின்ற காரணத்தாலே தான் நீரூற்றுகள் இருக்கின்றன. அந்த வனத்திலே தான் பல்வேறு விதமான மூலிகைச் செடிகள் எல்லாம் இருக்கின்றன. எனவே வனம் நமக்கு மிகவும் முக்கியமானது. வெளி மாநிலங்களில் வனம் 33 சதவீதம் இருக்கும்போது, தமிழகத்தில் 17 சதவீதம் தான் அது இருக்கின்றது. வனத்தைக் காக்கக்கூடியவர்களுக்கு நல்ல துப்பாக்கி, பவர் உள்ள துப்பாக்கி கொடுக்க வேண்டும். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் வனப் பாதுகாவலர்களை சந்தன மரம் கடத்துகிறவர்கள் துப்பாக்கியால் சுட்டு விடுகிறார்கள். அந்தக் கொடிய காரியத்திலிருந்து அவர்கள் தப்பிக்க வேண்டுமென்றால் அவர்களிடத்திலும் நல்ல அதிக சக்தி வாய்ந்த துப்பாக்கியைக் கொடுத்து பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

11-00 மணி

சுற்றுலாவை எடுத்துக்கொள்ளும்பொழுது, நீலகிரி மாவட்டத்திலே பலயிடங்களிலே சுற்றுலாப்பயணிகள் பார்க்கின்ற காட்சிகள் இருக்கின்றன. அங்கே முதுமலை பாரஸ்ட் இருக்கிறது. அதேபோன்றுதான் கோடநாடு பகுதியிலேயிருந்து தெங்குமராடா செல்ல வேண்டும். அதற்கு கேபிள் கார் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதகை தொட்டபெட்டாவிலிருந்து நம்முடைய உதகையை பார்ப்பதற்கு கேபிள் கார் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புஞ்சைபனையிலேயிருந்து மேட்டுப்பாளையம் செல்வதற்குக் கேபிள் கார் அமைக்க வேண்டும்.

நீலகிரி மாவட்டத்திலே இப்படிப்பட்ட புதுமையான முறையிலே கேபிள் கார் அமைக்கப்பட்டால் வெளிநாட்டுப்பயணிகளும், வெளி மாநிலங்களிலே உள்ளவர்களும் அங்கே வருகை தந்து அந்த மாவட்டத்திற்கு ஒரு சிறப்பை ஏற்படுத்துவார்கள்.

அதேபோன்று, பக்காசூரன் மலை, அதே போன்று கேத்தரின் வாட்டர் பால்ஸ் போன்ற இடங்களையெல்லாம் காட்சிப் பொருள்களாக அமைப்பதற்கு நம்முடைய அரசு முன்வரவேண்டும்.

நம்முடைய அமைச்சர் முன்னாலே மேட்டுப்பாளையத்தினுடைய நகர்மன்றத் தலைவர் சொன்னார், நான்கு பச்சைப் பாம்புகளை வைத்துக்கொண்டு பினாங்கு நாட்டிலே பாம்புப் பண்ணை இருக்கிறது என்று சொன்னார்களாம். அந்தப் பாம்புப் பண்ணையைப் பார்க்க ஆவலாகச் சென்றபொழுது, அங்கே

சென்றபொழுது நான்கு பச்சைப் பாம்புகள் தான் இருக்கின்றன. ஆனால், நம்முடைய நாட்டிலே சுற்றுலாப் பயணிகளைக் கவர் வதற்கு, தெங்குமராட்டா காட்டிலே யானைகள், பலவிதமான மான்கள் இருக்கின்றன. மயில்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களையெல்லாம் வெளிநாட்டுப் பயணிகள் வந்து பார்ப்பதற்கு வசதியாக, ஆங்காங்கு கட்டப் படுகின்ற நவீன ஹோட்டல்களை நல்ல முறையிலே கண்காணித்து சுற்றுலாப் பயணிகள் அங்கு வந்து பார்த்துவிட்டு மகிழ்ந்து, இந்தியாவிலே, தமிழகத்திலே, அதுவும் குறிப்பாக நீலகிரி மாவட்டம்—மலையரசி என்ற சிறப்புப் பெயர் பெற்ற அந்த மாவட்டத்திலே—பார்க்கின்றபொழுது அவ்வளவு சிறப்பாக இருக் கிறது என்று அவர்கள் பெருமைப்படவேண்டும்.

அதே நீலகிரி மாவட்டத்திலே கூடலூர் பகுதியிலே ஏராளமான மக்கள் வாழ்கிறார்கள். சுற்றுப்புறத்திலே உள்ள 50 மைல் தூரத்திற்குத்தான் நகரப்பகுதிக்குச் செல்ல வேண்டியிருப்பதால் அங்கே ஒரு கல்லூரி நமது அரசுக் கல்லூரி ஏற்படுத்தப்பட வேண்டும். நம்முடைய அரசால் அங்கே ஒரு கல்லூரி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரைப்படத் துறையை எடுத்துக்கொள்ளுவோமானால், திரைப் படத் துறையிலே நல்ல முறையிலே சமுதாயத்தைச் சீர் திருத்துவதற்குத் தக்கவாறு படங்களை எடுத்து, அந்தப் படத்தின் வாயிலாக சமுதாயம் நல்லமுறையிலே, திருப்தியடைகின்ற வகை யிலே, சமுதாயம் சீர்திருத்தம் பெறுகின்ற வகையிலே அந்த சினிமாப்படங்களின் கலையம்சங்களும், அந்தப் படத்தினுடைய காட்சிகளும் அமைய வேண்டும். அதேபோன்றுதான், நம்முடைய அரசினுடைய சாதனைகளையெல்லாம் மக்களுக்குத் தெரிகின்ற வகையிலே 12,000 பஞ்சாயத்துக்களிலும் தொலைக்காட்சிப் பெட்டிகளை வைத்து அரசின் சாதனைகள் மக்களுக்குத் தெரி கின்ற வகையிலே செய்ய வேண்டும். 12,000 பஞ்சாயத்துக்களிலே சில பஞ்சாயத்துக்களிலே அந்தத் தொலைக் காட்சிப்பெட்டிகளை வைப்பதற் குரிய அறைகள் இல்லை. அந்தத் தொலைக் காட்சிப் பெட்டிகள் ஊராட்சிமன்றத்தினுடைய தலைவர்களுடைய இல்லங்களிலே காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, பொதுமக்களுக்கு பயன்படுகின்ற வகையிலே அரசினுடைய சாதனைகளை, நல்ல திட்டங்களை மக்கள் புரிந்து கொள்ளும் அளவிற்குச் செய்ய வேண்டும். படித்தவர்கள் பத்திரிகையைப் பார்த்துத் தெரிந்து கொண்டாலும், படிக்காத பாமர மக்களெல்லாம் படத்தின் வாயிலாகப் பார்த்து அரசினுடைய சிறப்புத் திட்டங்களையும், அரசு செய்கின்ற நல்ல திட்டங்களையும் அவர்கள் அறிந்து, கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமையும். ஆகவே, அந்த வகை யிலே இந்தச் சிறப்பான காரியத்தையெல்லாம் நமது அரசுசெய்து

1990 மார்ச் 31] [திரு. என். தங்கவேல்]

மக்களுக்கு நல்ல முறையிலே எடுத்துக்காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த வாய்ப்பை நல்கிய சட்டப்பேரவைத் தலைவரவர்களுக்கு நன்றியைக் கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. லெ. சுப்பிரமணியன்) குறித்த நேரத்தில் முடித்ததற்கு நன்றி.

திரு. இளம்வழுதி : தலைவரவர்களே, இன்று மானியக் கோரிக்கையை இந்த அவையிலே எடுத்து வைத்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் திரு. கே.பி.கே. அவர்களுக்கு 59ஆவது பிறந்த நாள் விழா. விதி இடம் தந்தால் பேரவைத் தலைவரவர்கள், மானியக் கோரிக்கையைச் சமர்ப்பித்திருக்கின்ற அமைச்சரவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்தை அவையின் சார்பிலே தெரிவிக்கலாம். என்னுடைய வாழ்த்தையும் அதோடு இணைத்துக்கொள்கிறேன். தலைவரவர்கள் கவனித்ததாகத் தெரியவில்லை.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு இந்த அவையின் சார்பில் தாங்கள் வாழ்த்துக் கூறுவீர்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. லெ. சுப்பிரமணியன்) : இன்று மானியக் கோரிக்கையை அவை முன் வைத்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் திரு. கே. பி. கந்தசாமி அவர்களுக்கு அவையின் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு செய்தி, காலையிலே நேரிலேயே நானும் தனிப்பட்ட முறையிலே வாழ்த்தைத் தெரிவித்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, என்னுடைய வயது—இது 58-வது பிறந்த நாள். 59 அல்ல. ஆகவே, வாழ்த்துக்களைத் தெரிவித்த தலைவரவர்களுக்கும், ஏனைய உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. இளம்வழுதி : தலைவரவர்களே, என்னுடைய கோரிக்கையை ஏற்று இந்த அவையின் சார்பில் அமைச்சரவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். மானியக் கோரிக்கை எண்கள். 25, 45,47, 56 ஆகியவற்றின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்ளை இந்த அவையின் குறிப்பேட்டில் பதிய வைப்பதற்கு வாய்ப்பளித்தமைக்கு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். தங்களின் வாய்ப்பிற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

11-05 மணி

இந்திய நாட்டில் மொத்தம் 58 சுற்றுலா தலங்கள் இருப்பதாகவும், அவற்றில் 11 தலங்கள் நம்முடைய தமிழ் நாட்டில் இருப்பதாகவும் இந்த அறிக்கை தெரிவிக்கிறது. இந்தியாவிற்கு வருகிற வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 35 சதவீதத்தில் 25 சதவீதத்தினர் தமிழ்நாட்டிறகு வந்து போகிறார்கள் என்பது உள்ளபடியே நாம் எல்லாம் பெருமை படக்கூடிய விஷயம். இதை முன்னிட்டு தான் இந்தியாவை குறிப்பிட்ட காலத்தில் பன்னாட்டு சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடமாக மேம்படுத்த திட்டம் ஒன்றை மத்திய அரசு வகுத்து, அதன் அடிப்படையில் 1991 ஆம் ஆண்டை இந்திய சுற்றுலா ஆண்டாக அறிவித்திருப்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சி அளிக்கக் கூடிய விஷயமாகும். தமிழர்களின் பழம் பெரும் சிறப்பை உலகிற்கு எடுத்துக் காட்டும் வகையில் இன்றைய தமிழக முதல்வர் எங்களுடைய தானைத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் 1973 ஆம் ஆண்டு புதிய பூம்புகாரை நிர்மானித்தார்கள். அதைப் போல நெல்லையில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, தீரமுடன் போராடிய மாவீரன் கட்டபொம்மன் அவர்களுக்கு நெல்லை பாஞ்சாலங்குறிச்சியில் கோட்டம் எழுப்பினார்கள். இன்னும் அந்த நினைவுச் சின்னம் வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவர்ந்து வருகிறது.

அதைப் போல, 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதி பாடினார். அந்த உலகப் பொது மறை தந்த வள்ளுவனுக்கு சென்னையில் கோட்டம் எழுப்பினார்கள். இதனால் உண்மையான தமிழ் நெஞ்சங்கள் எல்லாம் டாக்டர் கலைஞர் அவர்களை வாழ்த்தி, போற்றி, வணங்கின. அவர் தமிழர்களின் உள்ளங்களில், இல்லங்களில் நிலையான இடத்தை பெற்று நின்றார்கள். ஆனால், அடுத்து வந்த ஆட்சியாளர்கள் என்ன காரணத்தாலோ தெரியவில்லை, பூம்புகாரையும், கட்டபொம்மன் கோட்டத்தையும், வள்ளுவர் கோட்டத்தையும் பராமரிப்பதில், மேம்படுத்துவதில் அக்கறை காட்டவில்லை. இதற்கு மேல் நான் அதிகமாக சொல்லத் தேவையில்லை. காரணம் சம்பந்தப்பட்டவர்களே குற்ற உணர்வோடு தவித்து கொண்டிருக்கிறபோது நான் மேலும் குத்திக் காட்ட விரும்பவில்லை. இதனால் தற்போது பூம்புகார் சுற்றுலா வளாகம் கடல் அரிப்பால் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை ஏறபட்டிருக்கிறது. எப்படியும் அந்த பாதிப்பிலிருந்து புதிய பூம்புகாரினை பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையில், மாநில நீர் அழுத்தம், நீரியல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் பொதுப் பணித்துறை ஆகியவற்றை சேர்ந்த வல்லுநர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், பூம்புகார் சுற்றுலா வளாகத்தை பாதுகாக்க கடற்கரை முழுவதும் 900 மீட்டர் நீளத்திற்கு கூழாங்கற்களை வைத்து ரூபாய் 65 இலட்சம்

1990 மார்ச் 31] [திரு. இளம்வழுதி]

செலவில் சுவர் கட்ட அரசு முன்வந்திருப்பதை தமிழ் மக்கள் பெரிதும் வரவேற்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த வளாகத்தை அழகு படுத்தி மேம்படுத்த தேவையான பணிகளை மேற்கொள்ள ரூபாய் 25 இலட்சம் ஒதுக்கியிருப்பதையும் இந்த நேரத்தில் நான் வரவேற்று, நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போல பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் கோட்டத்தை சுற்றியுள்ள பகுதியை அழகு படுத்தியும், குழந்தைகள் பூங்கா, விளையாட்டு வசதிகள், குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள் போன்றவற்றை ரூபாய் 8 இலட்சம் செலவில் உருவாக்க அரசு முன் வந்திருப்பதை நான் வரவேற்று, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போல சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டம் மேலும் பொலிவு பெறும் வண்ணம் ஏறத்தாழ 27 இலட்சம் ரூபாய் செலவில் மேம்பாடு பணிகள் மேற் கொள்ளப்பட இருப்பதை பாராட்டுகிறார்கள். சுற்றுலாத் துறையில் சிறப்பு வாய்ந்த உள்ளூர் பகுதிகளை மேம்படுத்த வேண்டும் என்பதில் நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள், டாக்டர் கலைஞர் அவர்கள் அதிக அக்கறை உள்ளவர்கள். எனவே இந்த நேரத்தினை பயன்படுத்தி நான் ஒன்றை என்னுடைய வேண்டுகோளாக அமைச்சர் அவர்களிடத்தில் வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய வேண்டுகோளை நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கணபதி அவர்களும் வலியுறுத்துவார் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், அவர்களுடைய தொகுதி சம்பந்தப்பட்டதாகும் இந்தக் கோரிக்கை. சென்னை, மைலாப்பூரில் இருக்கிற திருவள்ளுவர் கோவிலை சுற்றுலா மையமாக்க அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி என்னுடைய இந்த வேண்டுகோளை ஏற்று செயல் படுத்தும்போது, அந்த கோவிலைச் சுற்றி இருக்கிற குடிசைகளை எல்லாம் அப்புறப்படுத்த வேண்டியிருக்கும். எனவே, அப்படி அப்புறப்படுத்தும் போது அந்த குடிசைவாசிகளுக்கு தகுந்த மாற்று ஏற்பாடுகளை செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் நம்முடைய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நம்முடைய அமைச்சர் அவர்களுடைய தலைமையில் சீரோடும், சிறப்போடும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

11.10 மணி.

இந்த வளர்ச்சி குறித்து உள்ளபடியே, நாங்கள் எல்லாம் பெருமைப்படுகிறோம். நம்முடைய அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு எல்லாவற்றிலுமே தன்னுடைய திறமையைக் காட்டி, இன்றைக்கு சுற்றுலா வாரியம் மிகுந்த

ஒரு லாபகரமான நிறுவனமாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. இந்த நேரத்திலே என்னைப் போன்ற சக சட்டமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளை நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தமிழ்நாடு ஓட்டலில் அறைக் கட்டணம் மிகவும் அதிகமாக இருக்கிறது. இங்கே என்னுடைய குரலுக்கு எல்லோரும் ஒத்துக் கொள்கிறார்கள். எனவே அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக எங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். நான் ஓட்டல் அறைக் கட்டணம் என்று சொன்னால், உணவு மற்றும் எல்லாவற்றையும் சேர்த்துத்தான் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல் இந்தத் துறையிலே இருக்கின்ற ஒரு சில பிரச்சினைகளை நம்முடைய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். இந்தத் தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தில் 1979 ஆம் ஆண்டு நிர்வாக இயக்குநர் பொறுப்பு என்று ஒன்று இருந்தது. அந்தப் பொறுப்பை கோட்டை அலுவலகத்தில் உள்ள சுற்றுலாத் துறையின் கமிஷனர்—செயலாளர் அவர்களே சேர்த்து பணியாற்றி வந்தார்கள். இந்த இரண்டு பொறுப்பையும் ஒன்றாகச் சேர்த்து பார்ப்பதால், தமிழ்நாட்டில், சுற்றுலா வாரியத்தில் மிகுந்த அக்கறை செலுத்த முடியாத காரணத்தால், அன்றைய தினத்தில். 1979ஆம் ஆண்டு, 62-வது போர்டு மீட்டிங்கில், ஒரு ஜெனரல் மேனேஜர் பதவியை உருவாக்கி, அவர்களிடத்திலே பொறுப்புகளை ஒப்படைத்து விட்டு, மிகவும் முக்கியமான கோப்புகளை நிர்வாக இயக்குநர் பார்க்கலாம் என்ற நிலையை உருவாக்கினார்கள். ஓர் ஆண்டுக்குப் பிறகு, தமிழ்நாடு சுற்றுலா வாரியத்திற்கு தனியாக நிரந்தர நிர்வாக இயக்குநரைப் போட்ட காரணத்தால், பொது மேலாளர் பதவியை பூர்த்தி செய்ய வேண்டாம் என்று தீர்மானித்து விட்டார்கள். அதற்குப் பிறகு எல்லாப் பொறுப்புகளையும் நிர்வாக இயக்குநரே பார்த்து வந்தார்கள். அதுவும் ஜெனரல் மேனேஜராக இருப்பவர், டி.ஆர்.ஓ. பொறுப்பில் உள்ளவர்கள், அல்லது ஜுனியர் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்தான். அவர்களைத்தான் அந்தப் பொறுப்பிலே அமர்த்த வேண்டும் என்று வரையறுக்கப்பட்டது. ஆனால் இப்போது இந்தச் சுற்றுலா வாரியத்தில் ஒரு முழு நேர நிர்வாக இயக்குநர், ஐ.ஏ.எஸ்., சேர்மன் முழு நேரப் பொறுப்பிலே வந்திருக்கிறார்கள். எனவே இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது எல்லாம், நம்முடைய எம்.டி. ஜெனரல் மேனேஜர் போன்ற பொறுப்புகளிலே இருப்பவர்களுக்கு என்ன என்ன செலவாகிறது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுக் காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன். நம்முடைய ஜி.எம். அவர்களுக்கு மாதச் சம்பளம் 7,453 ரூபாய்.

1990 மார்ச் 31] [திரு. இளம்வழுதி]

அவர்களுக்கு இரண்டு உதவியாளர்கள் இரண்டு பியூன்கள், கார் ஓட்டுநர், வீட்டு டெலிபோன், ஆபீஸ் டெலிபோன், குளிர் சாதனம் பொருத்தப்பட்ட அறைக்கு மின் கட்டணம், குளிர் சாதனம் பொறுத்தப்பட்ட கார், பெட்ரோல், செலவு, இப்படி இத்யாதியாக, ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு 30 ஆயிரம் ரூபாய் செலவிடப்படுகிறது. அவர்களுக்கு இன்னும் அதிகமாகக் கூட செலவு செய்யக் கொடுக்கலாம். காரணம் அவர்கள் வசதி யாகவும், நிம்மதியாகவும் இருந்தால் தான், ஏற்றுக்கொண்ட பொறுப்பை திறம்பட செயலாற்ற முடியும். ஆனால் இப்படி அளித்த பிறகும்கூட, அவர்கள் செயல்படாமல் இருக்கும் போது, அதை நாம் அவசியம் கவனிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்தத் துறையைப் பொறுத்தவரையில், வெளி நாடுகளுக்குச் சென்று இந்தச் சுற்றுலாத் துறையை எப்படி மேம்படுத்த வேண்டும் என்ற அந்தப் பயிற்சியைப் பெற்று வந்த வர்களைக் கொண்டு அந்தப் பதவிகளை நிரப்பினால், நிச்சய மாக இந்தத் துறை நன்றாக இருக்கும், நமக்கும் நன்றாக இருக்கும், நாட்டுக்கும் நன்றாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்தப் பொறுப்புக்கு ஏறத்தாழ 30 ஆயிரம் ரூபாய் ஆகிறது. இது வருடத்திற்கு $4\frac{1}{2}$ இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக செலவழிக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட ஒரு பொறுப்பு தேவைதானா என்பதை சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2,500 ரூபாய் வாட கையில் மவுண்ட் ரோடிலே இயங்கி வந்தது. ஆனால் தற்போது சென்னை, ராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள 'யெல்லோ பேஜஸ்' என்ற பில்டிங்கிலே ஒரு மாதத்திற்கு எல்லா வசதி களோடு, ஏறத்தாழ 50 ஆயிரம் ரூபாய் இன்றைக்கு செலவழிக்கப் பட்டு, அந்த அலுவலகம் அங்கே இயங்கிக் கொண்டு இருக்கிறது. எனவே இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்வது எல்லாம், தீவுத் திடலில், 'ஐலண்ட் கிரவுன்ட்டிலே' எவ்வளவோ இடம் இருக்கிறது. இதனால் ஏறத்தாழ ஒரு வருடத்திற்கு 6 இலட்சம் ரூபாய் செலவாகிறது. அந்த 6 இலட்சம் ரூபாயை மிச்சப் படுத்துகின்ற வகையில், இந்த அலுவலகத்தை நம்முடைய தீவுத் திடலிலே கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள் கிறேன்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழக அரசின் நிறு வனத்தில் ஒன்றாகும். இதில் பணி புரியக் கூடிய அலுவலர்கள், தொழிலாளர்கள், பணிக் காலத்தில் இறந்தால், குடும்ப நிதி

10 ஆயிரம் மட்டும்தான் இன்று வழங்கப்படுகிறது. மற்ற நிறுவனங்களிலே 40 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. எனவே இதைத் திருத்தி அமைத்து, அவர்களுக்கும் 40 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஓட்டல் பிரிவில் பணி புரியும் நிரந்தர தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி வழங்கப்படவில்லை. சட்டப்படி வழங்க அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பு வழங்கியமைக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

11-15 மணி

திரு. என். கணபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் இளம்வழுதி அவர்கள் திருவள்ளுவர் கோவிலை சுற்றுலா மையமாக ஆக்கவேண்டுமென்றும், அதற்கு என்னுடைய ஆதரவு உண்டு என்றும் சொன்னார். நிச்சயமாக என்னுடைய ஆதரவும் அதற்கு பன் மடங்கு உண்டு. அது மாத்திரமல்ல, அவருக்கும் உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. ராம. நாராயணன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டத் தொடரில் செய்தி, சுற்றுலா திரைப்படத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மானியக் கோரிக்கை விவாதத்தில் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்குமுன்பாக சொன்னதைச் செய்யும் செயல் வீரர், ஈடு இணையற்ற தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

வாராது போல் வந்த மாமணியாம் தங்கத் தலைவர்—கருணை வள்ளல் கலைஞர் அவர்கள் ஏழைகளின் நல்வாழ்விற்காக நல்லதொரு பட்ஜெட்டை தந்திருக்கிறார்கள்.

ஏழை பெண்கள் கட்டியிருக்கின்ற சேலையிலே நெய்த நூலை விட தைத்த நூல்தான் அதிகம் என்று சொல்வார்கள். அப்படிப் பட்ட பரிதாபத்திற்குரிய பாமர மக்களின் வயிற்றில் பால் வார்க்கும் பட்ஜெட் இது.

உழைத்து உழைத்து ஆயுள் ரேகையே தேய்ந்துபோன ஏழை விவசாயிகள் புது வாழ்வு பெற பூத்து இருக்கும் புதுமை பட்ஜெட் இது. இப்படிப்பட்ட முழுமையான பட்ஜெட்டை எந்த முதல்வரும் தந்தது இல்லை. ஆனால் சில மாற்றுக் கட்சி நண்பர்கள் இதை பாராட்ட மறுக்கிறார்கள். பாவம் அவர்கள். கர்சீப்பை போட்டு கடலை மூடி மறைக்கப் பார்க்கிறார்கள். இருந்த இடத்தில் இருந்தே இமயத்தின் தலையில் குட்ட நினைக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் ஏசுவதாலும், பேசுவதாலும் இந்த பட்ஜெட்டின் பெருமை குலையாது, குறையாது. எச்சிலைத் துப்பி சூரியனை அசிங்கப்படுத்த முடியாது.

இந்த நாட்டின் முதுகெலும்பாம் ஏழை விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் அளிக்கும் வகையில் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 106 கோடிக்கான பொறுப்பை அரசே ஏற்றுக் கொண்ட பெருந்தன்மையை நான் மனமாற பாராட்டுகிறேன்.

மேலும் 8 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர் மாணவிகளுக்கு பள்ளிக்குச் சென்று வர அரசு பேருந்துகளில் இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டத்தை அறிவித்த முதல்வருக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

தாயைப் போற்றும் தமிழ் நிலத்தில் ஒரு சில மாவட்டங்களில் பெண் குழந்தை பிறந்தால் கொன்றுவிடும் பெரும் கொடுமை நடந்து வருவதைத் தடுக்க அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி, சிறுமியர் ஆண்டாக இந்த ஆண்டை சிறப்பித்த முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

காரைக்குடி நகரில் கவியரசு கண்ணதாசன் மணி மண்டபம் அமைவதற்கு ரூபாய் முப்பது லட்சம் ஒதுக்கீடு செய்த தமிழக முதல்வர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இதேபோன்று திரைப்படத் துறையில் பல்லாயிரக் கணக்கான திரைப்பட ஊழியர்களும் பயன்பெறும் வகையில் சில கோரிக்கைகளை உங்கள் முன் வைக்க ஆசைப்படுகிறேன்.

நமது கழக ஆட்சியில் முன்பு ''டைரக்டர்ஸ் காலனி'' ஒன்றை உருவாக்கி வீதியிலே சிந்தித்துக் கொண்டிருந்தவர்கள் வீட்டில் சிந்திக்க வைத்த பெருமை பெற்றவர்கள் தங்கத் தலைவர் கலைஞர் அவர்கள். அதேபோல் தற்போது உள்ள திரைப்பட தொழிலாளர்கள், தொழில்நுட்ப கலைஞர்கள் அனைவருக்கும் குடியிருப்பு ஒன்றை உருவாக்கி அவர்களின் குறைகளைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ராம. நாராயணன்] [1990 மார்ச் 31

கடந்த ஆண்டு குறைந்த முதலீட்டில் தயாரிக்கப்பட்ட சிறந்த தரமான படங்களுக்கு உதவித் தொகை வழங்கி சிறிய தயாரிப்பாளர்களுக்கு பெரிய உதவி புரிந்த கலைஞர் அவர்கள் இந்த ஆண்டும் குறைந்த முதலீட்டில் தயாராகும் எல்லா படங்களுக்கும் உதவிக்கரம் நீட்டுவதற்கு உண்டான அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும வெளிப்புற படப்பிடிப்பு ''அவுட்டோர் ஷூட்டிங்'' செல்லும்போது குறிப்பிட்ட இடத்தில் படப்பிடிப்பு நடத்துவதற்கு அரசாங்கத்தின் அனுமதியை வாங்குவதற்கு விதிமுறைகள் பலவற்றை கடுமையாக வைத்திருக்கிறார்கள். உதாரணமாக ஒரு இடத்தில் படப்பிடிப்பு நடத்த வேண்டுமென்றால் வனத் துறையிடமிருந்து அனுமதி பெற வேண்டியிருக்கிறது. பிறகு நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து அனுமதி பெற வேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகு காவல் துறையிடம் அனுமதியை பெற வேண்டியிருக்கிறது. ஒரே இடத்தில் படப்பிடிப்பு நடத்துவதற்கு பல பல அலுவலகங்கள் சென்று அனுமதி பெற வேண்டியிருக்கிறது. அதனால் கால விரயமும், சிரமங்களும் அதிகமாகிறது. எனவே கர்நாடகம், ஆந்திரா போன்ற மாநிலங்களில் ஒரே இடத்தில் பர்மிஷன் வாங்கும் முறையை வைத்திருக்கிறார்கள். அதேபோன்று நம்முடைய அரசிலும் இந்த முறையை எளிமைப்படுத்த வேண்டுமென்று திரைப்படத் துறையின் ஆத்திச்சூடியாக விளங்குகின்ற தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம், தர்மபுரி, சேலம் போன்ற மாவட்டங்களில் டிஸ்க் ஆண்டனா முறையில் ஒரே நாளில் நான்கு ஐந்து புதுத் திரைப்படங்களைப் போட்டு கிட்டத்தட்ட 1,000, 2,000 பேர் வீட்டில் இருந்தபடியே படத்தை பார்த்துவிடுகிறார்கள். அதனால் படத் தயாரிப்பாளர்கள் மட்டுமல்ல, வினியோகஸ்தர்கள் மட்டுமல்ல; அரசாங்கத்திற்கு வர வேண்டிய வருமானமும் பாதிக்கிறது.

11-20 மணி

திருட்டு வீடியோ ஒரு தொற்று நோய் என்றால் டிஸ்க் ஆண்டெனா ஒரு புற்று நோய். அந்த நோயை தீர்ப்பதற்கு, ஆப்பரேஷன் மூலம் குணப்படுத்துவதற்கு இன்று கலைஞர் அவர்கள் உதவி செய்வார்கள் என்று நம்புகிறேன். இங்கு வேதனையோடு இன்னொரு விஷயத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். தமிழகம் எங்கும் பல திரை அரங்குகளிலே மாற்றுமொழிப் படங்களின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்றன. தரமான வேற்று மொழிப் படங்களை நான் எதிர்க்கவில்லை. ஆனால் இரகசியமாக ஆபாச காட்சிகளை இணைத்து அதாவது ப்ளு பிலிம் போன்றவற்றை இணைத்து திரையிட்டு சமுதாயத்தை கெடுக்கக் கூடிய வேற்று மொழிப் படங்கள் நிறைந்து விட்டன.

1990 மார்ச் 31] [திரு. ராம. நாராயணன்]

அதனால் தரமான தமிழ் படங்களை திரையிடுவதற்கு சரியான திரையரங்குகள் கிடைக்கவில்லை. இது போன்ற வேற்று மொழிப் படங்களிலே ஆபாச காட்சிகளை இணைத்து வெளியிடுவதுபற்றி சென்சார் போர்டு அதிகாரி திரு. இராகவன் அவர்களிடம் நான் முறையிட்டு பேசியிருக்கிறேன். அவர்கள் அரசாங்கம் உதவி செய்தால் நிச்சயமாக நானும் தடுப்பதற்கு தூண்டுகோலாக இருப்பேன் என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் உதவி செய்து இந்தப் பிரச்சினையை உடனடியாக தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல சென்னை நகரத்திலே உள்ள பல தியேட்டர்களில் குறிப்பாக கெயிட்டி, கேசினோ போன்ற திரையரங்குகளில் எல்லாம் ஆங்கிலப் படங்களைத் தவிர வேறு எதையும் அவர்கள் திரையிடுவது இல்லை. அவை எல்லாம் தமிழகத்தில் தான் இருக்கின்றனவா அல்லது வேறு மாநிலத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றனவா என்பது தெரியவில்லை. அப்படிப்பட்ட திரையரங்குகளில் எல்லாம் தமிழ் படங்களை திரையிடுவதற்கு ஒரு உத்தரவை இடுமாறு அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இது போன்று ஆபாச போஸ்டர்களை வெளியிட்டு நாட்டில் ஒரு ஆரோக்கியமற்ற ஒரு சூழ்நிலையினை உருவாக்கிக் கொண்டு இருப்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசு ஸ்டுடியோ என்ற ஒன்று இயங்கிக் கொண்டிருக்கிறது. அதை லாபகரமான முறையிலே இயங்கச் செய்வதற்கு அங்குள்ள கேமிராக்கள், லைட்டுகள் போன்றவற்றை அவுட்டோர் யூனிட்டுகளுக்கு வாடகைக்கு விட்டு நமது அரசு ஸ்டுடியோவும் சிறப்பான முறையிலே லாபகரமான முறையிலே இயங்குவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பட்ஜெட்டைப் பற்றியும் திரைப்படத் துறையின் நன்மைக்காகவும் இதுவரையில் பேசிய நான் எனது தொகுதிக்காக ஒன்றிரண்டு கருத்துக்களை இங்கே எடுத்துவைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலே ஒரு அருமையான நகரம் காரைக்குடி. பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தினுடைய தலைநகரமாக இருக்க வேண்டிய காரைக்குடி முன்பு இருந்தவர்களின் தவறான அணுகுமுறையின் காரணமாக பின்னுக்கு தள்ளப்பட்டது. இருந்தாலும் அதன் பெருமையை, ஆற்றலை சிறப்பை யாராலும் அணைகட்டி தடுக்க முடியாது. வெட்ட வெட்ட வளருகின்ற வாழையைப் போல சுடச் சுட மிளிருகின்ற பொன்னைப் போல அரைக்க அரைக்க மணக்கின்ற சந்தனம் போல காரைக்குடி தலை நிமிர்ந்து இருக்கிறது. அப்படிப்பட்ட காரைக்குடிக்கு உரிய கௌரவம் தரப்பட வேண்டும்.

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலே தலைநகரமாக சிவகங்கை இருந்தாலும் முதல் நகரமாக காரைக்குடி ஆக்கப்பட வேண்டும். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமென்றால் அமெரிக்காவின் தலைநகரமாக வாஷிங்டன் இருந்தாலும் முதல் நகரமாக நியூயார்க் இருக்கிறது. மேலும் காரைக்குடிக்கு தர வேண்டிய உரிமைகளை தானைத் தலைவர் தங்கத் தலைவர் கலைஞர் அவர்கள் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு சில கோரிக்கைகளை முன் வைக்கிறேன்.

மாவட்ட போக்குவரத்து அலுவலகம் ஆர்.டி.ஓ. ஆபிஸ் ஒன்றை காரைக்குடியில் இயங்குவதற்கு அவர்கள் அனுமதிக்க வேண்டும். வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் 3 போக்குவரத்து அலுவலகங்கள் ராணிப்பேட்டை, வாணியம்பாடி, வேலூர் போன்ற நகரங்களில் இருக்கின்றன. இதுபோல காரைக்குடியில் இயங்குவதற்கு அனுமதிக்க வேண்டும். அழகப்பா கலைக் கல்லூரியை அழகப்பா பல்கலைக் கழகத்துடன் இணைக்க வேண்டும். ஏனென்றால் அழகப்பர் முதலில் ஆரம்பித்தது அழகப்பா கலைக் கல்லூரியைத்தான். அது இன்னமும் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்படவில்லை. அது கூடிய சீக்கிரம் இணைக்கப்பட வேண்டும். காரைக்குடிக்கு தங்கத் தலைவர் கலைஞர் அவர்கள் வந்தபோது இதைநான் தெரிவித்து இருக்கிறேன். கூடிய சீக்கிரம் இதைச் செய்யவேண்டும் என்று தங்கத் தலைவர் கலைஞர் அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு காரைக்குடியில் டிஸ்டிரிக்ட் கோர்ட் அல்லது சப் கோர்ட் ஒன்றை கொண்டு வருவதற்கு உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அமுத ஞானசம்பந்தருக்கு பால் கொடுத்தாள் பார்வதி. அது போல எங்களுக்கு நியாயம் வழங்குவார் தங்கத் தலைவர் கலைஞர் தளபதி என்று சொல்லி தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்றார் மேரி மைந்தர். தட்டாமலே திறப்பார், கேட்காமலே கொடுப்பார் எங்கள் அஞ்சுகம் மைந்தர் என்று சொல்லி எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவையினுடைய தற்காலிக சபாநாயகர் அவர்களே, இந்த சின்கோனா, காட்டு இலாகா பிலிம், சுற்றுலா ஆகிய இந்த மானியத்திலே எனக்கும் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி சொல்லி சில கருத்துக்களை சொல்ல முன் வருகிறேன். காட்டு இலாகாவைப் பற்றி எவ்வளவோ சொல்லலாம். எவ்வளவோ எரி பொருள்கள் எல்லாம் வந்திருக்கின்றன இப்போது. வீட்டிலே கேஸிலிருந்து சீமெண்ணெய்யிலிருந்து சாண எரிவாயிலிருந்து பலவிதமான எரி பொருள்கள் வந்தும், எத்தனையோ விதமான அடுப்புகள், எலக்ட்ரிக் அடுப்புகள் என்று வந்தும் இன்னும் எரி பொருளுக்கு...... (மணியடிக்கப் பெற்றது).

1990 மார்ச் 31]

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் மாற்றுத் தலைவர் என்று நியமிக்கப்படாலும் பேரவைத் தலைவர் என்று தான் அழைக்கப்பட வேண்டும் என்ற மரபு இருக்க வேண்டுமென்று ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டது. ஆனால் நமது முதிர்ந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தற்காலிக சபாநாயகர் அவர்களே என்று அழைத்து இருக்கிறார். எனவே அது பொருத்தம்தானா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. லெ. சுப்பிரமணியன்) : என்னைப் பற்றி இருப்பதால் நானே அதற்குத் தீர்ப்பு வழங்குவது முறையல்ல. மாண்புமிகு உறுப்பினர் தொடர்ந்து பேசலாம்.

11-25 மணி

திரு. ஓய். வெங்கடேஸ்வர திட்சிதர் : சபாநாயகர் என்று சொல்லும்போது, இந்த சபைக்கே நாயகர் அவர்தான். அது தான் விதி. சபாநாயகர் என்கிற வார்த்தைக்கே முதலில் அர்த்தம் தெரியவில்லை என்றால் நாம் என்ன செய்வது? சபாநாயகர் என்றாலே பேரவைத் தலைவர் என்று அர்த்தம். கனம் என்று இருக்கும்போது நாம் ஏன் மாண்புமிகு என்று சொல்கிறோம்? கனம் என்று அந்தக் காலத்தில் சொல்லிக் கொண்டிருந்தோம். எல்லாம் ஒரே அர்த்தம்தான் (மணியடிக்கப்பெற்றது).

ஆகையினால், எவ்வளவோ உபயோகமற்ற எரிபொருட்கள் இருந்தாலும் இன்னும் விறகுகளின் உபயோகம் குறையவில்லை. ஒரு முப்பது வருடங்களுக்கு முன் ஒரு விறகு கடை இருந்ததென்றால், இப்போது 10 விறகு கடைகள் இருக்கின்றன. எனவே, மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்துகொண்டே போகிறது. மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும்போது, அங்கே எரிபொருட்களிலிருந்து மற்ற எல்லாப் பொருட்களும் வேண்டியிருக்கிறது. எத்தனை விதமான எரிபொருட்கள் தற்போது வந்திருக்கின்றன? கணக்கே கிடையாது. வீட்டு உபயோகத்திற்கென உள்ள பொருட்களை காட்சிக்கு வைத்திருக்கும் 'எக்ஸிபிஷனிலே' போய்ப் பார்த்தோம் என்றால், பலவிதமான அடுப்புகள் இருக்கின்றன. அத்தனை அடுப்புகளையும் பார்க்கும்போது, ஏன் விறகு கடை இருக்கிறது என்று கேட்டால் அதுவும் தேவையாகத்தான் இருக்கிறது. வாழ்க்கையின் கீழ் மட்டத்திலே, குடிசையில் வாழ்கிற, நடுத்தர மக்களுக்கெல்லாம் இன்னும் விறகு வேண்டியிருக்கிறது. அவர்களுக்கெல்லாம் விறகு வேண்டுமென்றால் எப்படி உற்பத்தி பண்ண வேண்டியிருக்கிறது? முன்பு 20 கோடி ஜனங்கள் இருந்தனர். இப்போது, 70 கோடி ஜனங்கள் இருக்கின்றனர். இந்தியாவிலே 70 கோடி; நம்முடைய மாகாணத்திலே 4 சொச்சம் கோடி இருப்பதாலே அவ்வளவு

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்][1990 மார்ச் 31

பெருக்கும் எரிபொருட்கள் தேவைப்படுகிறது. முன்பு எல்லாம் இரவு 12 மணி ஆகிவிட்டாலே ஒரு கடையும் இருக்காது. எல்லோரும் தூங்கி விடுவார்கள். இப்பொழுது விடிய விடிய டீ கடைகள் இருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் எரிபொருட்கள் தேவைப்படுகின்றன. அந்த எரிபொருட்களுக்கு மரம் வேண்டியிருக்கிறது. அந்த மரங்களை எவ்வாறு பெறுவது? நாட்டில் மழை இல்லை. மழை வரவேண்டுமென்று கேட்கிறோம். மழை எப்படி வரும்? நாட்டில் மரங்கள் இருந்து, அந்த மரங்களின் இழுப்பு சக்தி இருந்தால்தானே, மழை வரும். மழை வருவதற்கான சக்தியே இல்லை; மரங்கள் எல்லாவற்றையும் வெட்டி விட்டோம்; வெட்டப்பட்டிருக்கின்றன. 47-ஆம் வருஷத்திலிருந்து மரம் நடு விழா நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சென்ட்ரலிலும் சரி, ஸ்டேட்டிலும் சரி, 47-ஆம் வருஷத்திலிருந்து மரம் நடு விழாவை கணக்கிட்டுப் பார்த்தால், இந்த 40 வருடங்களுக்குப் பிறகு, எங்கும் இடமே இருக்காது. சட்டசபையிலே கூட இடம் இருக்காது. அவ்வளவு மரங்களை நாம் நட்டிருக்க வேண்டும். போன வருஷத்திலே மரம் நடுவிழா எங்கு நடத்தினோமோ, அங்கேதான் தற்போதும் நடுகிறோம். அந்தச் செடி எங்கே போனது? அந்தச் செடியை யாராவது பிடுங்கிச் சென்று விட்டார்களா? அல்லது வெள்ளாடு ஏதாவது தின்று விட்டதா? திரும்பவும் அதே இடத்தில் மரங்களை நட வேண்டுமென்று மந்திரிகளைக் கூப்பிடுகிறார்கள். மத்திய மந்திரியைக் கூப்பிடுகிறார்கள், இந்த மரம் நடு விழாவிற்கு.

முன்பெல்லாம் மத்திய மந்திரிகள் அதிகம் வருவார்கள் இந்த மரம் நடு விழாக்களுக்கு. அதனால்தான் ஏராளமாக காடுகள் வளம் பெறும்; அதனால்தான் மழை பொழியும்; அதனால்தான் உற்பத்திப் பெருகும் என்று நினைக்கிறோம். ஆனால், இப்போது இந்த மந்திரிகளையும் கூப்பிட்டு, மரம் நடு விழா நடத்துகிறார்கள். ஏனென்றால், விளம்பரம் கிடைக்க வேண்டும்; நான் தனியாக - இந்த தீட்சிதர் - போனால் விளம்பரம் கிடைக்காது. எனவே, மந்திரிகளைக் கூப்பிட்டு விளம்பரம் நடத்தினால், வீடியோ எடுக்கிறார்கள். முதலிலே அங்கே போய் நிற்கிறோம்; அடுத்து, வீடியோவிலே அது வந்துவிட்டதா என்று பார்க்கிறோம். நம்மையும் சேர்த்து எடுத்திருக்கிறார்களா, இல்லையா? என்று. இத்தனை விழா நடத்தியும் மரத்தினுடைய நிலை என்ன? எந்தவிதமான பிரதி பிரயோஜனமும் இல்லாமல் வருமானம் வருகிறது என்றால் அது காடுதான். காட்டுக்காக நாம் ஒன்றும் முயற்சி எடுத்துக்கொள்வதே கிடையாது. விதை கூட போடுவது கிடையாது. காட்டுக்குள்ளே நுழையவே பயமாக இருக்கிறது, தேள் கடிக்குமோ, பாம்பு கடிக்குமோ, மிருகங்கள் இருக்குமோ என்று. தனியாகவே விதை முளைத்து, தனியாகவே காடு உற்பத்தியாகி, அதனால் ஏற்படக்கூடிய பலன்களை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய

1990 மார்ச் 31] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

தேசத்தில் மட்டுமல்ல, எல்லா தேசங்களிலும் அப்படித்தான். இந்த விறகுகள் எல்லாம் ரூபாய்க்கு 4 எடை என்று விற்றது. தற்போது, ஒரு எடை ரூ. 20 என்று விற்கப்படுகிறது. ஏழை ஜனங்கள் என்ன செய்வார்கள்? காட்டிலே போய் விறகுகளை பொறுக்குகிறார்கள். அப்படி பொறுக்கும்போது, தவறுகள் அங்கேயும் ஏற்படுகின்றன. சமூக விரோதிகள் அங்கேயும் இருக்கிறார்கள். திருடன் இல்லாமல் இருக்க முடியுமா? அங்கே இருக்கிற மரங்களை வெட்டுகிறான். சாதாரண மரங்களை அல்ல; அத்தனை சந்தன மரங்களையும் வெட்டுகிறான். சந்தன மரங்களை—காட்டு நிலங்களிலே இருந்தால்கூட வெட்ட முடியாது. நம்முடைய வீட்டிலே சந்தன மரம் முளைத்து அது பெரிதாகிவிட்டால், அதை வெட்டக் கூடாது. வெட்டினால் சர்க்காருக்குத் தெரிந்தால், தாசில்தார் உடனே கம்ப்ளெயின்ட் கொடுத்து, போலீஸாரைக் கொண்டு உடனே விசாரணை செய்து, நம்மை உள்ளே தள்ளிவிடுவார்கள். அப்படித்தான் சட்டம், வெள்ளைக்காரன் காலத்திலிருந்து இருந்து வருகிறது.

நம்முடைய பட்டா பூமியில் இருந்தாலும் ரயத்து பூமியிலிருந்தாலும் அந்த சந்தன மரத்தை வெட்டக் கூடாது. அப்படி இருக்கும் காலத்தில், காட்டிலே இருக்கக் கூடிய சந்தன மரத்தை —சந்தன மரத்தின் தேவை அதிகமாக இருக்கிறது. சந்தன சோப்பைத் தேய்த்துக் குளிப்பவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். இளைஞர்கள் எல்லாம், சந்தனாதி தைலம், சந்தனாதி அத்தர், அப்படி சந்தனத்தை உபயோகிப்பவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். அப்படி வளம் மிக்க சந்தன மரங்கள் காடுகளில் நிறைய இருக்கின்றன. அதைத் திருடிக்கொண்டு போய் ஏன் விற்பனை செய்கிறார்கள்? நமது நாட்டில் விற்றால் தெரியும் என்று எண்ணி, வெளி மாநிலங்களுக்குக் கொண்டு போய் விற்கிறார்கள். அதே மாதிரி, பல ஊர்களிலும் உள்ள காடுகளில் திருட்டு நிறைய நடக்கின்றன. திருடு போவதைத் தடுக்க முடியுமா? முடியாதா? ஏன் நம்மால் தடுக்க முடியவில்லை? இப்போது பேப்பரில் பார்த்தால், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர், தனித் தொகுதி உறுப்பினர் திரு. விஜயேந்திரய்யா அவர்கள், தர்மபுரி மாவட்டத்தில் ஹோசூருக்குப் பக்கத்தில் - வீரப்பன் கோஷ்டி, வீரப்பன் கோஷ்டி என்று சொல்கிறார்களே, வீரப்பன் என்றால் ஏன் சில பேருக்கு கோபம் வருகிறது? வீரப்பன் நம்முடைய மந்திரியாயிருந்தார். அவரைச் சொல்கிறேன் என்று கோபம் வந்தால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அவர் இல்லை. கொஞ்சம் நாளாக வீரப்பன் கோஷ்டி என்றவுடன் - ஒரு கோஷ்டி இருக்கிறதென்றால் ஒரு நல்ல வலுவான சக்தி இருக்க வேண்டும், பணம் இருக்க வேண்டும், ஆட்களைச் சேர்க்கக் கூடிய வலு இருக்க வேண்டும். அவன் கோஷ்டி திருடிக் கொண்டிருக்கிறது, கொண்டு போகிறான். இன்னும் அதைப் பிடிக்க முடியவில்லை. ஃபாரஸ்ட் அதிகாரிகளே

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1990 மார்ச் 31

என்ன சொல்கிறார்கள் என்றால், பெரிய ஃபாரஸ்டாக இருந்தால், சொற்ப அதிகாரிகளை நியமிக்கிறார்கள், 'ஃபாரஸ்டர்கள்', 'ஃபாரஸ்ட் ரேஞ்சர்கள்' என்று நியமிக்கிறார்கள். அவர்களால் என்ன பண்ண முடியும் என்கிறார்கள். அவர்களுடைய ஒரு பொறுப்பைப் பார்த்தால்—இன்னும் கேள்விப்படுகிற நேரத்தில், 'ஃபாரஸ்டர்' சம்பளத்தைப் பற்றிக் கேட்டால், உள்துறையிலே போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்களே, அவர்களைப் போல ஒரே மட்டத்திலுள்ள அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் சம்பளத்தைப் பார்த்தால் ஒன்றும் கட்டுப்படியாகாது. முந்தாநாள் அவர்களிடம் என்ன சம்பளம் என்று கேட்டேன். எங்கள் ஊரிலே சப்-இன்ஸ்பெக்டருக்கு இவ்வளவு சம்பளம், உங்களுக்கு என்ன என்று கேட்டபோது, ரொம்பக் கம்மியாக இருக்கிறது.

11-30 மணி

பணி நிலை என்னவென்றால், 24 மணி நேரமும் அவர்களுக்கு வேலை. காட்டிலே நுழைவது, போவது, கஷ்ட நஷ்டங்களை நேமித்தால் 24 மணி நேரமும் அவர்களுக்கு வேலையிருக்கிறது. அப்படிப்பட்ட வேலை உள்ளவர்களுக்கு என்ன சம்பளம் என்றால், சாதாரண இன்ஸ்பெக்டர், அவர்களுடைய பொறுப்பு, பேரல்லல் துறையிலே இருப்பதைப் பார்த்தால், இவர்கள் சம்பளம் ரொம்ப கம்மியாக இருக்கிறது. விலைவாசி ஏறும் காலத்தில், அவர்களுடைய சம்பளம், கிராஜுட்டி, படிகள்-ஆகியவற்றைக் கவனித்தால் ஒன்றுமே போதாது. அவர்களுக்கு பிரமோஷன் இருக்கிறதா என்றால் அதுவும் கிடையாது. என்ன காரணம் என்று தெரியவில்லை. காட்டிலே வேலை கிடையாதா, ஒரே பணியிலே இருக்க வேண்டுமா, படிப்பில்லையா, குவாலிபிகேஷன் இல்லையா, அல்லது சர்வீஸ் கமிஷன் நியமனத்திலே ஏதாவது விட்டுப் போச்சா, என்னவென்றே தெரியவில்லை.

அவர்களுக்கு பிரமோஷன் இல்லையாம். ஃபாரஸ்டர்களுக்குப் பிரமோஷன் கிடையாது, கீழே வேலை செய்பவர்களுக்கு பிரமோஷன் கிடையாது என்றால் எப்படி வேலை செய்வார்கள்? அதையே பார்த்து, நமக்கு என்ன ஐயா பண்ணுவது என்ற நோக்கமும் இருக்கலாம். அகில இந்திய ரீதியிலே ஒரு பக்கம் இருக்கட்டும். இனிமேலாவது நம்முடைய ஸ்டேட்டிலாவது அதைக் கவனித்து, முழு வயிற்றுக் கஞ்சி இல்லாவிட்டாலும், அரை, முக்கால் வயிற்றுக் கஞ்சி குடிக்கும்படியான அளவிலே, அவர்களும் நம்நாட்டு ஜனங்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் போல, மற்ற துறை அதிகாரிகளைப் போல, சிப்பந்திகளைப் போல வாழ, அவர்களுக்கு ஒரு வாய்ப்பு, சம்பளங்கள், படிகள், ஓய்வூதியங்கள் அது மாதிரி பிரமோஷன் தரவேண்டும். பிரமோஷன் இல்லையென்பதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை. ஏதாவது காரணம் இருக்கும். அமைச்சர் பதில்

சொல்வார். அப்போது கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாம் கவனித்து, அவர்களுடைய சலுகையைப் பார்த்து கவனிக்க வேண்டும்.

இன்றைக்கு அவர்களுக்கு (அமைச்சருக்கு) பிறந்தநாள் என்று சொன்னார்கள். முன்னாலேயே தெரிந்திருந்தால், ஸ்ரீரங்கத்திற்கு நேராக போன் பண்ணி வரவழைத்து இருப்பேன். அங்கே நேராகச் சொல்லி அந்த ரங்கநாதருடைய அனுக்கிரஹத்தையே கொண்டு வந்திருப்பேன். (குறுக்கீடு) இப்போதுதான் தெரிந்தது. (குறுக்கீடு) இனிமேல் கொண்டு வருவது என்றால் 9 மணி டைம் ஆகும். அது வந்திருக்கலாம். நான் கவனிக்கவில்லை. தெரியாமல் கூட வந்திருக்கலாம்.

காட்டிலாகாவைப் பற்றி இவ்வளவு தூரம் சொல்கிறோம். மழை பெய்தால்தான் காடு, காடு இருந்தால்தான் மழை என்று சொல்கிறோம். அதைப் பார்த்தோம், நாம் காடுகளிலே....

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய பிறந்தநாளுக்கு பெரியவர் தீட்சிதர் அவர்கள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார்கள். முன்கூட்டியே தெரிந்திருந்தால் ஸ்ரீரங்கத்திலிருந்து கொண்டு வந்திருப்பேன் என்கிறாரே, அந்த அரங்கநாதப் பெருமாளையே கொண்டு வந்திருப்பாரா, எப்படி அவருடைய அனுக்கிரஹத்தை இங்கே கொண்டு வருவார் என்று எங்களுக்குத் தெரியவில்லை. கொஞ்சம் விளக்குவாரா ?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : விக்ரஹ ஆராதனை என்னவென்றே தெரியவில்லை இவர்களுக்கு. விக்ரஹம் என்றால் ராமாயண காலத்திலே பிரதிஷ்டை பண்ணியது. அந்த ராமனையே தெய்வம் என்று கொண்டாடுகிறோம். ராமாயணத்தைக் கேட்டால், வாசித்தால், இடம் கொடுத்தால், கண்ணாலே பார்த்தால், அதைப் பார்த்தாலே புண்ணியம் என்று சொல்கிறோம். இந்துக்களுடைய இதிகாசப் புராணங்களிலே சொல்கிறது அந்த ராமராலே பூஜை பண்ணப்பட்டு, அம்மாமடத்திலே கொண்டு வந்து வைத்து—தொடக்கூட முடியவில்லை. யாராலாவது தொடமுடியுமா ? விக்ரஹம் எவ்வளவு பெரியது ! வந்து பாருங்கள். அங்கேயிருந்து இவ்வளவு அகலத்திற்கு, 20 அடி, 25 அடி சயனம் கொண்டிருக்கிறார் ரங்கநாதப் பெருமாள். பூஜை பண்ணப்பட்டு, அதனால் ஆராதனை பண்ணப்பட்டு, அந்தத் தெய்வத்தினுடைய அனுக்கிரஹம் எவ்வளவு என்று தெரியாது. வாயாலே சொன்னாலே போதும். இன்று வரை செய்த பாவம் போச்சு. (குறுக்கீடு)

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1990 மார்ச் 31

சினிமாதான் நித்தியம் பார்த்துக் கொண்டிருக்கிறோமே? அது வேண்டாம். செடிகளுக்குப் பாதுகாப்பு. வீட்டிலிருந்து எங்கே போனாலும் நான் பார்க்கிறேன். குழாயை நட்டு, நட்டு, ஆடு மாடுகளுக்குப் பாதுகாப்பு, மாடு உள்ளே வராதாம். பங்களாவிலிருந்து எந்தவிதமான ஆபீசுக்கு போனாலும் 10 குழாயைப் போட்டு, மாடு, ஆடு வராமல் இருக்கவேண்டும் என்கிறார்கள். நாம் அதைக் கண்டு பயப்படுகிறோம். ஆடு வளர்த்தால், அதை ஜாக்கிரதையாபகப் பாதுகாத்து, எங்கள் செடியைத் தின்னக்கூடாது என்று சொல்லவில்லை. ஒரு செடியினை வளர்க்கும்போது, அதனுடைய பலன், 10 வருடப் பலன் அளிப்பதற்காக வேலி அடைத்து சுத்தப்படுத்த வேண்டி இருக்கிறது. அதை அழிக்கக்கூடிய சக்தி என்னவென்று பார்த்து, அதை எப்படிக் கட்டுப்படுத்தவேண்டும் என்று பார்க்கவேண்டும். நாம் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் எல்லாவற்றையும் தொலைத்துப் போட்டுவிடுகிறது. சொத்து இருப்பது பெரியது அல்ல, பராமரிக்கவேண்டும். குழந்தை பெறுவது பெரிசு அல்ல, அதை பராமரிக்கவேண்டும்; அதைப்போல மரம் நடுவது பெரிசு அல்ல, அதை பராமரிக்கக்கூடிய சக்தி நம்மிடம் இருக்க வேண்டும். இப்போது நடும் மரம் அடுத்த வருடம் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை.

11-35 மணி

எத்தனையோவிதமான மரங்கள் ஸ்வீடன் நாட்டிலிருந்து வருகிறது, நடுகிறோம் என்றால் இன்றைக்கு தைரியமாக ஒன்று கிடைத்து இருக்கிறது. அதாவது ஒரு செடி வளர்க்கிறோம். அதை எங்கே நட்டாலும் ஆடு, மாடு வந்து மேய்வது இல்லை. அதற்கு தண்ணீர் கொஞ்சம் ப்ராபளம். யூக்ளிப்டஸ் மாதிரி ஒரு செடி நடுகிறோம். அந்த செடியை நட்டால் ஆடு, மாடுகள் கொஞ்சம் அதுவும் ஒரு வாய் கடித்து விடுகிறது, பிறகு அடுத்த வாய் தின்பதற்கு அது என்னமோ தெரியவில்லை, அதை சாப்பிடுவது இல்லை. அது தான் நமக்கு ஒரு சௌகரியமான ஒரு செடியாக இருக்கிறது. இப்போது நாட்டில் கிரவுண்டு வாட்டர் கீழே இறங்கிக்கொண்டே போகிறது, இன்றைக்கு இத்தனை அடி கீழே இறங்கியிருக்கிறது என்றால் அடுத்த நாள் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கிக் கொண்டே இருக்கிறது. லட்சக்கணக்கான பம்புசெட்கள் போட்டு நாம் இறைத்துக் கொண்டே இருக்கிறோம். டொமஸ்ட்டிக் பர்ப்பஸில் இருந்து, அக்ரிகல்ச்சர் பர்ப்பஸில் இருந்து, பெரிய இண்டஸ்ட்டிரியல் பர்ப்பஸ்க்கு எல்லாம் பம்புசெட் போட்டு இறைத்து விடுகிறோம். அப்படி வந்த பிறகு எப்படி தண்ணீர் கிடைக்கும்.

கபாலீஸ்வரர் கோவில் குளத்தில் நம்முடைய கலைஞர் அவர்கள் இருக்கும்போது வெட்டினார்கள். அவர்கள் கச்சத்தைக் கட்டிக்கொண்டு மண் எல்லாம் எடுத்து ஒரு காலத்தில்

1990 மார்ச் 31] [திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

வெளியே போட்டு இருக்கிறார்கள், நான் பார்த்தேன். இப்போது அங்கே போய் என்ன எடுப்பது? அங்கே எல்லோரும் கிரிக்கெட் விளையாடுகிறார்கள். கபாலிஸ்வரர் குளத்தில் இன்றைக்கு கிரிக்கெட் விளையாடுகிறார்கள். காரணம் அது சமுத்திரத்தின் பக்கத்தில் இருக்கிறது, கடல் ஓரத்தில் இருக்கிறது, ஆனால் தண்ணீர் இல்லை. எல்லாம் இறங்கிக்கொண்டு இருக்கிறது. லட்சக்கணக்கான பம்புசெட் வைத்து தண்ணீர் எடுத்துக்கொண்டே இருந்தால் தண்ணீர் எங்கே இருக்கும். நமக்கு ஏதாவது சாராயம், கிராயம் வந்தால் தான் தண்ணீர். வேறு தண்ணீர் நாட்டில் கிடைக்காது.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பல கோவில் குளங்களில் ஆண்டு முழுவதிலும் தண்ணீர் இருக்கக்கூடிய குளங்களில் ஒன்று தான் கபாலிஸ்வரர் கோவில் குளம், சிறந்த குளம். அங்கே கிரிக்கெட் விளையாட முடியுமானால் 'வாட்டர் கிரிக்கெட்' தண்ணீரில் விளையாடக்கூடிய கிரிக்கெட் ஏதாவது வந்து இருக்கிறதா?

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: தலைவர் அவர்களே, அதுவும் செய்யலாம்; அமைச்சர் சொல்லுவது போல் இனி மேல் எது நடந்தாலும் நடக்கலாம்; நாட்டில் எது நடக்கலாம், எது நடக்காது என்று சொல்ல முடியாது. எது நடந்தாலும் நாம் கண்ணால் பார்த்துக் கொண்டுதான் இருக்கப் போகிகிறோம், காதால் கேட்டுக் கொண்டுதான் இருக்கப் போகிறோம்.

அதைபோல் இப்போது காட்டு இலாக்கா பற்றி. அகில இந்திய ரீதியில் பார்த்தால் இத்தனை பர்செண்ட்தான் காடு இருக்கிறது. இத்தனை பர்செண்ட் இருக்கவேண்டும். (குறுக்கீடு) காடு தான் முக்கியம் நமக்கு. மழை வரவேண்டும் என்றால் காட்டை வளர்க்கவேண்டும். எப்படியாயினும் இந்த அமைச்சர் அவர்கள் இருக்கக்கூடிய ஒரு வேகத்தைப் பார்த்தால் எங்கே பார்த்தாலும் வனம் ஆகிவிடும் போல் இருக்கிறது. இனிமேல் எங்கே பார்த்தாலும் வனஸ்பதி ஓமம் பண்ணுவது போல், நின்ற இடம் எல்லாம் மரங்கள் ஆகிவிடும் போல் இருக்கிறது. மரங்கள் இருந்தால் தான் நாட்டில் மழை வரும். அப்போது தான் தண்ணீர் கொஞ்சம் இருக்கும். தர்மம் தான் நம்மை விட்டு போய் விட்டதே; தர்மம் என்ற வார்த்தையையே எடுத்து விட்டோம்; தர்மம் என்ற வார்த்தை எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை; ரொம்ப தூரத்திற்குப் போய் விட்டது.

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1990 மார்ச் 31

அது மாதிரி சினிமா. சினிமாவைப் பற்றி சொல்லவே முடியாது. எங்கே பார்த்தாலும் நான் கூட இவ்வளவு வயது ஆனாலும் கூட பார்க்கும்போது அப்படியே அளந்து பார்க்கலாம்; பொம்பளையைப் பார்க்கும்போது அளக்கிறான், அப்படியே அவள் சரீரம் எப்படி இருக்கிறது, அவளுடைய அங்கங்கள் எப்படி இருக்கிறது என்று 'இன்ச் பை இன்ச்' ஆக பையன்கள் அளக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, 'இன்ச் பை இன்ச்சாக' பையன்கள் அளக்கிறார்களா அல்லது இவர் அளக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே, மனித ஜென்மம் என்பது எல்லாம் ஒன்று தான். மனித ஜன்மம் என்பது இளசு, வாலிபம், வயோதிகம் என்பது எல்லாம் பார்வையில் சிருஷ்ட்டியில் ஏற்படக்கூடியது. சினிமாக்களில் நாம் முதலில் இதைக் கவனிக்கவேண்டும்; இப்படி ஏற்படக்கூடிய இந்த படங்கள் ஏராளமாக பெரிசு பெரிசாக 20, 25 அடி கட்டவுட் வைத்து விடுகிறார்கள். இப்படி வைக்கும்போது பையன்களுக்கு ஒன்றும் ஓடுவது இல்லை. எப்படி படிப்பு வரும், எப்படி வீட்டில் போய் சும்மா இருப்பான். ஆகவே அதையும் நாம் கொஞ்சம் கண்டிரோல் செய்யவேண்டும். சினிமாவைப் பார்ப்பது பற்றி ஒன்றும் இல்லை. இப்போது டி.வி. பார்த்து வீட்டு சும்மா இருக்க மாட்டேன் என்கிறான். திருடுவது எப்படி; எப்படி அஜிடேஷன் செய்யலாம்; மேல் நாடுகளில் குதிக்கிறான், தலைவர்களை தூக்குகிறான், குதிக்கிறான்; சுடுகிறான், இதை எல்லாம் பார்த்தவுடன் இங்கே அதை கற்றுக்கொண்டு சுடுவதை, திருடுவதை, கொள்ளை அடிப்பதை கற்பழிப்பதை செய்கிறான். இவைகள் எல்லாம் சினிமாவால்தான் ஏற்படுகிறது. இல்லை என்றால் யாருக்காவது சொல்லிக் கொடுக்கிறான். எல்லா காரியத்தையும் சினிமா பார்த்து கற்றுக்கொள்கிறான். சினிமாவைப் போய்ப் பார்க்கிறான், தடி எடுத்து அடிக்கிறான், அதை பார்த்துவிட்டு வந்து இவன் அடித்து மண்டையை பொளக்கிறான். ஆகவே சினிமா உலகத்தில் கூட ஒரு கட்டுப்பாடு வேண்டும். கட்டுப்பாடு இல்லை என்றால் நாடு எங்கெங்கேயோ போய் விடும். எப்படி எப்படியோ நடக்கிறது என்றால் அவர்களுடைய மன வளர்ச்சி நல்ல திடமான ஒரு நம்பிக்கை வைத்து இருக்கிறான். சாராயக்கடை வருகிறது என்றால் குடிக்கிறவன் தான் குடிப்பான்; எல்லோரும் குடிக்கப் போகிறீர்களா, குடிக்காதவன் என்றைக்கும் குடிக்க மாட்டான், குடிக்கிறவன் என்றைக்கும் குடிப்பான், சாராயக் கடை இருந்தாலும் சரி, கள்ளுக் கடை இருந்தாலும் சரி, குடிக்கிறவன் எப்படியும் குடித்து விடுவான். குடிக்காதவன் என்றைக்கும் குடிக்க மாட்டான். அந்த மாதிரி எந்தவிதமான தவறுகள் ஆனாலும் விளம்பரமாக இருந்தாலும் சரி, எங்கு இருந்தாலும் சரி கெட்டுப் போகிறவன் தான் கெட்டுப்

1990 மார்ச் 31] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

போவான், கெட்டுப் போகாதவன் என்றைக்கும் கெடாமல் நல்லவனாகத் தான் இருப்பான். ஆகவே அந்த கழகத்தை இன்னும் மேம்படுத்த நம்முடைய அமைச்சர் அவர்கள் நல்லபடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சுற்றுலா, இது எப்படி ஆகிவிட்டது? யாத்திரிகர்கள் ஸ்தலம் போய் இப்போது வந்து சுற்றுலா என்று வந்து விட்டது. முன்பு யாத்தீரிகர்கள் அங்கே போனார்கள், எங்கே போனார்கள், ஸ்ரீரங்கத்திற்குப் போகிறாயா, சபரிமலைக்கு போகிறாயா, குருவாயூருக்கு போகிறாயா அல்லது பழனிக்கு போகிறாயா என்று கேட்பார்கள். இது எல்லாம் போய் இப்போது சுற்றுலாவில் வந்து முடிந்து விட்டது. அங்கே போய் கன்னத்தில் போட்டுக்கொள்ளுவது இல்லை. இதைப் பார்த்தாயா, அதைப் பார்த்தாயா இப்படி இருக்கிறது அப்படி இருக்கிறது என்றும், மகாபலிபுரம் போகிறாயா; இங்கே ரங்கநாதர் கோவிலில் உள்ள அம்மா மண்டபத்தை கூட ஒரு சுற்றுலா மையமாக வைத்தால் நன்றாக இருக்கும். ஏராளமான ஜனங்கள் அங்கே வருகிறார்கள். ஒரு நாளைக்கு 50 பஸ்கள், 100 பஸ்கள் மூலம் வருகிறார்கள். ஸ்ரீரங்கத்திற்கு இப்படி வருகிறார்கள், இப்படி எல்லா இடத்திலும் வருகிறார்கள்; கணக்கு இல்லை. அங்கே எல்லாம் வருகிற பஸ்சும் வட நாட்டு பஸ், உத்திரப் பிரதேசத்திலிருந்து எல்லாம் வருகிறார்கள். நம் நாட்டிலே எத்தனை ஸ்டேட்ஸ் இருக்கிறதோ அத்தனை ஸ்டேட் பஸ்களும் வருகின்றன. அப்படி வருவதற்கு காரணம் என்னவென்றால் நம்முடைய ஸ்டேட்டிலே இருக்கின்ற கோபுரங்கள் மாதிரி வேறு எந்த நாட்டிலும் கிடையாது; இந்த மாதிரி கோயில்களே எந்த இடத்திலும் கிடையாது என்பதற்காக அவர்கள் வருகின்றார்கள்.

11-40 மணி

ஆயிரங்கால் மண்டபம் போன்று பல மண்டபங்கள் நம் நாட்டிலே இருக்கின்றன. இந்து ஆகம விதிப்படி கட்டப்பட்ட கோயில்கள் மற்ற மாநிலங்களிலே இல்லை. நானும் வட தேசங்களுக்கு எத்தனையோ முறை போய் வந்திருக்கிறேன்; நம் நாட்டிலுள்ள கோயில்களில் நூற்றில் ஒரு பங்கு கோயில் கூட அந்த மாநிலங்களில் கிடையாது. நம் நாட்டிற்கு வந்து 'பார்த்த பிறகு ஒவ்வொருவரும் முழிக்கிறார்கள்; இதையெல்லாம் எப்படி கட்டினார்கள் என்று. இப்போதுதான் வட தேசத்தில் ஒரு கோயில் கட்டுவதற்காக இங்கே இருக்கின்ற ஸ்தபதி போயிட்டு போயிட்டு வந்துகொண்டிருக்கிறார். இங்கே இருக்கிற ஜீயர் போய் அடிக்கல் நாட்டிவிட்டு வந்திருக்கிறார். இந்த மாதிரி கோயில்களையும் கோபுரங்களையும் கட்டுவதற்கு அங்கே இடங்கள் இல்லை. அந்தக் காலத்திலே கோயில்களைக் கட்டுவது என்றால் 80ஏக்கர், 90 ஏக்கர் 100 ஏக்கர்என்றுஇடத்தை

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1990 மார்ச் 31

ஒதுக்கி வைத்து பிரகாரங்களைக் கட்டினார்கள். மதுரை மீனாட்சி கோயில் இருக்கிறது, சீரங்கம் இருக்கிறது, திருவானைக்காவல் கோயில் இருக்கிறது; திருவண்ணாமலை கோயில் இருக்கிறது; இந்த மாதிரி கோயில்கள், ஆயிரங்கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், வசந்த மண்டபம் போன்றவைகளெல்லாம் வருகின்றவர்களைக் கவருகின்ற மாதிரி அந்தக் காலத்திலே கட்டினார்கள். எமப்பயல்கள். வெள்ளைக்காரனெல்லாம் அந்தக் கோயில்களை வந்து பார்த்துவிட்டு முழிக்கிறான்.

எத்தனையோ போட்டோக்களை எடுக்கிறார்கள். காரணம் என்னவென்றால் மேலை நாடுகளிலே இந்த மாதிரி இல்லை. ஆகையால், இவைகள் சுற்றுலா யாத்திரிகர்கள் ஸ்தலமாக இருப்பதால், அந்த ஸ்தலங்களுக்குச் சென்று பார்க்கும்போது அங்கே தங்குவதற்கு இடவசதி இல்லை. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இருக்கிறது. தமிழ்நாடு ஓட்டல் என்று நடத்துகிறார்கள். மற்ற உடுப்பி ஓட்டல்களில் கும்பல் எக்கச்சக்கமாக இருக்கிறது. தமிழ்நாடு ஓட்டலிலே எவ்வளவு குறைவாக இருக்கவேண்டுமோ அவ்வளவு குறைவாக இருக்கிறது. காரணம் என்னவென்றால் விலைவாசி; அங்கேயுள்ள ஆகாரத்தினுடைய தரம் இவைகள் தான். இவைகளெல்லாம் பார்க்கும்போது அங்கே கூட்டம் அவ்வளவாக வருவதில்லை. வழிகளிலே எவ்வளவோ ஓட்டல்கள் இருக்கின்றன. இப்படி இருந்தால் எப்படி முன்னேறுவது? நாம் அதற்கு ஏதாவது மானியம் கொடுக்க வேண்டும். எப்படி கோ-ஆப்பரேட்டிவ் சிஸ்டத்திற்கு மானியம் கொடுத்து அபிவிருத்தி பண்ண முயற்சிக்கிறோமோ அவ்வாறு மானியம் கொடுக்கவேண்டும். நம்முடைய வரிப் பணத்திலே ஏதாவது மானியம் கொடுத்து அவைகளை அபிவிருத்தி செய்வதற்கு வழி பார்க்க வேண்டும். அந்த ஓட்டல், தானாக, சோலோவாக அபிவிருத்தி அடைவதற்கு சந்தர்ப்பம் இல்லையென்பதை நினைத்து நான் வருத்தப்படுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய உழைப்பால், இனிமேல் இந்த சுற்றுலா ஸ்தலங்களையெல்லாம் வளர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு சந்தர்ப்பம் கொடுத்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன், வணக்கம்.

*திரு. பி. காளியப்பன் : மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, 1990–91 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் கீழ் வனத்துறை, செய்தி, சுற்றுலாத் துறை கோரிக்கை மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 1990–91 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்த தலைவர் கலைஞர் அவர்களுக்கு எனது பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறேன். எனது தொகுதியில் 21கோடி ரூபாய் செலவில் இடைக்கோட்டை,

1990 மார்ச் 31] [திரு. பி. காளியப்பன்]

நங்காஞ்சி அணைத் திட்டத்தை இந்த ஆண்டில் அறிவித்தமைக்கு நானும் எனது தொகுதியைச் சேர்ந்த விவசாயப் பெருமக்களும், அரவக்குறிச்சி தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரும் அந்தத் தொகுதி விவசாயப் பெருமக்களும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இது குறித்து பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1990-91 ஆம் ஆண்டில் ஏழையெளிய மக்களுக்கும், பிற்பட்ட நடுத்தர, மலைவாழ் மக்களுக்காகவும், விவசாயிகளுக்காகவும் வணிகப் பெருமக்களுக்காகவும், குறிப்பாக மாணவ மாணவிகளுக்காகவும் நல்ல பல திட்டங்களை அறிவித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்தைய அரசு, வனவளத்தையெல்லாம் அழித்து, காடுகளை அழித்து வறட்சியை உருவாக்கினார்கள். தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் மேற்கு தொடர்ச்சி மலையில் 2,500 ஹெக்டேர் நிலத்திலே வானூர்தி மூலம் விதைகளைத் தூவி வனவளத்தை பெருக்கியுள்ளார்கள். வனவளத்தை அழித்த அரக்கர்களை தடுத்து வனத்துறை காக்கப்பட்டு, வனவளம் பெருக்கப்பட்டு உள்ளது. வனத்துறையில் மரங்களை வெட்டுபவர்களையும் அதற்குத் துணை போகின்றவர்களையும் பிடித்து கொலை குற்றத்திற்குச் சமமான தண்டனை விதித்து, வன வளத்தை காப்பாற்ற வேண்டுமாய் தலைவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

முந்தைய நமது அரசு ஆட்சிக் காலத்தில் பரப்பலாறு அணைத் திட்டத்தை ஏற்படுத்தி இப்போது அதைச் சுற்றுலா மையமாக அறிவித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தாய் மீது சத்தியம் செய்து, தமிழ்நாட்டில் மது பானங்களைக் கொண்டு வர மாட்டோம் என சொன்னவர்களெல்லாம் தமிழகத்தின் மூலை முடுக்குகளிளெல்லாம் மது பானத்தை பெருக்கெடுத்து ஓடும்படிச் செய்தார்கள். அவர்களைச் சார்ந்தவர்களே கள்ளச் சாராயத்தையும் உற்பத்தி செய்து விற்ற நிலையைப் பார்த்தோம். தனியார்கள் அடைந்த லாபத்தைத் தடுத்து, அரசு கருவூலத்திற்கு வருமானத்தைப் பெருக்குகின்ற வகையில் இன்றைய தினம் மலிவு விலை மதுவை தயாரித்து, ஏலத்தின் மூலம் கடைகளை விட இருக்கிறார்கள். கட்சிக்காரர்டுகள் உள்ளவர்களுக்குத்தான் கடை என்ற முறையை வைத்து கட்சிக்காரர்களை கொள்ளை அடிக்க வைத்தார்கள் எல்லாம் இன்று ஒன்றும் தெரியாத பாப்பாக்கள் போல் பேசுவது விந்தையாக இருக்கிறது.

11-45 மணி

எனது தொகுதி வறண்ட பகுதியாக இருப்பதால் நல்லதங்காள் ஓடைத் திட்டத்தை ஆய்விற்கு எடுத்து வருகிற நிதியாண்டில் செயல்படுத்த அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்

டுக் கொள்கிறேன். மழையை நம்பி வாழ்கிற எனது தொகுதி மக்களுக்கு வேலை கிடைக்கும் வகையில், கூட்டுறவு நூற்பாலை ஒன்றை அங்கே அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். எனது தொகுதியில் தக்காளி அதிகம் விளைகிறது. அதற்கு அதிக விலை கொடுக்க நடவடிக்கை எடுக்கும் வகையில், தக்காளி பவுடர் தொழிற்சாலையை அங்கே அமைக்க வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஒட்டன் சத் திரம் காய்கறி மார்க்கெட் மிகவும் நெருக்கடியான இடத்தில் அமைந்திருக்கிறது. போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கிறது. அந்த இடத்தில் 70 பேர் சொந்தமாக கடைகள் கட்டியிருக் கிறார்கள். அவர்கள் சௌகர்யத்திற்கு அதிகவிலை கொடுத்து இப்பொழுது உள்ள இடத்தை வாங்காமல் அதிக மான பரப்பளவு கொண்ட இடத்தை குறைந்த விலைக்கு வாங்கி காய்கறி மார்க்கெட்டுக்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று கூறி வாடிக் கிடக்கும் பயிர்களுக்கு மழை பெய்தால் எவ்வளவு செழிப்பாக இருக்குமோ அதே போல தமிழ்நாட்டு மக்களுக்கு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது என்பதைக் கூறி, எனக்கு இந்த வாய்ப்பை அளித்த தங்களுக்கு நன்றி கூறி, அமைகின்றேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டு வளத்துறை, செய்தித் துறை மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களை வெளியிடு வதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்காக மகிழ்ச்சியடைகிறேன்.

காடுகள் இன்றல்ல, நேற்றல்ல, சுதந்திரம் அடைந்து 30, 40 ஆண்டுகளாகவே வளர்க்கப்படாமல் வெட்டப்பட்டு, பல்வேறு ஆட்சியாளர்களின் தலைமையில் அரசுகள் இருக்கும் போது, காடுகளை வெட்டுகிற காரணத்தால், இன்றைக்கு மழை யில்லாமல், அல்லது மழைக் காலங்களில் மழை பெய்யக் கூடிய வாய்ப்பு இல்லாமல், வெயில் காலத்தில் மழை பெய்யக் கூடிய ஒரு நிலை இன்றைக்கு தமிழகத்தில் உருவாகியிருக்கிறது. பொதுவாக காடுகளை வெட்டுவதற்கு அனுமதி பெறக் கூடிய வர்கள், அரசாங்கத்திடமிருந்து 10 ஏக்கர் நிலத்தில் காடுகளை வெட்டுவதற்கு முதலில் அனுமதியை வாங்குவார்கள். அந்த பத்து ஏக்கர் நிலத்தில் முதலில் காடுகளை வெட்டாமல், எங்கெங்கே எல்லாம் மரங்கள் இருக்கிறதோ அவைகளை வெட்டி வெளியில் வரும்போது அனுமதி வாங்கியிருக்கிற இடத்திலிருந்து தான் வெட்டிக் கொண்டு வருகிறேன் என்று சொல்லி, காடுகளையெல்லாம் காலி செய்து விட்டார்கள் என்பதை நாம் ஒத்துக்கொண்டு ஆக வேண்டும்.

இந்தக் காடுகளை பாதுகாக்க பல்வேறு அரசுகள், 1947 ஆம் ஆண்டிலிருந்தே தவறிவிட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். காடுகளைப் பாதுகாப்பதற்கு சில இடங்களில்

1990 மார்ச் 31] [திரு. பி. எச். பாண்டியன்]

புரொக்டட் ஏரியா, இங்கே யாரும் அத்து மீறி நுழையக் கூடாது. பாதுகாக்கப்பட்ட இடம், மீறிச் சென்றால் சுட்டு விடுவார்கள் என்று 1947-ல் இருந்தே ஒருவேளை நிலைமையை உருவாக்கியிருப்பார்களேயானால் இன்றைக்கு காடுகள் பாதுகாக்கப்பட்டிருக்கும்.

ஆனால், காடுகளை வெட்டியவர்களை நாம் எளிதாக அடையாளம் காண முடியும். பெரிய பெரிய கட்டிடங்களை, வானளாவிய கட்டிடங்களை, தேக்கோடு, சந்தனத்தோடு கட்டி, இன்றைக்கு அவைகளையெல்லாம் ஆங்காங்கே அடையாளச் சின்னங்களாக வைத்திருக்கிறார்கள். அவைகளுக்கு சாட்சி வேண்டாம். இன்றைக்குக் காடுகளை வெட்டியவர்களைத் தேடிப் போய் பார்க்க வேண்டாம். அவர்கள் கட்டிய கட்டிடங்களை எப்படி நிர்மானித்திருக்கிறார்கள் என்பதை நேரடியாகவே இன்றைக்கு அதிகாரிகள், அதிகாரத்தோடு போனால் கண்டு பிடித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு மாவட்டத்திலும், தமிழகம் முழுவதும், இதே நிலைதான் இருந்திருக்கும் என்பதை என்னால் உணர முடிகிறது. ஆகவே 1947-லிருந்து யார் யார் மரங்களை வெட்டுவதற்கு அரசாங்கத்திடம் அனுமதி வாங்கினார்கள் என்ற ஒரு லிஸ்டையே தயார் செய்யுங்கள். 1947 லிருந்து யார் யார் தமிழ்நாட்டில் காடுகளை வெட்டுவதற்கு அனுமதியைப் பெற்றார்கள், அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை நம்முடைய தமிழக அரசின் திரைப் படத்துறை மூலமாக எடுத்து, நாட்டுக்கே காட்டுங்கள்.

11-50 மணி

காடுகளை வெட்டியவர்கள்தான் பெரிய, பெரிய பணக்காரர்களாக ஆகியிருப்பார்கள். அவர்களுடைய பெயர்ப் பட்டியலை 1947-லிருந்து தயாரிக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன். ஒரு சாதாரண மனிதன் பல இடங்களில் காடுகளை வெட்டி எந்த அளவிற்கு பொருளாதாரத்தில் உயர்ந்து இருக்கிறார் என்பதை அந்தந்த ஊர் மக்களுக்கு நாம் அடையாளம் காட்ட வேண்டிய தேவையில்லை. அவர்களுக்குத் தெரியும். ஆனால் அப்படிப்பட்டவர்கள் மீது சட்டம் பாய வேண்டும். கிரிமினல் குற்றங்களுக்கு லிமிட்டேஷன் கிடையாது. இத்தனை ஆண்டுகளுக்குள் வழக்குப் போட வேண்டும் என்று சட்டத்தில் கிடையாது. கிரிமினல் குற்றம் என்றால் வாழ்நாள் முழுவதும் அது குற்றம்தான். சிவில் வழக்குகளைத் தொடருவதில் வேண்டுமானால் மூன்றாண்டு, 12 ஆண்டு என்று கால வரையறை இருக்கிறது. எனவே காடுகளை அழித்த துரோகிகளை, தேச விரோதிகளை எல்லாம் கணக்கில் எடுத்து மக்களுக்குக் காட்டுங்கள். அரசியலிலிருந்து யாராவது இதைச் செய்திருப்பார்களேயானால் நம்முடைய இந்திய அரசியல் சட்டத்தில் என்ன வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்றால் வாக்காளர் பட்டிய

விலிருந்து அவருடைய பெயரை நீக்க வேண்டும். அதாவது வாக்காளர் பட்டியலில் அவருடைய பெயர் இருக்கக் கூடாது என்றுதான் இந்திய அரசியல் சட்டம் சொல்கிறது.

அவர்களுடைய வாக்குரிமையைப் பறித்து எறியுங்கள். அப்படிப்பட்டவர்கள், பொதுச் சொத்தைச் சாப்பிட்டவர்கள் பொது மக்களுக்குச் சேவை செய்ய முடியாது: சேவை செய்யவும் கூடாது. பொது மக்களுக்காகப் பணியாற்றக்கூடியவர்கள் பொது நோக்கோடு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதை இங்கே நான் சொன்னேன். ஆகவே 1947-லேயிருந்து காடுகளை வெட்டுவதற்கு அனுமதி பெற்றவர்களின் பெயர்ப் பட்டியலை இந்த அவையிலே படிக்க வேண்டும். செய்தித் துறையின் மூலமாக ஒவ்வொரு பத்திரிகையிலும் ஒரு பக்க விளம்பரம் போட்டு பெயர்ப் பட்டியலை வெளியிட்டு நாட்டு மக்களுக்குக் காட்ட வேண்டும். அப்போதுதான் இனிமேல் யாரும் அவ்வாறு வேறு துறையில் தவறு செய்ய மாட்டார்கள். இங்கே தவறு செய்ய இனிமேல் வாய்ப்பே கிடையாது. வேண்டுமென்றால் மாடுகளை விட்டு மேய்க்கலாம். அந்த அளவுக்குப் புல்தான் அங்கே இருந்து கொண்டிருக்கின்றது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. ஆகவே இந்த இயற்கைச் செல்வத்தை அழித்தவர்களை அடையாளம் காட்ட வேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டுகோள் ஆகும். அவர்களுடைய பொருளாதார நிலை குறித்தும் அதாவது சாதாரண மனிதனாக இருந்து இவ்வளவு காடுகளை வெட்டி தென்காசி, அம்பாசமுத்திரம் போன்ற பகுதிகளில் மற்றும் இன்னும் தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு பகுதிகளில் இருப்பவர்கள் குறித்து புதிதாக வந்திருக்கக் கூடிய சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து செய்திகளைக் கேட்டுப் பெற்று அரசாங்கம் செயல்பட வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் நிச்சயமாக இதில் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

ஒரு முறை குற்றாலத்தில் சாரல் விழா நடைபெறும்போது இன்றைக்குப் பேசிய இதே கருத்தை அன்றைக்கும் நான் சொன்னேன். நான் பேசினேன். தினகரன் பத்திரிகையில் முதல் பக்கத்தில் பெரிய செய்தியாக அதனை அன்றைக்கே வெளியிட்டு இருந்தார்கள். அதாவது நான் சபாநாயகராக இருந்த போது. அதையும ஒப்பிட்டுப் பார்த்து, இன்றைக்குப் பேசிய பேச்சையும் வைத்து உடனே நடவடிக்கை எடுங்கள். அவர்களைக் குண்டர்கள் சட்டத்திலும் அடைக்கலாம். வெளியிலே நடமாட விடாமல் சட்டத்தை வைத்து மடக்கிப் பிடியுங்கள் என்று நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். ஒரே ஒரு நபர் அரசாங்கத்திற்கு சவால்விடுவது போல் இத்தனை ஆண்டுக் காலம் காடுகளில் மரங்ளை வெட்டி அதன் காரணமாக நம்முடைய போலீசார் அவர்களைத் துரத்திச் சென்று கொண்டு இருக்கிறார்கள். ஏன்

1990 மார்ச் 31] [திரு. பி. எச். பாண்டியன்]

அந்த நபர் மீது, 'எலிமினேஷன் ப்ராஸஸ்' என்பதைப் பயன் படுத்தி நடவடிக்கை எடுக்கக் கூடாது? எலிமினேஷன் ப்ராஸஸ் என்றால் என்ன என்பது அவர்களுக்குத் தெரியும் என்று நினைக் கிறேன். அதையெல்லாம் வெளியே சொல்ல மாட்டார்கள். அவர்களே சுட்டு வீழ்த்தி விடுவார்கள். அதுதான் எலிமினேஷன் ப்ராஸஸ். இதற்கெல்லாம் ''ட்யூ ப்ராஸஸ் ஆப் லா'' என்று பார்க்கக் கூடாது. அதாவது திருடனுக்கு சட்டப் பாதுகாப்பு கூடாது. ஒரு பெரிய திருடன் என்ற முடிவுக்கு வந்தால் இந்த எலிமினேஷன் ப்ராஸஸ் என்பதைச் செய்திருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணமாகும்.

அடுத்து நம்முடைய செய்தித் துறை. அதில் ஒரு செய்தி யைப் படித்தேன். சென்ற ஆண்டு நம்முடைய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் பத்திரிகை நண்பர்களுக்கு 5 ஏக்கர் நிலத்தை ஒதுக்கி இருக்கிறோம் என்ற செய்தியைச் சொன்னார் கள். இன்றைக்கு இதிலே சொல்லியிருக்கிறீர்கள். விலை என்ன? ஒரு கிரவுண்ட் ஒரு இலட்சம். பத்திரிகை நடத்தக் கூடிய பெரிய முதலாளிகள் வேண்டுமானால் ஒரு இலட்சம் ரூபாய் செலுத்தமுடியும் ஒரு கிரவுண்டுக்கு. ஆனால், சாதா ரணமாக பத்திரிகை ரிப்போர்ட்டர்கள் ஒரு இலட் சம் ரூபாய் செலவழித்து வாங்க முடியாது. எப்படி பெரிய பெரிய பணக்காரர்களுக்கெல்லாம் தாட்சண்யம் காட்டி அவர் களுக்கு நூறு ஆண்டுக்காலம், 50 ஆண்டுக்காலம் என்று கூட லீஸ் போட்டுக் கொடுக்கிறோமோ அது போல ஒரு 'பெர்பெக் ஷூவல் சேல்' என்று சொல்வது போல இவர்களுக்குச் சென்னை யிலே ஒரு முக்கியமான இடத்தில் 5 ஏக்கர் நிலத்தை ஒதுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

11-55 மணி.

இந்த விலையில் கொடுக்க முடியாது, இயலாது என்ற கருத் துக்கு வருவீர்களேயானால் அண்ணா நகரில் அதற்கு மேலே முகப்பேர் தாண்டிய பிறகு 25 ஏக்கர், 50 ஏக்கர் அன்அப்ரூவ்ட் ஆக இருக்கிறது. அங்கே 5 ஏக்கர் எடுத்துத் தருகிறேன். நீங் கள் அவர்களுக்கு வழங்குங்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் அன்அப்ரூவ்ட் ஆக நிலத்தை வாங்கக்கூடியவர்கள் அரசாங்கத்தின் அனுமதி வாங்காமல் கட்டக்கூடிய காலக் கட் டாயம் சட்டத்தை மதிக்காத தன்மை இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, பத்திரிகை முதலாளிகளுக்காக நான் பேசவில்லை, பத்திரிகை நண்பர்களுக்காகச் சொல்கிறேன். ரிப்போர்ட்டர்களுக்காக நீங்கள் அந்த 5 ஏக்கர் நிலம் வேண்டும், அதாவது ஒரு இடத்தில் அந்த 5 ஏக்கர் வேண்டுமென்று சொன்னால் முதலில் அண்ணா நகருக்கு மேற்கே இருக்கக்கூடிய முகப்பேர் பகுதியை நான் காட்டுகிறேன். இல்லை, அந்த இடம்

வேண்டாம் என்று சொன்னால், இன்னும் பூந்தமல்லி வரை எங்கெங்கே நிலங்கள் இருக்கின்றன என்று எனக்குத் தெரிகிறது. காரணம் நான் சபாநாயகராக இருக்கும்போது தமிழ்நாட்டில் முழுவதும் எங்கெங்கே புறம்போக்கு நிலம் இருக்கிறது என்பதைச் செயலகத்தின் மூலமாக எழுதிக் கேட்டு வாங்கி அந்த செயலகத்தில் இருக்கிறது. தெரிந்துகொள்ளுங்கள். எங்கே வேண்டுமானாலும் அவர்களுக்கு நிலத்தை வழங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, ஒரு இலட்சம் ரூபாய் விலைக்குக் கொடுக்காமல், ஒரு 10 ஆயிரம் ரூபாய்க்கு கன்செஸன் ரேட்டில் போட்டுக் கொடுங்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சினிமாத்துறை. சென்ற முறை பேசும்போது சினிமா படங்களுக்கு மானியம் கொடுப்பதை நான் எதிர்த்துப் பேசினேன். விளைவு என்ன தெரியுமா? வெளியிலே இருக்கக்கூடிய விநியோகஸ்தர்கள் எல்லாம் அவர்களுடைய கூட்டத்தில் எனக்குக் கண்டனம் தெரிவித்தார்கள். எதற்கு? 61 இலட்சம் ரூபாயை அவர்களுக்கு பரிசாகக் கொடுக்கக்கூடாது என்று பேசியதற்கு. எனக்குக் கொடுங்கள் என்று கேட்கவில்லை. அந்தப் படத்தை எடுக்கக்கூடியவர்கள் அவர்களுடைய பணத்தைப் போட்டு படம் எடுக்க வேண்டும். பணம் இல்லாதவன் படம் எடுக்கக்கூடாது. பணம் இல்லாதவனுக்கு எதற்கு அந்த வேலை? வேண்டுமானால் படத்தை தியேட்டரில் பார்த்துவிட்டுப் போகட்டும் அந்த நிலையில் இன்றைக்கு மாறுதல் இல்லை. அந்தப் பரிசுத்தொகை, மானியத் தொகை, இந்த ஏழையெளிய நாட்டில், இந்த பற்றாக்குறை பட்ஜெட்டை சமர்ப்பிக்கும் போது, இதை நீங்கள் கொடுக்க வேண்டாம் என்றுதான் சொல்கிறேன். ஆனால் நான் பேசிய இரண்டாவது நாளிலேயே நீங்கள் விழா வைத்துக் கோட்டையிலேயே கொடுத்துவிட்டீர்கள். இனிமேல் அதுமாதிரி பேசி இலாபம் இல்லை, பலன் இல்லை என்பதை உணர்கிறேன். இருந்தாலும் அந்த நிலையிலிருந்து மாற முடியாது. 61 இலட்சம் ரூபாய். ஒரு சாதாரண ஏழையெளிய மனிதனுக்கு இதுபோல் ஊக்கம் கிடையாது.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் பணம் தருவது ஏதோ தனிப்பட்டவர்களை ஊக்குவிப்பதற்காக அல்ல. சினிமாத்துறையை இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அது ஒரு இண்டஸ்ட்ரீஸ். திரை உலகம் என்று பெயர். அந்த உலகத்திலே பலபேர்களை வாழ வைப்பதற்காகத்தான் இப்படிப்பட்ட ஊக்கப்படுத்துகிற வகையில் இதை அரசு செய்கிறதே தவிர வேறல்ல.

திரு. ராம. நாராயணன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கிறேன். பிச்சை எடுக்குமாம் பெருமாள், அதைத் தட்டிப் பறிக்குமாம் அனுமார் என்பார்கள். தங்கத் தலைவர், கலைஞர் அவர்கள் ஏதோ இரக்கப்பட்டு மக்களுக்காக, மக்கள் களிப்படைவதற்காக உழைக்கின்ற திரைப்படத் துறையினருக்கு ஏதோ உதவித் தொகை என்று தருகிறார்கள். சென்ற ஆண்டு தடுத்ததைப் போல, இந்த ஆண்டும் தடுப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் முயல்கின்றாரே இது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. லெ. சுப்பிரமணியன்) : இதிலே "Point of order" கேட்பதற்கு ஒன்றுமில்லை. உறுப்பினர் பதில் சொல்வார்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவை மாற்று தலைவர் அவர்களே, இதை இந்த ஆண்டு மட்டுமல்ல, என்னுடைய வாழ்நாள் முழுவதும் எதிர்த்துக் கொண்டேதான் இருப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், இந்தப் பணம் ஏழையெளிய படத் தயாரிப்பாளர்களுக்குப் போகவில்லை. தொழிலாளர்களுக்கும் போகவில்லை. இந்தப் படத்தை எடுப்பதற்கு வரக்கூடியவர்கள் படத்தின் தன்மையை வைத்து இன்றைக்கு பரிசு போல இந்த மானியத் தொகையைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டிற்கு அது வேண்டாம். ஏழையெளிய மக்கள் களிப்படைவதற்கு படத்தை எடுப்பார்களானால், தரித்திரம் பிடித்த மக்கள் தான் இன்றைக்குப் படத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. அந்த கஷ்டப்படுகிற மக்களுக்கு இந்த அவையிலே பாதுகாப்பு வேண்டும். இந்த அவையில் பேசுகிற பேச்சா இது? இன்று காலையில் பார்க்கலையா? மக்கள் பிரச்சினைக்கா இன்று வெளிநடப்பு நடைபெற்றது? மக்கள் பிரச்சினைக்கா இன்று தகராறு ஏற்பட்டது? தனிப்பட்ட பிரச்சினைக்குத்தான், தனிப்பட்டவர்கள் தனிப்பட்ட முறையில் பயன்படத்தான் இந்தக் காலத்தில் இம்மாதிரி நடைபெறுவது. இந்தக் காலத்தில் மக்களுக்காக பேச எல்லோரும் முன்வர வேண்டாமா? இன்றைக்கு நடைபெற்ற நிகழ்ச்சி என்ன? அன்றைக்கு முதலமைச்சரிடத்தில் பொது மக்களுடைய பிரச்சினைக்காக மனுக் கொடுக்கும்போது என்ன பேசினார்கள்? முதலமைச்சரை மதிக்காமல் நான் தூக்கிப் போட்டேன் என்றார்கள். இன்றைக்கு, நேற்றைக்கு இங்கே நடைபெற்றது என்ன? இதுதான் அரசியல். இன்றைக்குக் காலையில் நான் சொல்லலாம் என்று இருந்தேன், ஒரு சட்டப் பிரச்சினையை. பிரச்சினை திசை திரும்பி போகக் கூடாது என்பதற்காக அமர்ந்திருந்தேன்.

12-00 மணி.

இந்தியாவின் 42 ஆவது சட்டக் கமிஷனில் 124ஆவது பிரிவில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தை இறக்க யாராவது முயன்றால் அது பெரிய குற்றம். இது மத்திய அரசு கொண்டு வந்த சட்ட திருத்தம்தான். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சியை இறக்குவதற்கு வெளியே போராட்டம் நடத்தினால் இ.பி.கோ. 124படி குற்றம், செடிசன் என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி போன்றவர்களுக்குத் தெரியும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற வழக்குகளைப் போட்டார்கள். இன்றைக்கு நீங்கள் போட பயப்படுகிறீர்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த ஆட்சியை யார் இறக்க முடியும்? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் வெளியே இருக்கிற மக்களுக்காக சட்டமன்றத்தில் பேச வேண்டும். எல்லோரும் இங்கே வர முடியாது என்பதால்தான் 234 பேர்களுக்கு மட்டும் இடம் அளிக்கிறோம். வெளியே, சாலையில் பேசுவதை இங்கே பேசக் கூடாது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதால் நானும் வேகத்தில் பேசிவிட்டேன். யாருடைய மனதையும் புண்படுத்துவதற்காக நான் பேசவில்லை. எங்கேயோ பேச்சு கொஞ்சம் திசை திரும்பியதற்காகச் சொல்கிறேன்.

பரிசைப் பற்றிச் சொல்லும்போது, கல்கண்டு பத்திரிகை ஒரு தலையங்கத்தைச் சமீபத்தில் எழுதியது. என்னை எச்சரித்து எழுதினார்கள். நான் எதிர்ப்பதாலோ ஆதரிப்பதாலோ எனக்கு பரிசை முதலமைச்சர் தரப்போவதில்லை. எனக்குப் புரியாத, வெறுக்கக்கூடிய இடம் இத்துறை. ஆக, அந்தப் பத்திரிகையில் எழுதிய தலையங்கத்தில், அன்றைக்கு நான் பேசும்போது ''துப்பாக்கி தூக்கினால்தான் இந்த நாட்டைக் காப்பாற்ற முடியும்'' என்று நான் பேசியதை வன்முறையைத் தூண்டுகிறேன் என்று எழுதினார்கள். ஆனால், அவர்களுடைய அட்டைப்படத்தில் உள்ள படம் காமத்தைத் தூண்டவில்லையா? பெண்மையை பழிக்கலையா? தமிழ் சமுதாயத்தைக் கேவலப் படுத்தலையா? இப்படி எல்லாம் செய்து வியாபாரம் செய்யலையா? இன்றைக்கு அரசியலில் வியாபாரம் செய்கிற அரசியல்வாதிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் என்னென்ன நிலையில் தங்களை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது மாண்புமிகு முதலமைச்சருக்குத் தெரியும். இப்படி வியாபாரம் செய்பவர்களுக்கு எச்சரிக்கை இல்லையா? அரசியலில் வியாபாரம் செய்பவர்களுக்கு எச்சரிக்கை இல்லையா என்றுதான் நான் கேட்டேன்.

இன்றைக்கு நான் இங்கே தெரிவித்துக்கொள்வதெல்லாம் சாதாரண மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவைக்கு நாம் வந்திருக்கிறோம். சாதாரண மக்களுடைய வாக்குகளைப்

1990 மார்ச் 31] [திரு. பி. எச். பாண்டியன்]

பெற்று இங்கே வந்திருக்கிறோம். சாப்பிட சாப்பாடு இல்லாதவர்கள், இருக்க வீடு இல்லாதவர்கள், வேலையில்லாதவர்கள், இப்படிப்பட்ட சாதாரண மக்களுடைய வாக்குகளைப் பெற்றுத் தான் இங்கே வந்திருக்கிறோம். அப்படியிருக்கும்போது ஒரு சில சமுதாயத்திலிருக்கிற உயர்குடி மக்களுக்காக இந்த அவையில் நிதியை வாரி கொடுத்துக்கொண்டிருப்பது சரியா ? இப்படிச் செய்வது, தமிழ் சமுதாயத்திற்கு துரோகத்தைச் செய்துகொண்டு இருக்கிறோம் என்றுதான் பொருள். இந்தத் துறையில் இருப்பவர்கள் அவரவர்களுடைய சொந்தப் பணத்தை வைத்துச் செய்யட்டும்.

ஓர் உதாரணத்தைச் சொல்கிறேன். எனக்கு டெல்லி உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்ற வேண்டுமென்ற ஆசை. அங்கேயோ, 25 ஆயிரம் ரூபாய் கொடுத்தால்தான் வாடகைக்கு வீடு கிடைக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என் தொழிலை, என்னைப் போன்றவர்களை எல்லாம் ஊக்குவிக்கக் கூடியவர்கள்தான். அதற்காக வேண்டி, நம்முடைய டெல்லியில் இருக்கிற வீட்டுவசதி அமைச்சரிடம் சொல்லி எனக்கு 3 இலட்சம் ரூபாய்க்கு வீடு கொடுக்க முடியுமா ? நான் தான் எனக்காக உழைக்க வேண்டும். என் பணத்தை வைத்துத் தான் நான் முன்னேற வேண்டும், மாற்று வழியில் முன்னேற முயலக் கூடாது. இது சாதாரண மக்களுக்குப் போய் சேர வேண்டிய பணம். நமக்கு வாக்களித்த சாதாரண மக்களுக்குப் போய்ச் சேர வேண்டிய பணம். ஆகவே, இந்தச் செய்தித் துறையில் வழங்க இருக்கின்ற இந்த மானியத்தை நான் முழுமையாக எதிர்க்கின்றேன். என்றைக்கும் எதிர்ப்பேன். அரசாங்கத்தில் இன்றைக்கு மட்டுமல்ல, என்றைக்கு இருந்தாலும், அன்றைக்கும் நான் சபாநாயகராக இருந்தபோதும், நகைச்சுவையோடு பேச வேண்டிய கட்டாயம் இருந்தபோதும் இதே கருத்தைத்தான் நான் சொன்னேன். ஆகவே, எங்கே இருந்தாலும் கருத்து மாறுபவன் நானல்ல. நேருக்கு நேர் சொல்லிப் பழக்கப் பட்டவன்.

12–05 மணி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, திரைப்படத் துறை ஊனமடைந்துவிடக்கூடாது, ஒழிந்துவிடக் கூடாது என்பதற்காக அண்டை மாநிலங்களிலேகூட சிறிய அளவில் சொற்பத் தொகை செலவிட்டு எடுக்கப்படுகின்ற படங்களுக்கு அரசு ஒரு நிதியை அந்தந்த மாநிலங்களிலே வழங்கி வருகிறது. இதுவரையிலே இந்த மாநிலத்திலேகூட கடந்த கால ஆட்சியிலே, அருமை நண்பர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஒரு சில படங்களுக்கு அப்படி வழங்கப்பட்டது. பிறகு அது நிறுத்தப்பட்டு விட்டது. அதைத் தொடர்ந்து வழங்கவேண்டுமென்று கிரைஉலகத்திலுள்ள பிரதிநிதிகள் அவர்

களுடைய சங்கங்களின் சார்பாக முறையிட்டு, அந்த முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டு, இந்தத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. இது யாரோ தனிப்பட்ட ஒருவர், இருவருக்குப் போய்ச் சேருவ தாக திரு. பாண்டியன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இந்தத் தொழிலில் படம் எடுக்கின்ற ஒருவர் மாத்திரம்தான் ஈடுபட்டிருக்கிறார் என்று எண்ணக்கூடாது. கிராமப்புறத்திலே அந்தப் படத்தைத் திரையிடுகின்ற தொழிலாளியிலிருந்து, படப் பிடிப்பு நடைபெறுகிற நேரத்திலே அதிலே ஈடுபடுகின்ற தொழி லாளர்கள் வரையில் இலட்சக்கணக்கானவர்கள், சுமார் 10 இலட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் திரைப்படத் துறை யிலே இன்றைக்கு ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தத் துறை அழிந்து விடக்கூடாது என்று ஊக்கப்படுத்துவதற்காகத்தான் இதுபோன்ற மானியம் சில படங்களுக்கு, அதுவும் தகுதியான, தரமுள்ளப் படங்களுக்குக் குறைந்த செலவில் எடுக்கப்பட்ட படங்களுக்கு வழங்கப்படுகிறது. ஒருவேளை இதை அதிகம் என்று திரு. பாண்டியன் அவர்கள் கருதுவார்களேயானால் அதைக் குறைத் துக்கொள்ளக்கூடத் தயாராக இருக்கிறோம். அந்த ஊக்க உணர்வைக் குறைத்துவிடக்கூடாது. எனக்கே கூட சற்று அதிகம் கொடுக்கிறோமோ என்ற எண்ணம் ஏற்பட்டது உண்டு. அதை வேண்டுமானால் கொஞ்சம் குறைத்துக்கொள்ளலாமே தவிர, இந் தத் தொழிலை ஊக்கப்படுத்தக் கூடாது என்று கூறுவது அவ் வளவு சரியாக எனக்குப் படவில்லை. திரு. பாண்டியன் அவர்கள் கொஞ்சம் அருள் பாலிக்க வேண்டும்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, இந்த ஒரு துறைக்குத்தான் தமிழகம் முழுவதும் முழு ஆதரவு. இண்டஸ்ட் ரீசுக்கு யாரும் வேலைக்குப் போகத் தயாராக இல்லை.....

திரு. இரா. மோகன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர் கள், நான் அப்போதே எதிர்த்திருக்கிறேன், இப்படி எல்லாம் செய்வதை நான் சபாநாயகராக இருந்தபோதே சொல்லியிருக்கி றேன் என்று சொன்னார்கள். மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர் கள் முதலமைச்சராக இருந்தபோது மிகப் பெரிய பணம் பெற்ற நடிகையான திருமதி. வைஜயந்திமாலா பாலிக்கு மாதம் 2,000 ரூபாய், திருமதி. பானுமதிக்கு மாதம் 2,000 ரூபாய், நாம கிரிப்பேட்டை திரு. கிருஷ்ணனுக்கு மாதம் 2,000 ரூபாய் என்று பணம் கொடுத்துக் கொண்டிருந்தாரே, அப்போது சபாநாயகராக இருந்த திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் முதலமைச்சருக்கு இதைச் சொன்னாரா என்று கேட்க விரும்பு கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : அது கொடுத்தது என்று நீங்கள் ஒரு முடிவெடுத்து, பல இடங்களைக் கையகப்படுத்தியது போல திரும்ப வசூலிக்க முடியுமென்றால், நானே இதைக் கோர்ட்டுக்கு

1990 மார்ச் 31] [திரு. பி. எச். பாண்டியன்]

விடுகிறேன். தேவையில்லை. இந்த ஒரு துறைக்குத்தான் தமிழக மக்களின் ஒட்டுமொத்த ஆதரவு உண்டு. பள்ளி செல்வதற்கு, கல்லூரி செல்வதற்கு முழு ஆதரவு கிடையாது. வேலைக்குச் செல்வதற்கு முழு ஆதரவு கிடையாது. சிம்சன் கம்பெனியிலிருந்து வேலை முடிந்து வருவதுபோல, காலை 10 மணியிலிருந்து காட்சிகளைப் பார்த்துவிட்டு வரக்கூடிய இந்தத் தமிழ்நாட்டில், இப்படி ஊக்கம் கொடுக்கக்கூடிய இந்தத் தமிழ்நாட்டில், இந்த ஊக்கத் தொகை தேவையில்லை என்பதுதான் என்னுடைய கருத்தாகும். முதலமைச்சரவர்கள் முதலிலே அதைக் குறைக்கட்டும். முதலிலே கன்சேஷன் வாங்க வேண்டும். பேசினேன், ஒன்று கிடைத்தது என்று வரவேண்டும். ஆகவே, எனக்கு அந்தத் துறையிலே யாரும் கிடையாது. முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரைத் தவிர வேறு யாரையும் தெரியாது. (குறுக்கீடு) உங்களை நன்றாகத் தெரியும். அந்தத் துறையில் இருக்கக்கூடியவர்கள். இன்னும் சொல்லப்போனால் அந்தத் துறையில் இருக்கக்கூடியவர்கள் எல்லோரும் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை. நடிப்பவர்கள் முழுமையாகத் தமிழர்கள் இல்லை.

12-10 மணி

நடிகர்கள், நடிகைகள் எல்லோரையும் எடுத்துப் பார்ப்பீர்களேயானால் தமிழுக்கு என்று பேசக்கூடியவர்கள் எல்லாம் இன்றைக்கு தமிழ்நாட்டில் பிறந்து, தமிழ் மொழியைப் பின்பற்றக்கூடியவர்கள் அல்ல ; பேசக்கூடியவர்கள் அல்ல. ஆகவே, அது இன்றைக்கு ஒரு துறையாக, டிபார்ட்மெண்டாக இருந்துகொண்டிருக்கிறது. நீங்கள்தான் அதைப் பார்த்து செய்ய வேண்டும். காரணம் இன்றைக்கு மொழி வளர்ப்பதற்கு அது பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. சமுதாயத்தைச் சீர்திருத்துவதற்கு அதைப் பயன்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளைத் தெரிவித்து இந்த அளவுக்குக் கருத்தைச் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி சொல்லிக் கொள்கின்றேன். இன்னும் ஒன்றே ஒன்று. இந்தத் துறை பற்றியது அல்ல. அதை நான் காலையிலே சொல்ல வேண்டும் என்று இருந்தேன். ஒரு விளக்கம் உங்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகச் சொல்ல விரும்புகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் ஒரு இராணுவ அதிகாரியை வரவேற்பது 'புரோட்டோக்கல்' கிடையாது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இருந்த போது, ஜெனரல் கிருஷ்ணராவ்தான் அவர் வீட்டிற்கு வந்து பார்த்தார். தமிழகத்தைப் பொறுத்தவரையில் 'புரோட்டோக்கலில்' முதலமைச்சர்தான் பெரியவர் ; ஆளுநர் 'ஏஜெண்ட் ஆஃப் சென்டர்'. அதைக் காலையிலே சொல்லலாம் என்று பார்த்தேன். அதைச் சொல்கின்ற

போது பிரச்சினை வேறு எங்கேயோ போய், பிறகு எனக்கு எச்சரிக்கை வரக்கூடாது என்பதற்காகச் சொல்லவில்லை. பிறகு பிரிவினை என்று சத்தம் போட்டார்கள். அதற்குப் பதில் வேண்டும். இன்றைக்கு உலக இராணுவத்திலேயே இந்திய இராணுவத்தில் மட்டும்தான் பிரிவினையே இருக்கிறது. மெட்ராஸ் ரெஜிமென்ட், பஞ்சாப் ரெஜிமென்ட், சிக் ரெஜிமென்ட், ராஜஸ்தான் ரெஜிமென்ட் இப்படி ஒவ்வொரு மாநிலமாக இருக்கிறது. அங்கேயும் ஒருமைப்பாட்டைக் காணோம். அதை முதலமைச்சர் அவர்கள் வி.பி. சிங் அவர்களிடம் தெரிவித்து, இனிமேல் ஒரே ரெஜிமென்ட்—அதாவது இந்தியன் நேவி, இந்தியன் ஏர்போர்ஸ், இந்தியன் ஆர்மி போல் இருக்க வேண்டுமென்று தெரிவிக்க வேண்டும். ஏனென்றால், இன்றைக்கு அவர்கள் பேசி இருக்கிறார்கள். அவர்கள் அதைச் செய்யவில்லை. இராணுவத்திலே பிரிவினையையே ஊட்டியவர்கள் இன்றைக்கு அதைச் செய்யாத காரணத்தால், அதைச் செய்ய வேண்டும். அதைக் காலையிலே சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். உடனே வேறு விதமாகப் போய்விடக்கூடாது என்று நினைத்து அமர்ந்துகொண்டு இருந்தேன். அதை முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்கள் இன்று காலையிலே பிரிவினை சக்தி ஒழிக என்று சொன்னபோது, அதற்கு நான் கொண்ட பொருள், அவர்களுக்குள்ளே இருக்கிற பிரிவினை ஒழிய வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லிக்கொண்டு சென்றார்கள் என்றுதான் நான் கருதினேன்.

திருமதி பாப்பா உமாநாத்: பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய பாண்டியன் அவர்கள் பேசும்போது சினிமா துறைக்கு நிதி ஒதுக்கக்கூடாது என்று அவர் வாதாடுவதற்கு அவருக்கு உரிமை உண்டு. ஆனால் அதில் தமிழரா, இல்லையா என்று கூறுவது நம்முடைய இறையாண்மைக்குப் பொருத்தமாக இல்லை. நடிப்பு, திறமை இவைகளை வைத்துத்தான் நாம் நிர்ணயிக்க வேண்டுமே தவிர தமிழன் என்றால்தான் உதவி செய்ய வேண்டும் என்ற அந்தக் கருத்து ஏற்புடையது அல்ல என்பதை இந்த அரசின் சார்பாக அறிவிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: உறுப்பினர் அவர்கள் எண்ணுவது போல் நான் அப்படிச் சொல்லவில்லை. அதாவது ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித் தன்மை இருக்கிறது. வங்க மாநிலத்தில் அவர்கள் நியமனத்தைச் செய்யும்போது அவர்களுடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு 'Sons of the soil theo y' உண்டு. கர்நாடகத்திலே, 'Sons of the soil theory'

1990 மார்ச் 31] [திரு. பி. எச். பாண்டியன்]

இருக்கிறது. ‘தெலுங்கானாவில் நான் மடிவேன்’ என்று என்.டி.ஆரே. சொன்னார். அந்தச் சூழ்நிலையை எல்லாம் பார்க்கும்போது இன்றைக்கும் சொல்கிறேன், நம்முடைய தமிழ்நாடு ஒன்றுதான் இன்னும் ‘காம்போசிட் ஸ்டேட்’ போல் இருக்கிறது. ‘காம்போசிட் ஸ்டேட்’ தான் பிரிந்து போய் இருக்கிறதே தவிர, யாரும் பிரிந்து போகவில்லை. வாக்காளர் பட்டியலை நீங்கள் எடுத்துப் பார்ப்பீர்களேயானால் 1947-க்குப் பிறகு இருந்தவர்கள் எல்லாம் அப்படியேதான் இருந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டின் தலை விதி இன்றைக்கு அரசியல் ரீதியாக நிர்ணயிப்பவர்கள் கூட முழுமையாக இன்றைக்கு தமிழ் நாட்டு மக்களுக்கு இல்லை. நான் கூட இன்று காலையில் பத்திரிகையைப் பார்த்த உடனே என்னுடைய உள்ளத்தில் ஒன்று எழுந்தது. வாக்காளர் பட்டியலில் யார் வேண்டுமானாலும் சேர்த்துக்கொள்ளலாம் என்று ஒரு விதியை இன்றைக்கு அரசாங்கம், தேர்தல் கமிஷன் அறிவித்தது. அதை அஸ்ஸாமில் அறிவிக்க முடியுமா? அருணாசலப் பிரதேசத்தில் அறிவிக்க முடியுமா? ஆகவே இனிமேலாவது அந்த “Sons of the soil theo y” இந்த நாட்டு மக்கள் தான் இந்த நாட்டின் அரசியல் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும்; இந்த நாட்டு மக்கள் தான் இந்த நாட்டின் அரசியல் சூழலை உருவாக்குவதற்கு —அருணாசலப் பிரதேசம், அஸ்ஸாம் போன்று வருகின்ற காலங்களில்—இளைஞர்கள் திரள வேண்டும் என்ற ஆசையை இன்றைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். அரசியல் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் இந்த விவகாரம் இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. உ. ரா. வரதராசன்: பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. லெ. சுப்பிரமணியன்): என்ன சொல்லப் போகிறீர்கள்?

*திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் சொன்னது பற்றி ஒரே ஒரு வரியில் மட்டும் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. லெ. சுப்பிரமணியன்): கருத்துக்குக் கருத்துப் பேசிக்கொண்டே இருந்தால் நேரம் போய்விடும்.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் பாண்டியன் அவர்கள் பேசும்போது மேற்கு வங்கம் உள்ளிட்ட வேறு மாநிலங்களைக் குறிப்பிட்டு அங்கெல்லாம் ‘Sons of the soil theory’ இருக்கிறது என்று சொன்னார்கள்.

12-15 மணி.

அசாமையும் குறிப்பிட்டார்கள். அசாமிலே வந்திருக்கக் கூடிய பிரச்சினை என்பது பங்களாதேஷிலேருந்து அகதிகளாக வந்து குடியிருக்கின்றவர்களுக்கு அங்கே வாக்குரிமை உண்டா இல்லையா என்கின்ற பிரச்சினையே தவிர........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. லெ. சுப்பிரமணியன்) : இது தொடர்புடையது அல்ல.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவரவர்களே, இங்கே ஒவ்வொருவர் பேசுவதற்கும் இன்னொருவர் பதில் சொல்லிக்கொண்டேயிருந்தால், இறுதியிலே நான் பதில் சொல்வதற்கு நேரம் இல்லாமல் போய் விடும். ஆகவே, உறுப்பினர்களைப் பேச அனுமதிக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுற்றுலா மானியக் கோரிக்கையின் மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழர்களுடைய பழங்காலப் பெருமையை விளக்குகின்ற சிலப்பதிகாரக் கலையை விளக்குகின்ற வகையில் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அழகிய பூம்புகாரை உருவாக்கினார்கள். அப்படி உருவாக்கப்பட்ட பூம்புகார் சுற்றுலா வளாகம் கடந்த கால ஆட்சியாளர்களின் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, சிறப்புமிக்க பூம்புகார் பராமரிக்கப்படாமல் சீர் கேடுற்று இருந்த நிலையில் இருந்ததை டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு மீண்டும் வந்து, ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் செப்பனிடப்படுவதற்கும், சீர்ப்படுத்தப்படுவதற்கும், பாதுகாக்கப்படுவதற்கும் ஒரு கோடி ரூபாய்க்கு மேலான நிதியினை ஒதுக்கியமைக்கு எனது உள்ளார்ந்த மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பூம்புகார் சுற்றுலா வளாகக் கடற்கரைப் பகுதியில் 65 இலட்சம் ரூபாய் செலவில் 900 மீட்டர் நீளத்திற்கு பூம்புகார் வளாகத்தைக் கடலரிப்பிலிருந்து பாதுகாப்பதற்கு அங்கே தடுப்புச் சுவர் கட்டவிருப்பதையும் நான் பெரிதும் வரவேற்கின்றேன். இப்படிக் கட்டுகின்ற இந்த வேலை துவக்கியிருப்பதை இந்த அரசியினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். தடுப்புச் சுவர் கட்டுவதனால், அந்தப் பகுதியில் வாழ்கின்ற மீனவர்கள் தங்களுடைய கட்டுமரங்களைக் கடலில் ஏற்றுவதற்கும், இறக்குவதற்கும், அவர்கள் தொழிலுக்குச் செல்வதற்கும் இடையூறாக இருக்கும்

1990 மார்ச் 31] [திரு. எம். முகமது சித்திக்]

என அவர்கள் அஞ்சுகிறார்கள். மேலும், அப்பகுதியில், மீன் பிடிப்பு நடைபெறுவதால், பிடிக்கப்பட்ட மீன்களை அங்கேயே உலர வைக்கிறார்கள். அப்படி உலர வைப்பதன் மூலம் துர் நாற்றம் ஏற்படுவதால் அங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் இதை ஒரு பெரிய குறையாகக் கூறுகிறார்கள். இதைப் போக்கு வதற்கு, அங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் நலன்களைக் கருதி, அங்கு வாழ்கின்ற மீனவர்களின் நலன்களைக் கருதியும், அவர்களுடைய ஆலோசனைகளையும் கேட்டு, அவர்கள் தொழிலுக்குச் செல்வதற்கு எந்தவொரு இடையூறும் இல்லாதவண்ணம் மாற்று ஏற்பாடுகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பூம்புகார் சுற்றுலா மையப் பகுதிகளில் இரவு நேரங்களில் இருள் சூழ்ந்த நிலையிலுள்ளது. இரவு நேரங்களில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் அங்கு வந்து செல்கிறார்கள். எனவே, அங்கே தேவையான அளவிற்கு சோடியம் வேப்பர், மெர்குரி போன்ற மின் விளக்குகளை அதிகமாக அமைத்துத் தர வேண்டும்.

சிலப்பதிகாரக் கலைக் கூடத்தில், சிலப்பதிகாரக் கதையை விளக்குகின்ற வண்ணம் ஒலி ஒளிக் காட்சிகள் அமைக்கப்பட வேண்டும்.

அங்கே இருக்கின்ற பத்தினிக் கோட்டத்தில் வாரம் ஒரு முறையோ அல்லது மாதம் ஒரு முறையோ கலை நிகழ்ச்சிகள், நாட்டியம், நடனம், நாடகம் போன்றவை நடத்தப்பட வேண்டும்.

பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் ஆக்கிரமிப்புக்கள் ஏற்படும் சூழ்நிலை இருப்பதால் சுற்றுலா வளாகத்தைச் சுற்றி முழுவதும் பாதுகாப்பதற்கு பாதுகாப்புச் சுவரோ அல்லது முள் வேலியோ அமைக்கப்பட வேண்டும்.

கலைக்கூட வாயிலில் கட்டணம் வசூல் செய்யப்படுவதை நிறுத்திவிட்டு, வளாக நுழைவு வாயிலில் கட்டணம் வசூலிக்கப் பட வேண்டும். அங்கு வருகின்ற சுற்றுலா வாகனங்களைப் பாது காப்பாக நிறுத்துவதற்கு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். அதற்கும் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். இப்படிச் செய்வத னால் அரசுக்கு மேலும் வருவாய் ஏற்பட வாய்ப்பிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் வடிகால் வசதி போதுமான தாக இல்லை. மழைக்காலங்களில் குளம், ஏரியைப் போல அங்கே தண்ணீர் தேங்கி நிற்கிறது. அதுபோன்ற பகுதிகளை யெல்லாம் சமப்படுத்தி மேம்படுத்த வேண்டும். வடிகால் வசதி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இல்லையேல், பள்ளமானப் பகுதியை ஆழப்படுத்தி, நான்கு புறமும் கரை அமைத்து, கடல் நீரை உள்ளே விட்டு, சுற்றுலாப் பயணிகள் பொழுது போக்கு வதற்குப் படகுத்துறை ஏற்படுத்தி, படகு விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மயிலாடுதுறை, சீர்காழி, நாகப்பட்டிணம் வருகின்ற தொலை தூர துரிதப் போக்குவரத்துக்களையெல்லாம் பூம்புகார், தரங்கம் பாடி சுற்றுலா மையத்திற்கு வந்து செல்லும் வண்ணம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

12–20 மணி

பூம்புகார் பகுதியிலுள்ள மலர், மரக் கன்றுகளுக்குக் கோடை காலங்களில் தண்ணீர் விடப்படுவதில்லை. அப்படி அங்கே விடு வதற்குப் போதுமான தண்ணீர் இல்லாததன் காரணமாக மலர்க் கன்றுகளும், மரக் கன்றுகளும் சாகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. கோடைக் காலங்களில் அந்தப் பயிர்களுக்கு தண்ணீர் ஊற்று வதற்கு உரிய வசதிகளைச் செய்ய வேண்டும். தரங்கம்பாடியை சுற்றுலா மையமாக அமைத்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தரங்கம்பாடி சுற்றுலா மையத்தை மேலும் அழகு படுத்திடவேண்டும். தரங்கம்பாடி சுற்றுலா மையத்தில் நுழைவு வாயில் சீர்கேடு அடைந்திருக்கிறது. அதை சீரமைத்து, அங்கேயிருக்கும் மாடத்தை அழகுபடுத்த வேண்டும். தரங்கம்பாடி சுற்றுலா வளாகத்தில் மரக்கன்றுகளும், மலர்க் கன்றுகளும் நட வேண்டும்.

டானிஷ்காரர்களால் கட்டப்பட்ட பல கோடி ரூபாய் மதிப் புள்ள டானிஷ் கோட்டை இன்றைக்கு பராமரிக்கப்படாமல் இருக்கிறது. அதை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும். சுற்றுலா பயணிகள் தங்குவதற்கு உரிய வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும்.

திருநள்ளார், நாகூர், வேளாங்கன்னி, திருக்கடையூர், திரு விடைச்சுழி செல்கிற பக்தர்கள் பெரும்பாலும் தரங்கம்பாடி வழியாகதான் செல்கிறார்கள். மேலும், நரிமணம், தில்லையாடி பகுதிகளில் ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தின் மூலமாக எரிபொருள், கச்சா எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த அதிகாரி களும், பொதுமக்களும் பக்தர்களும் பயன்பெறும் வகையில் அங்கே பயணிகள் ஓய்வு இல்லம் ஒன்றை கட்டித் தர வேண்டும்.

தரங்கம்பாடி கடற்கரையில் உலகத்திலேயே மூன்று இடங் களில் மட்டும் கிடைக்கக்கூடிய மிக அதிகமான ஓசோன் வாயு கிடைக்கிறது. இந்தியாவில் தரங்கம்பாடி கடற்கரையில் ஓசோன் வாயு அதிகமாகக் கிடைப்பதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

1990 மார்ச் 31] [திரு. எம். முகமது சித்திக்]

இந்த ஓசோன் வாயுவை சுவாசிப்பதால் இருதய சம்பந்தமான நோயாளிகள் குணம் அடைகிறார்கள் என்றும், இது மிகவும் ஆரோக்கியமானது என்றும் அவர்கள் கூறுகிறார்கள். எனவே, இயற்கையாக கிடைக்கிற இந்த ஓசோன் வாயுவைப் பற்றிச் சுற்றுலாத் துறை மூலமாக விளம்பரப்படுத்தி சுற்றுலா பயணிகள் அங்கே வந்து செல்வதற்கும், தங்கிச் செல்வதற்கும் போதுமான வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அடுத்து அங்கேயுள்ள டானிஷ்காரர்களால் ஏற்படுத்தப்பட்ட பல இலட்ச ரூபாய் மதிப்புள்ள கோட்டை ஒரு சில வருடங்களாக கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலை இருக்கிறது. அதோடு, டானிஷ்காரர்களால் கட்டப்பட்ட துறைமுகக் கட்டிடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும், அங்கேயிருக்கிற மாசிலாமணிநாதர் கோவில் கடலில் மூழ்கி சீரழிந்து கொண்டிருக்கிறது. அந்த கோவில் முக்கால் பாகம் கடலில் மூழ்கி விட்டது. கால் பாகம் மாத்திரம் அங்கே இருக்கிறது. ஆகவே, அந்தக் கடற்கரையில் பூம்புகார் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள தடுப்புச் சுவர் போல ஏற்படுத்தி, அங்கேயிருக்கின்ற கோவிலுக்கும், கோட்டைக்கும் பாதுகாப்பை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தரங்கம்பாடியில் சில நினைவுச் சின்னங்கள் இருக்கின்றன. இந்த நினைவுச் சின்னங்களை மேம்படுத்தி பாதுகாக்க டென்மார்க் அரசு ஆர்வம் காட்டியதாக நான் அறிய வருகிறேன். சில ஆண்டுகளுக்கு முன்னால் தரங்கம்பாடிக்கு வருகை தந்த டென்மார்க் நாட்டின் பிரதமர் அந்த நாட்டின் மூலமாக நிதியுதவி அளிப்பதாக அங்கே பேட்டி அளித்தார்கள். அந்தப் பகுதியில் வாழ்கிற மீனவர்கள் சிலருக்கு அந்த நாட்டு இயந்திரப் படகுகளை வழங்கினார்கள். மேலும், அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வதாகவும், இல்லங்கள் அமைத்துத் தருவதாகவும் அதற்குப் போதுமான நிதியுதவி அளிப்பதாகவும் கூறினார்கள். இந்த நிதியுதவியைப் பெறுவதற்கு மத்திய அரசு மூலமாக துரிதமான முயற்சியை நம்முடைய அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தரங்கம்பாடி மேம்பாட்டிற்கு ஒருங்கிணைந்த பாதுகாப்புத் திட்ட அறிக்கையை ஆமதாபாத்திலுள்ள வடிவமைப்பு தேசிய நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளதாக அறிகிறேன். இந்த அறிக்கையை விரைவில் பெற்று அங்கே அழகிய சுற்றுலா மையத்தை ஏற்படுத்த மாநில அரசு நிதியை ஒதுக்கி பணிகளை துரிதப்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கப்பல் போக்குவரத்து இன்றைக்கு கடலூர் வரை விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அந்த கப்பல் போக்குவரத்தை பூம்புகார், தரங்கம்பாடி வரைக்கும் அதிகப்படுத்தித் தரவேண்டு

மென்று கேட்டுக் கொள்கிறேன். விரைவில் பூம்புகாரில் சித்திரை முழு நிலா விழா நடைபெற இருக்கிறது. அது கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்பட்ட விழா. இந்த வருடமும் அப்படி சிறப்பாக கொண்டாட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும், இங்கேயிருக்கின்ற ஏனைய அமைச்சர்களும், பேரவைத் தலைவர் அவர்களும் அந்த பூம்புகார் வளாகத்திற்கு வந்து, சித்திரை முழுநிலா விழாவைச் சிறப்பித்துத் தர வேண்டுமென்று அன்புடன் கேட்டு, அளித்த வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

12-25 மணி

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 58ஆவது பிறந்த தினத்தை இன்று தொடங்குகிறார்கள். அவர்களுக்கு எங்களுடைய கட்சியின் சார்பிலே மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. லெ. சுப்பிரமணியன்): அவையின் சார்பிலே ஏற்கெனவே வாழ்த்து சொல்லியாகிவிட்டது. இனி கட்சி என்று சொல்லி, தனிப்பட்ட முறையிலே வேண்டுமா?

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இன்றைக்கு முக்கியமான ஒன்றிரண்டு விவரங்களை மட்டும் நான் சொல்லலாம் என்று நினைக்கிறேன். பொதுவாக இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. நாட்டுக்கு இன்றைக்குக் காடுகள் எவ்வளவு முக்கியம் என்று சொன்னால், உடல் நலத்திற்கு நுரையீரல் போன்று, மனிதனுடைய நல்வாழ்வுக்கு, இந்த நாட்டுக்கு காடுகள் முக்கியம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அறிவாளிகள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு நம்முடைய நாட்டிலே, அதுவும் குறிப்பாக தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 1,30,057 சதுர கிலோமீட்டரில் உள்ள அந்தப் பரப்பில் 22,699 சதுர கிலோமீட்டர்தான் வனப் பரப்பாக இருக்கிறது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இது சற்றேறக்குறைய நாட்டிலே உள்ள அறிவாளிகள் சொல்லக்கூடிய அந்தப் பரப்பிலே பேர் பாதி, அதாவது 17.45 சதவீதம்தான் நாட்டிலே காடுகள் இருக்கின்றன. ஆனால், இருக்கிற அந்தக் காடுகள்கூட கடுமையாக அழிக்கப்படுகின்றன. அழிக்கிற அந்த ஆட்களைக்கூட இன்னும் பிடிக்கவில்லை. வீரப்பன் கோஷ்டி இன்றைக்கு பிடிபட்டதா என்றால், இன்னும் பிடிபடவில்லை. அதற்கு என்ன

1990 மார்ச் 31] [திரு. சோ. அழகர்சாமி]

காரணம்? நம்முடைய போலீஸ் அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள் கையாலாகாதவர்களா, அல்லது அவர்களைப் பிடிக்க முடியவில்லையா, அல்லது வேறு ஏதாவது காரணம் இருக்கிறதா, அல்லது அவர்களுக்கு வேண்டிய ஏதாவது அரசியல் பின்னணி இருக்கிறதா என்பதை கொஞ்சம் சொன்னால் நல்லது என்று நான் கருதுகிறேன். ஏன் என்றால் காடுகள் மிக முக்கியமானது. நானும் இந்த மன்றத்திலே பல்வேறு நேரங்களில் சொல்லியிருக்கிறேன், தொடர்ந்து அழித்துக் கொண்டு வருகிறார்கள். அதாவது கான்ட்ராக்ட்காரர்கள் கூட ஒரு பகுதியை கான்ட்ராக்ட் எடுத்துவிட்டு, பெரும்பகுதியை அவர்கள் வெட்டிக் கொண்டு போகிறார்கள். இதற்கு எத்தனையோ விதமானக் காரணங்கள், எத்தனையோ விதமான உதவிகள், அது அதிகாரிகளா, அல்லது மற்ற யார் யாரோ அதற்கு உதவியாக இருக்கிறார்கள். எனவே, இதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குக் காடுகள் மிக முக்கியமானவை. அதைப் பாதுகாக்க வேண்டியது மிக மிக அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குக் காடுகள் அழிக்கப்படுவதன் காரணமாக, பெரிய பெரிய மலைச் சரிவுகள் எல்லாம் ஏற்படுகின்றன. மழை குறைவதற்கும் அதுதான் காரணமாக இருக்கிறது என்பதைப் பற்றி எல்லாம் விஞ்ஞானிகள் மற்ற ஏனையோர்கள் எல்லாம் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். எனவே, காடுகளை வளர்ப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இந்த வனங்களைப் பாதுகாப்பதிலே, பல இடங்களிலே, பெரிய பெரிய இடங்களை எல்லாம் மொத்த, மொத்தமாக தேயிலைத் தோட்டங்களை வைப்பதற்கு பெரிய முதலாளிகளுக்கு எல்லாம் கொடுக்கிறோம். ஆனால், அதே நேரத்தில், பரம்பரை பரம்பரையாக அந்த மலையிலேயே வாழ்ந்துகொண்டிருக்கிற பல ஆயிரக்கணக்கான மலைவாழ் மக்கள் எல்லாம் அங்கே வாழ விடாமல், எத்தனையோ தொந்திரவுகளை செய்து கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய வாழ்வுக்கு வேண்டிய எத்தனையோ திட்டங்களைப் போட்டாலும்கூட, அவர்களுக்கு வரக்கூடிய, வருமானம் அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய அந்தப் பொருட்களைக்கூட நியாயமான விலைக்கு விற்க முடியாமல், அவர்கள் மிகப் பெரிய சுரண்டலுக்கு ஆளாகி, மிக கஷ்டத்திற்கு ஆளாகிக் கொண்டு வருகிறார்கள். இதை எல்லாம் சரியான முறையிலே பாதுகாக்க வேண்டும்.

வனங்களைப் பாதுகாப்பதிலே அந்த மலைவாழ் மக்களுடைய ஒத்துழைப்போடு பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அந்த வனங்களைப் பாதுகாப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1990 மார்ச் 31

மேலும், பயன்தரத்தக்க மரங்களை வளர்ப்பதற்கு, பரம்பரை பரம்பரையாக அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த மலைவாழ் மக்களுக்கு உரிமை கொடுக்கவேண்டும், உரிமை கொடுத்து பலன்தரக்கூடிய பெரிய பெரிய மரங்களை வளர்த்து, அவைகள் அவனுக்குச் சொந்தம் என்று சொன்னால், அந்த மரத்தை அவன் சரியாகப் பாதுகாத்துக் கொள்வான். அந்த மரமும் இருக்கும். மலை வளமும் இருக்கும், அதை நம்பியிருக்கிற அந்த மனிதனுடைய வாழ்விலே வளமும் இருக்கும். ஆகவே, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அவர்களை வெளியேற்றக்கூடிய அந்த ஏற்பாடுகளைச் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பல்வேறு இடங்களில் குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில் சூளகிரி என்று யூனியன் இருக்கிறது. ஏற்கெனவே அந்தக் காலத்திலே ஜமீன் ஒழிப்பு வருகிற நேரத்திலே அல்லது இனாம் ஒழிப்பு வருகிற நேரத்திலே, ஜாகிர்தார்களிடத்திலே, அல்லது ஜமீன்தார்களிடத்திலே, எங்களுக்குப் பட்டா வேண்டும் என்று அரசிடம் கேட்க அவர்களுக்குத் தெரியவில்லை. அதைக் கேட்காததன் காரணமாக செட்டில்மெண்டிலே அவைகள் பூராவும், தரிசு என்று சொல்லிவிட்டார்கள். இப்போது அந்த தரிசும்போய், பாரஸ்ட் என்று சொல்லக்கூடிய முறையிலே முட்செடிகளை நடுகிறார்கள். அப்படி முட்செடிகள் நடப்பட்டதன் காரணமாக தர்மபுரி மாவட்டத்திலே சூளகிரி யூனியனைச் சேர்ந்த 12 கிராமங்களிலே வாழக்கூடிய அந்த மலைவாழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக, எத்தனையோ தலைமுறையாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மக்கள் பழைய ஜமீன் காலத்திலேயிருந்து இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் வெளியேற்றக்கூடிய ஆபத்து வந்திருக்கிறது. அவர்கள் எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பெட்டிசன் கொடுத்து இருக்கிறார்கள். என்னை நேராக வந்து பார்த்தார்கள். அவர்கள், இதற்காக பல்வேறு இயக்கங்களைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகிறார்கள். இந்த மாதிரி கிராமங்களிலே, அந்தந்த இடங்களிலே வீடுகள் கட்டி, அந்த வீடுகளுக்கு வேண்டிய தீர்வை எல்லாம் பஞ்சாயத்துக்களுக்குச் செலுத்தி, மின்சார விளக்கு எல்லாம் போடப்பட்டு, இவ்வளவு இருந்தும் கூட, இது பாரஸ்ட் இடம், ரிசர்வ் பாரஸ்ட் இடம், ஆகவே, வெளியேறுங்கள் என்று சொல்கிறார்கள். இந்த முறை தடுக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த பாரஸ்டில் இருக்கக்கூடிய மரங்களை பெரிய பெரிய தொழிற்சாலைகளுக்கு குறைந்த விலைக்குக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். இது ஏன் என்று கேட்டால், தொழிற்சாலைகளை வளர்ப்பதோடு தொழிலாளர்களுக்கும் வேலை கொடுக்கிறோம் என்று ஏதாவது ஒரு காரணத்தை எதற்கு எடுத்

1990 மார்ச் 31] [திரு. சோ. அழகர்சாமி]

தாலும் வேலை வாய்ப்பு என்று சொல்லி வருகிறார்கள். பணக்காரர்களுக்கு உதவி செய்யக்கூடிய அந்த முறையை நீங்கள் மாற்ற வேண்டும், அந்த முறை கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன். அவைகளை நியாயமான விலைக்குக் கொடுக்க வேண்டுமே தவிர, குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் நம்மிடத்திலே மரத்தை வாங்கி, அதிலிருந்து செய்யக்கூடிய பொருள்களை நமக்கு மலிவான விலைக்குக் கொடுப்பது கிடையாது. அதிகமான விலைக்கு அவர்கள் விற்கிறார்கள். அதிகமான விலைக்குத் தான் அரசாங்கத்திற்குக் கூட கொடுக்கிறார்கள். சாதாரணமாக ஏழைகள் கூடை பின்னுவதற்கு பிரம்பு எடுக்கப் போனாலும்கூட, அதற்கு அதிகமான விலையைக் கொடுக்கச் சொல்கிறார்கள். ஆகவே இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனிக்கவேண்டுமென்று சொல்கிறேன்.

12–30 மணி

இன்னொன்று யூகலிப்டஸ் போன்ற மரங்களை வளர்ப்பதற்கு அதிகமான திட்டமிடப்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள். பல்வேறு அறிவாளிகள், பெரியவர்கள் எல்லாம் பத்திரிகைகளின் வாயிலாக சொல்கின்ற செய்திகளை நான் பார்த்திருக்கிறேன். இந்த யூகலிப்டஸ் மரங்களை வளர்ப்பதின் மூலமாக நீரை உறிஞ்சி அந்தப் பகுதியிலே மழை பெய்வதைத் தடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே அந்த மரங்களை வளர்க்கக் கூடாது என்று பல்வேறு இடங்களிலே அதை எதிர்த்து பேசியிருக்கிறார்கள். ஆகவே அந்த மரங்களை வளர்ப்பதினால் நீரை உறிஞ்சி மழை வருவதைத் தடுத்து, மழை அதிகமாக வருவதைக் கெடுக்கின்றது என்ற வாதம் இருக்கிறது. ஆகவே ஊட்டியிலேகூட மரங்கள் எல்லாம் குறைவதற்கு இதுதான் காரணம் என்று சொல்கிறார்கள். ஆகவே அந்த மரங்களை வளர்ப்பதற்கு பதிலாக வேறு மரங்களை பிரச்சினை இல்லாத் மரங்களை வளர்ப்பதற்கான ஏற்பாடுகளை அமைச்சரவர்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி இன்னும் ஒன்று, தமிழ்நாடு சமூக வனப் பணியாளர்கள் என்று ஒரு பகுதியினர் இருக்கிறார்கள். 5,000 அல்லது 6,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ரூ. 300, ரூ. 350 என்ற அளவில் குறைந்த சம்பளமாகத்தான் கொடுக்கிறார்கள். அவர்கள் ஆங்காங்கே மரக் கன்றுகளை வளர்த்து அங்கேயுள்ள புறம்போக்கு இடங்களிலே மற்றவைகளிலே அதிகமான இடங்களில் காடுகளை வளர்ப்பதற்கு, சிலபேர் 2, 3 ஏக்கர்கள் வைத்திருப்பவர்கள் இருக்கிறார்கள். அந்த மரக் கன்றுகளை வளர்ப்பதற்கு வேண்டிய கன்றுகளையும் அவர்கள் தயார் செய்து கொடுக்கிறார்கள். அது வேறு, அதை பஞ்சாயத்து

யூனியன் மூலமாகவும்] செய்யலாம், வனத்துறை மூலமாகவும் செய்யலாம். அப்படிப்பட்டவர்களை இன்றைக்கு 600 பேரை டி. ஆர்.டி. ஆபீசிற்கு அதாவது ஊரக வளர்ச்சித் துறைக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் நாங்கள் எடுத்துக்கொள்ள மாட்டோம் என்று சொல்கிறார்கள். இப்படி அவர்கள் நடுத் தெருவிலே இருக்கிறார்கள். அவர்களை ஊரக வளர்ச்சித் துறைக்கு அனுப்பாமல் அந்த 600 பேர்களை நீங்களே வைத்துக் கொண்டு, நியாயமான ஊதியம் கொடுத்து முடிந்த அளவிலே அவர்களுக்கான பணிகளைக் கொடுத்து, புறம்போக்கு நிலங் களிலே கன்றுகளை வளர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மரம் நடு விழாவில் எத்தனையோ கன்றுகளை நடுகிறோம். அவையெல்லாம் இன்றைக்கு இருக்கிறதா என்று பார்க்கவேண்டும், மரங்களை நடுவது எளிது. மரங்களைப் பாதுகாப்பதிலே கண்காணிப்பாக இருக்கவேண்டும். ஏனென்றால் மரங்களை நட்டுவிட்டால் அவற்றைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் எங்கேயும் கிடை யாது. இப்போதுகூட ''ஹாஸ்டலிலிருந்து'' இங்கே வரக்கூடிய வழியில் அந்தக் கூவம் நதிக்குப் பக்கத்தில் நிறைய மரங்கள் நட்டார்கள். ஆனால் அவை இப்போது இருக்கிறதா என்றால் இல்லை. ஆகவே நடுவது, பாதுகாப்பது இரண்டையும் சேர்த்து செய்யவேண்டும். ஏனென்றால் நடுவதற்காக அதிகமாக செல விட்டிருப்பதால், பாதுகாப்பதற்கான செலவு என்பது குறை வாகவே இருக்கும். எனவே வளர்ப்பதற்கு வேண்டிய கன்றுகள் அழிந்துவிடாமல் பாதுகாப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாதிரி ஜமீன், ஜாகீர் ஒழிப்புக் காலத்தில் நீண்டகால மாக சாகுபடி செய்து வந்த அந்த ஆட்கள் எல்லாம் 'ரயோத் வாரி' பட்டா கேட்பதில் அவர்களுக்கு ஒன்றும் தெரியாமல் இருந்த காரணத்தினால், சாதாரண மலைவாழ் மக்கள், ஏழை கள், அரிசனங்கள் இந்த நிலங்களிலே தொடர்ந்து சாகுபடி செய்து வருகிறார்கள். அப்போது அரசாங்கத்தில் ரெக்கார்டில் என்னவென்று சொன்னால், புறம்போக்கு என்று போட்டு, ''பாரெஸ்டிற்குப்'' போய் விட்டது என்று சொல்லி இன்றைக்கு அந்த இடங்களில் செடிகள் நடப்போனால் பல்வேறு தகராறு வருகிறது. அவர்கள் போய் செடி நட்டால், சாகுபடி நிலம் என்று அந்தக் குடிமக்கள் சொன்னால் அவர்கள் மீது வழக்குகள் எல்லாம் போடப்படுகிறது. இந்தமாதிரி இருக்கக்கூடிய இடங் கள், கொடைக்கானல், குமிழி, போடி, கல்ராயன் மலை போன்று அந்தப் பகுதிகளில் பூராவும் பழங்குடிகள் சாகுபடி செய்கிற நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். தயவு செய்து அந்த இடங்களில் மரங்களை வைக்கவேண்டுமென்று சொன்னால் மரங்களை வைக்கச் சொல்லுங்கள். அவர்கள் சாகுபடி இடத்திற்குப் பக்கத்தில் பரம்பரையாக குடியிருக்

1990 மார்ச் 31] [திரு. சோ. அழகர்சாமி]

கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய அந்த ஏற்பாடுகளை அமைச்சரவர்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பக்கத்தில் கேரள அரசாங்கம் பழங்குடி மக்கள் சாகுபடி பண்ணுகிற இடங்களை எல்லாம் அவர்களுக்கு கொடுத்து மரங்களை சாகுபடி செய்வதற்கு ஏதுவாக இருந்தால் அவர்களுக்கு பட்டா கொடுத்து இருக்கிறார்கள். அதுமாதிரியாக தமிழக அரசும் அந்தப் பக்கத்திலே இருக்கின்ற பரம்பரையாக சாகுபடி செய்து வரககூடிய அந்த மக்களுக்கு உரிமை கொடுத்து, பட்டா கொடுத்து மரங்களை சாகுபடி செய்வதற்கான ஏற்பாட்டை செய்து, அவர்களை பாதுகாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

12-35 மணி

அடுத்து முக்கியமான விஷயம். செய்தித்துறை சம்பந்தமாக ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பாண்டியன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு அது சம்பந்தமாக இதழ்த் துறையாளர் வீட்டுவசதி திட்டத்திற்காக நிலம் என்ற தலைப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. "சென்னை நிருபர்கள் சங்கக் கூட்டுறவு வீட்டு வசதித் திட்டத்திற்காக கொட்டிவாக்கத்தில் உள்ள 5.50 ஏக்கர் நிலத்தை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குறிப்பிடும் விலைக்கு வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் மாண்புமிகு முதலமைச்சரிடத்திலும் அந்த நிருபர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தலைவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கு 1 லட்சம் ரூபாய் என்பது அதிகம். குறைக்கப்படவேண்டும். வேறு பல மாநிலங்களில் குறைத்து மலிவான விலையிலே வழங்கியிருப்பதாக சொல்லுகிறார்கள். அந்தக் காரியத்தைச் செய்வதற்கு தடங்கலாக இன்றைக்கு நிற்கும் வீட்டு வசதி வாரியம் அந்த நிலத்தை வழங்காமல் இருக்கிறது. அதை வழங்கி அவர்களே வீடு கட்டிக் கொள்வதற்கு உதவி செய்ய வேண்டிய திட்டத்தை அமைச்சர் அவர்கள் செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக இங்கே பெரிய வாதமே நடந்தது. திரைப்படத் துறை சம்பந்தமாக பாராட்டி பரிசாக பணம் கொடுக்கலாம் என்று. அதிலே என்னுடைய கருத்து கொடுக்கக் கூடாது என்பதுதான். அமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள். அதிலே பல்வேறு தொழிலாளர்கள், அந்த ஊதியத்தை நம்பி இருக்கிறார்கள் என்று, எல்லாத் தொழில்களிலும் தான் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். தொழிலாளி இல்லாத வியாபாரமே ஒன்றும் இல்லை. ஆகவே சினிமாத் துறையிலே எத்தனையோ லட்சக் கணக்கான ரூபாய்களை செலவழித்து படம் எடுக்கிறார்கள். நல்ல படமாக இருந்து, தரமான படமாக இருந்து அது

மக்களுக்கு உதவும் படமாக சமுதாய முன்னேற்றத்திற்கு உதவி செய்யக் கூடிய படங்களாக இருந்தால் பாராட்டுங்கள். பாராட்டி பத்திரங்களைக் கொடுங்கள். அவர்களைக் கூப்பிட்டு மிகப் பெரிய மாலைகளைப் போடுங்கள். ஆனால் அதற்காக 3 லட்சம் 4 லட்சம் பணமாக கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை என்னுடைய கருத்தாக தெரிவித்து கடைசியாக சொன்ன ஏற்பாட்டின்படி ஏழை எளிய மக்கள் பரம்பரையாக குடியிருக்கிற இடத்திலிருந்து அங்கே மரம் நடப்போகிறோம் முள் செடி நடப்போகிறோம் என்று சொல்லி வெளியேற்றக் கூடிய முறையிலே அவர்களுக்கு இடைஞ்சல் உண்டு பண்ணாமல் வேண்டிய பாதுகாப்பையும் உதவியையும் செய்து கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு அமர்கிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் பேசுகிறபோது கொள்ளையன் வீரப்பனை ஏன் இன்னும் பிடிக்கவில்லை. அதற்கும் நம் முடைய வனத்துறையிலே சேர்ந்தவர்களுக்கும் அல்லது காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமா என்ற ஒரு கேள்வியை எழுப்பினார்கள். பத்து பன்னிரண்டு ஆண்டுக்காலமாக தமிழ்நாடு வனத்துறையிலே தனிக் கொடி கட்டிப்பறந்துக் கொண்டிருந்த அந்த கொள்ளையன் வீரப்பன் இன்றைக்கு தமிழக காட்டு எல்லைக்குள்ளேயே வர முடியாத அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த 2 மாத காலமாக அந்தக் கும்பலினால் எந்தவிதமான சேதாரமும் நம்முடைய வனத்துறைக்கு இல்லை. அவனை எப்போது பிடிப்பது என்பது பற்றி நான் இங்கே விவரமாக சொல்ல முடியாது. ஆனால் பத்தாண்டுக்காலமாக இருந்த கொள்ளையன் வீரப்பன் இன்றைக்கு 2 மாத காலமாக அவருடைய நாசகால வேலை வனத்துறையிலே நடைபெறவில்லை என்பதை மட்டும் நான் இங்கே தெரிவித்துக்கொண்டு இன்றைக்கு கூட பத்திரிகையிலே வந்திருக்கிறது. எப்படி சரண்டர் ஆவது என்று நான் வந்து இங்கே என்னை ஒப்படைத்து விடுகிறேன்; என்னை பிடித்துக் கொள்ளுங்கள் என்ற அளவுக்கு கடிதம் எழுதப்பட்டிருப்பதாக—நான் அந்தக் கடிதத்தை இன்னும் பார்க்கவில்லை—ஆனால் பத்திரிகையிலே பார்த்தேன். அந்த அளவுக்கு வீரப்பனுடைய நடவடிக்கைகள் அறவே வனப் பகுதியிலிருந்து ஒழிக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே என்னுடைய விளக்கமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: அமைச்சருடைய முயற்சிக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

1990 மார்ச் 31]

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பனுடைய நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மகிழ்ச்சி. ஆனால் 2 தினங்களாக பத்திரிகையிலே வந்துக் கொண்டிருக்கிற செய்திகள்—நேற்று வந்த செய்தி இங்கே சந்தன கட்டைகளை கடத்தி புதுச்சேரியிலே அதை இருப்பு செய்து அங்கே இருக்கிற கோடவுன்களிலே கண்டு பிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப் பட்டன என்பது ஒன்றாகும். இன்னொன்று 2 தினங்களுக்கு முந்தி வந்தது. 5 லட்சம் ரூபாய் பெருமான சந்தன கட்டை களை கடத்திச் சென்றவர் களிடத்திலிருந்து பறிமுதல் செய்யப் பட்டது என்று. அப்படி என்றால் இந்த வீரப்பன் கட்டுப்படுத் தப்பட்டிருக்கிற நிலையில் வேறு வீரப்பன்களும் இருக்கிறார் களா, அவர்களைப் பற்றி அமைச்சர் ஏதாவது குறிப்புகள் வைத்திருக்கிறார்களா ? நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: அவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சந்தன மரங்களை வீரப்பன் ஒருவன் தான் அல்லது வீரப்பனுடைய ஆட்கள் மட்டும்தான் கடத்திச் சென்றார்கள் என்பது தவறான ஒரு கருத்தாகும். (குறுக்கீடு.) மற்றவர்களை நான் வீரப்பன் என்று அழைப்பது இல்லை. வீரப்பன் என்பவர் ஒரு மகா பெரிய, ஒரு மகத்தான 'நாட் கம்பேரிபிள்' என்ற அந்த அளவுக்கு கொள்ளையன். ஆகவே மற்றவர்களை நான் வீரப்பன் என்று அழைக்க தயாராக இல்லை. அவனைத் தான் வீரப்பன் என்று அழைக்க முடியும். மற்றவர்களும் கடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக புதுவையிலே 15 டன் அளவுக்கு சந்தன மரக் கட்டைகள் பிடிக்கப்பட்டிருக்கின்றன. அதுபோன்று முன்பு கடத்திச் சென்றவர்கள் எப்படியோ இங்கேயிருந்து அந்த மரக் கட்டை களை எடுத்துச் சென்று வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடிய முறையிலே இருந்தார்கள். இன்றைக்கு அப்படிப்பட்ட முயற்சி களையெல்லாம் நாம் முறியடிக்கிறோம். ஆகவே, அறவே ஒழிக்க வேண்டுமானால், இன்னும் ஒரு ஆண்டு காலம் ஆகும் என்று நான் கருதுகிறேன்.

12-40 மணி

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. வெ. சுப்பிரமணியன்) : ஒரு வேண்டுகோள். இரண்டு மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரை தர வேண்டும். எனவே, சுருக்கமாக முடிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவைப் பொறுத்த வரையில் நாம் விவசாயத்தைப் பெருவாரியாக நம்பி இருக்கின்ற நாடு. அதிலே குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்த வரையிலும், விவசாயத்தைப் பெருவாரியாக நம்பி இருக்கின்ற நாடு. கங்கை காவிரி திட்டம் வர வேண்டும், இந்தியா வளம் பெற வேண்டும் என்ற நிலை இருந்தாலும் கூட இயற்கையிலேயே இன்றையதினம், மழை வளம் இருக்க வேண்டுமென்றால், வன வளம் சிறப்பாக இருக்க வேண்டும் என்கிற நிலை, நம் கண் முன்னால் கண்கூடாகத் தெரிந்து கொண்டிருக்கிறது. எனவே, தமிழகம் சிறப்பாக, விவசாயத் துறையில் முன்னேற வேண்டுமென்றால், இயற்கையாக இருக்கின்ற வனங்களைப் பாதுகாக்க வேண்டும். காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும். அப்போதுதான் இங்கே தமிழகத்திலே, மிகுதியாக மழை பொழிகின்ற நிலை ஏற்பட்டு, அதன் மூலம் தமிழகத்தில் விவசாயப் பெருக்கு ஏற்படுகின்ற நிலை இருக்கும். எனவே இப்படிப்பட்ட தமிழகத்தினுடைய உயிர் ஜீவனாக இருக்கின்ற வனங்களை காடுகளை இன்றையதினம் வெட்டிச் செல்கிறார்கள் என்றால், பல்வேறு வீரப்பன்கள் வன இலாகாவை அழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால், காடுகளை அழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அது சட்டத்திற்கு விடுகின்ற சவாலாக காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. இங்கே அவனைத்தான் வீரப்பன் என்று சொல்லலாம் என்கின்ற அளவுக்கு இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார். ஆனால் அந்த அளவுக்கு தனி மனிதன் தன்னை தனிமைப் படுத்தி, செயல்படுவதற்கு ஏதோ ஒரு மிகப்பெரிய பின்னனி இருக்கிறது என்பதை நான் இந்த அரசுக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஒரு தனி மனிதன் வீரப்பனைப் பிடிப்பதற்கு, எந்த அளவுக்கு காவலர்களும் மற்றவர்களும் தயங்குகிறார்கள் என்றால், இதில் இருக்கின்றப் பின்னனியை அரசு உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய நிலை ஆகும். இன்றைய தினம்...............

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இஸ்ட் ஏ பாயின்ட். இன்றைக்கு அந்தத் தயக்கம் இல்லவே இல்லை. முன்பு 10 ஆண்டுகளுக்கு முன் தயக்கம் இருந்தது என்று சொல்லுங்கள்; நான் ஏற்றுக்கொள்கிறேன். இன்றைக்கு எந்தவிதமான—வீரப்பனைப் பிடிப்பதிலே, அல்லது வீரப்பனின் அட்டகாசங்களை ஒடுக்குவதிலே—எந்தவிதமான தயக்கமும் இந்த அரசுக்கு இல்லை.

திரு. பி. என். வல்லரசு : மிக்க நன்றி. இன்றைய தினம் அதுபோன்ற சவாலாக இருக்கின்ற இந்த நிலையை அரசு மிகவும் விரைந்து செயல்பட்டு, கண்டுபிடித்து, காட்டு இலாகாவை, வன இலாகாவை பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 மார்ச் 31] [திரு. பி. என். வல்லரசு]

கடமைப்பட்டுள்ளேன். நான் கடந்த சட்டமன்றத் தேர்தலிலே மாண்புமிகு முதலமைச்சர் திரு எம்.ஜி. ஆர். அவர்களை ஆண்டிப்பட்டியில் தேர்தலில் போட்டியிடுகின்ற நேரத்தில், அங்கே ஆண்டிப்பட்டியில், மழை வளம் இருப்பதைக் கண்டு, குறிப்பாக வெள்ளி மலைப் பகுதி, அரசரடிப் பகுதி எல்லாம் மழை வளம் நிறைந்த பகுதியாகும்; அங்கே இருக்கின்றவர்கள் அன்று முதல் இன்று வரை, அங்குள்ள மிகப்பெரிய காடுகளையெல்லாம் அழித்துக் கொண்டிருக்கிறார்கள். மிக உயர்ந்த மரங்களையெல்லாம் வெட்டிச் சென்றிருக்கிறார்கள். எனவே, அவர்கள் யார் என்று கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வெள்ளிமலைப் பகுதியில் இருக்கின்ற வானளாவ உயர்ந்த மரங்களை எல்லாம் வெட்டிச் சென்றிருக்கின்றார்கள். இன்றைய தினம், பல்வேறு உயர்ந்த மனிதர்கள் அந்த வெள்ளிமலைப் பகுதியில் இருக்கின்ற வனத்தில் இருக்கின்ற காடுகளையெல்லாம் பட்டா போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும், அங்கே ஆட்சி நடத்தியவர்களுக்குச் சொந்தக்காரர்கள் எல்லாம், வெள்ளி மலையைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளை பட்டா போட்டுக் கொண்டிருக்கிறார்கள். மறைமுகமாக வைத்திருக்கிறார்கள் என்ற நிலை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் அரசும் அதை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன். அதைப்போன்று, எனது தொகுதி உசிலம்பட்டியில் இருக்கின்ற மலைகள், சாதாரண மலைகள். அந்த மலைகளிலே, தாய்மார்கள் அங்கே இருக்கின்ற வேலைவெட்டியில்லாத் தாய்மார்கள் தலைச்சுமையாக எடுத்துச் செல்கின்ற அந்த நிலைக்குக்கூட இன்றைய தினம் காவல்துறை நடவடிக்கை எடுக்கிறது. நான் கேட்பது எல்லாம், வீரப்பன் மீது நடவடிக்கை எடுங்கள். ஆனால், சாதாரண தாய்மார்கள், அன்றாட வயிற்றுப் பிழைப்பிற்கு தலைச்சுமையாக எடுத்துச் செல்கின்ற—எனது உசிலம்பட்டித் தொகுதியிலுள்ள மலைகளில் ஏழை எளிய தாய்மார்கள் தலைச்சுமையாக கொண்டு வருவதற்குக் கூட நடவடிக்கை எடுக்கின்ற நிலையை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வண்டலூர் மிருகக் காட்சி சாலையை இன்னும் அரசு மேம்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டுள்ளேன்.

12-45 மணி

இன்றைய தினம் சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில், சுற்றுலாத் துறையை மிகவும் மேம்படுத்தினால் தமிழக அரசிற்கு மிகுதியான நிதி வருவாய் இருக்கின்ற காரணத்தினால், தமிழ் நாட்டில் இருக்கின்ற சுற்றுலா மையங்களைக் கூடுதலாக்க வேண்டும். இருக்கின்ற சுற்றுலா மையங்களை இன்னும் மேம்

படுத்தி, வெளி மாநிலத்தவர், வெளிநாட்டினர் பல்லாயிரக் கணக்கிலே வருகின்ற அளவிற்கு இங்கே அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையைப் பொறுத்தவரையில் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரமாகும். மதுரையில் வண்டியூர் கண்மாயை ஆழப் படுத்தி அங்கே படகுகள் விட்டு சுற்றுலா மையமாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாளாக இருந்து வருகிறது. எனவே மதுரையினுடைய சிறப்பை அங்கேயிருக்கின்ற ஆயலங் களைப் பார்ப்பதற்கு வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடு களிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் வந்து கொண்டிருக்கிறார் கள். அப்படிப் பட்ட நேரத்தில், வண்டியூர் கண்மாயை ஆழப் படுத்தி, படகுகள் விடுகின்ற ஒரு நிலை ஏற்பட்டு, அது சுற்றுலா மையமாக ஆக்கப்படுமேயானால் இன்னும் கூடுதலான சிறப்பை மதுரைக்கு ஏற்படுத்திய பெருமை இந்த அரசிற்கு சாரும் என் பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சினிமாத் துறையைப் பொறுத்த வரையில், இன்றையதினம் ஆபாசக் காட்சிகளை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அந்த அளவிற்கு ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒரு தந்தை, ஒரு மனைவி, ஒரு மகள் இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு படத்தைப் பார்க்க முடிகிறதா என்றால் இல்லவே இல்லை. அந்த அளவுக்கு மகளும், தாயும், தகப்பனும் ஒன்று சேர்ந்து படம் பார்க்க முடியவில்லை. தங்கள் மகளை அழைத்துச் செல்ல முடியவில்லை. ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் ஒன்றாக அமர்ந்து பார்க்கின்ற அளவுக்கு சினிமாக் காட்சிகள் இல்லாமல், ஆபாசக் காட்சிகளாக இன்றைக்கு இருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல், அந்த சினிமா பற்றிய விளம்பரச் சுவரொட்டிகள் கூட இன்றைய தினம் ஆபாசமாக ஆங்காங்கே காட்சியளிப்பதைப் பற்றி இங்கே அரசிற்கு சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். சென்சார் போர்டிலே இன்றைய தினம் தமிழர்கள் தான் இருக்கிறார்களா, தமிழ் உணர்வை, தமிழ்ப் பண்பை, நாகரிகத்தை மதிக்கின்ற அளவிற்கு இருக்கின்ற உறுப்பினர்கள் இருக்கிறார்களா என்ற அளவுக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகின்ற காரணத்தால் சென்சார் போர்டில் மறு பரி சீலனை செய்து, அவற்றிற்கு நல்ல பல உறுப்பினர்கள், பண்பாடு உள்ள, தமிழ்ப் பண்பாட்டை, நாகரிகத்தை உயர்த்துகின்ற அளவுக்கு, உணர்வு படைத்த உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று சினிமாத் துறைக்கு வழங்கப்படுகிற உதவித் தொகை அதிக மானதுதான் என்கின்ற அளவிற்குச் சொன்னார்கள். மாண்பு

1990 மார்ச் 31] [திரு. பி. என். வல்லரசு]

மிகு திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் உதவித் தொகைகள் கொடுப்பதை கூடாது என்கின்ற அளவிற்குக் கருத்தைச் சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரையில் உதவித் தொகை கொடுக்க வேண்டும். ஆனால் எப்படிப்பட்ட படங்களுக்கு என்றால், தமிழ்ப் பண்பாட்டை, நாகரிகத்தை வளர்க்கின்ற அளவிற்கு நல்ல உயர்ந்த கருத்துக்களை, சமுதாயத்திற்கு வழங்குகின்ற நல்ல திரைப் படங்களுக்கு மட்டும்தான் உதவித் தொகை வழங்கப்படும் என்கின்ற நிலையை உருவாக்கி, அதற்கு உதவித் தொகை கொடுக்க வேண்டுமே தவிர, ஒருவரைச் சரிக்கட்ட வேண்டும் என்பதற்காக யாரோ, ஒருவரைச் சரிக் கட்டுவதற்காக கூட இங்கே வாடிக்கையாக கடந்த ஆட்சிக் காலத்திலிருந்து உதவித் தொகை சினிமாப் படங்களுக்கு கொடுக்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தால் அவற்றையெல்லாம் மாற்றியமைத்து, தரமுள்ள, பண்புள்ள தமிழ்ப் பண்பாட்டைக் காக்கின்ற தரமான படங்களை உருவாக்குபவர்களுக்கு, சமுதாயத்தின் உயர்ந்த பாதைக்கு அழைத்துச் செல்கின்ற படங்களை உருவாக்குபவர்களுக்கு மட்டும்தான் உதவித் தொகை என்ற ஒரு நிலையை அரசு ஏற்க வேண்டும் என்று கூறி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. கே. பி. கந்தசாமி அவர்கள் கோரிக்கை எண் 47இன் கீழ் செய்தி-சுற்றுலா, திரைப் படத் தொழில் நுட்பவியல், ஆகிய துறைகளுக்காக ரூபாய் 4,80,52,000-க்கு நிறைவேற்றித் தர வேண்டும் என்று காலையில் முன் மொழிந்தது தொடர்பாக, செய்தித் துறை, திரைப் படத் துறை ஆகியவை பற்றி, ஒரு சில கருத்துக்களை இப்போது நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். குறிப்பாக, இந்தச் செய்தித் துறையினுடைய கோரிக்கையில் இம்மாமன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதிலே நான் மிகவும் மகிழ்ச்சி அடையக் கூடிய விஷயம் என்னவென்றால், இந்த ஆண்டு குறிப்பாக, நமது மதிப்புமிகு பாரதிதாசன் அவர்களுக்கும், அதேபோல் மரியாதைக்குரிய, தாழ்த்தப்பட்ட மக்களுடைய தன்னிகரில்லாத் தலைவர் டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கும், திரு. நரேந்திர தேவ் அவர்களுக்கும், மரியாதைக்குரிய டாக்டர் தருமாம்பாள் அவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பாடுபட்ட சுவாமி சகஜானந்தா அவர்களுக்கும், சிறந்த சீர்திருத்த எழுத்தாளர் 'வ.ரா.' எனப்படுகின்ற வ. ராமசாமி அவர்களுக்கும், அறிவியல் அறிஞர் சர். சி. வி. இராமன் அவர்களுக்கும் நூற்றாண்டு விழாக்களை இந்தத் துறையின் சார்பாக இந்த ஆண்டு கொண்டாடவிருக்கின்றோம்.

12-50 மணி

இந்தத் துறையைப் பற்றி காலையிலிருந்து பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். குறிப்பாக, நமது

மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாமலை கூறிய கருத்துக்களை ஒட்டியே மற்ற உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து இருக்கின்றார்கள். இங்கே திரு. அண்ணாமலை அவர்களும், மாண்புமிகு திரு. தங்கவேலு அவர்களும் மாண்புமிகு திரு. இளம்வழுதி அவர்களும், மாண்புமிகு திரு. ராம நாராயணன் அவர்களும், அதே போல மாண்புமிகு திரு. வெங்கடேச தீட்சிதர் அவர்களும், இன்னும் மாண்புமிகு திரு. காளியப்பன் அவர்களும், மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன் அவர்களும், மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்களும், மாண்புமிகு திரு. நூர்முகமது அவர்களும், மாண்புமிகு திரு. வல்லரசு அவர்களும் இந்தத் துறை மீதான மானியக் கோரிக்கையிலே கலந்துக் கொண்டு பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அத்தனை பேர்களும் ஒரே ஒரு கருத்தை மட்டும் நிச்சயமாக நிறைவேற்றித் தர வேண்டும், அதில் அரசு கண்டிப்பாக இருக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் துறையின் சார்பாகச் செய்யப்படுகிற பல்வேறு நல்ல பல காரியங்கள். அதனாலே மக்களுக்கு என்ன நன்மைகள் ஏற்படுகின்றன என்பதைக் கூறி, பிறகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்கு பதிலுரைக்கலாம் என்று கருதுகிறேன். குறிப்பாக, செய்தித் துறையிலே, செய்தியாளர்களுக்கு மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், 1978 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட ஓய்வூதியம் ரூ. 250-ஐ, ரூ. 400 ஆக உயர்த்தித் தந்திருக்கிறார்கள்.

அதே போல அரசால் அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளர்களுக்கு இலவச பஸ் பாஸ். அதே போல ரெயில்வே கட்டணத்தில் 50 சதவிகிதம் சலுகை. அதே போல, பல்வேறு மாவட்டத் தலை நகரங்களில் இருக்கிற அங்கீகரிக்கப்படாத செய்தியாளர்களுக்குக் கூட, அந்தந்த மாவட்டங்களில் 268 நபர்களுக்கு மேல் இலவச பஸ் பாஸ் வழங்கப்பட்டிருக்கிறது.

இதையெல்லாம் விட இன்றைக்கு எடுத்துச் சொன்னார்களே, மற்ற உறுப்பினர்கள் எல்லாம், தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் முதன்முதலில் கலந்து கொண்ட நிகழ்ச்சியே செய்தியாளர்கள், கூட்டத்தில்தான். அப்படிக் கலந்து கொண்டபொழுது, செய்தியாளர்கள் சங்க நிர்வாகிகள் தங்களுக்கு வீடு வேண்டும்; அதற்காக மனை வேண்டுமென்று கேட்டவுடன், அரசின் சார்பாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான, அல்லது அத்துறையின் மூலமாக, கொட்டிவாக்கத்திலே 5 ஏக்கர் தந்திருக்கிறார்கள். அதைப் பற்றி

1990 மார்ச் 31] [திரு. கே.என்.நேரு]

யெல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதன் விலை ஒவ்வொருவருக்கும் ரூ. 1 இலட்சத்திற்கும் மேலாகிறது. அதைக் குறைத்துத் தர வேண்டுமென்று சங்கத் தலைவர்கள் கேட்டதாக இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதைப் பற்றிய விளக்கம் வருமாறு.—

அரசு பதிவு செய்யப்பட்ட சென்னைப் பத்திரிகையாளர் வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்திற்கு, தங்கள் உறுப்பினர்களுக்கு வீடு கட்டுவதற்கு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின், நாள் 14-6-1989, அரசாணை எண் 494-ல் கொட்டிவாக்கத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான 5 1/2 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தை ஒப்படை செய்தது. அந்த நிலத்தின் தோராய விலை மனை ஒன்றுக்கு ரூ. 1 இலட்சம் என்று அரசு நிர்ணயித்திருந்தாலும், இன்றைக்கு வெளி மார்க்கெட்டிலே அங்கு ஒரு மனை ரூ. 3 இலட்சத்திற்கு விற்கிறது. இருந்தாலும் அவர்களுக்குச் சலுகை வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசு அவர்களுடைய கோரிக்கையைப் பரிவோடு கவனித்துச் செய்ய வேண்டுமென்று அண்டை மாநிலங்களில் எல்லாம் என்ன சலுகைகள் அவர்களுக்கு அளிக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து பார்த்த பொழுது கேரளத்திலும் ஆந்திரத்திலும் ஓரளவு அவர்களுக்குச் சலுகைகளை அளித்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. கேரள மாநிலத்தில் 1978-ல் வெளியிடப்பட்ட ஆணையில் வீடு கட்டும் ஒவ்வொரு பத்திரிகையாளருக்கும் கட்டுமானச் செலவில் 25 சதவீதம் செலவே அரசே ஏற்கும்; 75 சதவீதம் செலவைப் பத்திரிகையாளர்களும், ஹட்கோ மற்றும் அரசிடமும் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று சலுகை தந்திருக்கிறார்கள். அதே போல, ஆந்திராவில், 1979ல் வெளியிடப்பட்ட அரசு ஆணையில், அவ்வரசு, குடிநீர் வசதி, கழிவு நீர்க் குழாய், சாலைகள் போன்ற மேம்பாட்டுப் பணிகளுக்காக மானியமாக மொத்த நிதியாக ரூ. 20 இலட்சம் அவர்களுக்கு வழங்கியுள்ளது. கர்நாடக மாநிலத்தில், 10 ஆண்டுகளுக்கு முன்னால் சட்டம் போடப்பட்டுள்ளது. இந்த 3 மாநிலங்களிலும் அளிக்கப்படும் சலுகைகளைப் போல், இந்த அரசும் அரசினுடைய தலைவர் கலைஞர் அவர்களும், அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிவோடு கவனித்து நிச்சயமாக, அவர்களுக்குச் சலுகைகள் வழங்குவார்கள் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

12-55 மணி

அடுத்து, இந்தத் துறையினுடைய பணியே தமிழக அரசினுடைய கொள்கைகளையும், திட்டங்களையும் நாட்டு மக்களுக்கு எட்டிடச் செய்வதுதான். அரசினுடைய கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும் நேரடியாக மக்களுடைய ஒத்துழைப்பை நல்குவதற்காக இந்தத் துறை பல்வேறு துறைகளின்

மூலமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, சென்னையில் மட்டுமல்லாமல் அந்தந்த மாவட்டத் தலைநகரில் மக்கள் தொடர்பு அதிகாரி இருந்து, அந்த மக்கள் தொடர்பு அதிகாரி பல்வேறு இடங்களுக்குச் சென்று, அங்கே வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள் மற்றும் ஆன்றோர் சான்றோர்கள்—அவர்களுக்கு செய்தியாளர்கள் கூட்டத்தைக் கூட்டுவது, செய்தியாளர்களை ஆங்காங்கே அழைத்துச் சென்று, நாட்டு நடப்புகளை செய்தியாளர்கள் மூலமாக நாட்டு மக்களுக்குத் தெரிய வைப்பது என்ற வகையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப் பணியாற்றும்போது புகைப்படப் பிரிவும் அவர்களுடன் இருந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு சென்னையில் ஏழு புகைப்படக்காரர்களும் ஆங்காங்கே மாவட்டத் தலைநகரில் மாவட்டத்திற்கு ஒருவர் என்ற ரீதியிலும் இருந்து பணியாற்றுகிறார்கள். நீலகிரி, பெரியார், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, காமராஜர், பசும்பொன் தேவர், சிதம்பரனார் மாவட்டங்களைத் தவிர, மற்ற மாவட்டங்களில் எல்லாம் புகைப்படக்காரர்கள் இருக்கிறார்கள். இந்த மாவட்டங்களிலும் இனிமேல் புகைப்படக்காரர்கள் நியமிக்கப்பட்டு, உடனுக்குடன் செய்திகளையும், புகைப்படங்களையும் பத்திரிகைகளுக்கு அளிப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல, இந்த அரசின் சார்பாக அரசின் சாதனை விளக்க முகாம்கள் நடத்தப்படுகின்றன. ஆங்காங்கே நடைபெறுகின்ற இந்த சாதனை விளக்க முகாம்களுக்கு செய்தியாளர்களையும் அழைத்துச் செல்கிறார்கள். கடந்த ஆண்டு இரண்டு முறை இதைப் போன்று அழைத்துச் சென்றிருக்கிறார்கள். இந்த அரசின் சார்பாக சாதனை விளக்க முகாம்கள் நடத்தப்படுகின்ற போது குழந்தைகள், மாணவ-மாணவியருக்கு மருத்துவ பரிசோதனை, கருவுற்ற தாய்மார்களுக்கு ஊட்டச் சத்து, கண் பரிசோதனை, ஓ.ஏ.பி. உதவித் தொகை, மக்கள் குறை தீர்க்கும் மனுக்கள், வங்கிகள் கடன் வழங்க மனுக்கள், இலவச மரக் கன்றுகள் நடுதல், சுய வேலை வாய்ப்பு கடன் மனுக்கள் பெறுதல், இலவச மனைப் பட்டா வழங்குதல் குடும்ப நலம், சிறு சேமிப்பு, ஊனமுற்றவர்களுக்கு உதவி, கைவினைஞர்களுக்கு உதவி, குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி என்ற அளவிலே மக்களை எல்லாம் நேரடியாகச் சந்தித்து, அந்த இடத்திலேயே அவர்களுடைய குறைகளை எல்லாம் தீர்க்கின்ற வகையில் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள். இதுபோன்ற செயல்களுக்கு மக்களிடத்திலே நல்ல வரவேற்பு இருக்கிறது.

1990 மார்ச் 31] (திரு. கே.என். நேரு)

அதைப் போன்று இந்தத் துறையின் சார்பாக விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றன. பல்வேறு அரசுத் துறைகளின் சார்பாகத் தரப்படுகின்ற விளம்பரங்களை ஒருமுகப்படுத்தி, இந்தத் துறை தானே வடிவம் அமைத்து, பல்வேறு பத்திரிகைகளுக்கு விளம் பரங்களைத் தந்து கொண்டிருக்கிறது.

அதைப்போன்று விழாக்கள் இருக்கின்றன. விழாக்கள் என்று எடுத்துக் கொண்டால், பல்வேறு பேரறிஞர்கள், நாட்டிற்கு உழைத்த உத்தமர்கள் போன்றவர்களை எல்லாம் பாராட்ட வேண்டும். அவர்களுடைய கொள்கைகளையும், திட்டங்களை யும் இன்றைக்கு இருக்கிற இளைய சமுதாயத்தினர் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்களை நினைக்க வேண்டும் என்ற அளவிலே அவர்கள் பிறந்த இல்லங்களை எல்லாம் நினைவிட மாகவும், அவர்களை மதிக்க வேண்டும் என்பதற்காக அந்த நினைவிடங்களை எல்லாம் இந்தத் துறையின் சார்பாக நிறுவி, அவை நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, வள்ளுவர் கோட்டம், அண்ணா சதுக்கம், காமராஜர் இல்லம், இராஜாஜி இல்லம், காமராஜர் நினைவகம், காந்தி மண்டபம், பாரதி மணி மண்டபம், எட்டயபுரம் வ.உ.சி. இல்லம், ஒட்டப்பிடாரம் காந்தி மண்டபம், கன்னியாகுமரி காம ராஜர் இல்லம், விருதுநகர் காமராஜர் நினைவகம், ஈரோடு பெரியார்-அண்ணா நினைவகம், வள்ளியம்மை நினைவகம், இராஜாஜி இல்லம், துரைப்பள்ளி, அண்ணா நினைவகம்-காஞ்சி புரம், செய்குத்தம்பி பாவலர் இல்லம், நாகர் கோயில், மதிப்பிற் குரிய முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு இந்த ஆண்டு நினைவகம் கட்டியும், திருப்பூர் குமரன் அவர்களுக்கு நினைவகம் கட்டியும், இவர்களைப் போன்ற தலைவர்களுக்கு எல்லாம் இந்தத் துறையின் சார்பாக நினைவகங்கள் எழுப்பி, அவை நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

அதைப்போன்று, இந்தத் துறையின் சார்பாக இந்தியாவிலே வேறு எங்கும் இல்லாத அளவுக்கு நேரடியாக பொருட்காட்சி களை நடத்தி வருகின்றன. இதுவரையில் 54 தடவைகள் பல்வேறு மாவட்டங்களிலே பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு, இந்த அரசினுடைய திட்டங்களையும் நல்ல பல செயல்களையும் மக்களுக்கு வெளியிடுவதிலும், தெரிவிப்பதிலும் எளிய பொழுது போக்குடன் மக்கள் இதிலே பங்கேற்கச் செய்வதிலும் சாதனை படைத்துள்ளது. ஆங்காங்கே மாவட்டத் தலைநகரங்களில் இப்படிப்பட்ட பொருட்காட்சிகள் நடைபெறும்போது—54 தடவைகள் நடைபெற்ற பொருட்காட்சிகள் மூலம்—288 இலட் சம் ரூபாய் அரசாங்கத்திற்கு வருவாயும் கிடைத்திருக்கிறது.

அதைப்போலவே அரங்கங்கள் இருக்கின்றன. இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் சொன்னார்கள். கலைவாணர் அரங்கம், வள்ளுவர் கோட்டம், அதைப்போல சுற்றுலாத் துறையின் சார்பாக நிர்வகிக்கப்படுகின்ற பூம்புகார்—இவை எல்லாம் இதுவரையில் கவனிப்பாரற்றுக் கிடந்தன. அவற்றை எல்லாம் கவனிக்க இந்த அரசு இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள்.

13.00 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளுவர் கோட்டத்திற்கு மொத்தச் செலவு 40 இலட்ச ரூபாய் என்று இருந்தாலும் இந்த ஆண்டு 27 இலட்ச ரூபாயாவது ஒதுக்கி அதனுடைய மேம்பாட்டுக்காக இந்த துறையின் சார்பாக செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதே போல் கலைவாணர் அரங்கத்தில் அரசு நிகழ்ச்சிகளும், தனியார் நிகழ்ச்சிகளும், கலை நிகழ்ச்சிகளும் இன்னும் பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய அந்த கலைவாணர் அரங்கத்தைப் புதுப்பிப்பதற்காக 17 லட்ச ரூபாய்க்கு மேல் இந்த அரசு செலவு செய்து இருக்கிறது. அதே போல் இந்தத் துறையின் சார்பாக நிர்வகிக்கப்படுகின்ற வேலூரில் இருக்கின்ற அண்ணா கலை அரங்கம், இப்படி பல்வேறு கலை அரங்கங்களை நல்ல முறையில் நிர்வகித்துக் கொண்டு வருகின்றன. அதே போல் பல்வேறு அரசுகளின் சார்பாக வெளியிடப்படும் பத்திரிகைகளில் இன்றைக்கு அனைவரையும் கவரத்தக்க அளவில் வெளியிடுவது அனைத்து மாநிலங்களிலும் தமிழகம் தான் முதலிடம் வகிக்கிறது. தமிழரசு பத்திரிகை கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பு கடந்த முறை முதலமைச்சராக இருந்தபோது 60 ஆயிரம் பிரதிகள் வரையில் விற்று வந்தது. அதற்குப் பிறகு 40 ஆயிரம் பிரதிகளாக குறைந்து இருந்தாலும் மீண்டும் முதலமைச்சராக பொறுப்பு ஏற்ற உடன் இன்றைக்கு 1 இலட்சம் பிரதிகள் வரை அந்த தமிழரசு பத்திரிகை விற்றுக் கொண்டிருக்கிறது. தமிழரசு அச்சகம் மேலும் விரிவு செய்யப்படும். தமிழரசு 1 இலட்சம் தமிழ் காப்பிகள் அடித்தும், ஆங்கில காப்பிகள் 7,500 அடித்தும் அதையும் இன்றைக்கு விற்று வருகிறார்கள். தமிழரசு அச்சகத்தில் மேலும் அறநிலையத் துறையின் சார்பாக நடத்தப்படும் திருக்கோவில் என்ற பத்திரிக்கையும் அச்சடித்து வெளியிடப்படுகிறது. இப்படி இந்த பத்திரிகைகள் வெளியிடுவது மட்டும் அல்லாமல் வெளியீடு பிரிவு என்ற வகையில் ஒரு

1990 மார்ச் 31] [திரு. கே. என். நேரு]

பிரிவைத் துவக்கி தானைத் தலைவர் கலைஞர் அவர்களுடைய தமிழக அரசினுடைய கொள்கை, கோட்பாடுகளை மற்றவைகளை எல்லாம் சிறு சிறு கையேடுகளாக இன்றைக்கு வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் இன்றைக்கு அந்த அச்சகத்தை விரிவு செய்வதற்கு 85 ஆயிரம் ரூபாய் செலவில் 'ஆப் லைன் போர்டு' கூட இன்றைக்கு வாங்கப்பட்டு இருக்கிறது.

தமிழ்நாடு திரைப்பட பயிற்சிக் கல்லூரியைப் பற்றி இங்கே அதிகமான உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். தமிழ்நாடு திரைப்பட பயிற்சிக் கல்லூரியைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால் இந்தியாவில் இருக்கின்ற மிகப்பெரிய மிகவும் நல்ல திரைப்படத் துறை என்ற அளவில் பூனாவில் இருப்பதையும், சென்னையில் இருப்பதையும் நாம் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். இன்றைக்கு இந்தியாவில் இருக்கின்ற அத்தனை தொலைக்காட்சி நிலையத்திலும் பணியாற்றுகின்றவர்கள் எல்லாம் நம்முடைய திரைப்படக் கல்லூரியில் பயின்ற மாணவர்கள் என்ற பெருமை நமக்கு உண்டு. அதேபோல் இன்றைக்கு இந்த திரைப்படத் துறையில் படித்துவிட்டு சென்றவர்கள் கடந்த ஆண்டு நமது தமிழக அரசின் சார்பாக பரிசு வாங்கிய டைரக்டர் தேவராஜ் அவர்கள், அதேபோல் இரு முறை ஜனாதிபதி பரிசைப் பெற்றவர் அர்ச்சனா அவர்கள். இன்னும் பல்வேறு நடிக பெருமக்கள், ஒளிப்பதிவாளர்கள், டைரக்டர்கள் எல்லாம் இன்றைக்கு மிகவும் புகழ் உச்சாணியில் இருப்பவர்கள் எல்லாம் நமது திரைப்படக் கல்லூரியில் பயின்றவர்கள்தான். அப்படிப்பட்ட மிக திறமை வாய்ந்த திரைப்படக் கல்லூரி நமது தமிழக அரசுக்கு இன்றைக்கு கிடைத்து இருக்கிறது. அந்த திரைப்படக் கல்லூரியின் சார்பாக ஒரு வருடத்தில் 174 மாணவர்கள் இப்போது பயின்று கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக இயக்குதல் துறை கதை எழுதுதல் போன்ற துறையில் 3 ஆண்டுகள் படிப்பதற்கு 10 நபர்கள் என்றும் ; திரைப்பட பிரிவுக்கு 3 ஆண்டுகள் படிப்பதற்கு 10 நபர்கள் என்றும் ; ஒளிப்பதிவு ஒளிப் பொறியியல் பிரிவுக்கு 3 ஆண்டுக்கு 10 நபர்கள் என்றும் ; படச்சுருள் கழுவுதல் பிரிவுக்கு 3 ஆண்டுக்கு 10 நபர்கள் என்றும் ; படத் தொகுப்புக்கு 3 ஆண்டுக்கு 10 நபர்கள் என்றும் ; நடிப்பதற்கு 1 ஆண்டுக்கு 20 நபர்கள், 10 ஆண்கள், 10 பெண்கள் என்ற அளவில் ஒவ்வொரு வருடமும் அந்த கல்லூரியில் சேர்க்கப்பட்டு இன்றைக்கு பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் இந்தியாவில் பெருமைப்படைத்த அளவில் அங்கே பயில்கின்ற மாணவர்கள் இன்றைக்கு பெருமையாக பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள்.

அதேபோல் திரைப்படப் பிரிவில் செய்தி மலர் தமிழக அரசின் திட்டங்கள், நல்ல பல செயல்கள் போன்றவைகளை நாட்டு மக்கள் அன்றாடம் தெரிந்து கொள்ளவும், சில

பொழுது போக்கு அம்சங்களோடு அதை நாட்டு மக்களுக்கு தெரிவிப்பதற்காக தமிழ்நாடு திரைப்படப் பிரிவு துவக்கப் பட்டு இதுவரை 350 செய்தி மலர்களை தயாரித்து இருக்கிறது. 35 மில்லி மீட்டர் நகல்கள் இதுவரை 148 நகல்கள் மட்டும் எடுத்து கிராமப்புறங்கள் தோறும், நகர்ப்புறங்கள் தோறும் காண்பிக்கப்பட்டு வந்தன. இந்த ஆண்டு முதல் 200 நகல்கள் எடுப்பதாக அறிகிறோம். அதில் தமிழ்நாட்டு அமைச்சர்கள், முதல் அமைச்சர், மாண்புமிகு அறிஞர் பெருமக்கள், நாட்டில் நடக்கின்ற நிகழ்ச்சிகளை எல்லாம் காட்டுவதோடு மட்டும் அல் லாமல் இந்த அரசினுடைய திட்டங்கள், இந்த அரசைச் சேர்ந்த துறைகள் எல்லாம் நாட்டு மக்களுக்கு போதிக்கின்ற குடும்ப நலத்துறை, வேளாண்மைத் துறை, கூட்டு றவுத் துறை, தொழில் நுட்பத் துறை, தீ அணைப்புத் துறை, மீன் வளர்ச்சித் துறை, வனத் துறை, மற்றும் சமூக நலத்துறை இவைகளுடைய கருத்து விளக்கப் படங்களும் இங்கே எடுக்கப்பட்டு மக்களுக்கு காட்டப்படுகிறது.

அதேபோல் இந்தத் துறையின் சார்பாக 1990–91 ஆம் ஆண்டில் நடைபெற்று இருக்கின்ற நல்லபல செயல்கள், தானை தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு வாரத்திற்கு முன்பு சட்ட மன்றத்தில் அறிவித்தார்களே, குமரி முனையில் 133 அடி உயரத்தில் வள்ளுவருக்கு சிலை ; அதே போல தந்தை பெரியார், வைக்கத்திலே அவருக்கு நினைவு மையம் ; அதே போல கவிஞர் கண்ணதாசன் அவர்களுக்கு மணி மண்டபம் இந்த மூன்றும் இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தத் துறையின் சார்பாகச் செய்யப் படவிருக்கின்றன.

(13-05 மணி

அதே போல, சிறிய 35 மில்லி மீட்டர் திரைப்படம் எடுத்துக் காட்டுவதைப் போல வீடியோ திரைப்படம் எடுக்க வேண்டு மென்பதற்காக இங்கே திரைப்படக் கல்லூரியிலே வீடியோ ஸ்டுடியோ ஒன்று இன்றைக்கு கட்டப்பட்டுக் கொண்டிருக் கிறது. அந்த வீடியோ ஸ்டுடியோவிலே எடுக்கப்பட்ட படங் களை கிராமப்புற மக்களும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் இரண்டு வி.சி.ஆர். கொடுக்கப்பட்டு இன்றைக்கு அங்கே எடுக்கப்படு கின்ற திரைப்படங்கள் உடனுக்குடன் கிராமப் புறங்களிலே காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதோடு மட்டுமல்ல, இந்தத் துறையின் சார்பாக 5 அடிக்கு 5 அடி அகலம் உள்ள திரையிலே ஒவ்வொரு மாவட்ட தலைநகருக்கும் ஒரு வண்டி, படம் காட்டு கின்ற வண்டி வாங்க வேண்டுமென்று சொல்லி முதல் கட்டமாக 4 வண்டிகள் வாங்கப்பட்டு, இன்றைக்கு கிராமப் புறங்களிலே படங்களைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். திரைப்பட

1990 மார்ச் 31] [திரு. கே. என். நேரு]

மானியத்தைப் பற்றி பல்வேறு உறுப்பினர்கள் இங்கே எதிர் கருத்தையும், வல்லரசு அவர்கள் சிறந்த, தரமான படங்களுக்கு இதே மானியத்தைக் குறைத்துத் தரலாம் என்றும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். உள்ளபடியே திரைப்படத் துறைக்கு மானியம் தர வேண்டுமென்று எண்ணியபோது, ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, திரைப்படத் துறையிலே ஒரு பெரிய சரிவு, பல்வேறு கோரிக்கைகளை வைத்து தொழிலாளர்களுக்கும், படம் தயாரிப்பவர்களுக்கும் தகராறு ஏற்பட்டு கிட்டத் தட்ட 4 மாத காலம் எந்தத் திரைப்படமும் எடுக்காது இருந்த நேரத்தில் இந்தத் திரைப்படத் துறையை மேலும் முன்னேற்ற வேண்டுமென்றும், இங்கே சொன்னார்கள், ஆபாச சுவரொட்டிகள் என்றும் படங்களை ஆபாசமாக எடுக்கின்றார்கள்; சென்சார் போர்டு இருக்கிறதா, இல்லையா என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்றெல்லாம் சொன்னார்களே அப்படிப் பட்டவர்களுக்கு அல்லாது, நல்ல தரமான படத்தை எடுக்கின்றவர்களுக்கு நமது தமிழ் இன உணர்வுகளை காட்டுகின்ற படத்தை எடுக்கின்றவர்களுக்கு, அவர்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு தான் தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு பரிசுத் திட்டத்தை அறிவித்தார்கள். அதிலும் குறிப்பாக 12 காப்பியிலிருந்து 20 காப்பி எடுக்கின்றவர்களுக்கு (குறுக்கீடு) நான் பேசி முடித்தவுடன் பேசுங்கள் ; உட்காருங்கள் நீங்கள் குறுக்கே பேசினால் தொடர்ச்சி விட்டுப் போகும். திரு. கே.பி.கே. அவர்கள் சீக்கிரம் முடித்து விடுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் பேசினீர்கள் என்றால் என்னால் பதில் சொல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பேசலாம். (குறுக்கீடு) தொடர்பு விட்டுப் போகும். படத்திலே ''Continuity'' கெட்டுப் போனால் நன்றாக இருக்காது. உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: 12 காப்பியிலிருந்து 20 காப்பி எடுக்கக் கூடியவர்களுக்கு 3 இலட்சம் என்றும், தரமான படமாக இருந்தால், 21 காப்பியிலிருந்து 31 காப்பி எடுக்கின்றவர்களுக்கு 2 இலட்சம் என்றும், சிறந்த படங்களுக்கு முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய் என்றும், இரண்டாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய் என்றும், மூன்றாம் பரிசாக 25 ஆயிரம் ரூபாய் என்றும், சிறப்புப் பரிசாக 25 ஆயிரம் ரூபாய் என்றும் வழங்கி மேலும் நல்ல பல படங்களைத் தயாரிக்க வேண்டும், அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசு செயல் பட்டுக்கொண்டிருக்கிறது. இனியும் செயல்படும் என்பதை தெரிவித்துக் கொண்டு, இங்கே சொன்னார்கள், ஆங்காங்கே, திரைப்படங்களிலே மாவட்டத் தலைநகரங்களிலே இருக்கின்ற சினிமா கொட்டகைகளிலே எல்லாம் பல்வேறு தவறுகள் நடை

[திரு. கே. என். நேரு] [1990 மார்ச் 31

பெறுகின்றன என்றும் அதை உடனடியாக கவனிக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். இங்கே இருக்கின்ற தமிழ்நாடு திரைப் படப் பிரிவின் சட்ட விதிகளுக்கு உட்பட்டு, செய்கின்ற தவறுகள் எதுவாக இருந்தாலும் நிச்சயமாக கண்டிக்கப்படும்; அது ஒடுக்கப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போல வீடியோக்கள், சினிமாவை வீடியோ அழித்து விடுமோ என்ற எண்ணத்தில் இன்றைக்கு வீடியோ லைப்ரரி வைக்க வேண்டுமென்று சொன்னால் கூட இன்றைக்கு இந்தத் துறையின் சார்பாக அனுமதி வழங்கப்பட்டுத்தான் அவர்கள் வைக்க முடியும். அந்த வகையிலே தமிழ்நாடு முழுவதும் 2,222 வீடியோக் கடைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு இன்றைக்கு நடந்து கொண்டிருக்கின்றன. வெட்டுப் பிரேரணைகள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அவர்களுடைய வெட்டுப் பிரேரணைகளை நீக்கி, இந்தத் துறையின் சார்பாக கேட்கப்பட்ட தொகைக்கு அனுமதி வழங்குமாறு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "Point of order" என்ற முறையில், திருமதி பாப்பா உமாநாத் மற்ற கோரிக்கை. களுக்கெல்லாம் பின்னால் நான் வாய்ப்பு அளிக்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு விளக்கம் கேட்பதற்காகத் தான் எழுந்தேன். எனக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது. இன்றைக்கு அமைச்சர் அவர்கள் சபாநாயகரா? அல்லது நீங்களா என்று எனக்கு கொஞ்சம் ஐயப்பாடு வந்து விட்டது. இருந்த போதிலும் கூட, இந்த ஆபாசமாக சினிமா விளம்பரம் செய்வதைப் பற்றி அமைச்சர் அவர்களுடைய பதிலில் உருப்படியான விஷயங்கள் கவனிக்கப்படும் என்பதல்ல; அதற்காக 1987-ல் வந்த சட்டம் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. இப்படி பெண்களை ஆபாசப்படுத்தக் கூடிய சட்டம் இருக்கிறது. இரண்டு வருடமாக அதை அமல்படுத்தவில்லை. பல சினிமா தியேட்டர்களில் நீலப் படங்கள் காட்டப்படுகின்றன (மணியடிக்கப்பெற்றது).

13-10 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு சிறிய திருத்தம். ஆபாசத்தைத் தடுப்பதற்கான சட்டம்.

திருமதி பாப்பா உமாநாத்: ஆபாச விளம்பரத்தைத் தடுப்பதற்காகத் தான் இந்த சட்டம். அதைத் தடுப்பதற்கான சட்டம் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அதை அமல் நடத்த வேண்டும். வெளியில் பார்க்கவே முடியவில்லை. மகனோடு,

மகளோடு எந்த ஒரு பெற்றோரும் படங்களைப் பார்க்க முடிய வில்லை. நிலைமை அவ்வளவு மோசமாக இருக்கிறது.. அமைச்சர் அவர்களும் அதைப் பார்த்திருப்பார். அவர் இளைஞராக இருப்பதால் ரசித்திருப்பாரோ என்னவோ, எனக்குத் தெரியாது. (சிரிப்பு) பெண்களை மோசமான அளவுக்கு, ஆபாசப்படுத்தும் அளவுக்கு விளம்பரங்கள் வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அமைச்சர் இளைஞர் என்பதால் உடனே எழுந்து விட்டார்கள்.

திருமதி பாப்பா உமாநாத்: எனவே அதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு ''ஏ'' சினிமா படங்களுக்கு விளம்பரமே வேண்டாம் என்றும் கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு மட்டும் பதிலைச் சொல்லிவிடலாம். அமைச்சர் அவர்கள் பேசிய பிறகு மீண்டும் கோரிக்கை வினாக்கள் எழுப்புவதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: உறுப்பினர் அவர்களின் கருத்துக்களுக்கேற்ப நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: அவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய சட்டப் பேரவையிலே 10 உறுப்பினர்கள் நாங்கள் கோரிய இந்த மானியங்களின் மீது தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில் இங்கே மொத்த மாக, சுற்றுலா, செய்தி, மற்றும் திரைப்பட தொழில் நுட்பவியல் ஆகிய துறைகளுக்கு 4 கோடியே 80 லட்சம் ரூபாய்க்கு மானியக் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தாலும் கூட, இந்த மொத்தத் தொகையில் சுற்றுலாத் துறைக்குரிய தொகை ஏறத்தாழ 90 லட்சம் ரூபாய்தான். ஆகவே, ரூ. 3,90,000 ரூபாய் அளவுக்கு செய்தித் துறைக்கும், திரைப்படத் தொழில் நுட்ப இயல் துறைக் கும் உரிய தொகையாக இருக்கிறது. இந்த சுற்றுலாத் துறை யைப் பொறுத்தமட்டிலே, இது ரெவின்யூ எக்ஸ்பெண்டிச்சர். இந்தத் துறையில் ஆகக்கூடிய செலவினங்களுக்காக கோரப்பட்ட தொகை. இது தான் சுற்றுலா வளர்ச்சிக்கும் உரிய தொகையா என்று சந்தேகம் சிலருக்கு எழலாம். உள்ளபடியே கடந்த ஐந்தாண்டுகளில் இந்தத் துறைக்காக சுற்றுலா செலவுகளுக் காக ஒதுக்கிய தொகை அல்லது செலவிட்ட தொகை ஐந்தாண்டு களில் ஏறத்தாழ 5 கோடி ரூபாய் தான். ஏழாவது ஐந்தாண்டுத்

திட்டக் காலத்தில் 5 கோடி ரூபாய் தான் செலவிடப்பட்டது. அப்படியானால், ஆண்டு ஒன்றுக்கு 1 கோடி ரூபாய்தான் வருகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் மத்திய அரசு 50 லட்சம் ரூபாயும் மாநில அரசு 50 லட்சம் ரூபாயும் கொடுத்து, இந்த வளர்ச்சிப் பணிகள் சுற்றுலாத் துறையில் நடை பெற்று வந்திருக்கின்றன. இந்த 5 கோடி ரூபாய்—அதாவது ஐந்து ஆண்டுகளில் செலவிட்டது என்பது மிக மிகச் சிறிய தொகைதான்.

அரியானா, ராஜஸ்தான் போன்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இங்கே நடைபெற்றிருக்கிற சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மிக மிகச் சாதாரணமானவை. குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய எதுவுமே நடைபெறவில்லை என்றுதான் நான் சொல்ல வேண்டும். ஆகவேதான் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்த ஆண்டு முதல் 1990-91-ல் தொடங்குகிற எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், வருகிற ஐந்தாண்டுக் காலத்தில் ஏறத்தாழ 112 கோடி ரூபாய் செலவிட வேண்டுமென்ற திட்டத்தைச் சுற்றுலாத் துறை வகுத்திருக்கிறது.

13-15 மணி

இந்த நிதியை எங்கேயிருந்து பெறுவது என்பது கேள்வி. மாநில அரசு ஓரளவுக்குத் திட்ட ஒதுக்கீட்டில் கணிசமானத் தொகையைத் தந்தால்தான் மத்திய அரசிடமிருந்து மீதித் தொகையை நாம் பெற முடியும் ; இன்னும் வேறு நிதியாதாரங்களையும், நிதி வாயில்களையும் நாம் கண்டுபிடித்திட முடியும் என்ற அளவில் இந்தத் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 6 மாத காலமாக எங்கெங்கெல்லாம் எங்களுடைய கோரிக்கையை எங்களுடைய குரலை எழுப்ப முடியுமோ அங்கெல்லாம் குரலை எழுப்பி இருக்கிறோம். இறுதியாக நம்முடைய மாநில திட்டக் குழு தொடக்க காலத்தில் அதாவது கடந்த 5 ஆண்டுகாலத்தில் என்ன நிதியினை ஒதுக்கித் தந்ததோ அந்த அடிப்படையில்தான் அடுத்த 5 ஆண்டுகளுக்கும் தரப்படும் என்று ஒரு நிலைபாடு வந்தது. ஆனால் நம்முடைய மாநிலத் திட்டக் குழு கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு எங்களுடைய குரலுக்குச் சற்று செவிசாய்த்து குறைந்தபட்சம் வருகிற 5 ஆண்டுகளில் 20 முதல் 25 கோடி ரூபாய் வரையில் நாங்கள் ஒதுக்கித் தருகிறோம் என்ற செய்தியை எங்களுக்குச் சொல்லி இருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 5 ஆண்டுகளில் $2\frac{1}{2}$ கோடி ரூபாய் மொத்தத்தில் தரப்பட்டது. இது மாநில திட்ட ஒதுக்கீடு. வருகிற 5 ஆண்டுக்காலத்தில் ஏறத்தாழ 25 கோடி ரூபாய் பெற இருக்கிறோம். இது ஏறத்தாழ 10 மடங்கு அதிகம்.

1990 மார்ச் 31] [திரு. கே.பி. கந்தசாமி]

இந்த 25 கோடி ரூபாயை வைத்து எப்படி 112 கோடி ரூபாய் அளவிற்கான திட்டங்களைச் செயல்படுத்த முடியும் என்பது அடுத்த கேள்வி. 25 கோடி ரூபாய் என்றால் மத்தியிலேயும் நம்முடைய அரசாக இருக்கின்ற காரணத்தால்—இதற்கு முன்பாக மேச்சிங் கிரான்ட் 50 சதவீதம்—50 சதவீதம் என்றிருந்தால் நாங்கள் அதைச் சற்று அதிகமாக உயர்த்திக் கேட்டுப் பெற முயற்சிப்போம். ஹரியானாவில் இருக்கக்கூடியவர்கள், ராஜஸ்தானிலே இருக்கக்கூடியவர்கள் டெல்லிக்கு அருகிலே இருக்கின்ற காரணத்தால் அடிக்கடி டெல்லியினுடைய கதவைத் தட்டி அதிகமான பணத்தை அவர்கள் பெற்றுச் சென்றுவிடுகிறார்கள். வருகிற 5 ஆண்டுக்காலத்தில் எப்படியும் நாமும் டெல்லியினுடைய கதவை அடிக்கடி தட்டி, இங்கே 25 கோடி என்று பெற்றால் அங்கே ஏறத்தாழ 40 அல்லது 50 கோடி பெற்றிட முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. இப்படி மத்திய திட்ட ஒதுக்கீடு, மாநில திட்ட ஒதுக்கீடு, மத்திய மானியம் இவை தவிர வேறு வழிகளும் இருக்கின்றன. இந்த நிதியாதாரங்களை எல்லாம் திரட்டி எப்படியும் வருகிற 5 ஆண்டுகளில் 100 கோடி ரூபாய்க்குக் குறைவு இல்லாத திட்டங்களை நாம் செயல்படுத்த முடியும் என்ற நம்பிக்கையோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

இங்கே பேசிய உறுப்பினர்கள், குறிப்பாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பணிகளைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அத்தனையும் சொல்லிவிட்டபின் குறிப்பிட்டு ஒன்றைப் பாராட்டுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் பாராட்டவில்லை. அங்கே பணிபுரிகின்ற ஊழியர்களுக்குச் சில வசதிகள் இன்னும் செய்து தரப்படவில்லை என்று எடுத்துச் சொன்னார்கள். அறை வாடகைகள், உணவுப் பொருட்களின் விலை இவை எல்லாம் அதிகமாக இருக்கின்றன என்று எடுத்துச் சொன்னார்கள். ஆனால் மிக முக்கியமான ஒன்று. ஐந்தாவது ஊதியக்குழு செய்த பரிந்துரைக்கேற்ப அந்த ஊதியத்தை சுற்றுலா வளர்ச்சிக் கழக ஊழியர்களுக்குத் தருகிற அந்த ஆணையை பிறப்பித்திருக்கிறோம். இதனால் ஏறத்தாழ ஆண்டு ஒன்றுக்கு 40 இலட்சம் ரூபாய் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குக்கூடுதல் செலவு ஏற்படுகிறது. இதற்காக நம்முடைய திரு. இளம்வழுதி அவர்கள் பாராட்டு தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். எனவே நிச்சயமாக அவர்கள் பாராட்ட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாராட்டு பின்னால் இருந்து வருகிறது (சிரிப்பு).

13-20 மணி

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டுவதற்கு அந்த அளவுக்கு வயதும் தகுதியும் கிடையாது. ஆகவேதான் ஒரே வார்த்தையிலே நீங்கள் பொறுப்பேற்ற பிறகுதான் சுற்றுலாத் துறை வாரிய ஊழியர்கள் நிம்மதி பெருமூச்சு விடுகிறார்கள் என்று ஒரே வார்த்தையில் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெரிய பாராட்டாகவே இருக்கிறது. (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பாராட்டிட வேண்டும் என்று நான் கேட்கவில்லை. சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினை தான் பாராட்டிட வேண்டுமென்று சொன்னேன். ஏனென்றால் இந்த கழகத்திலே பணி புரிகின்ற ஊழியர்கள் மீது சற்று அக்கறை கொண்டவர்கள் சட்டமன்ற உறுப்பினர் இளம்வழுதி அவர்கள். ஆகவேதான் நான் சொன்னேன். அந்த கழகத்திற்கு அவர்கள் பாராட்டுக்களை நிச்சயமாக தெரிவித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இங்கே இந்த கழகத்தின் மூலமாக நிறைய வருவாய் வருகின்றது. அறை வாடகை அதிகமாக வசூலிக்கப்படுகிறது. அதேப்போல உணவுப் பண்டங்களுக்கும் அதிகமான கட்டணம் இருக்கிறது. அதிகமாக தொகை இருக்கிறது. ஆகவே, வருவாய் அதிகமாக இருக்கிறது என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். யதார்த்த நிலை அது அல்ல. இந்த ஊதிய உயர்வு கொடுத்த பிறகு இந்த ஆண்டிலே மட்டும், இந்த பெப்ரவரி மாதம் வரையிலே கணக்கிட்டுப் பார்த்தோம். மார்ச் மாதம் வரைக்கும்கூட கணக்கிட்டு பார்த்தால் ஏறத்தாழ சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் லாப நஷ்டம் கணக்கிட்டுப் பார்த்தால் நஷ்டம் தான். இந்த ஆண்டு ரூபாய் 50 இலட்சம் நஷ்டம். இன்ட்ரஸ்ட் டிப்ரிசியேஷன் இவைகளை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்தபிறகு இந்த நஷ்டம். ஆனால் கிராஸ் பிராபிட் என்று பார்த்தால் 20 இலட்சம் ரூபாய் இருக்க முடியும். இந்த 20 இலட்சம் ரூபாயைத் தான் மீண்டும் சில பணிகளுக்கு அந்த நிதியை நாம் செலவிட வேண்டிய நிலையிலே இருக்கிறோம். ஆகவே சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அதிகமான இலாபத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று நினைத்தால் அது தவறான கருத்து என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அப்படிப்பட்ட அபரிமிதமான லாபத்திலே நடக்கக்கூடாது.

நம்முடைய ஆளுநர் அவர்கள் போன ஆண்டு குற்றாலத்திற்கு சென்று அங்கு 6 நாட்கள் தங்கியிருந்துவிட்டு வந்த பிறகு எங்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். குற்றாலத்திலே 2, 3

1990 மார்ச் 31] [திரு. கே. பி. கந்தசாமி]

மாதம் தான் சீசன் காலம். மே மாதம், ஜுன் மாதம், ஜுலை மாதம். அங்கே சென்ற நம்முடைய ஆளுநர் அவர்கள் தனியார்கள் நடத்துகின்ற தங்கும் விடுதிகளிலே அந்த விடுதி அறைகளுடைய வாடகை மிக அதிகமாக இருக்கிறது. ஸ்கை ஹை என்ற அளவுக்கு உயரப் பறந்துகொண்டிருக்கிறது. இந்த விலையை குறைத்து கீழே கொண்டு வரவேண்டுமென்றால் ஓட்டல் தமிழ்நாடு என்ற அளவிலே இங்கே சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக ஒரு தங்கும் விடுதி அமைத்திட வேண்டும் என்ற கருத்தினை இங்கே தெரிவித்தார்கள். அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே எங்கெங்கே அவசியமோ அங்கங்கே நம்முடைய ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதியைக் கட்டிக்கொண்டிருக்கிறோம். இந்த தங்கும் விடுதி, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நோக்கம், ஆப்ஜெக்ட் இருக்கிறதே அது, சாதாரணமாக வணிக நோக்கமாக இருக்க முடியாது. ஆனால் தனியார் துறையிலே இலாபம் கிட்டுவதற்காக மட்டும் தங்களை பணிகளைச் செய்ய முடியும். ஆனால் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பொதுத் துறையிலே உள்ள சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பப்ளிக் அண்டர்டேக்கிங். இங்கே இலாபம் ஒன்றுதான் குறிக்கோளாக நிச்சயமாக இருக்கமுடியாது. மக்களுக்கு செய்யக்கூடிய சேவை அதிலும் குறிப்பாக ''பேலன்சிங் ஆப் தி பிரைஸ் ஸ்ட்ரக்ச்சர்'' அங்கே ஓட்டல்களை எடுத்துக் கொண்டால், ஏனைய ஓட்டல்களிலே இருக்கக்கூடிய விலையை சற்றுக் குறைப்பதற்குத்தான் எங்களுடைய நோக்கம். அந்த வகையிலே சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அதனுடைய பணியினை செய்து கொண்டிருக்கிறது. முழுமையாக செவ்வனே நடைபெறுகிறது என்று நாம் சொல்லிக்கொள்ள முடியாது. ஏனென்றால் ஓராண்டு காலமாகத்தான் அந்த துறையினுடைய பொறுப்பை ஏற்று வகித்து வருகிறேன். குறைபாடுகள் இருக்கின்றன. அங்கங்கே ஓட்டைகள் இருக்கின்றன. அந்த ஓட்டைகளை அடைப்பதற்கு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்..

நான் ஏற்கெனவே சொன்னதுபோல, வனத்துறையிலே சந்தன மரத் திருட்டை எப்படி ஓராண்டுக் காலத்திலே முழுமையாக ஒழித்துக்கட்டிவிட முடியும் என்று எண்ணுகிறோமோ அது போல சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திலே இன்னும் சில வழிமுறைகளை எடுத்து, இன்னும் சில நடவடிக்கைகளை எடுத்து, எங்கெங்கே குறைபாடுகள் இருக்கிறதோ அவைகளை எல்லாம் நீக்கி இன்னும் விலை குறைவாகவும், பதார்த்தங்கள் விலை குறைவாகவும், அறைகளுடைய வாடகை குறைவாகவும் இருக்கக்கூடிய அளவிலே இந்த சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சீர்செய்திட செம்மைப்படுத்திடத் தக்க முயற்சிகளை நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

13-25 மணி

அதுபோல பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. மொத்தத்தில் வருகிற 5 ஆண்டுக் காலத்திலே 100 கோடி ரூபாய் பணிகளை எடுத்துச் செய்ய எண்ணியிருக்கிறோம் என்பதை முதலிலேயே எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

அடுத்தபடியாக, போன ஆண்டு நான் பேசியபோது கன்னியாகுமரிக்கு அருகிலே வட்டக்கோட்டை பகுதியிலே ஒரு டூரிஸ்ட் காம்ப்ளக்ஸ் அமைத்திட முடியும் என்ற கருத்தை எடுத்து வைத்தேன். அப்போது காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் இந்த நிதி ஒதுக்கீட்டில் பணம் ஒதுக்கப்படவில்லையே, எப்படி இந்தப் பணிகளைச் செய்ய போகிறீர்கள் என்று கேட்டார்கள். திட்ட ஒதுக்கீட்டில் ஒதுக்கியிருந்தால்தான் பணிகளைச் செய்ய முடியும் என்ற கட்டாயம் இல்லை, வேறு நிதி ஆதாரங்களை வைத்தும் செய்ய முடியும். அப்போது ஜப்பான் நாட்டிலே, பொதுத் துறையிலே இருக்கின்ற ஒரு நிறுவனம், இங்கே 100 ஏக்கர் நிலத்தை தந்தால், சென்னைக்கு அருகிலே, கடற்கரை பகுதியிலோ அல்லது வேறு எங்காவது நிலத்தைத் தந்தால், நாங்கள் இங்கே வந்து ஏறத்தாழ 100 கோடி ரூபாய் செலவிலே ஒரு டூரிஸ்ட் காம்ப்ளக்ஸ் அமைப்பினை ஏற்படுத்த இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது தொடர்பாக கடித போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது. ஆக, அவர்கள் சார்பாக டெலிகேசன் ஒன்று இங்கே வர இருக்கிறது. ஜப்பான் நாட்டினுடைய அந்த பொது நிறுவனம் வட்டக்கோட்டையிலே இந்த டூரிஸ்ட் காம்ப்ளக்சை நிறுவ முன்வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

அதுபோல, சென்னையிலே தீவுத் திடலிலே ஆண்டுதோறும் பொருட்காட்சி நடக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் பொருட்காட்சிக்கு முன்பு டெண்டர் விட்டு, அதையொட்டி டெம்ப்ரரி ஸ்டால்ஸ்களை சவுக்கு மரங்களை அங்கே கொண்டு வந்து அமைக்கிறார்கள். அதற்கு ஒரு இரண்டு மாத காலம் ஆகிறது. பொருட்காட்சி முடிந்தபிறகு அவற்றை எடுத்துச்செல்ல ஒரு இரண்டு மாத காலம் ஆகிறது. இப்படி வீண் காலதாமதம், வீண் பண விரயம் இவைகளை எல்லாம் தவிர்க்க அங்கே நிரந்தரமாக சில கட்டிடங்களை அமைத்து நிரந்தரப் பொருட்காட்சியை உருவாக்கிட எண்ணியிருக்கின்றோம். ஏறத்தாழ 22 ஏக்கர் நிலம் அங்கே இருக்கிறது. இந்த 22 ஏக்கர் நிலம் போக அங்கே இருக்கிறதே பக்கிங்காம் கெனால் அதன் பரப்பளவு ஏறக்குறைய 13 ஏக்கர் இருக்கிறது. இரண்டையும் சேர்த்தால் 35 ஏக்கர் வரும். இந்த கால்வாய் அங்கே ஓடிக்கொண்டிருப்பதால் துர்நாற்றம் வீசுகிறது. எப்படியாவது அதை சுத்தப்படுத்த வேண்டுமென்று பொதுப்பணித் துறை முயற்சி எடுத்துக்கொண்டிருக்

1990 மார்ச் 31] [திரு. கே. பி. கந்தசாமி]

கிறது. அதற்கு எப்படி இருந்தாலும் இன்னும் ஓராண்டு, ஈராண்டு அல்லது 5 ஆண்டுக் காலம் ஆகலாம். இதற்கிடையே அமெரிக்க நாட்டிலே ஆற்றுக்கு அடியிலே சாலைகள் அமைத்து வசதி செய்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது இங்கேயும் துர்நாற்றம் வீசுகின்ற அந்த கெனாலின் மேல் பாகத்தில் ரோடு போட்டால் என்ன என்கிற திட்டத்தை வைத்திருக்கிறோம். அப்படி செய்தால் அந்த கழிவு நீரும் வெளியே தெரியாது. அதுபாட்டுக்கு கீழே ஓடிக்கொண்டிருக்கும், மேலே நாம் சாலை அமைக்கவும் முடியும். நமக்கு 35 ஏக்கர் பரப்பளவு நிலமும் கிடைக்கும். மேலும் 10 கோடி, 20 கோடி ரூபாய் செலவிலே டெல்லியிலே அம்யூஸ்மென்ட் பார்க் என்கிற பார்க் ஒன்றை அப்கார் என்கிற ஓர் அமைப்பு நடத்துகிறது. சிறுவர்கள் மாலை வேளைகளிலே அங்கே போய் பொழுதுபோக்குகின்ற அளவுக்கு அங்கே சாதனங்கள் நன்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. சயின்டிபிக், எலெக்ட்ரானிக் கூட்ஸ் எல்லாம் அங்கே வைத்திருக்கிறார்கள். அதுபோல இங்கேயும் ஒன்றை அமைக்க தொழில் முனைவர்கள் முன்வந்திருக்கிறார்கள். அவர்களுடைய உதவியோடு நிச்சயமாக ஓராண்டுக் காலத்திற்குள் எப்படி அப்கார் என்கிற அமைப்பு டெல்லியில் அம்யூஸ்மென்ட் பார்க்கை அமைத்திருக்கிறதோ அது போல இங்கேயும் அம்யூஸ்மென்ட் பார்க் ஒன்றை அமைக்கும் திட்டத்தை வைத்திருக்கிறோம்.

அடுத்து, மதுரைக்கு அருகிலே வண்டியூர் கண்மாய் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. வல்லரசு அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஏறத்தாழ 140 ஏக்கர் பரப்பளவுள்ள ஏரியை சுற்றிலும், 4 சுற்றுப் புறங்களிலும் வீடுகளைக் கட்டிவிட்ட காரணத்தினால், அந்த ஏரியின் தண்ணீர் விவசாயத்திற்கு தேவையில்லாமல் இருக்கிறது.

13-30 மணி

அந்த ஏரியின் மத்தியிலே தீவு போன்ற இடத்தை அமைத்து, அந்தத் தீவைச் சுற்றிலும் படகுச் சவாரி செய்யவும், தீவிலே 'அம்யூஸ்மென்ட் பார்க்' அமைக்கவும் திட்டமிட்டிருக்கிறோம். இதைப்போல திருச்சியிலே, கோவையிலே, முக்கியமான நகரங்களிலே திட்டங்களை நிறைவேற்ற இருக்கிறோம். இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்றினால், வருகின்ற ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிச்சயமாக பல்வேறு அமைப்புகளை, தங்கும் விடுதிகளை ஏற்படுத்த முடியும். இன்றைக்கு கன்னியாகுமரியிலே நல்ல தங்கும் விடுதியில்லை. எப்படி திருவனந்தபுரத்திற்கு அருகிலே உள்ள கோவளத்திலே வெளி நாட்டுப் பயணிகள்கூட வந்து 4, 5 நாட்கள் தங்கிப் போகுமளவுக்கு வசதிகள் செய்யப்படுகிறதோ அப்படி கன்னியாகுமரி அருகிலே, வட்டக்கோட்டை தவிர, கன்னியாகுமரி அருகிலே 100 அல்லது 150

அறைகள் கொண்ட டூரிஸ்ட் காம்ப்ளக்ஸ் கட்டுவதற்கு நாங்கள் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே இப்படிப்பட்ட நல்ல பணிகளை சுற்றுலாத் துறை மூலமாகச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவிப்பதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டுள்ளதுபோல பூம்புகார் வளாகத்திற்காக ஒரு கோடி ரூபாய் செலவு செய்ய நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம். அங்கே கடல் அரிப்பைத் தடுக்க சுவர்கள் அமைக்கவும், ஏனைய சம்பந்தப்பட்ட பணிகளுக்கும் ஒரு கோடி ரூபாய் செலவிட திட்டமிட்டிருக்கிறோம். இப்போது பணிகள் அங்கே எடுக்கப்பட்டிருக்கின்றன. விரைவிலே முடியும். பூம்புகார் வளாகம் தொடங்கப்பட்ட நேரத்தில் 3 நாட்கள் இந்திர விழா—சித்திரை முழு நிலவு விழா என்று திரு. சித்திக் அவர்கள் எடுத்துச் சொன்னது போன்று, இந்த ஆண்டு 3 நாட்கள் விழா, மே 7, 8, 9ஆம் தேதிகளில் பெரும் விழாவாக நடத்த ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து தரங்கம்பாடி பற்றிச் சொன்னார்கள். பிச்சாவரம், சிதம்பரம், தரங்கம்பாடி, பூம்புகார் ஆகிய இடங்களை ஒருங்கிணைத்து சுற்றுலா மையம் அமைக்கும் திட்டம் அகமதாபாத்தில் உள்ள நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் டிசைன் என்ற நிறுவனத்தின் மூலமாகத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக மத்திய அரசு 9 லட்சம் ரூபாய் மானியமாகத் தருகிறது. அந்த மானியத்தைப் பெற்று, அந்தத் திட்டத்தை தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். திட்டம் வந்த பிறகு, அந்தப் பகுதிகளை ஒருங்கிணைத்து சுற்றுலா மையமாக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள்.

சுற்றுலாப் பணிகளை பொதுத் துறையில் மட்டுமல்ல, அரசுத் துறையில் மட்டுமல்ல, தனியார் துறையிலேயும் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவே தனியார் துறையிலே இப்படிப்பட்ட பணிகளை செய்வதற்கு யார் யாரெல்லாம் முன்வருகிறார்களோ, திட்டங்களோடு முன்வருகிறார்களோ அவர்களுக்கு ஊக்கம் அளித்துக் கொண்டிருக்கிறோம். இங்கே தாம்பரம் அருகிலே கேரளாவைச் சேர்ந்த ஒரு தொழிலதிபர் ஏறத்தாழ 15 கோடி ரூபாய் செலவிலே 100 ஏக்கர் நிலத்திலே சுற்றுலா மையத்தை உருவாக்கிட முன்வந்திருக்கிறார் அவருக்கு உரிய ஊக்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நம் சிபாரிசுக் கடிதத்தின் பேரிலே மத்திய அமைப்பு மூலமாகக் கடன் பெற்று விரைவிலே அந்தத் திட்டத்தைத் தொடங்க இருக்கிறார். அதைப்போல மகாபலிபுரம் போகிற வழியில் ஏற்கெனவே வி.ஜி.பி. தங்கக்

1990 மார்ச் 31] [திரு. கே. பி. கந்தசாமி]

கடற்கரை நல்ல முறையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு சென்னையிலே இருந்து போகக்கூடியவர்கள் மாலை வேளையில் அல்லது வாரத்திற்கு ஒரு முறை அல்லது விடுமுறை நாட்களிலே சென்று பார்க்கக்கூடிய சுற்றுலா ஸ்தலமாக அதை உருவாக்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய ஊக்கம் கொடுத்து கொண்டிருக்கிறோம். இது தவிர தமிழ்நாட்டைச் சேர்ந்த இன்னொரு தனியார் நிறுவனம் மகாபலிபுரம் கடற்கரையிலே 50 ஏக்கர் நிலத்தைச் சொந்தமாக வைத்திருக்கிறார்கள். அங்கே 10 கோடி ரூபாய் செலவிலே சுற்றுலா மையத்தை ஏற்படுத்த திட்டம் தயாரித்துத் தந்திருக்கிறார்கள். அவருக்கும் உரிய ஊக்கம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். மரங்களை வெட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்; இவர்களுடைய பட்டியல் இங்கே இருக்கின்றது.

இப்படி தனியார் துறையையும் ஊக்கப்படுத்த சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை நாங்கள் வளப்படுத்திக் கொண்டு இருக்கின்றோம். அதுபோல வருகின்ற ஆண்டு, 1991-ஆம் ஆண்டு 'இந்திய சுற்றுலா ஆண்டு' ஆக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. "Visit India Year" அறிவிக்கப்பட்டு இருக்கின்றது. ஆகவே அந்த ஆண்டிலே பிற மாநிலங்களிலே இருந்தும், வெளிநாடுகளிலே இருந்தும் அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்ற வகையிலே அந்த அடிப்படை வசதிகளை எந்த அளவுக்கு அதிகமாகச் செய்து தர முடியுமோ அவற்றுக்கான திட்டங்களையும் நாங்கள் செய்து கொண்டு இருக்கின்றோம் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லி, இதோடு இந்தத் துறை பற்றி எடுத்து வைத்த கருத்துகளுக்கு எனது பதிலை நான் தெரிவித்துக் கொண்டு, இந்தத் துறை கோரிய மானியத்திற்கு வெட்டுத் தீர்மானங்களை நீக்கிக்கொண்டு எங்களுக்கு மானியத்தை அளிக்க அனுமதி தர வேண்டும் என்று இந்த அவையை நான் கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்து வனத் துறை பற்றியும் நான் சுருக்கமாக என்னுடைய பதிலைத் தெரிவித்துவிடுகிறேன். வனத் துறையிலே ஒருபுறம் காடுகளை வளர்க்க வேண்டும்; இன்னொருபுறம் இருக்கின்ற காடுகள் அழிக்கப்படுவதைத் தடுக்க வேண்டும் என்பது தான் எங்களுடைய "Double Edged Weapon" என்று சொல்கின்ற இரு முனைத் திட்டங்கள். வளர்க்கின்ற பணிகளைப் பொருத்தமட்டில் இங்கே நம்முடைய அண்ணாமலை அவர்கள் மிக வேதனையோடு சொன்னார்கள். எங்கே காடுகளை வளர்க்க வேண்டுமோ அங்கு மலைகள் எல்லாம் பொட்டல் வெளியாகக் காட்சி அளிக்கின்றன. எங்கே விவசாயம் செய்ய வேண்டுமோ அங்கே நீங்கள் காடுகளை வளர்த்துக்

கொண்டு இருக்கிறீர்கள். இது ஒரு முரண்பட்ட சமுதாயப் பிரச்சினை அல்லவா என்ற ஒரு கேள்வியை இங்கே அவர்கள் எழுப்பினார்கள். ஓரளவுக்கு அவர்கள் கூறியதிலே உண்மை இருக்கிறது என்று சொன்னாலும் முழுமையான உண்மை அது அல்ல என்பதை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். ஏதோ சில இடங்களிலே மலைகள் பொட்டல் வெளியாகக் காட்சி அளிக்கின்றன. ஆனால் பல இடங்களிலே நல்ல 'நேச்சுரல் பாரெஸ்ட், கிரீன் கவர்' இருக்கிறது. நான் பல மலைகளுக்குச் சென்று இருக்கின்றேன். நம்முடைய கம்பம் இராமகிருஷ்ணன் அவர்களோடு மேக மலைக்குச் சென்றேன். அது மிக அழகாக இருக்கின்றது. அங்கு மலை உச்சியிலே அடர்ந்த காடுகள் 'நேச்சுரல் பாரெஸ்ட்' அதற்குக் கீழே தேயிலைத் தோட்டம் பச்சைக் கம்பளம் விரித்ததுபோல் காட்சி தருகின்றது. இப்படி பல மலைகளில் இருக்கின்றது. ஆனால் சில இடங்களில் நம்முடைய அண்ணாமலை அவர்கள் குறிப்பிட்டது போல் பொட்டல் காடுகளாகத் தான் காட்சி அளிக்கின்றன.

நான் சமீபத்தில் கோவை மாவட்டம், பொள்ளாச்சிக்குச் சென்றேன். அங்கு ஆனைமலைப் பகுதியைப் பார்த்தேன். அங்கே அவர்கள் குறிப்பிட்டதுபோல் பொட்டல்காடுகளாக காட்சி தருகின்றது. அந்த நண்பரிடத்தில் ஏன் அப்படி இருக்கிறது என்று கேட்டேன். அங்கே மரங்களே வளராதா என்று கேட்டேன். நல்ல மரங்கள், அடர்ந்த மரங்கள் அங்கே இருந்தன. அங்கே குறிப்பாக பொது வாழ்க்கையிலே இருந்தவர்கள் மரங்களை வெட்டி அழித்து விட்டார்கள் என்று சொன்னார்கள். பொள்ளாச்சி என்றால் உங்களுக்குத் தெரியும் என்று நான் கருதுகின்றேன். யார் அதைச் செய்து இருக்க முடியும் என்பது இங்கே உள்ளவர்களுக்குத் தெரியும். அந்த அளவுக்கு முந்தைய ஆட்சிக் காலத்தில் இருந்திருக்கின்றது. நான் இதை எங்கே வேண்டுமானாலும் சொல்ல முடியும். ஒரு 10 பேர், சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களே இப்படிப்பட்ட அழிவு வேலையிலே ஈடுபட்டு இருக்கின்றார்கள். நம்முடைய மதிப்புமிக்க பி. எச். பாண்டியன் அவர்கள், யார் வெட்டி இருந்தாலும்சரி, 1947 ஆம் ஆண்டிலிருந்தே அந்தப் பட்டியலை எடுத்து, அவர்களைக் குண்டர்கள் சட்டத்திலே பிடிக்க வேண்டும் என்று சொன்னார்கள். கிரிமினல் வழக்கிலே அதற்கு லிமிட்டேஷன் இல்லை என்பதையும் எடுத்துச் சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அந்தப் பட்டியலைத் தான் நாங்க்ள் தயாரித்துக்கொண்டு இருக்கின்றோம். இங்கேகூட நான் என்னுடைய கையில் வைத்து இருக்கின்றேன். ஆனால் 1947-லிருந்து மரங்களை வெட்டியவர்கள் பட்டியல் என்னுடைய கையில் இல்லை. 2 ஆண்டு காலத்திற்கு உரிய பட்டியல் மட்டும் என்னுடைய கையில் இருக்கின்றது. அதாவது 1988-89 மற்றும் 1989-90 ஆகிய

1990 மார்ச் 31] [திரு. கே. பி. கந்தசாமி]

இந்த இரண்டு ஆண்டுகளிலும் தனியார் தோட்டங்களிலே இருந்து மரங்களை வெட்டுவதற்கு அனுமதி கோரியவர்கள், மரங்களை வெட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்; இவர்களுடைய பட்டியல் இங்கே இருக்கின்றது.

13-40 மணி

1988-89ஆம் ஆண்டிலே மொத்தமாக மனுச் செய்தவர்கள் 228 பேர். 228 பேரிலே அனுமதி பெற்றவர்கள் 186 பேர்; அனுமதி மறுக்கப்பட்டவர்கள் 22 பேர் இன்னும் பரிசீலனையிலே இருப்பது 42.

ஆனால், 1989-90ஆம் ஆண்டிலே மனுச் செய்தவர்கள் 238 பேர். அதிலே அனுமதி பெற்றவர்கள் 109 பேர்; 1988-89இலே அனுமதி பெற்றவர்கள் 186 பேர்; ஆனால் கடந்த ஆண்டு 1989-90இலே அனுமதி பெற்றவர்கள் 109 பேர்; மறுக்கப்பட்டவர்கள் 10 பேர்; இன்னும் பரிசீலனையில் இருப்பது 137 பேர்.

இவைகளைக் கூட இன்னும் வருகிற ஆண்டுகளிலே இன்னும் கணிசமாகக் குறைத்துவிட முடியுமென்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. இப்பொழுது தான் ஆங்காங்கு இருக்கக்கூடிய டிஸ்டிரிக்ட் கமிட்டி-கலெக்டர் தலைமையிலே இருக்கக்கூடிய-மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் இருக்கக் கூடிய அந்த கமிட்டி அங்கேதான் இவர்கள் மனுச் செய்து அனுமதியைப் பெறுகிறார்கள். அதைக்கூட அரசினுடைய கட்டுப்பாட்டிற்குள்ளே கொண்டு வர வேண்டுமென்று நான் கருதிக் கொண்டிருக்கிறேன். அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட இருக்கின்றன.

1988 ஆம் ஆண்டிலேயே இந்த அளவிற்கு—186 பேர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், அதற்கு முந்தி 10 ஆண்டுக் காலத்திலே எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற பட்டியலை தயாரிக்க வேண்டும். நிச்சயமாகத் தயாரித்து நாங்கள் தருகிறோம். அதுபோல, 1947 இலேயிருந்து கூட பார்ப்போம். எத்தனை பேருக்கு இப்படிப்பட்ட அனுமதிகள் தரப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்ப்போம்.

இதிலே, வீரப்பனை விட, கொள்ளையனை விட, வீரப்பன் இருக்கின்றானே அவனைவிட மிக வேகமாக காடுகளை அழிக்கக் கூடிய சில சதிகாரர்கள் இப்படிப்பட்ட மனுச் செய்தவர்களிலே அடங்கியிருக்கிறார்கள் என்ற தகவலை நான் இங்கே மிக்க வேதனையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுதுகூட, ஒரு கும்பல், இதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறது. கூடலூரிலே இருக்கக்கூடிய ஒரு தனியாருக்கு சொந்தமான நிலத்திலிருக்கக்கூடிய காடுகளை வெட்டுவதற்கு—மரங்களை வெட்டுவதற்கு அனுமதி கோரி, ஊட்டி கலெக்டரிடத்

இலே மனுச் செய்தார்கள். எப்படியோ வனத் துறையைச் சார்ந்த அதிகாரிகளை சம்மதிக்க வைத்து விட்டார்கள். சரிக்கட்டி விட்டார்கள். அவர்கள் இந்த மரங்களை வெட்டிக் கொள்ளலாம் என்று சிபார்சு செய்திருக்கிறார்கள். நான் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க இருக்கிறேன். கலெக்டர் நல்லவர். அங்கே இருந்தவர். அவர் அந்த மனுவை நிராகரித்தார். மனு நிராகரிக்கப்பட்ட பிறகு அரசுக்கு அவர்கள் அப்பீல் செய்யலாம். அந்த முறையிலே இங்கே ஒரு அப்பீல் செய்துவிட்டு, கடந்த ஒரு மாத காலமாக சென்னையிலே அவர்கள் முகாம் இட்டுக் கொண்டிருக்கிறார்கள். யார் என்பது எனக்குத் தெரியும். கோவையைச் சேர்ந்த பெரியவர்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு நான் எதிர்பார்த்த ஒருவரே என்னிடத்திலே வந்து சேர்ந்தார் என்னுடைய வீட்டுக்கு. அவர் என்னோடு கல்லூரியிலே படித்தவர். அவரும் அந்த கும்பலிலே சேர்ந்திருக்கிறார், என்று நான் ஏற்கனவே—பத்து நாட்களுக்கு முன்பாகவே கேள்விப்பட்டேன். வீட்டிலே வந்து அவர் என்னைச் சந்தித்த போது, நான் இங்கே சட்டமன்றத்திற்குக் காலையிலே வருவதற்கு அவசரம் அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். கார் பக்கத்திலே வந்தார். என்ன என்று கேட்டேன். இல்லை இல்லை, பிறகு சாவகாசமாக வந்து பேசுகிறேன் என்றார். நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும் என்றேன். என்ன என்றார், கூடலூரிலே இருக்கக்கூடிய மரங்களை வெட்டுவதற்கு அனுமதி கோரி இங்கே மனுச் செய்திருக்கிறீர்கள்-அப்பீல் செய்திருக்கிறீர்கள், அதுதானே என்றேன். ஆம் என்று ஓரளவு சிரித்துக் கொண்டார்.

அங்கே உள்ள அந்த மரங்களினுடைய மதிப்பு, அவர்கள் காட்டியிருப்பது ஏறத்தாழ 90 இலட்சம். ஆனால் மார்க்கெட் மதிப்பு 3 கோடி ரூபாய். ஒரு கும்பல்—ஒரு பத்து பேர் இந்த சதிகார, நாசகார வேலையிலே ஈடுபட்டு இன்றைக்கு இங்கே வந்து எப்படியாவது இந்த அனுமதியைப் பெற்று விடலாமா என்று முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற அனுமதியை இந்த அரசு நிச்சயமாகத் தரப்போவதில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு பட்டியல் இருப்பதாகச் சொன்னார்கள். கையிலே இருக்கக்கூடிய பட்டியலை சட்ட சபைக்குத் தெரிவித்து விடுவதுதான் நல்லது. படிப்பதற்கு நேரம் ஆகுமேயானால், அதை ரோனியோ எடுத்து, எல்லோருக்கும், அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் என்று எல்லோர் முன் வைத்துவிட்டால் நல்லது. இப்படிப்பட்ட தேசத் துரோகிகள் நாட்டுக்கு அடையாளம் காட்டப்பட வேண்டும்.

1990 மார்ச் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1947-இலேயிருந்தே தொகுத்து வைத்துவிட்டால் ரொம்ப நல்லது என்று அமைச்சர் பார்க்கிறார்.

13-45 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, என்னுடைய கையில் இருக்கிற குறிப்பில் யார் யார் என்ற விவரம் பெயரோடு இல்லை. எத்தனை பேர் மனு செய்தார்கள் என்ற விவரம் தான் இருக்கிறது. பெயரோடு குறிப்புகளை 1947-ம் ஆண்டிலிருந்து நிச்சயமாக என்னுடைய வனத்துறையில் பட்டியல் தயார் செய்து கூடியவிரைவில் உங்களுக்கு நான் தருகிறேன் என்ற உறுதிமொழியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நம்முடைய அண்ணாமலை அவர்கள் பேசினார்கள். நம்முடைய மாண்புமிகு ரமணி அவர்கள் என்னிடத்தில் எழுத்து மூலமாகச் சொன்னார்கள். சமூக வனக் காடுகளைப் பற்றிய ஒரு பிரச்சினை. இந்த சமூக வனக் காடுகளை நாம் SIDA என்று சொல்லப்படுகிற Swedish International Development Authori y என்ற நிறுவனம் தருகிற உதவியைப் பெற்று இங்கே மரங்களை நாம் வளர்த்துக் கொண்டிருக்கிறோம். எற்கனவே 6 ஆண்டு காலம் முடிந்துவிட்டது. இரண்டாவது பகுதி—Second Phase ஆரம்பித்து அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. III Ph se நமக்கு வருமா, வராதா என்பது உறுதியாக தெரியவில்லை. ஆகவே, இதிலே பணியாற்றக்கூடிய 6000 ஊழியர்கள் ஒரு வகையில் Plot watchers என்று சொல்கிறோம். இன்னொரு வகையில் Social Forestry workers என்று சொல்கிறோம். அவர்களுடைய சம்பள பிரச்சினை பற்றியும், இவர்களை அரசு ஊழியர்களாக்க முடியுமா என்பது பற்றியும் கோரிக்கை வந்தது. ஏனென்றால் அது நிரந்தரமான பணி இல்லை.

ஸ்வீடன் நாட்டிலிருந்து உதவி எதுவரையில் வருகிறதோ அதுவரையில்தான் இந்த பணி இருக்கும். ஆகவே, நிரந்தரமான பணியாக இது இருக்கமுடியாது. அரசு ஊழியர்களாக்க முடியாது என்ற நிலைபாட்டை எடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய ஊதியம் ஆரம்ப காலத்தில் மிகக் குறைந்த ஊதியம். நாள் ஒன்றுக்கு 9 ரூபாய், 10 ரூபாய் என்று கொடுக்கப்பட்டு, அதை பிறகு மாதச் சம்பளமாகத் தர வேண்டுமென்று சொல்லி 250 ரூபாய் என்பது 275 ரூபாயாக மாற்றப்பட்டது. அதற்குப் பிறகு கொஞ்சம் ஊதியம் கூட்டித் தரவேண்டுமென்று சொல்லி 1988-ஆம் ஆண்டிலிருந்து நாள் ஒன்றுக்கு 14 ரூபாய் என்று தரப்பட்டு வருகிறது. அதற்குப் பிறகு கன்சாலிடேட்டாக மாதச் சம்பளம் தரவேண்டுமென்ற கோரிக்கையின் பேரில் நிதித்துறையில் 350 ரூபாய் என்று ஆக்கலாம் என்று கருத்து தெரிவித்தார்கள்,

[திரு. கே. பி. கந்தசாமி] [1990 மார்ச் 31

ஆனால் அது மிகக் குறைந்த ஒரு தொகை என்பதற்காக வழக்கு மன்றத்திற்குச் சென்று அதற்கு தடையுத்தரவை வாங்கி இருக்கிறார்கள்.

ஊதியம் மிகக் குறைவானது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏறத்தாழ நாம் 22 ரூபாய் தருகிறோம். தனியார் தொழிற்சாலைகளில் 24 ரூபாய் வரையில் கொடுக்கப்படுகிறது. ஆகவே, 14 ரூபாய் என்பது குறைவான தொகை. அங்கே பி.எஸ்.ஸி., எம்.எஸ்ஸி., என்று படித்த கிராஜுவேட்ஸ், போஸ்ட் கிராஜுவேட்ஸ்கள் எல்லாம் பணிபுரிகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஊதியம் மிகக் குறைவு. ஆகவே இந்தப் பிரச்சினை பற்றி வனத்துறையிலும், நிதித்துறையிலும் பேசிக் கொண்டிருக்கிறோம். எந்த அளவிற்கு இந்தப் பிரச்சினையை தீர்க்கமுடியும் என்று பார்க்கிறோம். நல்ல முறையில் அங்கே பணிபுரிகிற ஊழியர்களுக்கு மேலும் சில வசதிகளைத் தந்து—திட்டத்தினுடைய நோக்கமே Benefits of the scheme should be passed on to the people அதை வைத்துக்கொண்டு தான் இப்போது அங்கே ஏலம் விட்டு வருகிற தொகையில்—லட்சம் ரூபாய் வருகிறது என்றால் 60,000 ரூபாய் பஞ்சாயத்துகளுக்குத் தருகிறோம். ஊராட்சி மன்றங்களுக்குத் தருகிறோம். ஊராட்சி மன்றங்களுக்குத் தரப்படுகிற தொகையை முழுமையாக மக்களுக்கான நலப் பணித் திட்டங்களுக்குச் செலவிடப்பட வேண்டும் என்பது தான் இந்தத் திட்டத்தினுடைய நோக்கம்.

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அது ஒரு முக்கியமான பிரச்சினை. சில ஊராட்சி பகுதிகளில், ஊராட்சி மன்றங்களில் இந்தத் தொகையை வாங்கி ஏற்கெனவே இருக்கிற அரியர்ஸ், சம்பள பாக்கி அல்லது எலக்டிரிசிட்டி அரியர்ஸ் என்று இப்படிப்பட்ட காரியங்களுக்குச் செலவு செய்கிறார்கள். இன்னும் சில இடங்களில் நான் கேள்விப்படுகிறேன். சாலைகளை அமைக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு 50,000 ரூபாய் எஸ்டிமேட் என்று சொன்னால், ஏதோ 10,000 ரூபாய்க்கு மண்ணைத் தூவி விட்டு 40,000 ரூபாயை அங்கே உள்ளவர்களே எடுத்துக் கொள்ளக்கூடிய நிலை சில இடங்களில் இருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்களை நிச்சயமாக தடுத்தாக வேண்டும்.

13–50 மணி

இந்தத் தொகையைக் கொண்டு, மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், பள்ளிக்கூடக் கட்டிடங்கள் என்று இப்படி நிரந்தரமாக அந்தப் பகுதி மக்களுக்கு பயன் தரக்கூடிய, திட்டங்களுக்காக, பணிகளுக்காக செலவிடப்பட வேண்டும் என்ற அந்த நிபந்

தனையை நாங்கள் உள்ளாட்சித் துறையோடு பேசி முடிவு செய்ய இருக்கிறோம். ஆகவே இந்த obect of the scheme 'சிடா' என்ற அந்த நிதி உதவி இருக்கிறதே, அந்தத் திட்டத்தின் Benefits must be passed on to the people என்று சொல்கிறபோது, அங்கே பணிபுரிகிற ஊழியர்கள் இருக்கிறார்களே, அவர்களும் மக்கள்தானே, அவர்களுக்கு இந்தத் திட்டத்தினுடைய பலன் ஓரளவு போய்ச் சேரவேண்டாமா, அவர்கள் வயிற்றிலே அடித்துவிட்டு மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டுமா என்ற முறையிலே நாங்கள் இதை அணுகிப் பார்க்கிறோம். ஆகவே கூடிய விரைவிலே இந்தப் பிரச்சினையிலே நல்லதொரு முடிவை எடுக்க இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, இந்த சமூக வனப் பணியாளர்கள் சம்பந்தமாக பல விவரங்களைச் சொன்னார்கள். ஏற்கெனவே 4 ஆயிரம் அல்லது 5 ஆயிரம் பேர்கள்தான் இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், ஐந்து ஆண்டுக்காலமாக பணியாற்றக்கூடியவர்கள் இப்போது அதிலிருந்து ஒரு பகுதியாக, 600 பேர்களை டி. ஆர். டி. ஆபிசுக்கு, ஊரக வளர்ச்சித் துறைக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் நடுத்தெருவிலே நிற்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், 19-ஆம் தேதி சென்னையிலே உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியவர்களை எல்லாம் சிறைச்சாலையிலே வைத்திருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் ஆங்காங்கு மாவட்டங்களிலே போராட்டம் நடத்திக் கொண்டு வருகிறார்கள். ஆகவே அந்தப் போராட்டத்தை நிறுத்தச் சொல்லி, அவர்களை எல்லாம் விடுதலை செய்து, நேரடியாகப் பேசி, அவர்களுக்கு உண்டான நியாயமான கோரிக்கைகளை ஏற்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்யவேண்டும், அதைச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, நான் இந்த விவரத்தை மறந்துவிட்டேன். நம்முடைய உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் நினைவு படுத்தியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் அனுப்பி அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது உண்மையல்ல. வனத்துறைக்கும் உள்ளாட்சித் துறைக்கும் ஒரு உடன்பாடு ஏற்பட்டு, போகப் போக இந்த வன வளர்ப்புப் பணிகளை, மரக்காடுகள் இருக்கிறதே அந்தக் காடுகள் வளர்க்கின்ற பணியை ஊராட்சியே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையிலே—அதை அந்தத்துறை எந்த அளவிற்கு ஏற்றுக் கொண்டு செய்யமுடியும் என்பதை இனி மேல்தான் பார்க்க வேண்டும்—கடந்த சில மாதங்களாகவே,

சில ஆண்டுகளாகவே என்று கூட சொல்லலாம், ஊராட்சித் துறையே அந்தப் பணிகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலேதான் ஆண்டு ஒன்றுக்கு 500 பேர்கள் வனத் துறையிலேயிருந்து அந்தத் துறைக்கு மாற்றிவிட வேண்டும், அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சொல்லி, அவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கவில்லை. ஆனால் நிலைமை என்னவென்றால், இங்கே நாங்கள் 14 ரூபாய் கொடுக்கிறோம் என்றால், பணமாகவே கொடுத்து விடுகிறோம். அங்கே ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற பல வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக—a part of the wage is in kind—பணமாகவும் கொடுக்கிறார்கள். 14 ரூபாய் என்றால், 10 ரூபாயை பணமாகவும், 4 ரூபாய்க்கு அரிசியாகவும் அல்லது வேறு எதுவாகவோ கொடுக்கிறார்கள். இவைகளை ஏற்றுக் கொள்வதற்கு அந்த ஊழியர்கள் தயங்குகிறார்கள். இதுதான் நான் கேள்விப்படுகிறேன்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறையிலிருந்து 600 பேர்களை உள்ளாட்சித் துறைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆனால் உண்மையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல, உள்ளாட்சித் துறை அந்த 600 பேர்களை ஏற்றுக் கொண்டிருக்கிறதா என்றால், இல்லவே இல்லை. பல்வேறு இடங்களில், அந்தந்த பஞ்சாயத்தைச் சேர்ந்தவர்களை நாங்கள் போட்டுவிட்டோம் என்று சொல்லிவிடுகிறார்கள். அதனால் அங்கிருந்து அனுப்பப்பட்ட 600 பேர்களும், மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் கூறியதைப் போன்று, நடுத்தெருவிலே நிற்கிற நிலைதான் இருக்கிறது. ஆகவே அவர்களை மீண்டும் நீங்களே எடுத்துக் கொள்ள வேண்டும், அல்லது அவர்களுக்கு வேலைக்கு உத்தரவாதத்தை உள்ளாட்சித் துறை மூலம் பெற்று, அவர்களை அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ளாட்சித்துறையிலே ஒரு ஒப்புதலைப் பெற்றுத்தான் அந்த ஊழியர்களை அனுப்பினோம். அதிலே ஏதாவது சிக்கல் இருக்குமானால், நாங்கள் திருப்பி எடுத்துக் கொள்வதற்கு எங்களுக்கு தயக்கம் இல்லை. அப்படியானால், அந்தக் காடுகளை வளர்க்கும் அந்தப் பணியும் எங்களிடமே இருக்க வேண்டும், ஊராட்சியிடத்திலே இருக்கக் கூடாது. இதைப்பற்றி நான் மீண்டும் அந்தத் துறையோடு பேசி, நிச்சயமாக இதிலே ஒரு சுமூகமான முடிவு எடுக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தவிர, வனத்துறைக்கு ‘வாட்சர்ஸ், கார்ட்ஸ்’ போன்றவர்களை எடுக்கிறபோது, இவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று ஒரு ஆணை பிறப்பித்தோம். ஆனால் அந்த

1990 மார்ச் 31] [திரு. கே. பி. கந்தசாமி]

ஆணை சரிவர செயல்படுத்தப்படவில்லை என்பதாக அந்த ஊழியர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். நேற்றோ அதற்கு முன் தினமோ, என்னை வந்து பார்த்தார்கள். நான் அந்த ஆணைப் படிதான் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கருதிக் கொண்டு இருந்தேன். ஆனால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், இதுமாதிரி 'பிளாட் வாட்சர்ஸ்' வனத்துறையிலே இருக்கிறார்கள், டெய்லி வேஜஸ், என்.எம்.ஆர். என்று சொல்லக்கூடிய முறையிலே அங்கே 14 ரூபாய் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு வனத்துறையிலே இருப்பவர்களுக்கு முன்னுரிமை தருகிறார்களே, தவிர சமூகக் காடுகளிலே இருக்கக்கூடிய அந்த ஊழியர்களுக்கு தரப்படவில்லை என்ற ஒரு செய்தியை என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள். இது பற்றியும் விசாரித்து இந்தப் பிரச்சினையிலே கூடிய விரைவில் ஒரு சுமூகமான தீர்வு ஏற்படுவதற்கு வனத்துறை நிச்சயமாக முயற்சியை எடுத்துக் கொள்ளும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் இங்கே திரு. அண்ணாமலை அவர்கள் பேசினார்கள், மற்றவர்களும் பேசினார்கள். மலைவாழ் மக்கள்....(குறுக்கீடு).

13-55 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் பெருமக்களுக்கு, ஏற்கெனவே ''காடு'' என்பது பெரிய துறை. ஐயா அவர்கள் முடித்த பிறகு நீங்கள் கேட்பீர்களானால் ஒரு வழியாக முடித்துக் கொள்ளலாம். கண்டிப்பாக உங்கள் கேள்விகளுக்கு எல்லாம் பதில் உண்டு. முதலில் இதை முடிக்கட்டும்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இந்த ஊழியர்களை சிறையிலே அடைத்துவிட வேண்டுமென்பது நோக்கம் இல்லை. ஏதோ முதல் நாளில் அடைத்துவிட்டு, விடுவிக்கப்பட்ட பிறகு அதே ஊழியர்கள் இரண்டாம் நாள் மறியலில் ஈடுபட்டதாக கேள்விப்பட்டதனால் கூட ஒரு நாள் வைத்திருக்கிறார்கள். ஆனால் நிச்சயமாக அவர்களை வெளியே விட்டுவிடுவார்கள். அவர்கள் அந்தப் பேராட்டத்தை நீக்கிக்கொண்டார்கள், விலக்கிக் கொண்டார்கள். எனவே அவர்கள் சிறையிலே இருக்க மாட்டார்கள், வெளியே வந்துவிடுவார்கள்.

இன்னொன்று இந்தக் காடுகளைப் பற்றிச் சொன்னார்கள். மலைவாழ் மக்களைப் பற்றிச் சொன்னார்கள். இந்தப் பிரச்சினை பல இடங்களில் இருக்கின்றது. தர்மபுரி மாவட்டத்திலே இந்தப் பிரச்சினை இருக்கிறது. மேகமலையிலே இந்தப் பிரச்சினை இருக்கிறது. கல்ராயன் மலையில் இருக்கிறது. இப்படி தமிழ்நாட்டிலே 6, 7 இடங்களிலே இருக்கிறது. தஞ்சாவூரிலே கோடியக்காடு, கோடியக்கரையிலே இருக்கிறது. அங்கே

நான் சென்றபோதுகூட சொன்னார்கள். அங்கே 400 ஏக்கர் நிலம் புகையிலை வளர்ப்பதற்காக வைத்திருந்த நிலம், நாங்கள் கடலோரப் பகுதியிலே வாழ்கிறோம். கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டும். இல்லாவிட்டால் இந்தப் புகையிலை வளர்க்க வேண்டும். இந்த இரண்டையும் தவிர எங்களுக்கு வேறு எதுவும் தெரியாது. கடலுக்குச் செல்லாத நாட்களிலே இந்த நிலங்களை வைத்து விவசாயம் செய்து கொண்டிருந்தோம். ஆனால் அந்த நிலங்களை எடுத்துவிட்டார்கள். இது எங்களுக்கே தெரியாது என்று சொன்னார்கள். அதிலே ஓரளவு நியாயம் இருக்கிறது. உண்மைதான். ஏனென்றால் வனத் துறையைக் கேட்டால் நாங்கள் அறிவிக்கையெல்லாம் செய்து தான் எடுத்தோம் என்று அவர்கள் சொல்கிறார்கள்.

1980 ஆம் ஆண்டு கன்சர்வேஷன் ஆக்ட் வந்ததில், அரசிடமிருந்து அந்தச் சட்டம் வந்தபிறகு, ஆங்காங்கே வனத்துறைக்கு அந்த நிலங்களைச் சேர்த்திட வேண்டுமென்று திட்டமிட்டு அந்த இடங்களை எடுத்திருக்கிறார்கள். சில இடங்களிலே இந்தப் பிரச்சினை எப்படி உருவாயிருக்கிறது என்றால், அங்கே கல்ராயன் மலையிலே குறிப்பாக நான் அங்கே சென்றபோது சொன்னார்கள். எப்படி தனியாருடைய இடங்கள் வனத்துறையினுடையதாக ஆகியது என்று நான் கேட்டேன். அப்போது அங்கே ஆரம்பத்திலே அந்த வனத்துறைக்கு இடங்களை மாற்றுவதற்கு அறிவிக்கை செய்வதற்கு அதிகாரிகள் சென்றபோது அங்கேயுள்ள மலைவாழ் மக்களைக் கேட்டபோது அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், அவர்களுடைய மொழியிலே காடுகள் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே காடு என்று சொன்னபோது, இங்கேயிருந்து போன அதிகாரிகள் ‘பாரெஸ்டு’ என்ற முறையில் கிளாசிபை பண்ணிவிட்டார்கள். ஆகவே இன்றைக்கு அந்த இடங்கள் அத்தனையும் ஃபாரெஸ்டு’ என்ற முறையிலே ‘கிளாசிஃபை’ செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, அங்கேயும் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. இந்த பிரச்சினை, அங்கேயுள்ள மலைவாழ் மக்கள் ஒரு இடத்திலேயும் விவசாயம் செய்வது இல்லை. ஒரு இடத்திலே 3 ஆண்டுகள் அந்த மண் வளம் இருக்கும் வரையில் விவசாயம் செய்துவிட்டு, பிறகு இன்னொரு இடத்தில் விவசாயம் செய்கிறார்கள். இது அங்கே கல்ராயன் மலையிலே தனிப்பட்ட காரியம். இதை Shifting Cultivation என்று சொல்கிறார்கள். ஆகவே எங்கெங்கே அவர்கள் விவசாயம் செய்ய விரும்புகிறார்களோ அங்கேயெல்லாம் இருக்கின்ற காடுகளை வெட்டி அழிக்க வேண்டியிருக்கிறது. இதில் ஏதாவது ஒரு முறையிலே அவர்களுக்கு அந்த இடம்தான் என்று அறுதியிட்டுச் சொல்லிவிட்டு அந்த இடத்திற்கு பட்டா கொடுத்து விடவேண்டுமென்று ஒரு திட்டத்திலே நாம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

1990 மார்ச் 31] [திரு. கே. பி. கந்தசாமி]

நான் தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டிருக்கிறேன். அந்த சர்வே முடிந்தவுடன் அப்படிப்பட்ட பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள் கிறேன். ஆனால் இதைத் தீர்க்கின்ற பணியிலே நாம் ஈடு பட்டுக்கொண்டிருக்கும்பொழுது நம்முடைய அண்ணாமலை போன்றவர்கள் வனத்துறைக்கு நிலங்களை எடுத்த பிறகு, எந்த அறிவிப்பும் இல்லாமல் அதற்கு அனுமதி பெறாமல் இடங் களை ஆக்கிரமிப்பு செய்து கொண்டால் பிரச்சினை நிச்சயமாக வரத்தான் செய்யும். அப்படி அரூர் வட்டத்திலே ஒரு பிரச்சினை வந்தது. நில ஆக்கிரமிப்பு என்று சொல்லி நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. அதை நாங்கள் விரும்பி எடுக்கக்கூடிய நட வடிக்கையாக எடுக்கவில்லை. ஆனால் சில விதிமுறைகள், சட் டங்கள் இருக்கும்போது அவைகளை நாங்கள் செயல் படுத்தித் தீரவேண்டியிருக்கிறது. இருந்தாலும்கூட இப்படிப்பட்ட பிரச் சினை பற்றி ரமணி அவர்களுக்குக் கூட தெரியும். கூடலூர் பகுதியிலே இருக்கிறது. கல்ராயன் மலைப்பகுதியிலே இருக் கிறது. தர்மபுரி மாவட்டத்தில் இருக்கிறது. மேகமலையிலே இருக்கிறது. ஆகவே எங்கெங்கே மலைவாழ் மக்கள் ஏற் கெனவே அவர்களுடைய ஆளுகையின்கீழ், அவர்களுடைய Enjoyment '-ல் என்று இருந்ததோ, அந்த நிலங்களை மீண்டும் அந்த மலைவாழ் மக்களுக்குக் கொடுக்கப் படக் கூடிய அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் வெளியிலேயிருந்து கூடலூரிலே வந்து, கேரளாவிலிருந்த மக்கள் இங்கே வந்து ஆக்கிரமித்துக்கொண்டு அது எங்களுடைய நிலம்தான் என்று சொல்லிக்கொண்டிருக்கக் கூடிய பிரச்சினை இருக்கிறது.

14-00 மணி

அது தவிர கேரளத்திலே இன்னும் ஒரு முக்கியமானப் பிரச்சினை. அது ஒரு பெரிய ஸ்கேண்டல் என்று சொல்லு வேன். அங்கே திட்டமிட்டு சிலர், ஆட்சியிலே இருந்தவர்கள் என்று கூட நான் சொல்லுவேன். இங்கே நம்முடைய பாண்டி யன் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் அந்த பட்டியலையும் தருகிறேன். ஆளுக்கு 30 ஏக்கர், ஆளுக்கு 40 ஏக்கர் என்று பினாமி பெயரிலே பதிவு செய்யப்பட்டிருக் கிறது. பதிவு செய்து கொண்டு அதற்குப் பிறகு எங்களுக்கு பட்டா தரவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்திருக் கிறார்கள். 1987 ஆம் ஆண்டு இது நடைபெற்றிருக்கிறது. யார் இதன் பின்னணியிலே இருக்கிறார்கள். என்பதை நாங் கள் ஆய்வு செய்துக் கொண்டிருக்கிறோம். நிச்சயமாக அந்த பட்டியலையும் நான் தருகிறேன். மிகப் பெரிய ஊழல் சந் தன மரக் காடுகளை அழிப்பதை விட மிகப் பெரிய கடுமை யான ஊழல் அதுவும் என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட் டிருக்கிறது. கூடலூர் பகுதியிலே.

ஆனால் உள்ளபடியே எங்கெங்கே ஏழை எளிய மக்கள் மலை வாழ் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ அங்கே அவர்களுடைய பாதிப்பை நீக்கி அவர்களுடைய பிரச்சினையை தீர்த்து நிச்சயமாக அவர்களுக்கு உரிய பட்டா வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக சந்தன மரக்காடுகளை அழித்துக் கொண்டிருப்பவர்களை என்ன செய்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதாக இங்கே கேள்விகள் எழுப்பப்பட்டன. நம்முடைய அர்ச்சுனன் அவர்கள், அ.தி.மு.க. வைச் சேர்ந்த தாரமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. அர்ச்சுனன் அவர்கள் இங்கே இல்லை. அவர்கள் பேசிய போது ஒரு நாள் சொன்னார், வீரப்பன் ஒரு வீரப்பன் மட்டுமல்ல 20 வீரப்பன்கள் என்றார்கள். மறுநாள் பேசுகிறபோது 100 வீரப்பன்கள் என்றார்கள். (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 100 வீரப்பன்

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : 100 வீரப்பன் என்றார்கள். நான் அந்த 100 வீரப்பன்களுடைய பெயர் பட்டியலையும் தந்தால் நலமாக இருக்கும் என்று அவர்களிடத்திலே கேட்டேன். இன்னும் அந்த பட்டியல் என்னுடைய கைக்கு வந்து சேரவில்லை. அப்படி உறுப்பினர்கள் இங்கே வந்து பேசும்போது ஏதோ சில பத்திரிகையிலே வரக் கூடிய தகவல்களை கையிலே வைத்துக் கொண்டு, ஆதாரமாக வைத்துக் கொண்டு பேசுகிறார்கள். அது முற்றிலும் உகந்தது அல்ல என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பத்திரிகையிலே எப்படி எழுதுகிறார்கள் என்பது ஓரளவுக்கு எனக்குத் தெரியும். நானும் பத்திரிகைத் துறையிலே இருந்தவன் தான். ஆனால் நாங்களெல்லாம் அப்படி எழுதினோம் என்று அந்த அனுபவத்தை வைத்துக் கொண்டு சொல்லவில்லை. பத்திரிகை நடத்துபவர்கள் எப்படி செய்திகளை எழுதுகிறார்கள் என்பதை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அந்தச் செய்திகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு இங்கே வந்து பெரிய பெரிய குற்றச்சாட்டுகளை சுமத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

அர்ஜுனன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள் நம்முடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாணிக்க வாசகம் பற்றி, அது பத்திரிகையிலே எழுதப்பட்டிருக்கிறது. என்னுடைய ஆசிர்வாதத்தோடு With Condeienvance என்றால் அதுதான் அர்த்தம். ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள சந்தனக் கட்டைகளை

1990 மார்ச் 31] [திரு. கே. பி. கந்தசாமி]

அவர் வெட்டிக் கொண்டு போய் விட்டார் என்பது குற்றச் சாட்டு. மிகப் பெரிய குற்றச்சாட்டு. எதையோ பத்திரிகை யிலே எழுதியிருக்கிறார்கள். அந்த விவாகரத்தின் பின்னணி எனக்கு நன்றாகத் தெரியும். இங்கே மாணிக்க வாசகம் அவர்களும், அவர்களுடைய நண்பர்களும் என்னைச் சந் தித்து அங்கே நடைபெறுகிற விஷயங்களை வெள்ளியங்கிரி யிலே ஒரு கோவில் இருக்கிறது. அந்தக் கோயில் அதிகாரி களும் வன துறையைச் சேர்ந்தவர்களும் ஒன்று சேர்த்து சில ஊழல்களை செய்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் தான் என்னுடைய கவனத்திற்கு கொண்டு வந் தார்கள். அதற்குப் பிறகு தான் அங்கு தகராறு ஆரம்பம் ஆகியது. வனத்துறையைச் சேர்ந்தவர்களுக்கும் அவர்களுக் கும் ஒரு பெரிய யுத்தகளமே அங்கே தொடங்கி அதன் மூலமாக திரு. மாணிக்க வாசகம் அவர்களும், அவருடைய நண்பர்களும் பாதிக்கப்பட்டார்கள். ஆனால் வனத் துறை யைச் சேர்ந்த ஒரு அலுவலர், மிகச் சாதுர்யமாக இந்த ஊழல் குற்றச்சாட்டுகளை மாணிக்க வாசகம் மீது அவர் திருப்பி விட்டிருக்கிறார்கள். எனக்கு அது என்ன என்பது நன்றாகத் தெரியும். ஆகவே தான் அர்ச்சுனன் அவர்களிடத்திலே கேட்டேன். நீங்கள் அதற்கு முழு பொறுபபையும் ஏற்றுக் கொள்கிறீரா என்று கேட்டேன். அவர் அதை ஏற்றுக் கொள்கிறேன் என்றார். எப்படி ஏற்றுக் கொள்ளப் போ கிறார் என்று என்னால் அன்றைக்கு கேட்க முடியவில்லை. ஆனால் இன்றைக்கு இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாணிக்கவாசகம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்— தொண்டாமுத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அங்கே கோவை வழக்கு மன்றத்திலே வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள் அந்த பத்திரிகை மீது. இது தவறான செய்தி என்று ஒரு வழக்கை அவர் தொடர்ந்திருக்கிறார். நான் அர்ச்சுனன் அவர்களுக்கு சொல்லுகிறேன். இங்கே அர்ச்சுனன் அவர்கள் பேசிய பேச்சு பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதை நிச்சய மாக—நிச்சயமாக என்று சொல்ல முடியாது. ஒரு வேளை மாணிக்க வாசகம் அவர்கள் அர்ச்சுனன் மீதும் வழக்கு தொடரலாம். ஆனால் அந்த வழக்கு அப்படி தொடரப் படுகிறபோது, நான் சட்ட மன்றத்திலே தானே பேசினேன். ஆகவே என் மீது வழக்கு போட முடியாது என்று அந்த சந்து பொந்திற்குள் நுழையாத படி, வழக்கு மன்றத்திலே போய் சந்தித்து, அந்த நீதிமன்றத்திலே நீங்கள் மாணிக்க வாசகத் திற்கு எதிராக— இங்கே அர்ஜுனன் அவர்கள் இல்லை என் றாலும் சொல்லிக் கொள்கிறேன்— அந்த நீதிமன்றத்திற்கு சென்று அந்த வழக்கிலே வாதாடி அங்கே மாணிக்க வாசகத்திற்கு எதிராக அப்படி ஒரு தீர்ப்பைப் பெற்று விட முடியுமானால் நான் அர்ஜுனனைப் பாராட்டமுடியும்.

14-05 மணி

ஆனால் வழக்கு மன்றத்திற்கே செல்ல மாட்டேன். நான் சட்டமன்றத்தில்தானே பேசினேன். ஆகவே, இந்த வழக்கிலே நான் ஆஜர் ஆகமாட்டேன் என்ற நிலையை அவர்கள் எடுப்பார் களேயானால், அவர்கள் கொடுத்த உறுதி மொழியிலிருந்து பின்வாங்கி விட்டார்கள் என்று அர்த்தம் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

வீரப்பன்—100 வீரப்பன் என்றார்கள். எனக்குத் தெரிந்த தெல்லாம், கொள்ளையன் ஒரே வீரப்பன்தான். அவன், இன்னும் நம்முடைய காவல் துறையினர் எடுக்கின்ற நடவடிக்கையில் சிக்கவில்லை. சிக்கவில்லை என்ற காரணத்திற்காக, இந்த அரசு ஏதோ தயங்குகிறது என்று இந்த நேரத்திலே யாரும் எண்ணி விடவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். கடந்த ஓராண்டு காலமாகத்தான், எப்படி இதைச் சமாளிப்பது என்று திட்டமிட்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்களே இந்தப் பணியில் ஈடுபட்டு, அவர்களும் நானே இதில் பொறுப்பேற்று இந்தக் காரியத்தைச் செய்கிறேன் என்று பலமுறை சொன்னார்கள். அதற்கு பிறகு தான், நம்முடைய மாநிலக் காவல் துறையும், அதைப் போல, கர்நாடக மாநிலக் காவல் துறையும் ஒருங்கிணைந்து, ஒரு திட்டத்தை வகுத்து, வீரப்பனுடைய அட்டகாசங்களை ஓரளவு —ஓரளவு என்று சொல்வது தவறு—அறவே அழித்திருக்கின்றார்கள். கடந்த 2 மாத காலமாக அந்த வீரப்பனோ — அவனது ஆட்களோ, அட்டகாசம் நடத்துகிற வேலை நம்முடைய வனப் பகுதியிலே இல்லை. ஏறத்தாழ, இந்த நடவடிக்கையின் மூலமாக ஒரு 73 டன் சந்தன மரங்களை நாம் காப்பாற்றியிருக்கிறோம். அங்கேயிருந்து கைப்பற்றியிருக்கிறோம். ஒரு 90 பேர் வரை கைது செய்திருக்கிறோம். வீரப்பன் எங்கே ஒளிந்து கொண்டிருந்தாலும், அந்த இடம் வரை நம்முடைய காவல் துறை நெருங்கிப் பார்த்து விட்டது. ஆகவே வீரப்பன் இங்கே இல்லை. வனப் பகுதியிலே இல்லை. எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்கிறான். நம்முடைய மாநிலத்தில் இல்லை என்பது என்னுடைய தகவல். கர்நாடக மாநிலத்திலே இருக்கலாம். அந்த வனத் துறையினுடைய அழிவு—வீரப்பன் மூலமாகவோ அவனது கும்பல்கள் மூலமாகவோ வனத் துறைக்கு ஏற்பட்ட அழிவு, அறவே நிறுத்தப்பட்டுவிட்டது; நீக்கப்பட்டு விட்டது என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்கிறேன். ஆனால், அதன் காரணமாக சந்தன மரங்களே திருடு போகவில்லை அல்லது அந்தத் திருட்டு, அறவே ஒழிக்கப்பட்டு விட்டது என்பதை நான் சொல்லிக் கொள்ளத் தயாராக இல்லை. ஏனென்றால், இன்னும் ஆங்காங்கே சந்தன மரத்தை வெட்டிக் கொண்டுப் போகிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

கல்வராயன் மலையிலே அந்தக் காலத்திலே, வெட்டியவர்கள் இன்னும் வெட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் வெட்டிவிட்டு, எப்படி அந்தப் பழியைப் போடுகிறார்கள் என்றால், அங்கே இருக்கக்கூடிய முத்தையன், சங்கராபுரம் எம்.எல்.ஏ., திரு. முத்தையன் அல்லது எம்.எல்.ஏ. திரு. உதய சூரியன் இவர்கள்தான் வெட்டிக் கொண்டு போகிறார்கள் என்று அப்படி ஒரு வதந்தியை அங்கே பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். செய்வது ஒருவர்; மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். இருந்தாலும் கூட அவர்கள் பழியை திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் மீது போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போல, கொடைக்கானலிலே ஒரு முக்கியப் புள்ளி. அவர்களையும் பார்த்து வருகிறோம். பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அந்த ''வாட்டில் பார்க்'' என்று இருக்கிறதே, அவைகளை உரித்துக் கொண்டு போய் பல கோடி ரூபாயை அவர் பெற்று வந்து கொண்டிருக்கிறார். அதற்கும் அந்த நேரத்திலே இருந்த அரசினுடைய அனுமதி இல்லாமல், அப்படிப்பட்ட காரியத்தை அவர் செய்திருக்க முடியாது. அதுவும் தடுக்கப்பட்டு விட்டது.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் என்று பெயரைச் சொல்லுங்கள். பெயர் நாட்டுக்குத் தெரியட்டும் எப்பேர்ப்பட்டவன் எல்லாம் இருந்தான் என்று.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவர் கொடைக்கானலிலே வாழக்கூடிய, கேரளாவைச் சேர்ந்த சூரியன் என்பவர். இன்றைக்கு பல கோடி ரூபாய்க்குச் சொந்தக்காரர். அவருக்கு எத்தனையோ லாரிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. லாரியின் பெயர் 'கிங் ஆப் கிங்ஸ்.'

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். அவருடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்து விட்டீர்களா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாண்டியன் அவர்கள், அவர் மீது இப்போதே கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார். இப்போது அவர் காடுகளிலிருந்து திருடிச் செல்வது, எடுத்துச் செல்வது தடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, கிரிமினல் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் மீது, நாம் கிரிமினல் நடவடிக்கை எடுத்தால்தானே நம்மால் நாட்டு மக்களுக்கு

நன்மை செய்ய முடியும் ? கோடிக்கோடியாக சேர்த்து விட்டவர்கள், பிறகு நீங்கள் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் போது, அவர்கள் கள்ளத்தனமாக சம்பாதித்த கோடிகளை வைத்திருக்கக் கூடாது அல்லவா? அதைப் பார்க்க வேண்டாமா? அதனால்தான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி ; தொடர்ந்து அப்படிப்பட்ட கொள்ளை நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்களேயானால், குண்டர்கள் சட்டத்திலே அவர்களைப் பிடித்துப் போடுவோம். குண்டர்கள் சட்டத்திலே பிடிக்கக்கூடிய வசதி இருக்கிறது.

14-10 மணி

ஆனால் இப்போது அப்படிப்பட்ட நிலை இல்லை. ஏற்கனவே 1985-லேயிருந்து அவர் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் செய்ததை அந்த அரசு பார்த்துக் கொண்டுதான் இருந்திருக்கிறது.

திரு. பி. எச். பாண்டியன் : ஒரு சாதாரண ஏழை சைக்கிள் கடையிலோ, கடையிலோ திருடினால், போலீசார் கைது செய்து முதலில் திருடிய பொருளைத் தான் கைப்பற்றுகிறார்கள். அப்படி ஒரு சாதாரண மனிதனுக்கு சட்டம் அப்படி வழிவகை செய்யும்போது, இவ்வளவு பெரிய ஒரு கோடீஸ்வரக் கொள்ளைக்காரன்—அதாவது கொள்ளைக்காரனாக இருந்து கோடீஸ்வரன் ஆனவனை நீங்கள் தடுப்புக் காவல் சட்டத்தில் போட்டால் கூட ஒன்றும் நாட்டிற்கு நஷ்டம் கிடையாது, தான் கள்ளத்தனமாக சம்பாதித்த அந்தப் பணத்தை பறிமுதல் செய்தால் ஒழிய, இந்த நாட்டுக்கு நீதி வழங்கியதாகக் கருத முடியாது.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் 1985 ஆம் ஆண்டிலேயிருந்து இந்த நடவடிக்கை இருந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் நமது மாண்புமிகு பி. எச். பாண்டியன் அவர்கள், இப்போது நடவடிக்கை எடுக்கச் சொல்கிறார்கள். அன்று அவர் நடவடிக்கை எடுக்கவேண்டிய இடத்தில் இருந்தார். ஏன் அப்படிப்பட்ட நிலையை அன்று அவர் ஏற்படுத்தவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : அந்தப் பெயரைக் குறிப்பிட்டு அன்றைக்கு எதிர்க் கட்சியில் இருந்தவர்கள் யாரும் சொல்லவில்லை. இங்கேயிருந்து சொல்லியிருப்பார்கள் என்றால்—

1990 மார்ச் 31] (திரு. பி. எச் பாண்டியன்)

நான் சபாநாயகர் ஆசனத்திலிருந்து, கலெக்டர் பாண்டியனிடமிருந்து சொத்தைப் பறிமுதல் பண்ணிய மாதிரி, 2 ஏக்கர் பறிமுதல் பண்ணினேன், அதுமாதிரி அன்றைக்கே செய்திருக்க முடியும்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே' நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புவது, வனத்துறையைப் பொறுத்தமட்டில், வனப் பகுதியைப் பொறுத்தமட்டில், ஒரு புறத்தில் காடுகளை வளர்ப்பதற்கும் முயற்சிகள், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன; அதேபோல் மறுபுறத்தில் காடுகளை அழிப்பதைத் தடுப்பதிலேயும் தீவிரமாக இருந்து வருகிறோம். ஆகவே, இப்படிப்பட்ட திருட்டுக்கள், கொள்ளைகள், இனிமேல் வனத்துறையிலே முற்றிலுமாகத் தடுக்கப்பட்டுவிடும், ஒழிக்கப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையோடு நாங்கள் எங்கள் பணிகளைச் செய்து வருகின்றோம் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இறுதியாக, ஒன்று, சின்கோனாத் துறையிலே பணி செய்கின்ற ஊழியர்களுக்கு மிகக் குறைவாக ஊதியம் தரப்படுகிறது என்பதாக எடுத்துச்சொன்னார்கள். நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். சின்கோனாத் துறை ஏறத்தாழ 120 ஆண்டுகளுக்கும் மேலாக நம்முடைய தமிழ்நாட்டிலுள்ள மலைப்பகுதியிலே இருந்து வருகின்றது. நல்ல மரம், அந்த மரத்திலிருந்து ''குவினைன்'' என்ற மருந்துக்கு உதவுகின்ற பொருளைத் தயாரிக்கின்றோம். இருந்தாலும்கூட, ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ 2 கோடி ரூபாய் நட்டம் வரக்கூடிய அளவிற்கு இந்தத் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தத் துறையை, தொடர்ந்து தனித்துறையாக வைத்துக்கொண்டிருக்க வேண்டுமா, அல்லது வேறு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டுமா என்பதை கடந்த ஆறு மாத காலமாகப் பரிசீலனை செய்து, ஏறத்தாழ ஒரு முடிவிற்கு நாங்கள் வந்து விட்டோம். அதிலே, 6,000, 7,000 ஹெக்டேர் நிலம் இருக்கிறது, ஆனைமலையிலும், கூடலூர் பகுதியிலும், அதிலே இருக்கக்கூடிய அந்த சின்கோனா மரத்தையும் வைத்துக்கொண்டு, அங்கே சின்கோனா ''குவினைன்' என்ற பொருளை ஏறத்தாழ $3\frac{1}{2}$ டன் அளவிலே கையிலே இருந்து கொண்டிருக்கிறது, விற்பனையாகாமல். ஆகவே, அதற்கு மேலே அதை அபிவிருத்தி செய்யக்கூடிய வாய்ப்பில்லை என்ற காரணத்திற்காக அங்கே ஊழியர்களுக்கும் குறைந்த ஊதியம் தான் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். 15. 95—பிச்சைக்காரன் கூட 5 காசு என்றால் மதிக்கமாட்டான் என்று எல்லாம் சொன்னார்கள். 15 ரூபாய் 50 காசு என்று தான் நினைக்கிறேன். 95 காசு அல்லது 99 காசு என்பது பாட்டாக் கடையிலே போடக்கூடிய விலைப்பட்டியல். நம்முடைய வனத்துறையிலே அப்படி இருக்காது என்று கருதுகின்றேன். இருந்தாலும்

கூட, அது 15.50ஆக இருந்தாலும் சரி, 15.95 ஆக இருந்தாலும் சரி, குறைந்த ஊதியம். அந்த ஊதியத்தைக் கூட்டித் தர வேண்டுமென்ற நோக்கம் எங்களுக்கு இருக்கிறது. ஆனால், இந்தத் துறையின் மூலமாக நிச்சயமாக செய்ய முடியாது என்ற ஒரு முடிவிற்கு வந்திருக்கின்ற காரணத்தினாலே, அந்தத் துறையிலே இருக்கக்கூடிய மரம் தயாரிக்க முடியாத பகுதிகள் ஏறத்தாழ 3,000 ஹெக்டேரை வனத்துறைக்கு திருப்பிக் கொடுத்துவிட்டு, மீதமுள்ள ஏறத்தாழ 3,000 ஹெக்டேரில் தேயிலை உற்பத்தி செய்து, தேயிலைச் செடிகளை வளர்த்து, இன்னும் பல தேயிலைத் தொழிற்சாலைகளை அங்கே உருவாக்கி அதன் மூலமாக அங்கே பணிபுரியக்கூடிய ஊழியர்களுடைய ஊதியத்தை உயர்த்தித் தரமுடியும் என்ற திட்டத்தை வகுத்திருக்கிறோம். அதற்கான ஆணையைப் பிறப்பிக்க நம்முடைய முதல்வர் அவர்கள் கையெழுத்துப் போட்டிருக்கின்றார்கள். இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் ஆணை பிறப்பிக்கப்பட இருக்கின்றது. ' ' டான்டீ ' ' என்று சொல்லப்படுகின்ற அந்தத் தேயிலை நிறுவனம், தமிழ்நாடு வனத்துறையிலே இயங்குகின்ற அந்த நிறுவனம், அந்த 3,000 ஹெக்டேர் நிலத்தை எடுத்துக்கொண்டு தேயிலைச் செடிகளை உற்பத்தி செய்து தேயிலைத் தொழிற்சாலைகளை அங்கே உருவாக்கி, நிச்சயமாக அந்த ஊழியர்களுடைய ஊதிய விகிதத்தை உயர்த்தித் தந்திட முடியும். வாழ்க்கை முறையை நாங்கள் உயர்த்தித் தந்திட முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆகவே, இந்த சின்கோனா துறையில் பணியாற்றக்கூடிய 3 ஆயிரம், 4 ஆயிரம் தொழிலாளர்கள் நிச்சயமாக இந்த மாற்றுத் திட்டத்தின் மூலமாக பயன்பெறுவார்கள். உடனடியாக 22 ரூபாய் இல்லாவிட்டாலும் 20 ரூபாய் அளவுக்காவது அவர்களுடைய ஊதியம் உயர்த்தித் தரப்படும் என்ற நல்ல செய்தியை இங்கே நான் தெரிவித்துக்கொண்டு இந்த அளவோடு வனத்துறையைப்பற்றி இங்கே எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு என்னுடைய பதிலாக தெரிவித்து கொண்டு இங்கே கொடுக்கப்பட்டு இருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை நீக்கிக் கொண்டு நாங்கள் கோரியிருக்கின்ற தொகைக்கு அனுமதி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

14–15 மணி.

10. டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு ' ' பாரத ரத்னா ' ' விருது வழங்கப் பெற்றுள்ள செய்தி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திற்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்கள் ஒரு இனிய அறிவிப்பை இன்றைக்குச் செய்துள்ளார்கள். நாட்டின் மிக உயர்ந்த விருதான ' ' பாரத

கூட, அது 15.50ஆக இருந்தாலும் சரி, 15.95 ஆக இருந்தாலும் சரி, குறைந்த ஊதியம். அந்த ஊதியத்தைக் கூட்டித் தர வேண்டுமென்ற நோக்கம் எங்களுக்கு இருக்கிறது. ஆனால், இந்தத் துறையின் மூலமாக நிச்சயமாக செய்ய முடியாது என்ற ஒரு முடிவிற்கு வந்திருக்கின்ற காரணத்தினாலே, அந்தத் துறையிலே இருக்கக்கூடிய மரம் தயாரிக்க முடியாத பகுதிகள் ஏறத்தாழ 3,000 ஹெக்டேரை வனத்துறைக்கு திருப்பிக் கொடுத்துவிட்டு, மீதமுள்ள ஏறத்தாழ 3,000 ஹெக்டேரில் தேயிலை உற்பத்தி செய்து, தேயிலைச் செடிகளை வளர்த்து, இன்னும் பல தேயிலைத் தொழிற்சாலைகளை அங்கே உருவாக்கி அதன் மூலமாக அங்கே பணிபுரியக்கூடிய ஊழியர்களுடைய ஊதியத்தை உயர்த்தித் தரமுடியும் என்ற திட்டத்தை வகுத்திருக்கிறோம். அதற்கான ஆணையைப் பிறப்பிக்க நம்முடைய முதல்வர் அவர்கள் கையெழுத்துப் போட்டிருக்கின்றார்கள். இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் ஆணை பிறப்பிக்கப்பட்ட இருக்கின்றது. ‘‘ டான்டீ ’’ என்று சொல்லப்படுகின்ற அந்தத் தேயிலை நிறுவனம், தமிழ்நாடு வனத்துறையிலே இயங்குகின்ற அந்த நிறுவனம், அந்த 3,000 ஹெக்டேர் நிலத்தை எடுத்துக்கொண்டு தேயிலைச் செடிகளை உற்பத்தி செய்து தேயிலைத் தொழிற்சாலைகளை அங்கே உருவாக்கி, நிச்சயமாக அந்த ஊழியர்களுடைய ஊதிய விகிதத்தை உயர்த்தித் தந்திட முடியும். வாழ்க்கை முறையை நாங்கள் உயர்த்தித் தந்திட முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆகவே, இந்த சின்கோனா துறையில் பணியாற்றக்கூடிய 3 ஆயிரம், 4 ஆயிரம் தொழிலாளர்கள் நிச்சயமாக இந்த மாற்றுத் திட்டத்தின் மூலமாக பயன்பெறுவார்கள். உடனடியாக 22 ரூபாய் இல்லாவிட்டாலும் 20 ரூபாய் அளவுக்காவது அவர்களுடைய ஊதியம் உயர்த்தித் தரப்படும் என்ற நல்ல செய்தியை இங்கே நான் தெரிவித்துக்கொண்டு இந்த அளவோடு வனத்துறையைப்பற்றி இங்கே எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு என்னுடைய பதிலாக தெரிவித்து கொண்டு இங்கே கொடுக்கப்பட்டு இருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை நீக்கிக் கொண்டு நாங்கள் கோரியிருக்கின்ற தொகைக்கு அனுமதி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

14–15 மணி.

10. டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு ‘‘ பாரத ரத்னா ’’ விருது வழங்கப் பெற்றுள்ள செய்தி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திற்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்கள் ஒரு இனிய அறிவிப்பை இன்றைக்குச் செய்துள்ளார்கள். நாட்டின் மிக உயர்ந்த விருதான ‘‘ பாரத

ரத்னா '' என்ற விருதினை நீண்ட காலத்திற்குப் பிறகு மறைந்த மாமேதை, அரசியல் சட்டத்தினுடைய தந்தை அம்பேத்கார் அவர்களுக்கு வழங்கப்படும் என இன்றைக்கு அவர்கள் அறிவித்துள்ளார்கள். இது தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் மாத்திரம் அல்லாமல் இந்திய திருநாட்டில் இருக்கின்ற அத்தனை மக்களும் மகிழக்கூடிய ஒரு அருமையான அறிவிப்பு என்ற வகையில் இந்த மாமன்றத்தின் சார்பாக பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்களுக்கு நம்முடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி.)

9. மானியக் கோரிக்கைகள், 1990–91, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, இந்த சின்கோனா துறையில் 2 ஆயிரம் தொழிலாளர்களுக்கு மேல் இருந்தவர்கள் குறைந்து, குறைந்து இன்றைக்கு 1,600 பேர் தான் இருக்கிறார் கள். இப்போது அந்தத் துறையில் இலாபம் இல்லை என்பது தொடர்ந்து சொல்லக்கூடிய விஷயம் தான். அவர்களுக்கு ரூ. 16.95 காசு தான்—22 ரூபாய்க்குக் கூலி வேலை செய்யக் கூடிய அதே இடத்தில் இருக்கிற தேயிலைத் தோட்ட தொழி லாளர்கள் மாதிரி அவர்கள் இல்லை இன்றைக்கு. அவர்கள் அனேகமாக தாழ்த்தப்பட்டவர்கள். அரசு இதை தேயிலைத் தோட்டமாக மாற்றி அவர்களுக்கு வேலை கொடுப்பதில் நமக்கு ஆட்சேபனை இல்லை. ஏன் என்றால் இந்தத் துறை இல்லா விட்டால் அவர்களுக்கு அந்தத் துறையில் வேலை இருக்கவேண் டும். ஆனால், ஒருவன் கூட துறை மாற்றப்பட்டு அந்தத் தொழிலை நாம் கைவிடுகிறோம் என்பதால் அவர்கள் வேலை இல்லாமல் போகக் கூடாது என்ற உத்திரவாதத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொரு விஷயம், கோவையில் ஒவ்வொரு வருடமும் பொருட்காட்சி நடத்தி ஏராளமான பணத்தை நாம் அங்கே கோவை மக்களால் பெற்றுக்கொண்டு இருக்கிறோம். இதற்கு முன்னால் இருந்த அரசு பொருட்காட்சி நடத்தக்கூடிய இந்த சுற்றுலாத் துறைக்குத் தலைவராக இருந்த அமைச்சர் அவர்கள் 2 முறை அங்கே பகிரங்கமாக கூட்டத்தில் நானே இருந்தேன் அவர் அங்கே ஒரு கலை அரங்கத்தை அந்த ஜெயில் வளாகத்தில் கட்டுவதற்கு உறுதி அளித்து அதற்குப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து இன்று வரைக்கும் அது நடைபெறவில்லை. அதை நிறைவேற்றுவதற்கான அந்த வாக் குறுதியை நமது அமைச்சர் அவர்கள் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' மானியக் கோரிக்கை எண். 47 செய்தி, சுற்றுலா மற்றும் திரைப்படத் தொழில் நுட்பவியல் துறை—என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,80,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் ''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஈ) கோரிக்கை எண் 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.

திரு. ஆ. கே. வெள்ளிங்கிரி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அமைதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' மானியக் கோரிக்கை எண். 56 காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு—என்ற தலைப்பின்கீழ் ரூ. 26,29,87,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் .''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 2—4—1990 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 14-29 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

[1990 மார்ச் 31

49. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் 1984 ஆம் ஆண்டிற்கான பதினோராவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

50. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் 1985 ஆம் ஆண்டிற்கான பனிரெண்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

51. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் 1986 ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேசவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

52. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் 1987 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

53. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1987-88ஆம் ஆண்டிற்கான இருபத்திமூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

44. கோரிக்கை எண். 25—சின்கோனாத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

45. கோரிக்கை எண். 47—சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1990-91 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

46. கோரிக்கை எண். 47 செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1990-91 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

47. சின்கோனாத்துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1990–91 (ஆங்கிலம்).

48. சின்கோனாத் துறையின் வணிகம் குறித்த வரவு-செலவுத் திட்டம், 1990–91 (ஆங்கிலம்).

49. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் 1984 ஆம் ஆண்டிற்கான பதினோராவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

50. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் 1985 ஆம் ஆண்டிற்கான பனிரெண்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

51. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் 1986 ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1 /1956) 619-ஏ பிரிவின் கீழ் பேசவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

52. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் 1987 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

53. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான இருபத்திமூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

44. கோரிக்கை எண். 25—சின்கோனாத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

45. கோரிக்கை எண். 47—சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1990-91 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

46. கோரிக்கை எண். 47 செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1990-91 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

47. சின்கோனாத்துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1990–91 (ஆங்கிலம்).

48. சின்கோனாத் துறையின் வணிகம் குறித்த வரவு-செலவுத் திட்டம், 1990–91 (ஆங்கிலம்).

1990 மார்ச் 31]

49. பொதுக் கணக்குக் குழுவின் முப்பதாவது அறிக்கை 1989–90.

50. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தொன்றாவது அறிக்கை, 1989–90.

51. பொதுக் கணக்குத் குழுவின் முப்பத்திரெண்டாவது அறிக்கை, 1989–90.

52. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தி மூன்றாவது அறிக்கை, 1989–90.

53. பொதுக் கணகக்குக் குழுவின் முப்பத்தி நான்காவது அறிக்கை. 1989–90

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்புகள்

[பக்கம் 48-ல் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

சின்கோனாத் துறை.

கொள்கை விளக்கக் குறிப்பு.

1990-91ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம்

கோரிக்கை எண். 25-சின்கோனா மற்றும் 56. மூலதனச் செலவு.

1. முன்னுரை :

1.1. சின்கோனா மரத்திலிருந்து குனைன் என்னும் மருந்துப் பொருள் தயாரிப்பதைக் கொண்டு இத்துறை ''சின்கோனாத் துறை'' என்ற பெயர் பெற்றது. கடந்த 129 ஆண்டுகட்கு முன்பு அப்பொழுதுள்ள சென்னை அரசாங்கத்தால் சின்கோனாத் துறை துவங்கப்பட்டது. இதே போன்று டார்ஜிலிங் என்னு மிடத்தில் வங்காள அரசும் மருந்துச் செடிகளைப் பயிரிட்டு சின்கோனாத் துறையை நிறுவியது. கொய்னா பொருட்களின் விலை வீழ்ச்சியாலும் மலேரியாவைக் குணப்படுத்த இப்பொருள் அதிக அளவில் தேவைப்படாததாலும் அவற்றின் தேவை குறைந்ததாலும் குனைன் மருந்தின் முக்கியத்துவம் குறைந்தது. இத்துறை வணிக ரீதியில் இயங்கிவருவதால், இதன் இயற்கை வளத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. மருந்து மற்றும் நறுமணச் செடிக ளைப் பயிரிடுவதிலும் பல்வேறு இயற்கை நறுமண எண்ணெய் களைத் தயாரிப்பதிலும் குனைன் மருந்துப் பொருட்களின் உற் பத்திக் குறைவை ஈடு செய்யும் பொருட்டு, தனது நடவடிக்கை களை இத்துறை விரிவுபடுத்திக் கொள்கிறது.

1.2. கொய்னா பொருட்களின் தேவை உள் நாட்டிலும் வெளி நாட்டுச் சந்தையிலும் நலிவுற்று வருகிறது. மேற்கு வங்க அரசின் தேவையைப் போன்று, குனைன் பொருட்களின் உள் நாட்டுத் தேவை நமக்கும் ஒரு டன் ஆகும். இந்தோனேஷிய வெப்ப மண்டலக் காடுகளில், வருடம் முழுவதும் பெய்யும் மழை யின் காரணத்தால் மிகுதியாக கொய்னா மருந்து செடிகள் அதிக அளவில் பயிரிடப்பட்டு வருவதால் உலக நாடுகளின் கொய்னா பொருட்களின் தேவையின் 90 விழுக்காடுகள் அந்நாட்டினால் பூர்த்தி செய்யப்படுகிறது. அதனால், அந்த நாட்டில் உற்பத்தி யாகும் மருந்து பொருட்களின் தரம் உயர்ந்து காணப்படுகிறது. மேற்கு வங்காளத்தில் இம்மருந்துச் செடிகள் பயிரிடுவதற்கு ஏற்ற நல்ல வளம் உள்ளது. இந்தோனேஷியாவைப் போன்று தமிழ் நாட்டில் குனைன் மருந்துச் செடிகள் பயிரிடுவதற்கு சீதோஷ்ண நிலை ஏற்றதாக இல்லை. எனவே, உள்நாட்டுத் தேவையான 1,000 கிலோ அளவிற்கு மட்டுமே குனைன் பொருட்களின் தயா ரிப்பு குறைக்கப்பட்டுள்ளது. மற்ற நறுமண எண்ணெய்கள் தயாரிப்பதிலும் ஆதாய அளவு குறைவாக காணப்படுகிறது. மிகுந்த அளவில் அவைகளை பயிரிடும் முயற்சி வெற்றிகரமாக

1990 மார்ச் 31]

இல்லாததாலும் சந்தையில் அவைகளின் தேவை குறைந்து காணப்படுவதாலும் இலாப அளவு குறைவாக இருப்பதாலும் இச்செடிகளை தோட்டங்களில் முனைப்பாக பயிரிடுவதற்கு ஆகும் செலவு கட்டுப்படியாகவில்லை. இத்துறையில் அளவிற்கதிகமான தொழிலாளர்களும் நிலங்களும் இருந்தும் வணிக ரீதியில் இத்துறை குறைந்து செயல்படும் நிலையில் உள்ளது.

2. தயாரிப்பு :

2.1. விற்பனை செய்யப்பட்ட கொய்னாப் பொருட்களின் அளவு மற்றும் அவற்றின் மூலம் கிடைத்த வருவாய் ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு :—

ஆண்டு. (1)	விவரம். (2)	அளவு. (3) (கிலோ கிராமில்)	வருவாய் (4) (ரூபாய் இலட்சத்தில்)
1986–87 (உள்ளபடி)	உள்நாட்டு விற்பனை ..	734	5.29
	வெளிநாட்டு விற்பனை ..	2,500	20.82
	மொத்தம் ..	3,234	26.11
1987–88 (உள்ளபடி)	உள்நாட்டு விற்பனை ..	526	5.43
	வெளிநாட்டு விற்பனை ..	6,000	57.25
	மொத்தம் ..	6,526	62.68
1988–89 (உள்ளபடி)	உள்நாட்டு விற்பனை ..	987	15.25
	வெளிநாட்டு விற்பனை ..	1,400	13.27
	மொத்தம் ..	2,387	28.52
1989–90	உள்நாட்டு விற்பனை ..	6	0.43
	வெளிநாட்டு விற்பனை ..	..	
	மொத்தம் ..	6	0.43
1990–91 (மதிப்பிடப்பட்டது).	உள்நாட்டு விற்பனை ..	1,000	12.32
	வெளிநாட்டு விற்பனை ..	3,000	45.480
	மொத்தம் ..	4,000	57.80

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2.2. கொய்னாப் பொருட்களின் விற்பனை விலையை மருந்துகள் விலை கட்டுப்பாட்டு ஆணையின்படி இந்திய அரசு நிர்ணயிக்கிறது. இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலை துரதிருஷ்டவசமாக கொய்னாப் பொருட்களின் உற்பத்தி விலையைவிடக் குறைவாக உள்ளது. விற்பனை விலையை அதற்கேற்றவாறு உயர்த்த வேண்டுமென்று மாநில அரசு மைய அரசிடம் முறையிட்டது. அதற்கேற்றவாறு அதன் விற்பனை விலை அதிகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொழில்களின் உற்பத்தியை மதிப்பிடல் மற்றும் விற்பனை விலையை நிர்ணயிக்கும் குழு இப்பொருட்களின் விற்பனை விலையை நிர்ணயிப்பதற்கு தற்போது ஆலோசித்து வருகிறது.

2.3. மருந்து மற்றும் நறுமணங்கமழ் தைலங்களின் விற்பனை வாயிலாக இத்துறை குறிப்பிடத்தகுந்த வருவாயை ஈட்டி வருகிறது. மேற்குறிப்பிடப்பட்ட வருவாய் சீராக வளர்ந்து வருவதோடு, இந்தியாவில் மேற்கண்ட தைலங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் சின்கோனாத் துறையும் ஒரு முக்கிய நிறுவனமாக விளங்குகிறது. இத்தைலங்களின் தரம் ஐ.எஸ்.ஐ. தரத்திற்கேற்றவாறு உற்பத்தி செய்யப்படுகின்றது.

2.4. சின்பிரஷ் மற்றும் இதர வாசனைத் திரவியப் பொருட்களின் தேவையும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இத்துறையில் தயாரித்து விற்பனை செய்யப்பட்டு வரும் யூகலிப்ட்ஸ் தைலம் உயர்ந்த தரத்தை சேர்ந்ததோடு மட்டுமல்லாமல் அதற்கான தேவையும் நிலையாக இருந்து வருகிறது.

2.5. மருந்து மற்றும் நறுமணத் தைல விற்பனை மூலம் 1987—88ஆம் ஆண்டு முதல் இத்துறைக்கு கிடைத்த வருவாயின் விவரங்கள் வருமாறு:—

1987–88 (உள்ளபடி)	..	ரூ. 64.77 இலட்சங்கள்.
1988–89 (உள்ளபடி)	..	ரூ. 74.54 இலட்சங்கள்.
1989–90 (எதிர்பார்க்கப்படுகிறது).		ரூ. 81.88 இலட்சங்கள்.
1990–91 (எதிர்பார்க்கப்படுகிறது).		ரூ. 91.88 இலட்சங்கள்.

[1990 மார்ச் 31]

2.6. துறையில் தயாரிக்கப்படும் பொருட்களின் விவரங்கள் பின்வருமாறு :—

பொருட்களின் பெயர்.	1987-88 (உள்ள படி).	1988-89 (உள்ள படி).	1989-90 (திருத்திய மதிப்பீடு).	1990-91 (திட்ட மதிப்பீடு(
(1)	(2)	(3)	(4)	(5)
	(அளவுகள் கிலோகிராமில்)			
1 யூகலிப்டஸ் தைலம்	4,076	4,247	6,000	5,000
2 ஜெரேனியம் தைலம்.	2,783	1,961	2,850	2,500
3 யூகலிப்டஸ் சிட்ரியோடோரா தைலம்.	4,565	3,863	4,900	6,000
4 ஜாவா சிட்ரோ.நல்லா தைலம்.	3,230	1,762	6,550	4,000
5 ரோஸ்மேரி தைலம்	86	54	150	100
6 ஓசிமம் கிராட்டிசிமம் தைலம்.	44	59	35	50
7 பச்சோலி தைலம்	..	3	5	5
8 தொடபெட்டா மிஸ்ட்.	15	..	15	15
9 சினோரமா	15	..	15	15
10 சினோமாஸ்	33	17	..	..
11 சின்ஸ்பிரே (லிட்டர்களில்).	270	251	250	..
12 சின்பிரஷ் (ஆயிரம் லிட்டர்களில்).	125	150	150	150

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)
13 டயஸ் ஜெனின்	893	100	1,500	1,500
14 கஃபீன்	1,331	2,015	..	1,500
15 கற்பூரத் தைலம்	15	140	250	100
16 கற்பூர வில்லைகள் (எண்கள் ஆயிரத்தில்).	29	263	200	100

3. மலைத் தோட்டங்கள் ;

முன்னமேயே விவரித்தவாறு, பல்வேறு பொருட்களைத் தயாரிக்கத் தேவையான மூலப் பொருட்களைப் பெற இத்துறையின் மலைத் தோட்டங்களில் அப்பயிர்களைப் பயிரிடுவதற்கு பல்வேறு பணிகளை இத்துறையே மேற்கொண்டுள்ளது. 1989, டிசம்பர் 31ஆம் நாளன்று, 1,999 எக்டேர் பரப்புள்ள சின்கோனா நிலங்களையும் மற்றும் 1,228 எக்டேர் பரப்புள்ள மருந்து மற்றும் நறுமணத் தைல வகைப் பயிர்கள் கொண்ட நிலங்களையும் இத்துறை தனது நேரடி மேற்பார்வையில் கொண்டுள்ளது. அவற்றின் விவரங்கள் வருமாறு :—

பயிர்கள்.	நீலகிரி.	கோவை மாவட்டத்தில் உள்ள ஆனைமலை.	திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
	(நிலப்பரப்பு எக்டேர்களில்).			
சின்கோனா ...	517	1,482	..	1,999
மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்கள்.	642	373	213	1,228
மொத்தம் ...	1,159	1,855	213	3,227

1990 மார்ச் 31]

4. நடுகைத் திட்டங்கள் :

1986–87 மற்றும் 1987–88 ஆகிய ஆண்டுகளில் சின்கோனா புதியதாக பயிரிடப்படவில்லை. கொய்னாப் பொருட்களின் தேவையின் அடிப்படையில் 1988-89ஆம் ஆண்டில் 102 எக்டேர் நிலப்பரப்பிலும், 1989–90-இல் 77 எக்டேர் பரப்பிலும் சின் கோனா பயிரை இத்துறை சாகுபடி செய்தது. 1990–91-இல் 75 எக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு உள்ளது.

1988–89ஆம் ஆண்டில் ஜெரேனியம், யூகலிப்டஸ் சிட்ரியோ-டோரா, ஜாவா சிட்ரோனெல்லா போன்ற நறுமண வாசனை தைலப் பயிர்கள் 53 எக்டேர் நிலப்பரப்பில் பயிர் செய்யப் பட்டது. 1989–90ஆம் ஆண்டில் இப்பயிர் 46 எக்டேர் நிலப் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டது. 1990–91ஆம் ஆண்டில் 70 எக்டேர் நிலப்பரப்பில் இப்பயிர்கள் சாகுபடி செய்யப்பட திட்ட மிடப்பட்டுள்ளது.

5. ஆராய்ச்சி :

அதிக விளைச்சலைக் கொடுக்கக்கூடிய சின்கோனா, ஏனைய மருந்து மற்றும் நறுமணச் செடி வகைகளை வளர்க்கும் முறை களை மேம்படுத்துவதிலும் மற்றும் நோய் தாக்குதலை சமாளிக் கும் வகையிலும், ஆராய்ச்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சின்கோனா மற்றும் நறுமணத் தைலப் பயிர்கள் ஆகியவற்றைக் குறித்து தீவிர ஆராய்ச்சியும் அவைகளை அபி விருத்தி செய்வதற்கும் அரசால் ஒப்பளிக்கப்பட்ட ஆராய்ச்சி மையம் ஒன்று சின்கோனாத் துறையில் இயங்கி வருகிறது. தற் போது இப்பிரிவின் இயங்குந்தன்மை தோட்டப் பணிகளுக்கு ஏற்றவாறு செயல்பட்டு வருகிறது.

6. தொழிலாளர் நலன் :

6.1. தொழிலாளர்கள் இத்துறையில் உற்பத்திப் பணிகளில் பெரும் பங்காற்றி வருகின்றனர். மலைத்தோட்டங்கள் அமைக் கும் திட்டங்கள் ஆகியவை செவ்விய வகையில் செயல்படுத்து வதில் நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு நிலவுவதற்கும், தொழிலாளர் நலனைக் காப்பதற்கும் அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது. ஆதி திராவிட மற்றும் பின்தங்கிய மக்கள் பெருமளவில் கொண்ட 1,520 நிரந்தரத் தொழிலாளர் களும், 110 தற்காலிகத் தொழிலாளர்களுமாக மொத்தம் 1,630 தொழிலாளர்கள் இத்துறையில் வேலை செய்து வருகின்றனர். ஆடவர், மகளிர் ஆகிய இருபால் தொழிலாளர்களுக்கும் சமமாக ஊதியம் வழங்கப்படுவதோடு, விலைவாசிப் புள்ளியின் அடிப்படை யில் அகவிலைப்படி வழங்கப்படுகிறது. வயதுவந்த தொழிலாளர் களுக்கு நாளொன்றுக்கு ஊதியமாக ரூ. 15.95 (ரூபாய் பதி னைந்தும் மற்றும் பைசா தொண்ணூற்றைந்து மட்டும்) வழங்கப்

படுகிறது. 1,281 தரமான தொழிலாளர்கள் குடியிருப்புகள் தற்போதுள்ள தொழிலாளர்களுக்கு வேண்டியுள்ளது. இதனை கருத்திற் கொண்டு புதிய குடியிருப்புக்களைக் கட்டுவது மற்றும் பழைய குடியிருப்புக்களைப் புதுப்பித்தல் போன்ற பணிகளை முறையாக மேற்கொண்டு முடிக்கப்பட்டு வருகிறது. தரமான தொழிலாளர் குடியிருப்புக்கள் கட்டும் பணி மாநில திட்டப் பணிகளின்கீழ் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1989-90ஆம் ஆண்டின் இறுதி வரையில் மொத்தம் 561 தரமான தொழிலாளர் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டன. இன்னும் அதிகமாக 85 குடியிருப்புக்கள் கட்டப்பட்டு வருகிறது. ஆகவே, மேலும் 635 குடியிருப்புக்கள் கட்ட வேண்டியுள்ளது.

கட்டி முடிக்கப்பட்ட 561 மொத்த குடியிருப்புக்களில் 329 குடியிருப்புக்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளன. மேலும் 1989-90ஆம் ஆண்டு இறுதி வரை 126 தொழிலாளர் குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்க தேவைப்பட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1989-90 ஆம் ஆண்டில் ரூ. 3.60 இலட்சம் செலவில், 191 தொழிலாளர் குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்க நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

1990-91 ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சங்களில் சின்கோனாத் துறையின் தொழிலாளர்களுக்குத் தேவையான குடியிருப்பு அமைத்துக் கொடுத்தல் போன்ற வசதிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.2. பல்வேறு பிரிவுகளில் உள்ள துறையில் மருந்தகங்கள் மற்றும் ஆனைமலை பிரிவிலுள்ள அனைத்து வசதிகளுடன் கூடிய அரசு மருத்துவமனை ஆகியவற்றின் வாயிலாக மருத்துவ வசதிகளும் இத்துறையின் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் கூடலூரில் உள்ள அரசு மருத்துவமனையில் சின்கோனா தொழிலாளர்களுக்கென்றே 5 படுக்கைகள் தனியாக ஒதுக்கப்பட்டு உள்ளன. ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடமாடும் மருத்துவப் பிரிவு தொழிலாளர்களுக்குத் தேவையான நல்வாழ்வு மருத்துவ வசதிகளைச் செய்து கொடுக்கின்றன. ஆனைமலை மற்றும் நீலகிரியில் நோயாளிகளை மருத்துவ மனைகளுக்குக் கொண்டு செல்ல நோயாளி ஊர்தியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

6.3. அரசு சின்கோனாத் தோட்டங்களில் உள்ள குழந்தைகள் காப்பகத்தில் சேர்க்கப்பட்டுள்ள இத்துறையின் தொழிலாளர்களது குழந்தைகளுக்கு தொழிலாளர் நலச் சட்டப்படி உணவளிக்கப்பட்டு வருகிறது. தொழிலாளர்களுக்கு அவர்கள் வேலை செய்யும் இடத்திலேயே தினமும் இலவச தேநீர் வழங்கப்படுகிறது.

1990 மார்ச் 31]

6.4. இத்துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நலச் சட்டங்களும் அவற்றின் கீழ் வரும் விதிகளும் பொருந்தும். ஆண்டுதோறும் தொழிலாளர்களின் தினக்கூலி சம்பளத்துடன் கூடிய விடுப்பு, பேறுகால சலுகைகள், மருத்துவப்படி, பணியிழப்பு ஈடு வருங்கால சேமநல நிதியில் சேர்ந்துள்ள தொழிலாளர்களுக்கு அரசு சந்தாத் தொகை அளித்தல், கம்பளியும் (Rugs) மற்றும் மழைக் கம்பளியும் (Rain Comblies) அளித்தல், இலவச வீட்டு வசதி அளித்தல் போன்ற சலுகைகளுக்காக துறையின் மொத்த செலவிலிருந்து 40 விழுக்காடு செலவு செய்யப்படுகிறது. தொழிலாளர் நலச் சட்டப்படி கட்டப்பட வேண்டிய தொழிலாளர் குடியிருப்புகளும், தற்போதுள்ள குடியிருப்புகளை புதுப்பித்தல் மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் ஆகிய பணிகள் மாநில திட்டப் பணிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7. துறையின் நிதி நிலைமை :

7.1. அயல்நாட்டு சந்தைகளில் கொய்னாப் பொருட்களுக்கு விற்பனை வாய்ப்பின்மையாலும் உள்நாட்டு விற்பனை விலைக் குறைவினாலும் இத்துறையின் கொய்னாப் பொருட்களின் உற்பத்தியும் நிதி நிலைமையும் பாதிக்கப்பட்டுள்ளது. விலை ஏற்ற இறக்கம், ஏற்றுமதி விற்பனைக்கு மத்திய அரசு விதித்த தடை ஆகியவற்றின் விளைவாக இத்துறையின் பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டது. 1987—88ஆம் ஆண்டில் மூலதனத்தின் மீதான வட்டித் தொகை ரூ. 225.57 இலட்சங்கள் செலுத்தப்பட்ட பிறகு ரூ. 250.20 இலட்சங்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது. 1988—89ஆம் ஆண்டில் மூலதனத்தின் மீதான வட்டித் தொகை ரூ. 61.08 (மதிப்பிடப்பட்டது) இலட்சங்கள் செலுத்தப்பட்ட பிறகு ரூ. 80.74 இலட்சங்கள் (மதிப்பிடப்பட்டது) துறைக்கு இழப்பு ஏற்படும்.

7.2. குறிப்பிட்ட நிதியாண்டில் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு கருவிகள் மற்றும் தளவாடங்கள், மரச்சாமான்கள், வாகனங்கள் முதலியவற்றை வாங்குவதற்காக செலவிடப்படும் வருவாய் மற்றும் மூலதன செலவுத் தொகைகள் முந்தைய ஆண்டின் துறையின் வருவாய் மற்றும் மூலதன தொகையுடன் சேர்க்கப்பட்டு அமைத்த படிவக் கணக்குகளில் கணக்கிடப்படுகின்றது. அவ்வகை மொத்த மூலதன கணக்கு தொகைக்கு அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் விகிதாச்சாரப்படி வட்டித் தொகை செலுத்தப்படுகிறது. இந்த முறைப்படி 1987-88ஆம் ஆண்டு முடிய மிக அதிக அளவில் வட்டித் தொகை செலுத்த வேண்டியிருந்தது.

TRUTH ALONE TRIUMPHS

[1990 மார்ச் 31

7.3. மேற்குறிப்பிடப்பட்ட முறையை மாற்றியமைக்க அரசுக்கு கருத்துரு சமர்ப்பித்து, அரசு விரிவான ஆய்வுக்குப் பின் குறிப்பிட்ட நிதியாண்டில் செலவிடப்படும் வருவாய் செலவுத் தொகைக்கு மட்டும் வட்டித் தொகை செலுத்த 1989 பிப்ரவரியில் ஆணை பிறப்பித்துள்ளது. இந்த புதிய முறைப்படி 1988-89 ஆம் ஆண்டில் ரூ. 61.08 இலட்சங்கள் (மதிப்பிடப்பட்டது) மட்டுமே வட்டித் தொகையாக விதிக் கப்படும். 1987-88-ல் ஏற்பட்ட இழப்புத் தொகையான ரூ. 250.20 இலட்சத்துக்கெதிராக ரூ. 80.74 இலட்சங்கள் (மதிப்பிடப்பட்டது) 1988—89-ல் இழப்பு ஏற்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. 1989—90-ல் முதலனத்தின் மீதான வட்டி ரூ. 76.35 இலட்சங்கள் (மதிப்பிடப்பட்டது) என விதிக் கப்பட்டு, அவ்வாண்டின் இழப்புத் தொகை ரூ. 18.50 இலட் சங்கள் (மதிப்பிடப்பட்டது) என்று கணிக்கப்படுகின்றது.

7.4. 1990–91 ஆம் ஆண்டில் மூலதனத்தின் மீதான வட்டி ரூ. 83.60 இலட்சங்கள் (மதிப்பிடப்பட்டது) செலுத்திய பின்னர் ரூ. 65.75 இலட்சங்கள் (மதிப்பிடப்பட்டது) துறைக்கு இழப்பு ஏற்படும் என்று கணக்கிடப்படுகின்றது. 1989 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாளின்படி நிலையான சொத்துக்களின் மதிப்பு ரூ. 17.83 கோடிகள் என்றும், பண்டக சாலை இருப்புகள் முடிக்கப்பட்ட பொருட்கள் நடைபெற்று வரும் பணிகள், தேய்மான நிதி, இலாப நட்டக் கணக்கு சில்லறைக் கடன்கள் ஆகியவற்றின் வாயிலாக ரூ. 3.76 கோடிகள் என்று மதிப்பிட்டு இத்துறையின் சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூ. 21.59 கோடியாகும்.

இத்துறையின் பிரச்சினைகளைத் தீவிரமாக ஆராய்ந்து, இத்துறையை அரசு வணிக கழகம் ஏற்று செயல்படலாமா என்பது குறித்து அரசு ஆய்ந்து வருகிறது.

8. இத்துறையின் வளர்ச்சித் திட்டங்கள் :

8.1. குனிடின் சல்பேட், சின்கோனிடின் தயாரித்தல் தேயிலை கழிவிலிருந்து 'கஃபின்' தயாரித்தல் போன்ற பணிகள் இத்துறையின் அண்மைக்கால முக்கிய சாதனை களாகும். குடும்ப நலத் திட்டத்திற்காகத் தயாரிக்கப்படும் கருத்தடை மத்திரைகளில் உள்ள 'கார்டிசான், ஸ்டிராய்டு ஹார்மோன்' போன்றவற்றைத் தய்ாரிக்கத் தேவைப்படும் மூலப் பொருளான 'டயஸ்ஜெனின்', குனைன் சல்பேட்டி லிருந்து கிடைக்கப் பெறும் துணைப் பொருளான சின்கோனா பெப்ரிபுயூஜிலிருந்து சின்கோனிடின் மற்றும் குனிடின் என்ற பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன. ஆனைமலைப் பிரிவி லுள்ள தொழிற்சாலையில் டயஸ்ஜெனின் என்னும் பொருள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. கொசுக்களை விரட்டும்

1990 மார்ச் 31]

'சினோமாஸ்' என்ற களிம்பையும், 'சின்ஸ்ப்ரே' என்ற தெளிப்பான் மருந்தையும், தரைகளைச் சுத்தப்படுத்தப் பயன்படும் நறுமணம் கொண்ட சின்பிரஷ் ஆகியவை தயாரித்து விற்பனை செய்தல் 'சினோரமா, தொட்டபெட்டாமிஸ்ட், ஆகிய வாசனை திரவியங்களைத் தயாரித்தல் போன்ற இன்றியமையாத பணிகள் அண்மை காலங்களில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்றுவருகின்றன.

8.2. கீழ்க் குறிப்பிட்ட பல்வேறு திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது.

(அ) மாநிலத் திட்டப் பணிகள்:

1. சின்கோனாப் பயிரை முனைப்பு சாகுபடி மற்றும் பதியன் முறையில் பயிரிடுதல்.

2. மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடிவகை பயிர்களை வணிக ரீதியில் பயிரிடுதல்.

3. மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடி வகைகளின் வளர்ச்சிக்காக முனைப்பு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல்.

4. தொழிற்சாலையில் உற்பத்தியைப் பெருக்குவதற்காக தொழிற்சாலைக்குத் தேவையான கருவிகள் வாங்குதல்.

5. நீலகிரி மாவட்டத்தில் கிராமிய தொழிற் பிரிவுகளில் ஒன்றாக சின்கோனா துறையில் தேயிலைக் கழிவிலிருந்து 'கஃபீன்' தயாரித்தல்.

(இ) மத்திய அரசின் நிதி உதவியுடன் இயங்கி வந்து தற்போது மாநில திட்ட பணிக்கு மாற்றப்பட்ட திட்டங்கள்.

(1) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

(1) இத் திட்டத்தின்கீழ் ஜாவா சிட்ரொனல்லா புல் பயிரிட்டு அதனின்று தைலம் எடுக்கும் பணி செயல்படுத்தப்படுகிறது. 1983-84ஆம் ஆண்டு வரை 80 எக்டேர் நிலப் பரப்பில் இப் பயிர் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

(2) டயஸ்கோரியா பயிரிடுதல் மற்றும் அதிலிருந்து டயஸ்ஜெனின் தயாரித்தலுக்கு தொழிற்சாலை நிறுவுதல் 1988-89ஆம் ஆண்டு வரை 70 எக்டேர் நிலப்பரப்பில் டயஸ்கேரியா பயிரிடப்பட்டுள்ளது. டயஸ்கோரியா தோட்டங்களில் விளைபயன் இலாபகரமாக இல்லாமையால் மேற்கொண்டு சாகுபடி செய்வது குறைக்கப்பட்டுள்ளது.

(3) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் கொடைக் கானல் தாலுக்கா மேல் பழனிமலைப் பகுதியில் உள்ள பேரிஜம் மற்றும் பெருமாள் மலை (பெரும் பள்ளம்) ஆகிய இடங்களில் ஜெரேனியம் பயிரிடுதல், மொத்தம் பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் விவரங்கள் வருமாறு —

(எக்டேர்)

1. பெருமாள் மலை	..	173
2. மேல் பழனிக் குன்று (பேரிஜம்)	..	40.25

பெருமாள் மலைப் பகுதியில் ஏற்கெனவே, ஜெரேனியம் பயிரிடப்பட்டு அதன் ஆயுட்காலம் முடிந்த 26.25 எக்டேர் நிலப் பரப்பில் மீண்டும் 1989-90 ஆம் ஆண்டில் ஜெரேனியம் பயிரிடப்படுகிறது.

8.3 திட்டப் பணிகளின்கீழ் செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகையின் விவரம் வருமாறு :

ஆண்டு.	மாநிலத் திட்டப் பணிகள்.	மலைப் பகுதி மேம் பாட்டுத் திட்டம்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சங்களில்)		
1987–88 (உள்ளபடி) ..	60.06	1.92	61.98
1988–89 (உள்ளபடி)	52.01	2.26	54.27
1989–90 (திட்ட மதிப்பீடு)	46.71	2.28	48.99
1989–90 (திருத்திய மதிப்பீடு)	50.62	2.08	52.70

9. வரவு செலவுத் திட்டம் :

விவரங்கள்.	1988–89 (உள்ளபடி)	1989–90 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.)	1989–90 திருத்திய மதிப்பீடு.	1990–91 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.)
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் இலட்சங்களில்)		
கோரிக்கை எண் 25—				
சின்கோனா :—				
2407 மலைத் தோட்டங்கள் ;—				
அகவிலைப் படி மற்றும் பொங்கல் பரிசுத் தொகை அளிக்க வேண்டியதற்கான மொத்த தொகை.	..	8.15	10.49	9.21
நெறிமுறைப்படுத்துதல் ..	23.65	23.02	25.78	25.85
மலைத் தோட்டங்கள் (நீலகிரி மற்றும் ஆனைமலை)	88.91	71.74	85.73	84.64

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொழிற்சாலைகள் மருந்து மற்றும் நறுமணத் தைல தொழிற்சாலை, நடுவட்டம், அரசு கொய்னாத் தொழிற் சாலை, ஆனைமலை.	33.76	36.10	29.23	30.00
விற்பனை	3.07	3.02	3.22	3.39
திட்டங்கள் (ஆராய்ச்சித் திட்டங் கள், மாநிலத் திட்டங்கள்).	88.18	80.28	83.94	85.71
வட்டி	65.00	225.00	56.25	100.80
மொத்தம் ..	302.57	447.31	294.64	339.60

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

9. வரவு-செலவுத் திட்டம்—(தொடர்ச்சி)

விவரங்கள்.	1988–89 (உள்ளபடி)	1989–90 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.	1989–90 திருத்திய மதிப்பீடு.	1990–91 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் இலட்சத்தில்)		
கோரிக்கை எண். 56—				
4407. மூலதனச் செலவு—				
கட்டிடங்கள்	7.35	3.60	5.60	5.01
இயந்திரத் தளவாடங்கள் ..	0.88	2.00	2.00	2.00
மொத்தம் ..	8.23	5.60	7.60	7.01
பெரு மொத்தம் ..	310.80	452.91	302.24	346.61

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கொள்கை விளக்கக் குறிப்பு.

வனத் துறை.

1. அறிமுகம் :

வனச் செல்வம் இயற்கையின் பாரம்பரியமிக்க செல்வம். தீவனம், விறகு மரம் மற்றும் தடிமரங்களின் தேவைகள் மிகுந்து வருவதாலும், காலத்திற்கு முற்பட்ட மக்களின் தேவைகளினாலும் குறைந்த அளவிலான பாதுகாப்பு அமைப்புகளின் காரணமாகவும் கடுமையாக அழிக்கப்பட்டு அதனால் வனப்பரப்பு தரமிழந்தும் வருகின்றன. தமிழ்நாடு நிலவளம், நீர்வளம், வனவளம் செறிந்து நல்லதொரு சூழ்நிலையினை கொண்டுள்ளது. வளமான உயிரினச் சூழல் அமைப்பே உயிரினம் தோன்றிவாழ அடிப்படை தேவையாகும். மனித சமுதாயத்தின் பல்வேறு துறைகளில் முன்னேற்ற இனங்களின் முயற்சிகளினால், இந்த உயிரியல் தன்மைக்கு ஏற்படும் இழப்புகளில் குறைகளும் மற்றும் சுற்றுச் சூழல் முறையில் மாறுதல்களும் ஏற்படுகின்றன.

1.2. குறைந்த அளவுடைய நிலப்பரப்பில் இயற்கை அழிவு, தரங்குறைவு மண் அரிப்பு போன்றவை சிந்தனையும் சிரத்தையும் அற்ற நிலப்பராமரிப்பின் காரணமாக ஏற்படுவது ஈடு செய்யமுடியாத பேரிழப்பு இன்றைய தினங்களில் காணப்படுகின்றது. மனித சமுதாய மற்றும் கால்நடைகளின் எண்ணிக்கைகள் தொடர்ந்து பெருகி வருவதால் தாவர இனங்கள் மற்றும் உயிர் இனங்களை காப்பது மிகுந்த அச்சுறுத்தலை அளிக்கின்றது. தற்போதைய நிலையினை கருத்தில் கொண்டும் இந்நேரத்தின் தேவையினை கருதியும் வனத்துறை ஐந்து வழிமுறைகளில் நிவர்த்தி செய்ய முனைந்துள்ளது :—

(1) இயற்கை வளத்தினை பேணி பாதுகாத்தல்.

(2) வன வளத்தின் தன்மையினை நிலைப்படுத்தி பராமரித்தல்.

(3) சமுதாய தேவைக்காக வன பராமரிப்பு.

(4) மக்களிடம் வனச் செல்வத்தினை காத்து மேம்படுத்துவதின் தேவையினை உணர்த்துதல்.

(5) ஆராய்ச்சி மற்றும் பயிற்சி அறிவியல் ரீதியில் புதிய கண்டுபிடிப்புக்கள் மூலம் உற்பத்தியினை பெருக்குதல் மற்றும் துறை பணியாளர்களுக்கு பயிற்சி கொடுத்தல்.

1990 மார்ச் 31]

தேசிய வனக் கொள்கை 1988-ல் பின்வரும் நோக்கங்களை முதன்மையாகக் கொண்டு வன வளத்தைப் பராமரித்தல், காத்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற அபிவிருத்தி பணிகளை செயற்படுத்துவதற்கான முயற்சிகளை அடிப்படையாக கொண்டதாகும் :

(1) இயற்கைச் சூழலின் சமநிலையை பாதுகாத்தலும் தக்க வைத்தலும் ஆகிய பணிகளின் மூலம் சுற்றுச் சூழலின் தன்மையை மீட்டு சீரான நிலையில் பராமரித்தல் ;

(2) குறிப்பாக நாட்டில் உள்ள வேறுபட்ட உயிரின வாழ்க்கை பிரிவுகள் மற்றும் உயிரினம் தோன்றுவதற்குரிய வளம் நிறைந்துள்ள இயற்கை காடுகளில் தாவர, உயிரின சூழலை பாது காப்பதன் மூலம் நமது பாரம்பரியம் மிக்க இயற்கை செல்வத்தை பாதுகாத்தல் ;

(3) ஆறு, ஏரி மற்றும் நீர்த்தேக்க பகுதிகளில் ஏற்படும் மண் அரிப்பு மற்றும் காடுகள் அழிவினை வெள்ளம் மற்றும் வறட்சி காலங்களில் காப்பாற்றுதல் மற்றும் நீர்த்தேக்க பகுதிகளில் காணப்பெறும் மண் கூடுதலை தவிர்த்தல் ;

(4) கடற்கரை ஓர பகுதிகளில் மண் குன்றுகள் ஏற்படுதலை கட்டுப்படுத்துதல் ;

(5) அதிக அளவு காடு வளர்ப்பு மற்றும் சமூகக் காடு வளர்ப்பு திட்டங்களின் மூலம் நாட்டிலுள்ள தரம் தாழ்ந்த, அழிந்த நிலப்பகுதிகளில் அடர்ந்த மரச்சூழலை ஏற்படுத்தி, வனம் மற்றும் மரப்பகுதியினை மிகுதிப்படுத்துதல்;

(6) கிராமப்புற மற்றும் மலைவாழ் மக்களின் விறகு மரம், தீவனம், தடிமரம் மற்றும் இதர காடுபடு சிறுபொருட்களின் தேவையை நிறைவு செய்தல்;

(7) தேசிய தேவையினை கருதி வனத்திலிருந்து அதிக அளவு உற்பத்தி திறனை மேம்படுத்துதல் ;

(8) வனப்பொருட்களை தக்க செயல் நுட்பத்துடன் பயன்படுத்த ஊக்குவித்தல் மற்றும் மரத்திற்கு தக்க ஈடு பொருள்களை அதிகப்படுத்துதல் ;

(9) பெண்களும், இணைந்து பங்கேற்கும் வகையில் மக்கள் சக்தி இயக்கத்தை மிகுதியாக்கி மேற்காண் இலக்குகளை எய்துவதுடன் தற்போதுள்ள காடுகளை சார்ந்துள்ள நிலையினைக் குறைத்தல்.

1.3. தேசிய வனக் கொள்கை வன உயிரின பராமரிப்பு ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் வனத்தினை சார்ந்த தொழிற்சாலைகளை பற்றி அறிவுறுத்துகிறது.

(1) வன உயிரினப் பாதுகாப்பு :

வன உயிரின பாதுகாப்பிற்கு தேவைப்படும் சிறப்புப் பணிகளை மேற்கொள்ள வன மேலாண்மைத் திட்டத்தில் தகுந்த செயல்முறைகள் சேர்க்கப்படவேண்டும். பாதுகாக்கப்படும் பகுதிகளில் இயற்கை தடுப்புப் பகுதிகளை அமைத்து அதன் மூலம் இடம் பெயர்ந்த வன உயிரினங்களுக்கு பாதுகாப்பு அளித்து வன உயிரின தொடர்ச்சிதனை பாதுகாத்தல் தவிர்க்க முடியாத செயலாகின்றது.

(2) வன ஆராய்ச்சி :

அதிகரித்து வரும் வனத்தின் தேவைகள், சுற்றுசூழல் பாதுகாப்பு, ஆற்றல் மற்றும் வேலை வாய்ப்பு இவைகள் விஞ்ஞான வன ஆராய்ச்சியின் அடிப்படையில் செயல்படுத்தப் படவேண்டும். மேலும் இவைகளின் தேவைகளுக்கேற்ப ஆராய்ச்சிப் பிரிவு புதிய முறையில் முன்னேற்றி நடத்தப்பட வேண்டும்.

மரங்களின் மற்றும் இதர வனப்பொருட்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க நவீன விஞ்ஞான தொழில் முறையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல் ஆராய்ச்சி பணிகளில் தலையாயதாகும்.

(3) வனம் சார்ந்த தொழிற்சாலைகள் :

வனம் சார்ந்த தொழிற்சாலைகள், தங்களின் தேவையின் மூலப்பொருட்களை வளர்த்தல் அவசியம், தவிரவும் தனியார்களுடன் தொடர்பு கொண்டு மூலப் பொருட்களை வளர்ப்பது குறித்து அறிவுரைகள், தொழில்நுட்ப கருத்து வழங்கி அவைகளை வளர்த்து அறுவடை செய்து எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் வன மூலப் பொருட்களை குறைந்த விலையில் தருதலை நிறுத்தி, தொழிற் நிறுவனங்களே தனக்குத் தேவையான மூலப் பொருட்களை உற்பத்தி செய்து கொள்ளவும், இறக்குமதிக் கொள்கையினை தளர்த்தி சீரமைக்கவும் இதனை படிப்படியாக செய்ய ஊக்குவிக்கப்படும்.

2. வனப்பரப்பு :

2.1. தமிழ்நாட்டின் நிலப்பரப்பு 1,30,057 சதுர கி.மீ. அதில் 22,699 சதுர கி.மீ. வனப்பரப்பாகும். நாட்டின் மொத்தப் பரப்பளவில் குறைந்த பட்சம் 33 சதவீதம் அளவு வனப் பரப்பாக அமையப்படவேண்டும். அதில் தற்போதுள்ள

1990 மார்ச் 31]

வனப் பரப்பளவு சுமார் 17.45 விழுக்காடாகும். 18,838.000 சதுர கி.மீ. பரப்பளவு ஒதுக்கக் காடுகள் ஆனது மார்ச் 1989 இறுதியில் 3,861.005 சதுர கி.மீ. பரப்பளவு ஒதுக்கு நிலமாகவும் மற்றவை வனப்பகுதியாகவும் இன்னமும் உள்ளது.

2.2. தென்னாற்காடு, மதுரை, காமராஜர், திண்டுக்கல், காயிதே மில்லத், நீலகிரி மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள சிலர் ஜாகீர் ஜமீன் நிலங்களை ஒதுக்கக் காடுகளாக அறிவிக்கை செய்யும் பணி நடந்து வருகின்றது. 1987–88 மற்றும் 1988–89 வரையிலும் நிலப்பரப்பை ஒதுக்கக் காடுகளாக கொண்டு வர மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் 1989–90 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் பணிகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

ஆண்டு.	இலக்கு.	சாதனை. (பரப்பளவு அறிவிக்கை செய்யப் பட்டது).
(1)	(2)	(3)
	எக்டேர்.	எக்டேர்.
1987–88	20,000	22,496
1988–89	25,000	29,483
1989–90	25,000	6,454

(பிப்ரவரி 1990 வரை).

2.3. வனப் பாதுகாப்புச் சட்டம், 1980 அக்டோபரில் நடைமுறைக்கு வந்தது முதல் 3839.33 எக்டேர் வனப் பரப்பை 127 இனங்களில் வனம் சாராத தவிர்க்க முடியாத தேவைகளான அணைக்கட்டு, மின் வழி தொடர்பு, நீர் வழங்குதல் போன்ற நோக்கங்களுக்கு மாற்றிப் பயன்படுத்த அனுமதி கோரி மைய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டன. அவற்றுள் 96 இனங்களுக்கு வனப்பகுதியில் 1846.72. ஹெக்டேர்கள் மத்திய அரசால் அனுமதி வழங்கப்பட்டன. மற்றும் 17 இனங்கள் நிராகரிக்கப்பட்டன. தற்போது 14 இனங்கள் மைய அரசின் பரிசீலனையில் உள்ளன.

3. வன வருவாய் மற்றும் செலவினங்கள் :

3.1. வனத்திலிருந்து பெருமளவு வகையிலிருந்து 1988–89-ல் வசூலிக்கப்பட்ட வருவாய் மற்றும் 1989–90. மற்றும் 1990–91-ல் எதிர்பார்க்கப்படும் வருவாய் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

[1990 மார்ச் 31

வரிசை எண்ணும், வழி வகையும்.	1988–89.	1989–90 பட்ஜெட்.	1989–90 எதிர் பார்க்கும் அளவு.	பட்ஜெட் எஸ்டிமேட், 1990-91-ல் தெரிவிக்கப் பட்டவை.
(1)	(2)	(3)	(4)	(5)
1. சந்தன மரம்.	13.52	15.00	13.60	15.00
2. தடிமரம்	1.63	0.65	0.64	0.67
3 தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருட்கள் வழங்குதல்.	8.94	7.00	11.13	13.57
4 காடுபடு சிறுபொருட்கள் (புளி, கடுக்காய் சீவக்காய்).	0.77	0.90	2.90	3.40
5 வனப்பண்ணைத் தோட்டங்கள்.	4.75	4.08	6.53	6.20
6 மூங்கில், முந்திரி, சவுக்கு மென்மரம் முதலிய தோட்டங்கள்.	4.15	0.79	5.49	3.27
	33.76	28.42	40.29	42.11

3,2. 1988–89-ல் செலவு ரூ. 43.22 கோடி. 1989–90-ல் எதிர்பார்க்கும் செலவு மற்றும் 1990–91 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் முறையே ரூ. 50.87 மற்றும் 52.96 கோடியாகும். விபரங்கள் அனுபந்தத்தில் காண்க.

4. வன உற்பத்தித் தோட்டங்கள் மூலம் வருவாய் :

4.1. சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக காடு வளர்க்கும் திட்டத்தை வனத்துறை தீவிரமாக செயல்படுத்தி வருகிறது. முக்கியமான மலைப்பகுதிகளிலும், நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும், பலன் தரும்

1990 மார்ச் 31]

தோட்டங்கள் மற்றும் மரங்கள் வளர்ப்பு திட்டங்களினால் காப்பு காடுகளில் 4.69 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் 1988–89ஆம் வருட முடிவு வரை பல தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன. அவைகள் உற்பத்தி தொழிற்சாலை மற்றும் சமூகத் தேவை களுக்கு உபயோகப்படுத்தப்படுகின்றது. இதே போல், காப்பு காடுகளுக்கு வெளியே 3.72 லட்சம் ஹெக்டேர் பரப்புப் பகுதி களில் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

4.2. வன மூலப் பொருட்களைச் சார்ந்த தொழிற்சாலை களின் தேவையும், வணிக ரீதியில் வனப் பொருட்களின் தேவை யும் அதிகரித்து வருகிற வேகத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில், வணிக பொருட்களுக்கான வனத் தோட்டங்களை எழுப்புவது சாத்தியமற்றதாக உள்ளது. சொல்லப் போனால் சுற்றுப்புறச் சூழ்நிலைகளின் தன்மைகளை அனுசரித்து உற்பத்தியின் அளவு ஏறக்குறைய தற்போதைய நிலையிலேயே தொடர உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதுவரையில் சுமார் 1.14 லட்சம் எக்டேர் பரப் பிற்கு மிலாறு, கற்பூரம் தைல வகைகள், தேயிலை, இரப்பர் முதலான வணிகப் பொருட் தோட்டங்கள் கீழே குறிப்பிட்டுள்ள படி எழுப்பப்பட்டுள்ளன :

தோட்ட வகைகளின் பெயர்.		1988-89 வரை உள்ள தோட்டங் களின் பரப்பு. (எக்டேரில்)
(1)		(2)
1. சூழ்மரம்	..	106,337
2. இரப்பர்	..	4,785
3. தேயிலை	..	3,011
4. லவுங்கம்	..	110
மொத்தம்	..	114,243

1988-89 ஆம் ஆண்டில் வணிக ரீதியில் எழுப்பப்பெற்ற வனத் தோட்டங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற வருவாய் வரை படத் தில் காணலாம்.

[1990 மார்ச் 31

4.3. **மூலப்பொருட்கள் வழங்குதல், கூழ் மரங்கள் :—** கூழ் மரம், காகிதம், ரேயான், தோல் பதனிடும் டாணின் போன்ற பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் தங்களுக்குத் தேவையான மூலப் பொருட்களுக்கு காடுகளை நம்பியிருக்கின்றன. தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் முக்கிய மூலப் பொருட்கள் புளூ கம், சிவப்பு கம், மைசூர் கம், தோல் உரிக்கப் பட்ட மிலாறு மட்டை, மூங்கில், ஈத்தல், வாட்டில் பட்டை தனுக்கு மரம், பைனஸ் பட்டுலா முதலியவையாகும்.

4.4. **வளமும் தொழில் நிறுவனங்களும் இணைந்து செயல்படும் விதம் :—** ஆண்டொன்றுக்கு சுமார் $2\frac{1}{4}$ லட்சம் டன் மூலப் பொருட்கள் இந்தத் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. 1988-89ஆம் ஆண்டில் சுமார் 2.12 லட்சம் டன்கள் மூலப் பொருட்கள் தொழிற்சாலைகளுக்கு விற்பனை மூலம் கிட்டிய வருவாய் ரூ. 7.32 கோடியாகும். 1989–90 ஆம் ஆண்டில் 2.27 லட்சம் டன்கள் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் வனத்துறைக்கு சுமார் ரூ. 12.00 கோடி ரூபாய் வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப் படுகின்றது. 1990-91 ஆம் ஆண்டில், தேசிய வனக் கொள்கையினை பின்பற்றி வனச் சூழலின் அடிப்படையில் விஞ்ஞான ரீதியில் இயற்கையின் சூழ்நிலைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வன மூலப் பொருட்களை வெட்ட தொழில் நிறுவனங்களுக்கு வழங்க ஆய்வு செய்யப்படுகின்றது. இதன் தொடர்பாக வனத்தைச் சார்ந்த தொழில் நிறுவனங்கள், சுற்றுப்புறச் சூழல் வல்லுநர்கள் துணை கொண்டு மாநில/மண்டல அளவிலான கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வனவளங்களுக்கு குந்தகங்கள் ஏற்படாவண்ணம் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான மூலப் பொருட்களை வனத்திலிருந்து பெறுவதைக் குறைக்க அறிவுறுத்தப்பட்டது.

4.5. அரசு நிர்ணயிக்கும் விலைப்படி தொழிற்சாலைகளுக்குத் தேவையான வன மூலப்பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

4.6. தொழில் நிறுவனங்களுக்கு 1988-89 மற்றும் 1989-90 ஆம் ஆண்டு வன மூலப் பொருட்களுக்கு அரசு நிர்ணயித்த விலைப்பட்டியல் பின்வருமாறு;—

வகைகள்.	1988-89	1989-90
(1)	(2)	(3)
	(மெட்ரிக் டன்னுக்கு)	
ப்ளூ கம்	525	660
யூகலிப்டஸ் கிராண்டிஸ்	450	570

1990 மார்ச் 31]

கைகள்.	1988–89	1989–90
(1)	(2)	(3)
	(மெட்ரிக் டன்னுக்கு)	
தோல் உரிக்கப்பட்ட மிலாறு மரம் ..	400	500
யூகலிப்டஸ் ஹைபிரிட்	370	370
மூங்கில்	150	275
மிலாறு பட்டை	850	1,555

1989-90 ஆம் ஆண்டிற்கு வன மூலப்பொருட்களுக்கு அரசு, விலைக் கொள்கையை சீரமைத்துள்ளது. 1989-90 ஆம் ஆண்டு வன மூலப்பொருட்களின் விலை 83 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது.

4.7. விறகு மரம் :—தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில் சமையல் தேவைகளுக்காக 80 சதவீதம் விறகு மரம் தேவைப்படுகின்றது. விறகு மரம் போதிய அளவு விநியோகிக்க இயலாமை என்பது ஏழை மக்களின் எரி சக்தி பற்றாக் குறையை தீர்க்க வழியில்லை என்பதாகும். அதி வேகமான மக்கள் பெருக்கத்தின் காரணமாக மக்களின் தேவையினை பூர்த்தி செய்யும் அளவு விறகு மரம் பட்டா நிலங்களிலிருந்தும் மற்றும் வனப் பகுதிகளிலிருந்தும் கொண்டு வருவது நெருக்கடியாக உள்ளது. தமிழ்நாட்டில் கிராம பகுதிகளில் போதிய அளவு விறகுகள் இலவசமாக சேகரிக்கப்பட்டு வருகின்றது. தற்போது விறகு மர கூப்புகள் தமிழக வனத்துறையின் ஒதுக்கக் காடுகளிலிருந்து வெட்டப்படுவதில்லை. வனங்களிலிருந்து கிடைக்கும் தலைவாதுகள் மற்றும் காய்ந்த மரங்களின் மூலம் விறகு மரங்கள் கிடைக்கப்பெற்று விநியோகிக்கப்படுகின்றது.

1984–85 முதல் 1988-89 முடிய கிடைக்கப்பெற்ற தலைவாதுகள் மற்றும் நிராகரிக்கப்பட்டவைகளை விற்றதின் மூலமும் விறகு பற்றாக்குறை தேவையினை பூர்த்தி செய்ததால் தமிழ்நாடு அரசுக்கு கிடைத்த வருவாய் விபரம் (நீலகிரி மற்றும் பழனி மலைகளில்) கீழே தரப்பட்டுள்ளது :—

வருடம்.	கிடைக்கப்பெற்ற வருவாய். (ரூபாயில்)
(1)	(2)
1984-85	19,61,448
1985-86	19,72,636
1986-87	31,56,259
1987-88	52,38,903
1988-89	62,70,737

[1990 மார்ச் 31

4.8. சந்தன மரம் :—சந்தன மரங்கள் இயற்கையாக வட ஆற்காடு—அம்பேத்கார், திருவண்ணாமலை—சம்புவராயர், தர்மபுரி, சேலம், பெரியார் மற்றும் கோவை மாவட்டங்களின் மலை மற்றும் பீடபூமி பகுதிகளில் அதிகமாகவும், நீலகிரி, தென் ஆற்காடு மற்றும் திருச்சி மாவட்டங்களில் குறைந்த அளவிலும் வளர்கின்றன. பட்டுப்போன சந்தன மரங்கள் மட்டுமே பெயர்த்தெடுக்கப்பட்டு சேகரிக்கப்படுகின்றன. இவ்வாறு சேகரிக்கப்படுகின்ற மரங்கள் சந்தன மரக் கிடங்கிற்குக், கொண்டு வரப்பட்டு, சுத்தம் செய்யப்பட்ட பின்னர், பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. சந்தன மர விற்பனை மற்றும் விற்பனையின் மூலம் கிடைத்த வருவாய் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

ஆண்டு.	விற்கப் பட்ட சந்தன மரங்களின் அளவு (மெட்ரிக் டன்).	வருவாய் (ரூபாய் லட்சத்தில்).	ஒரு மெட்ரிக் டன்னுக்கு கிடைத்த சராசரி விலை (ரூபாய் ஆயிரம்).
(1)	(2)	(3)	(4)
1987 ..	1,691	1,901.9	112.4
1988 ..	1,032	1,196.5	115.8
1989 ..	967.6	1,273.4	131.6

4.9. காடுபடு சிறு பொருட்களின் விற்பனை மற்றும் வருவாய் :—காடுபடு சிறு பொருட்கள் மூலம் கிடைக்கும் வருவாய் ஒரு பெரிய அளவில் இருந்து வந்த போதிலும் காடுபடு சிறு பொருட்களின் உற்பத்தி மற்றும் சேகரிப்பு வெறும் வணிக நோக்கத்தில் மட்டும் செய்யப்படுபவை அல்ல. அடிப்படை கருத்து என்னவெனில் கிராமப் புறங்களிலும், வனப் பகுதிகளிலும் வாழும், சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பின்தங்கியுள்ள மக்களின் மேம்பாட்டுக்காகவும், காடுகளில் இரண்டறக் கலந்து வாழும் பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காகவும் பயன்பட வேண்டும் என்ற முக்கிய நோக்கத்துடன் தான் இந்த காடுபடு பொருட்கள் சேகரிக்கும் உரிமை விற்பனைக்கு விடப்படுகின்றன.

1989–90 ஆம் ஆண்டிலிருந்து அரசு காடுபடு பொருட்களில் அதிக வருவாய் வேண்டி பொது ஏலத்தில் விற்பனை விட ஆணை வழங்கப்பட்டது. இதன் மூலம் அதிக பயன்

ஏற்பட வாய்ப்புள்ளது. இருந்தபோதிலும், காடுகளிலிருந்து காடுபடு சிறு பொருட்களையும், புளி, கறிவேப்பிலை, கடுக்காய், பிரம்பு முதலானவைகளை குத்தகை அடிப்படையில் சேகரித்துக் கொள்ளும் உரிமம், ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடி மக்களுக்காக நடத்தப்படும் கூட்டுறவு சங்கங்களுக்கு துறையால் நிர்ணயிக்கப்படும் நியாய விலையை விட 10 விழுக்காடுகளுக்கு குறைவான விலைக்கே குத்தகைக்கு விடப்படுகின்றது. மேற்படி கூட்டுறவு நிறுவனங்கள் இந்த சலுகையைத் தவறுதலாகப் பயன்படுத்துவதைக் கண்டறிய நேரிட்டால் வெளியாருக்கு பொது ஏலம் மூலமாக குத்தகைக்கு உரிமம் விடுவதோ அல்லது துறை மூலம் சேகரிப்பதோ அனுமதிக்கப்படுகின்றது. 1989—90 ஆம் ஆண்டில் காடுபடு பொருட்கள் விற்பனை மூலம் ரூ. 2.90 கோடி வருமானம் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த சில ஆண்டுகளில் தர்மபுரி, சேலம், திருவண்ணாமலை—சம்புவராயர் வட ஆற்காடு—அம்பேத்கார் மற்றும் தென் ஆற்காடு மாவட்டங்களில் உள்ள புளியன் தோட்டங்களில் பண்ணை நிர்வாக முறையில் தீவிரமான வன இயல் செயற்பாடுகளைப் பின்பற்றி வருகிறோம். இதன் விளைவாக வரும் ஆண்டுகளில் புளியன் தோட்டங்களின் வாயிலாகக் கிட்டும் வருவாய் வெகுவாக உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

4.10. கூட்டுறவு கழகங்களுக்கு (லேம்ப்) ஒதுக்கீடு :— 1989 ஆம் ஆண்டு தலைவாது விறகுகள் (அட்டிக்கட்டப்பட்டது). புளி மற்றும் இதர காடுபடு சிறு பொருட்கள், கீழ்க்கண்ட கூட்டுறவு சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

(1) பொளுவம்பட்டி மலைவாழ் மக்கள் கூட்டுறவு சங்கம், கோயம்புத்தூர் மாவட்டம்.

(2) நீலகிரி மாவட்டம் வனத் தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கம், உதகை.

(3) இரயில்வே கூட்டுறவு சிவில் சப்ளையர்ஸ் கூட்டுறவு சங்கம், குன்னூர்.

(4) நீலகிரி மாவட்ட சிவில் சப்ளையர்ஸ் கூட்டுறவுச் சங்கம், உதகை.

(5) பச்சைமலை மலைவாழ் இன மக்கள் கூட்டுறவு சங்கம், துறையூர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1990 மார்ச் 31

5.1. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் :—1985—90, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிக் காலத்தில் ரூ. 87.73 கோடி அளவில் கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றம் அடைய பணிகள் மேற்கொள்ளப்பட்டன :—

(1) மாநில காடு வளர்ப்புத் திட்டங்கள்.

(2) மத்திய மற்றும் மாநில அரசும் சம அளவில் செலவு பொறுப்பு ஏற்கும் திட்டங்கள்.

(3) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

(4) மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்.

(5) மாநில மண்வள பாதுகாப்புத் திட்டங்கள்.

(6) தனியார் நிறுவனங்களின் மூலம் திட்டம்.

(7) ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மத்திய அரசினால் நூறு விழுக்காடுகள் உதவியுடன் பொறுப்பு ஏற்று செயல்படும் புதிய திட்டங்கள்.

மேற்கூறிய பல திட்டங்கள் யாவும் பல்வேறு திட்டப் பணிகளுடன் கிட்டத்தட்ட 1,42,000 ஹெக்டேர் பரப்பளவில் தோட்டங்கள் எழுப்புதல் என்ற இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. முதல் நான்கு ஆண்டுகளில் ரூ. 107.38 கோடி நிதி செலவு செய்யப்பட்டு, இதன் மூலம் 1,36,625 ஹெக்டேர் பரப்பளவில் தோட்டப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. வரையறுக்கப்பட்ட குறியீட்டளவை காட்டிலும் நிதி மற்றும் செயல் இலக்கில் அதிக அளவு மேற்கொள்ளப் பட்டுள்ளன. 1989—90 ஆம் ஆண்டில் ரூ. 35.85 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 37,096 ஹெக்டேர் பரப் பளவில் தோட்ட மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் நிதி செலவு ரூ. 143.23 கோடியும், செயல் இலக்கைப் பொருத்தவரை 1,73,700 ஹெக்டேர் பரப்பளவிலும் பணி செய்யப்படலாம் என கருதப்படுகின்றது. ஏழாவது ஐந்து ஆண்டு திட்டக் காலத்தின் முதல் நான்கு ஆண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சி குறித்த வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது:

1990 மார்ச் 31]

திட்டப் பணிகள்— மாநிலத் திட்டம்

5.2. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் :— வன வளர்ச்சியின் தேவைகளையும் அதன் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு, தக்க பரிசீலனைக்குப் பின்னரே ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் செய்யப்பட வேண்டிய பணிகளும் செயல் பாடுகளும் வரையறுக்கப்பட்டன. தற்போதைய நிலைக்கு ஏற்ப சுற்றுப்புற சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு இத்திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. சுருங்கக் கூறின், பாதுகாப்பு ஒருங்கிணைப்பு, வளர்ச்சி, உற்பத்தி, தண்ணீர் தேவை போன்ற இனங்களை முக்கிய நோக்கமாக கொண்டதுதான் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆகும்.

ஏழாவது ஐந்தாண்டு திட்ட இலக்கான ரூ. 68.00 கோடியில், முதல் நான்காண்டுகளில் ரூ. 85.70 கோடி செலவிடப்பட்டுள்ளது. இது தவிர, 1989—90-ல் எதிர் பார்க்கப்படுகிற செலவு ரூ. 26.19 கோடியையும் சேர்த்து ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தின் மொத்த நிதிச் செலவு சுமார் ரூ. 111.89 கோடி என்ற அளவை எட்டக்கூடும். அவ்வாறே, நடவையைப் பொறுத்தவரை, திட்ட இலக்கு 1,02,000 ஹெக்டேராக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், முதல் நான்காண்டுகளில் மட்டும் 1,07,000 ஹெக்டேர் பரப்பில் நடவைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தவிர, 1989–90-ல், 30,000 ஹெக்டேர் பரப்பில் நடவைப் பணிகள் முடிவு பெறக் கூடும். மொத்தத்தில், மாநில வனத் திட்டங்களின் கீழ், ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 1,37,000 ஹெக்டேர் பரப்பில் நடவைப் பணிகள் செயல்படுத்தப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது.

5.3. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் :— திட்ட அறிக்கை தயாரிப்பு.—இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும், தொடர்ந்து வன மேம்பாட்டுக்காகவும் அரசால் ஒரு செயற்குழு (Working Group) நியமிக்கப்பட்டது. வனம் மற்றும் அதன் தொடர்பான இனங்கள் பற்றிய எட்டாவது திட்டத்திற் கான அறிக்கைகளைத் தயாரித்தளிப்பது இச்செயற் குழுவின் முக்கிய பணியாகும். இச்செயற்குழு, ஆறு இயக்கக் குழுக் களை (Task Force) நியமித்து, இவ்வியக்கக் குழுக்களில், செயற்குழு (working group) வைச் சேர்ந்த உறுப்பினர்கள் அரசுத் துறையைச் சேர்ந்த-சேராத இதர நிபுணர்கள் மற்றும் அறிஞர்கள் இடம் பெற்று இருந்தனர். இவர்கள் பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து முடிவெடுக்கும் உரிமை கொண்டவர்கள். இவ்வியக்கக் குழுக்களின் தலைவர் கள் அவ்வப்போது உறுப்பினர்களின் கருத்துக்களை அறிந்து அறிக்கைகளைப் பெறுவதோடு தேவையாயின் உறுப்பினர் களின் கூட்டங்கள் நடைபெறவும் ஏற்பாடு செய்தார்கள்.

[1990 மார்ச் 31

மேற்கூறப்பட்ட இயக்கக் குழுக்கள் கூட்டங்கள் நடத்தி எடுக்கப்பட்ட முடிவுகளுக்கேற்ப அறிக்கைகளைத் தயாரித்து செயற்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பின. இயக்கக் குழுக்களால் அனுப்பப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில், செயற்குழு திட்ட அறிக்கையைத் தயாரித்து அனுப்பியது. இத்திட்ட அறிக்கையின்படியே, எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் வனங்கள் பற்றிய பணிகளும், செயற்பாடுகளும், திட்டங்களும் கீழ்க்கண்டவாறு முடிவு செய்யப்பட்டுள்ளன.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட கால நோக்கங்களை மேலும் தீவிரமாகவும், தற்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தகுந்த வரையிலும் தொடர்ந்து எட்டாவது திட்ட காலத்திலும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. எட்டாவது திட்ட காலத்தில், கீழ்க்கண்ட பணிகளுக்கு முன்னுரிமை வழங்கப் படவுள்ளது :—

(1) வறுமைக்கோட்டுக்கு கீழ் இருப்பவர்களின் நிலையை உயர்த்துதல் ; மக்களின் வாழ்வு சீரடையத்தக்க வகையில் சுற்றுப்புறத்தின் தரம் உயர்த்துதல்.

(2) உலகில் காணப்பெறும் தட்ப வெப்ப நிலையை கெடுக்கும் தன்மைகளை அகற்றி, வன வளர்ப்பின் மூலமாக நிலத்தில் பசுமைத் தன்மையை அதிகரிக்கச் செய்தல், பல்வகை உயிரியல் தன்மைகளைப் பாதுகாத்து இருக்கின்ற இயற்கை வளத்தின் மூலம், பொருள் உற்பத்திக்கு வழி செய்தல் ஆகியவை. இத்தேவைகளை மனதில் கொண்டு, எட்டாவது திட்டத்தின் நோக்கங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

நோக்கங்கள் :

(1) தாவர இனங்களும், விலங்கினங்களும், வாழ்வதற்கான ஏற்றச் சூழல் இருக்கும் மைய பகுதிகளின் சுற்றுத் தன்மையை பாதுகாத்தல்.

(2) தரம் தாழ்ந்த காட்டுப் பகுதிகளை உயிரினங்கள் வாழும் தன்மைக்கேற்ப மேம்படுத்துதல். இதற்காக, செயற்கை மற்றும் இயற்கையான முறையில் தாவர வளர்ச்சிக்கு வழி காணுதல், நிலத்தன்மைக்கு ஏற்ற மாதிரியான செடிகளை வளர்த்தல், வனச்சூழல் தன்மைக்கு மாசு ஏற்படாத வகையில், அந்நிலத்தின் தன்மையையொட்டி வளர்கின்ற செடி இனங்களைப் பாதிக்காத வகையில் மேற்படி பணிகள் மேற்கொள்ளுதல்.

(3) சமுதாய தரிசு நிலங்களிலும் தனியார் நிலங்களிலும் மர வளர்ப்பை ஊக்குவித்தல் ; உள்ளூர் மக்களின் எரிபொருள் மற்றும் மர வகைத் தேவையைப் பூர்த்தி செய்தல் ; சுற்றுப்

1990 மார்ச் 31]

புறச்சூழல் மேம்பாடு மற்றும் மொத்தப் பரப்பில் மூன்றில் ஒரு பகுதியில் பசுமைத் தன்மையை உருவாக்குதல். மேற்படி நோக்கங்களுக்காக, எல்லா மாவட்டங்களிலும், மரக் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குதல்.

(4) தீவிரமான வனப்பணிகளின் மூலமும், நீர்தேக்க அமைப்புகளை உருவாக்குவதன் மூலமும், நீர் இருப்பை சீராக அமைத்தல்.

(5) ஆற்றோரமாகவும், கடற்கரையோரமாகவும் உள்ள தரிசு நிலங்களை உற்பத்தி நிலங்களாக்கவும், ஏற்கனவே உள்ள வனத் தன்மையை நிலைப்படுத்தவும் செய்தல். அதே நேரத்தில், மரக் குவியல்கள் கடற்கரையோர மர வளர்ப்பு ஆகியவற்றின் மூலம், மழை, பெருங்காற்று, புயல் ஆகிய வற்றால் ஏற்படும் சேதத்தினைத் தடுத்தல்.

(6) வனப் பகுதிகளில் வசித்து வரும் மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தரும் வகையில் வனப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல்.

(7) வன நிலங்களின் வளத்தை நிலைப்படுத்தி மேம் படுத்தி அதன் உற்பத்தித் திறனைப் பாதுகாக்கும் பொருட்டு, ஒரே விதைத் தொகுதிகளின் மூலம் பெருவாரியாக தாவர வளர்ப்புக்கு திட்டமிடுதல்.

(8) அழகுமிக்க மரக் குவியலையும் தோட்டங்களையும் உருவாக்குவதன் மூலம், கிராமப்புற மற்றும் தொழிற்பேட்டை களில் அங்கு வாழும் மக்களையும் நிறுவனங்களையும் ஈடுபடுத்தி சுற்றுப்புற தூய்மைக்கு கேடு விளையும் அபாயத்தினை குறைத் தல்.

(9) பெருவாரியாகவும், பலன் தரும் திட்டங்களை நிறைவேற்றும் நோக்கத்தோடும், கிராமப்புற மக்களை குறிப் பாக பெண்களை ஈடுபடுத்தும் வகையில், மரச் சொத்துக்களை சமூக நிலங்களில் உருவாக்குதல். இதனால், உணவுத் தேவைக் கும் சுற்றுப்புறத் தேவைக்கும் தொடர்பு ஏற்படுத்துதல்.

(10) வன அதிகாரிகள் மற்றும் தொழில் நுட்ப அலுவலர் களின் அறிவையும் திறமையையும் அதிகப்படுத்தும் நோக்கத் தோடு அவர்களுக்கு பயிற்சி வசதிகளையும், நிறுவன ரீதியான வசதிகளையும் ஏற்படுத்தித் தருவதற்காக இருக்கின்ற ஆய்வுக் கூட அமைப்புக்களை பலப்படுத்தி, சோதனைக் கூட நிலத் தொடர்புடன் பணிமுறைகளை வகுத்துக் கொள்ளுதல்.

முன்னுரிமைத் திட்டங்களும் செயலாக்கமும் :

எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட வேண்டிய பணிகள் ஐந்து முக்கிய திட்டங்களாக வகுக்கப் படுகிறது. 1990-95-ல் செயல்படுத்தப்பட உள்ள எட்டாவது திட்ட கால இலக்காக ரூ. 509.70 கோடி ஒதுக்கீடு செய்யலாம் எனச் செயற்குழு பரிந்துரை செய்துள்ளது. நிதி நெருக்கடி யின் காரணமாக இதனை ரூ. 185.00 கோடியாகக் குறைத்து, மாநிலத் திட்டத்தின் கீழ் வனப் பணிகளுக்கு பின் வருமாறு தொகை ஒதுக்கப்பட்டுள்ளன :

சுருக்கம்.

விபரம்.	நிதி ஒதுக்கீடு. மாநிலத் திட்டங்கள்.	நிதி ஒதுக்கீடு. மத்திய அரசு சார்புத் திட்டங்கள்.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1. தீவிர வன வளர்ச்சித் திட்டங்கள் பராமரிப்பு.	800.00	300.00
2. இயற்கைச் செல்வங்கள் பாதுகாப்பு.	4,100.00	1,400.00
3. சமுதாயம் மற்றும் இடைநிலை வன அமைப்பு.	8,600.00	..
4. வன உற்பத்தி	2,200.00	..
5. விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம், கல்வி, விரிவாக்கம்.	1,100.00	..
	16,800.00	1,700.00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 மார்ச் 31]

வனத்துறை.

		ரூபாய்.
(i) மாநிலத் திட்டங்கள்		16,800.00
(ii) மத்திய அரசு சார்புடைய திட்டங்களுக்காக மாநில அரசின் பங்குத் தொகை.		(+) 1,700.00
		18,500.00
(i) சின்கோனா துறை		400.00
(ii) விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பப் பிரிவு.	...	200.00
(iii) சுற்றுப்புற சூழல், பாதுகாப்பு, மாசு அகற்றுதல் துறை.	...	900.00
		1,500.00
மொத்தம்	...	20,000.00

வன வளத்தை பாதுகாத்து வளர்த்தல்—தீவிர முறையில் செயல்படுத்துதல்.

		(ரூபாய் இலட்சத்தில்.)
திட்டம் ; மாநிலத் திட்டங்கள்		800.00
மத்திய அரசு சார்புடைய மாநிலத் திட்டங்கள்.		300.00
மொத்தம்	...	1,100.00

இதில், இயற்கை வளப் பாதுகாப்பு மற்றும் வன விலங்கு பாதுகாப்பு சம்பந்தமாக ஏற்கனவே உள்ள திட்டப் பணிகளை தொடர்ந்து நடத்துதல், புதிய திட்டங்களைச் செயல்படுத்து

தல் ஆகியவற்றிற்கான செலவுகளும் அடங்கும். தவிர, மத்திய அரசிடமிருந்து 50 சதவீதம் உதவி பெற்று நடத்தப்படுகிற திட்டங்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. மொத்தத்தில், ஏற்கனவே தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிற மாநில திட்டப் பணிகள் இரண்டும், தொடர்ந்து செயல் படுத்தப்பட்டு வருகிற மத்திய அரசு சார்புடைய திட்டப் பணிகள் ஆறும், மத்திய, அரசின் சார்பில் நடத்தப்படுகிற புதிய திட்டங்கள் இரண்டும் இப்பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ளன. எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில், மத்திய அரசு சார்புடைய திட்டங்களுக்காக ரூ. 300.00 லட்சங்களும் மாநில திட்டங்களுக்காக ரூ. 800.00 லட்சங்களும் ஒதுக்கீடு செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இயற்கை வளத்தினைப் பாதுகாத்தல்.

(ரூ. இலட்சத்தில்.)

ஒதுக்கீடு

மாநிலத் திட்டங்கள்	4,100.00
மத்திய அரசு சார்புடைய திட்டங்கள் ..	1,400.00
	5,500.00

இத்திட்டம் கீழ்க்கண்ட முக்கிய நோக்கங்களைக் கொண்டது.

(1) வனப் பகுதிகளைப் பாதுகாத்து, எல்லைகளைப் பராமரிப்பதின் மூலமும், முந்தைய ஜமீன் காடுகள் மற்றும் வருவாய் காட்டுப் பகுதிகள் ஆகியவற்றை 1882 ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காப்புக் காடுகளாக மாற்றுவதன் மூலமும் வனப் பரப்பை அதிகப்படுத்துவது.

(2) தரம் குறைந்த காட்டுப் பகுதிகளில் மீண்டும் காடு வளர்த்தல்; செடி வளர்ப்பில் நுண்ணிய முறைகளைப் பின்பற்றுதல்; தரம் தாழ்ந்த காடுகளிலும் மற்றும் மலைப் பகுதிகளிலும் இடைவெளிகளிலும் வானத்திலிருந்து விதை தூவுதல் முறையின் மூலம், வனப் பணிகளுக்கு ஏற்ற இடங்களாக மாற்றியமைத்தல்; சுற்றுப்புற பாதுகாப்பினை உருவாக்குதல் மற்றும் மர வகைகள், தீவனம், இழைகள் மற்றும் இதர வனப் பொருட்கள் தேவையைப் பூர்த்தி செய்தல்.

1990 மார்ச் 31]

(3) உயிரினச் சூழலை மேம்படுத்துதல், நீர் தேவைக்கான திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் மர, தீவனம், கரையோரச் செடி வளர்ப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் சுற்றுப்புறச் சூழல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துதல்.

(4) கொடிய ஆயுதங்களை வைத்திருக்கும் கடத்தல்காரர்கள் சட்ட விரோதமாக வேட்டையில் ஈடுபடுவோர் மற்றும் சமூக விரோத சக்திகளை எதிர்த்து வனச் சொத்துக்களை பாதுகாப்பதற்காக, வனப் பாதுகாப்பு அமைப்பினை தக்க பணியாளர்கள் மற்றும் ஆயுதங்களைக் கொண்டு பலப்படுத்துதல்; தேவையான அளவுக்கு பாதுகாப்புப் படையில் அலுவலர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, ஆயுதங்களை வழங்குதல்; இதற்கென ரூ. 4,100.00 இலட்சங்கள் ஒதுக்கீடு, செய்யப்பட்டுள்ளது. இது தவிர, வனவள பாதுகாப்புக்காக மத்திய அரசு சார்புடைய திட்டங்களை தொடர்ந்து நிறைவேற்றி வரவும், புதிய திட்டங்களைச் செயல்படுத்தவும் ரூ. 1,400 இலட்சங்கள் கோரப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. சமுதாயக் காட்டுவளம்.—ஒதுக்கீடு ரூ. 8,600 லட்சங்கள். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், மலைவாழ் மக்களின் பொருளாதாரச் நிலையை மேம்படுத்துவதாகும். வருவாய் அடிப்படையிலான திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் இத் திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. நிரந்தரமான வேலை வாய்ப்பை வழங்குதல், கல்வி, வீடுகள் கட்டுதல், சாலை மற்றும் இதர வசதிகளை ஏற்படுத்துதல், சமூகத் தரிசு நிலங்களில் மரங்கள், மரக் கிடங்குகளை உருவாக்குவதின் மூலம் ஊரக வளர்ச்சி ஏற்படுத்துதல், தனியார் நிலங்களை அரசுத் துறை காடுகளாக்குதல், எரிபொருள், கால்நடைத் தீவனம் சிறுவகை மரங்கள், பச்சை உரம் போன்ற உள்ளூர் மக்களின் தேவையைத் தீர்த்துக்கொள்வதில் கிராமப்புற மக்களையும் அரசுத் துறையைச் சாராதவர்களையும் தனியார் இயக்கங்களையும் ஈடுபடுத்தச் செய்வதன் மூலம், இயற்கையான காடுகளில் ஏற்படுகிற பாதிப்பைக் குறைத்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

மலைவாழ் மக்கள் நலத் திட்டமும், ஸ்வீடன் நாட்டு நிதி உதவியோடு நடத்தப்படுகிற சமூக வளர்ப்புக் காடுகள் திட்டமும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. இதற்கான ஒதுக்கீடு ரூ. 8,600.00 லட்சங்களாகும்.

3. காட்டு வள உற்பத்தி :

(ரூபாய் இலட்சத்தில்.)

ஒதுக்கீடு—

வனத்துறை	2,200.00
சின்கோனாத்துறை	400.00
மொத்தம் ..	2,600.00

அதிக அளவில் வருவாய் பெற்றுத் தரும் திட்டங்களான சந்தன மரத் திட்டம் மிலாறு மரத் திட்டம், மென்மரத் திட்டம் காடுபடு சிறு பொருட்கள் திட்டம். முந்திரி தோட்டத் திட்டம் போன்றவை இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. நுண்ணிய பராமரிப்பு முறைகளின் வாயிலாக வனப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. உள்ளூர் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டும், மரத் தேவையை அதிகமாகக் கொண்ட தொழிற் சாலைகளுக்கு மூலப் பொருட்களை வழங்கும் பொருட்டும், மூங்கில் பண்ணைகள் நிறுவவும், மருந்துச் செடிகளை கொண்ட தோட்டங்கள் அமைக்க புதிய திட்டங்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில், மேற்படி உற்பத்தி நோக்குத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரூ. 2,600.00 லட்சங்கள் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மருந்துச் செடிகளைப் பயிரிடவும், வாசனைத் தைலத்தினை உற்பத்தி செய்யவும் சின்கோனாத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 400.00 லட்சங்களும் இத்திட்டத்தில் அடங்கும்.

4. விஞ்ஞானம் தொழில் நுட்பம் கல்வி மற்றும் விரிவாக்கம் :

இதுவும் ஒரு இயற்கை வளப் பாதுகாப்புத் திட்டமாகும். ஆராய்ச்சி, கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை விஞ்ஞான பூர்வமாக ஆய்வு செய்து செயல்படுத்துவதன் வாயிலாக உலக அளவிலான மற்றும் விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப சாதனைகளின் பலனை இம்மாநிலத்திற்கு பெற்றுத் தருவதே இத்திட்டத்தின் நோக்கம்.

இத்திட்டத்தின் குறிக்கோளாவன :

(1) விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப ரீதியாக இயற்கைச் செல்வத்தைப் பாதுகாத்து மேம்படுத்தக்கூடிய வகையிலே மாநில அளவிலான நிறுவனம் அல்லது மையம் ஒன்றினை ஏற்படுத்துதல், முக்கியமாக. மாநில வன ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கூடத்தை நிறுவுதல்.

1990 மார்ச் 31]

(2) எட்டாவது திட்டக் காலத்திற்குள்ளாக, மாநிலம் முழுவதிலும் சுற்றுப்புறச் சூழல் பற்றிய அறிவினை மக்கள் பெறத் தக்க வகையில் சுற்றுப் புறத்தைப் புரிந்து கொள்வதற்கான ''மாதிரி அமைப்புகளை'' பரிந்துரை செய்தல்.

(3) இயற்கை வளத்தினைச் சிறப்பாகக் காத்து வருவதற்கான திட்ட வளர்ச்சிக்குரிய அடிப்படைகளை உருவாக்குதல். விஞ்ஞான முறைகளை ஒருமுகப்படுத்தி பயன்படுத்திக் கொள்ள தகுதியான நிபுணர் குழு ஒன்றை மாநிலத்தில் அமைத்து இதனை நிறைவேற்றுதல்.

இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ. 1,300.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வனவளம் :

	(ரூபாய் இலட்சத்தில்.)
வன வளம்	1,100.00
விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பக் குழு	200.00
மொத்தம் ..	1,300.00

6. ஆண்டுத் திட்டம்.

6.1. நிதி இலக்கு :—வரவு செலவு நிதி மதிப்பீட்டில் மாநில திட்டங்களுக்காக 1989–90 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 2,384.88 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1989–90-ல் எதிர்பார்க்கப்படுகிற மொத்தச் செலவு ரூபாய் 2,619.50 இலட்சம் ஆகும்.

1990–91-ல் இத்திட்டங்கள் ரூபாய் 2,700.55 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட உள்ளன. அதில் 1990–91-ல் பகுதி 11-ன் கீழ் புதிய திட்டங்களுக்காக ரூபாய் 55.00 இலட்சம் ஒப்பளிக்க கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளதும் அடங்கும்.

6.2. பணி இலக்கு :—1988–89-ல் 27,604 ஹெக்டேர் பரப்பிற்கு தொகுப்புத் தோட்டங்களும், 1,132 கி.மீ. அளவிற்கு வரிசைத் தோட்டங்களும் எழுப்பப்பட்டன. 1989–90ஆம் ஆண்டு முடிவிற்குள் 28,260 ஹெக்டேர் பரப்பில் தொகுப்பு

[1990 மார்ச் 31

தோட்டங்களும், 1,055 கி.மீ. பரப்பில் வரிசைத் தோட்டங்களும் எழுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1989–90-ல் நிர்ணயிக்கப்பட்ட வேலை இலக்கும் செய்யப்பட்ட வேலை அளவும் வருமாறு :—

	இலக்கு.	சாதனை.
தொகுப்புத் தோட்டங்கள் ..	28,260 ஹெக்டேர்.	30,214 ஹெக்டேர்.
வரிசைத் தோட்டங்கள் ..	1,055 கி.மீ.	876 கி.மீ.

1990–91-ல் 27,125 ஹெக்டேர் பரப்பிற்கு தொகுப்புத் தோட்டங்களும், 1,000 கி.மீ. அளவிற்கு வரிசைத் தோட்டங்களும் எழுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6.3. அபிவிருத்தி திட்டங்கள் சிலவற்றின் முக்கியப் பணிகள்— பல்வேறு தோட்டத் திட்டங்களின் கீழ் 1989-90 ஆம் ஆண்டிற்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சாதனை அளவும் 1990-91ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்குகளும் பின்வருமாறு—

வரிசை எண்ணும், திட்டமும்.	1989–90-ல் உத்தேச சாதனை.		1990–91-ல் உத்தேச இலக்கு.	
	வேலை அளவு.	நிதிச் செலவு.	வேலை அளவு.	நிதிச் செலவு.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ஹெக்டேர்.)	(ரூபாய் இலட்சத்தில்.)	(ஹெக்டேர்.)	(ரூபாய் இலட்சத்தில்.)
1. கூழ்மரத் திட்டம்	2,110	142.68	2,000	141.59
2. எரி மர வளர்ப்பு	4,150	162.02	4,000	150.20
3. கரையோரத் தோட்டங்கள் ..	100	3.21	100	2.97
4. தரம் குறைந்த காடுகளில் மீண்டும் மர வளர்ப்பு.	2,840	107.21	3,000	83.50
5. மென்மரம்	95	4.26	75	4.26
6. ஸ்வீடன் நாட்டு உதவியுடன் நடத்தப்படுகின்ற, சமூகக் காடுகள் திட்டம்.	14,900 750 கி. மீ.	1,393.40	14,000 500 கி. மீ.	1,612.53

7. தேசிய தரிசுநில அபிவிருத்தி, விறகு மரம் மற்றும் கால் நடைத் தீவனத் திட்டங்கள்.	400 215 கி.மீ.	22.53	200— 100	15.21
8. சந்தனமரத் திட்டங்கள் ..	290	41.07	290	42.26
9. மிலாறுமரத் தோட்டங்கள் ..	800 1,130	11.96	1,000 1,000	13.53
10. தேக்குமரத் தோட்டங்கள் ..	555	11.00	500	11.10
11. காடுபடு சிறுபொருட்கள் ..	1,270 ஹெக்டேர். 50 கி.மீ.	70.34	1,200	71.76
12. மலைவாழ் மக்கள் துணைத் திட்டத்தின்கீழ் தோட்டம் எழுப்புதல்.	860 (ஹெக்டேர்) 40 கி.மீ.	49.13	1,000 (ஹெக்டேர்) 40 கி.மீ.	38.53
13. முந்திரித் தோட்டங்கள் ..	130	7.63	100	7.61
மொத்தம் தோட்டம் நடுதல் ..	28,260	2,026.44	27,175	2,195.05
வரிசை நடவு	1,055		640	
டெண்டிங்	290		290	
மெலித்தல்	1,130		1,000	

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1990 மார்ச் 31]

6.3.1. கூழ்மரத் திட்டங்கள் :—பசுங் கூழ்மரத் தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கூழ் மரங்களை மூலப் பொருட்களாக வைத்து நடத்தப்படுகின்ற காகிதத் தொழிற் சாலை, ரயான் தொழிற்சாலை போன்றவற்றின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு துரிதமாக வளரும் இன மரங்களை அடர்த்தி மிக்கதாகவும் வளர்க்க வேண்டிய அவசியம் உள்ளது. 1989–90-ல் 2,110 ஹெக்டேர் பரப்பில் தோட்டம் எழுப்பும் வகையில் மொத்தச் செலவு ரூபாய் 142.68 இலட்சம் ஆகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. 1990–91-ல் இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 141.59 இலட்சம் செலவில் 2,000 ஹெக்டேர் பரப்பில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6.3.2. விறகு மரத் தோட்டங்கள் :—நகரம், டவுன் மற்றும் படுகை நிலங்களையொட்டியுள்ள வனப் பகுதிகளில் விறகு மர வளர்ப்புக்காக 9,000 ஹெக்டேர் பரப்பில் விறகு மரத் தோட்டங்களை எழுப்புவதற்காக ஏழாவது திட்டத்தில் ரூபாய் 300.00 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1989–90-ல் 4,150 ஹெக்டேர் பரப்பில் ரூபாய் 162.02 இலட்சம் செலவில் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1990–91-ல் ரூபாய் 150.20 இலட்சம் செலவில் 4,000 ஹெக்டேர் பரப்பில் பணிகளை செயல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

6.3.3. தமிழக கடற்கரையோரங்களில் மரம் வளர்ப்புத் திட்டம்:—1989–90-ல் செங்கை-அண்ணா, தென் ஆற்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்ட கடற்கரையோரங்களில் உள்ள வனப் பகுதிகளிலும், வருவாய் நிலப் பகுதிகளிலும் மர வளர்ப்புத் திட்டத்தை செயல்படுத்துவதே இதன் நோக்கமாகும். 1989–90-ல் 105 ஹெக்டேர் பரப்பில் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. 1990–91-ல் 100 ஹெக்டேர் பரப்பில் இத்திட்டத்தினை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6.3.4. தரம் குறைந்த காடுகளில் மீண்டும் காடு வளர்த்தல்—அனைத்து தரம் தாழ்ந்த காடுகளிலும் மீண்டும் மர வளர்ப்பு பணிகளை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சுற்றுப் புறச் சூழலை மேம்படுத்தும் பொருட்டும், சிறு மர வகைகள், எரிபொருள், மாட்டுத் தீவனம் மற்றும் இதர வனப் பொருட்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டும் இத்திட்டம் மேற் கொள்ளப்படுகிறது. 1989–90-ல் இத் திட்டம் ரூ. 107.21 இலட்சம் இலக்கை வகுத்துக் கொண்டு 2,840 ஹெக்டேர் பரப்பில் செயல்படுத்தப்படுகிறது. 1990–91 ஆம் ஆண்டில், இத்திட்டத்தினை 3,000 ஹெக்டேர் பரப்பளவில் ரூ. 83.50 இலட்சம் செலவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

[1990 மார்ச் 3]

6.3.5. வான்வழி விதை தெளிக்கும் திட்டம்—1989-90-ல் வேலூர் கோட்டத்தில் வேலூர் மற்றும் குடியாத்தம் சரகங்களில் 5,000 ஹெக்டேர் பரப்பில் இத்திட்டம் மேற் கொள்ளப்பட்டது. இத்திட்டம் கீழ்க்கண்ட காப்புக் காடுகளில் செயல்படுத்தப் பட்டது.

		(ஹெக்டேர்.)
(1)	காட்டபாடி காப்புக்காடு	2,733.35
(2)	வீரிசெட்டிப்பட்டி காப்புக்காட்டின் ஒருபகுதி.	1,000.00
(3)	பனமடங்கி காப்புக் காட்டின் ஒரு பகுதி ..	1,266.65

1988–89-ல் முதன் முதலாக விதை தெளிக்கப்பட்ட பள்ளி கொண்டா காப்புக் காட்டின் 1,000 ஹெக்டேர் பகுதியில் மறு விதை தெளிப்பும் 1989–90-ல் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் திண்டுக்கல் வனக் கோட்டத்தின் கன்னிவாடி சரகத் தின் பழனி மலைப் பகுதியில் உள்ள வடசரிவு காப்புக்காட்டில் 2,500 ஹெக்டேர் பரப்பில் வான் வழி விதைத் தெளிப்பு மேற் கொள்ளப்பட்டது. மொத்தத்தில் முதன் முறையாக வானவெளி யிலிருந்து விதை தெளித்தல் 7,500 ஹெக்டேர் பரப்பிலும், மறு முறை தெளிப்பு 1,000 ஹெக்டேர் பரப்பிலும், 1989–90-ல் செய்யப்பட்டது. இதற்காக ரூ. 53.70 இலட்சம் ஒப்பளிக்கப் பட்டது. இது மத்திய அரசுத் திட்டமாகும்.

மேற்படி கோட்டங்களில் விதை தெளிப்புக்காக, கோவை வன மரபியல் கோட்டப் பிரிவிலிருந்து பெறப்பட்ட தரமான விதைகளே பயன்படுத்தப்பட்டன. இவ்விதைகள் அனைத்தும் உள்ளூரில் கிடைக்கும் செடி இனங்களின் விதைகளாகும்.

1990–91-ல் தமிழகத்தில் உள்ள 11 கோட்டங்களில் தரம் தாழ்ந்த காட்டுப் பகுதிகளில் சுமார் 16,000 ஹெக்டேர் பரப்பில் வான்வழி விதை தெளிப்பு திட்டம் ரூ. 112.00 இலட்சம் செலவில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6.3.6. மென்மரத் தோப்பங்கள்.—தீப்பெட்டித் தொழிற் சாலைகளுக்கு மூலப் பொருட்களை வழங்குவதற்காக, எங் கெல்லாம் சாதகமான சூழ்நிலை நிலவுகிறதோ அங்கெல்லாம் மென்மர வகைகளை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்க மாகும். 1989–90-ல் இத் திட்டம் ரூ. 4.26 இலட்சம் செலவில் 95 ஹெக்டேர் பரப்பில் செயல்படுத்தப்படுகிறது. 1990–91-ல் 75 ஹெக்டேர் பரப்பில், ரூ. 4.26 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1990 மார்ச் 31]

6.3.7. சிடா நிதி உதவியுடன் செயல்படும் சமூகக் காடுகள் திட்டம்.—சமுதாய நலக் காடுகள் 1.3 இலட்சம் ஏக்கரில் எழுப்பி சமுதாய நிலங்களில் காடு வளர்க்கும் திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது. இப்பணி 1981—82 லிருந்து சிடா நிதி உதவியுடன் இவ்வனப் பண்ணைத் திட்டத்தை சமூகக் காடுகள் திட்டமாக மேம்படுத்தியுள்ளது. 1981—82 லிருந்து 1985—86 வரை ஐந்தாண்டுகளுக்கான முதல் கட்டம் 7 ஆண்டுகளாக ஆக்கப்பட்டு 1987—88 வரை செயல்பட்டது. அதற்கான திட்ட ஒதுக்கீடு ரூ. 45 கோடிக்குப் பதிலாக ரூ. 57 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டத்தின் முக்கிய நோக்கம் சமுதாய நிலங்களிலும் தனியார் நிலங்களிலும், வீட்டு காலி நிலங்களிலும், கிராம மக்களின் ஒத்துழைப்புடன் மரத் தோட்டங்களும் கிராமக் காடுகளும் வளர்த்தலும், கிராம மக்களின் தேவைதனைப் பூர்த்தி செய்தலும் ஆகும்.

இல்லத் தேவைகளுக்கான விறகு மரத் தேவைகளைவிட, கிராமப்புற வருமானம் பெருகும் மர வகைகளை பயிரிடுவதற்கும், சமூக வனங்களின் உற்பத்தித் திறனை பெருக்குவதற்கும் கிராமபுற மக்கள் விரும்புவதாக ஆய்வு செய்த குழுவினர் தெரிவிக்கின்றனர். மற்ற துறைகளையும் ஒருங்கிணைத்து, அதன் மூலம் கிராமப்புற மக்களின் ஈடுபாட்டை திட்டத்தின்பால் ஈர்ப்பதும் அவசியம் என அறியப்பட்டது.

மேற்காண் நோக்கத்தினை மனதிற்கொண்டு, சிடா உதவியுடன் சமூகக் காடுகள் திட்டப்பணியின் இரண்டாவது கட்டம் 5 வருடங்களுக்கு 1988—89லிருந்து 1992—93 வரை நீடிக்கப்பட்டது. இந்த இரண்டாம் கட்டத் திட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை மரப்பட்டாத் திட்டத்தையும், வேளாண்மைத்துறை வறண்ட நிலங்களில் வேளாண்மைக் காடுகள் வளர்த்தல் திட்டத்தையும், வனத்துறை சமூக வனப்பண்ணைத் திட்டம் (Community woodlots) விதை நாற்று உற்பத்தி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் பயிற்சி மற்றும் விளம்பரத்திற்கான ஒத்துழைப்பு வழங்கல் ஆகிய பணிகளையும் மேற்கொண்டுள்ளன. இவை தவிர, புதியத் திட்டமாக இடைமுகதள காடு வளர்ப்புத் திட்டம் 3 கோட்டங்களில் (திண்டுக்கல் காயிதே மில்லத், சேலம் மற்றும் செங்கை-அண்ணா மாவட்டங்களில்) செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கிராமங்களை சார்ந்துள்ள வனப்பிடிப்புப் பகுதிகளில் காடு வளர்ப்பும் கிராம மக்களின் ஊக்கமான பங்கேற்புடன் நிலைச் சொத்து ஏற்படுத்துதலும், செய்யப்படுகிறது. இம்மாதிரியமைப்பானது நில மேம்பாட்டிற்கும், வனப் பொருட்கள் கிராம மக்களுக்குக் கிடைப்பதற்கும் வழி வகுக்கிறது. டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்களின் தலைமையின்கீழ், சிடா உதவியுடன், இவ்விரண்டாம் கட்டத் திட்டத்தில், சமூகக் காடுகள், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிச் சங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்விரண்டாம் கட்டத் திட்டத்தில், புதிய சமுதாயக் காடுகள் 56,300 ஹெக்டேரில் எழுப்புதல் மற்றும் ஏற்கெனவே உள்ள தோட்டங்களை மேம்படுத்தவும் செய்யப்படுகிறது. வரிசைத் தோட்டங்கள், வறண்ட நிலங்களில் வேளாண்மைக் காடுகள், ஊரக வளர்ச்சித்துறையில் மரப்பட்டா திட்டம், ஒதுக்கக் காடுகளில் இடை முகத்தளக் காடுகள், தரமான நாற்றுக்கள் உற்பத்தி, ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு, பயிற்சி மற்றும் விரிவாக்கம் ஆகியவற்றிற்கென 2ஆவது கட்டத் திட்டத்தில் ரூ. 85.4 கோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

வனப்பண்ணை காடுகளை அறுவடை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாயை 50 : 50 என்ற விகிதத்தில் பஞ்சாயத்துக்களுடன் வனத்துறை பகிர்ந்து கொண்டது. கடந்த 9 ஆண்டுகளில் ரூ. 652.43 இலட்சங்கள் பஞ்சாயத்துக்களுக்கு பங்குப் பணமாக வழங்கப்பட்டுள்ளது. சமீபத்தில் இந்த வருமானத்தை பஞ்சாயத்துக்களும் வனத்துறையும் முறையே 60 : 40 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ள வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

11,740 ஹெக்டேரில் மறு நடவு மற்றும் (Restocking) மறு உற்பத்தி மூலம் ஏற்கெனவே உள்ள பழைய தோட்டங்களை மேம்படுத்த 1990–91இல், அதாவது 2ஆவது கட்டத் திட்டத்தின் மூன்றாவது ஆண்டில் தொடர்ந்து செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. வரிசைத் தோட்டங்களை 300 கிலோ மீட்டருக்கு நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. சார்பு பணிகளான பயிற்சி, ஆராய்ச்சி, விளம்பரம் மற்றும் மறுகணிப்பு (Evaluation) ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்படும். 1990–91இல் மொத்தம் ரூ. 1,612.53 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் செலவிடப்படும்.

கிராம சமூகங்களின் பங்கேற்புடன், காப்புக் காடுகளில் இடை முகத்தளக் காடுகள் (Iuter face forestory programme.) திட்டம் மிகவும் வெற்றிகரமாக செயல்படுவதால் இதற்கு இன்னும் இரு ஆண்டுகள் நீட்டிப்பு செய்ய, சிடா முன் வந்ததுடன் அதற்காக ரூ. 168.00 இலட்சங்கள் ஒப்பளித்து 4,720 ஹெக்டேர் நிலத்தில் 1990–91இல் இது செயல்படுத்தப்பட உள்ளது. மேற்சொன்னத் திட்டம், மொத்தத் தொகையான ரூ. 1,612.53 இலட்சத்தில் இது அடங்கும்.

6.3.8. தேசிய தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் விறகு மர உற்பத்தித் தோட்டம்.

தரம் தாழ்ந்த காடுகள் மற்றும் தரிசு நில மேம்பாட்டு திட்டத்தினை சீரிய முறையில் செயலாக்கவும், வனச்சூழலை பாதுகாக்கவும் இத் திட்டம் செயல்பட்டு வருகிறது. மேலும், கிராம மக்களின் தேவைக்களைப் பூர்த்தி செய்யவும், தடி மரம், தீவனம் மற்றும் விறகுத் தோட்டங்கள் உற்பத்தியை பெருக்கத்

1990 மார்ச் 31]

தின் கீழ் செய்யும் பொருட்டும் மாற்றுத் திட்டங்கள் அமுலாக்க விருக்கிறது. 1989–90இல் இத்திட்டம் 400 ஹெக்டேர் தொகுப்புத் தோட்டங்கள் ரூ. 22.53 இலட்சத்தில் செயலாக்கவும், 215 கிலோ மீட்டருக்கு வரிசை (Strip) தோட்டங்கள் எழுப்பவும் உள்ளது. 1990–91இல் இத்திட்டம் ரூ. 15.21 இலட்ச செலவில் 200 ஹெக்டேர் பரப்பில் செயலாக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது.

6.3.9. சந்தன மரத் தோட்டம்

சந்தன மரம்தான் அதிக அளவில் வருவாய் தரக்கூடிய வனவிளைப் பொருளாகும். இது இயற்கையாகவே திருவண்ணா மலை—சம்புவராயர், வட ஆற்காடு—அம்பேத்கார், தர்மபுரி சேலம், கோவை, பெரியார், தென்னாற்காடு மற்றும் திருச்சி மாவட்டங்களில் காணப்படுகிறது. சந்தன மரத் தோட்டங்கள் தீவிர களப் பணி, உழுதல் பணிகளை மேற்கொள்ள மலைவாழ் மக்களை சந்தனக்காவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவ் விலையுயர்ந்த சந்தனத் தோட்டத்தைப் பாதுகாக்கத் தடுப்புக் கம்பிகளாலான வேலிகள் அமைக்கப்படுகிறது. 1989–90இல் ரூ. 41.07 இலட்சத்தில் 290 ஏக்கர் பரப்பில் புதிய பகுதியை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் 1990–91இல் ரூ. 42.26 இலட்சத்தில் 290 ஏக்கர் பரப்பளவைநிறைவு செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது.

6.3.10. மிலாறுத் தோட்டங்கள்

கூழ்மர தொழிற்சாலை மற்றும் பதனிடுதல் தொழிற் சாலைகளுக்குத் தேவையான மிலாறு மரத் தோட்டங்களின் பொருட்கள் உபயோகப்படுகின்றன. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மிலாறுத் தோட்டங்களை இயற்கை உற்பத்தி யின் அடிப்படையில் எழுப்புவதும், அவ்வப்போது அடர்த்திக் குறைத்துப் பணி செய்து அதன் மூலம் கிடைக்கும் பொருட்களை தொழிற்சாலைகளுக்கு அனுப்புவதாகும். 1989–90இல் இத் திட்டம் ரூ. 11·96 இலட்சம் ஒதுக்கீட்டில் 800 ஹெக்டேர் பரப் பளவில் இயற்கையாக உற்பத்தி செய்யவும், 1,130 ஹெக்டேர் பரப்பில் அடர்த்தி குறைவுப் பணி மேற்கொள்ளவும் உத்தேசிக் கப்பட்டுள்ளது. 1990–91இல் ரூ. 13.53 இலட்சம் செலவு செய்து 1,000 ஹெக்டேர் பரப்பளவில் மறு உற்பத்தி செய்யவும் 1,000ஹெக்டேர் பரப்பளவில் மெலித்தல் பணி மேற்கொள்ள வும் திட்டமிடப்பட்டுள்ளது.

6.3.11. தேக்கு மரத் தோட்டம்

இம்மாநிலத்திற்குத் தேவைப்படும் அளவு மரத் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு தேக்கு, செம்மரம் மற்றும் இதர பல இனங்களை உற்பத்தி செய்ய இத்திட்டம் துவங்கப்

பட்டது. இத்திட்டம், 1989-90-ல் 555 ஹெக்டேர் பரப்பில் தோட்டங்கள் அமைக்க ரூ. 11.00 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 1990-91-ல் 500 ஹெக்டேர் பரப்பளவில் தோட்டங்கள் அமைக்க ரூ. 11·10 இலட்சம் செலவில் இத்தோட்டங்களை உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் வெட்டுமர வேலைகள் திட்டம் மற்றும் வனப் பயன்பாட்டு வேலைகளும் இதில் அடங்கும். இதில் உள்ள பணிகளாவது சரியான அளவில் வெட்டப்பட்ட கட்டைகளை அடுக்குவதில் முன்னைவிட புதிய தொழில் நுணுக்கத்தை ஏற்படுத்துவதும் இப்பணி மேற்கொள்ளும் தொழிலாளர்களுக்கு போதிய உபகரணங்களை வழங்குவதும், மரம் வெட்டும் பணிகளில் தொழிலாளர்களை ஈடுபடுத்துவதாகும். இப்பணி 1989-90-ல் ரூ. 2.75 இலட்சத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1990-91இல் ரூ. 2.75 இலட்சத்திற்கு தொடர்ந்து செய்ய உள்ளது.

6·3.12. சிறுவன மகசூல்

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் சிறுவன மகசூல் பொருட்களான புளியன், கடுக்காய் மற்றும் சோப்பு விதைகளை உற்பத்தி செய்து அதிக அளவில் வருவாயை ஈட்டுவதாகும். இத் திட்டத்தின்கீழ் பண்ணை மேலாண்மை முறையில் (1) எண்ணெய் விதைப் பண்ணை, (2) புளியன் பண்ணை, (3) பழவகைப் பண்ணை என்று நிறைவேற்ற உள்ளது. அவைகளைத் தவிர, சாலை ஓரங்களில் நடுதலும் மற்றும் அடுக்காக செடிகள் நடுதலும் இத்திட்டத்தின் செயலாக்கம் ஆகும். இத்திட்டங்கள் ரூ. 70.34 இலட்சம் செலவில் 1,270 ஹெக்டேர் பரப்பில் தடுப்புத் தோட்டங்கள் என்ற வகையில் உற்பத்தி செய்ய உள்ளது என்றும், அடுக்குத் தோட்டங்கள் என்ற தலைப்பில் 50 கிலோ மீட்டருக்குத் திட்டம் ஒன்று நிறைவேற்றவும் உள்ளது. 1990-91 ஆம் ஆண்டில் 1,200 ஹெக்டேர் பரப்பளவிற்குச் சிறுவன மகசூல் தோட்டங்கள் அமைக்க ரூ. 71.76 இலட்ச செலவில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6.3.13. முந்திரித் தோட்டங்கள்

இத்திட்டத்தை மேற்கொள்ள முக்கிய நோக்கம் முந்திரித் தோட்டங்களில் உற்பத்தியைப் பெருக்க தீவிர களப்பணி மேற்கொள்ளல், உரம் தெளிக்கும் பணி செய்து தகுந்த பகுதிகளில் முந்திரித் தோட்டங்களை உருவாக்குதல் என்ற முக்கிய நோக்கமாகும். 1989-90-ல் ரூ. 7.63 இலட்சத்தில் இப்பணி மேற்கொள்ள திட்டம் வகுக்கப்பட்டு 460 ஹெக்டேர் பரப்பில் தீவிர களப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 130 ஹெக்டேர் பரப்பில் புதிய தோட்டங்கள் உருவாக்க திட்ட

1990 மார்ச் 31]

மிடப்பட்டுள்ளது. அதே போல் 1990–91-ல் 400 ஹெக்டேர் பரப்பில் ரூ. 7.61 இலட்சம் செலவில் தீவிர களப் பணி செய்யவும் 100 ஹெக்டேர் பரப்பில் புதிய தோட்டங்கள் எழுப்பவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6.3.14 மத்திய அரசு சார்புத் திட்டம்—ஊரக விறகு மர உற்பத்தி மற்றும் இமயமலை சாராத பகுதிகளில் மரம் வளர்ப்புத் திட்டம் (சம பங்கீடு செலவு உதவி)

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் விறகுத் தோட்டங்களை கிராமங்களிலுள்ள தரிசு நிலங்களிலும், காடுகள் அழிந்த பகுதியிலும், எல்லையோரப் பகுதிகளிலும் மற்றும் சாலை ஓரங்களிலும், ஆற்று படுகைகளின் ஓரத்திலும், புகைவண்டி பாதை ஓரங்களிலும் உற்பத்தி செய்து கிராம மக்களுக்கு விறகு கிடைக்கச் செய்வதுடன், விறகு பற்றாக் குறையான இடங்களில் பூர்த்தி செய்யவும், இம்மாநிலத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தற்போது திண்டுக்கல், செங்கை-அண்ணா, அரியலூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு செங்கை-அண்ணா, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் காயிதே மில்லத் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் இத்திட்டம் செயல் படுத்தப்படுகிறது. இந்திய அரசும் இத்திட்டத்தை தென்னாற்காடு மற்றும் வட ஆற்காடு (திருவண்ணாமலை—சம்புவராயர் மற்றும் வட ஆற்காடு-அம்பேத்கார்) மாவட்டங்களில் நடைமுறைப்படுத்த ஒத்துக்கொண்டுள்ளது. 1989–90-ல் ரூ. 168.30 இலட்சத்தில் 4,000 ஹெக்டேர் பரப்பில் நடவு தோட்டமும் 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு வரிசை நடவு தோட்டமும் உற்பத்தி செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1990–91ஆம் ஆண்டில் ரூ. 170.85 இலட்சம் செலவில் 4,000 ஹெக்டேர் பரப்பில் நடவு தோட்டமும் 15 கிலோ மீட்டர் தூரத்தில் வரிசை நடவுத் தோட்டமும் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

6.3.15. பொது மக்கள் நாற்றங்கால் திட்டம்

(மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்)

பயன்தரத்தக்க நீர் நிலவளமுடைய விவசாயிகளையும், நீர் நிலவளமுடைய நிலங்களை குத்தகைக்கு எடுத்திருக்கும் விவசாயிகளையும், வியாபார நோக்கு நாற்றங்கால் மரக் கன்றுகள் வளர்க்கும் பணியில் ஈடுபட ஊக்குவிக்கவும், அதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்தவும், "பொது மக்கள் நாற்றங்கால்" என்ற மத்திய அரசு உதவி பெறும் திட்டம் தொடங்கப்பெற்று கடந்த இரண்டு ஆண்டுகளாக செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி, ஒரு நாற்றங்கால் விவசாயி, வனத்துறையின் தொழில் நுட்ப ஆலோசனைகளுடன் மண், நீர், தட்ப வெட்ப நிலைக்குச் சாதகமானதும், உள்ளூர் மக்களின் தேவையை நிரப்பக் கூடியதுமான மர இன வகைகளை தேர்வு செய்து நாற்றங்கால் வளர்க்க வேண்டும். நாற்றங்கால் விவசாயி சந்தை நிலவரப்படி செடிகளுக்கு விலை நிர்ணயம் செய்து விற்கலாம். அவர்களுக்கு நல்ல தரமுள்ள செடி ஒன்றுக்கு 45 பைசா வீதம் உதவித் தொகை வழங்கப்படும். விற்க முடியாத மீதமுள்ள செடிகளை வனத்துறை நடுவதற்கு விலை ஏதுமின்றி எடுத்துக்கொள்வதினால் விவசாயிகளின் அனாவசியமான நாற்றங்கால் பராமரிப்புச் செலவு தவிர்க்கப்படுகிறது.

1988–89 மற்றும் 1989–90-ல் இத்திட்டத்தை செயல் படுத்த மத்திய அரசு ரூ. 97.50 இலட்சம் ஒதுக்கீடு செய்து, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தை வரும் ஆண்டில் ரூ. 70 இலட்சம் செலவில் அமுல்படுத்தவும் ஏறக்குறைய 3,500 விவசாயிகள் பயனடைவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

6.3.16—பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம்

1. மாநிலத்திலுள்ள காட்டுப் பகுதிகளில் மொத்தம் 5.20 இலட்சம் பழங்குடியினர் வசித்து வருகின்றனர். மாநிலம் முழுவதிலும் பழங்குடியினர் வசித்தபோதிலும் பழங்குடியினர் துணைத் திட்டப் பகுதி என்று ஐந்து மாவட்டங்கள் மட்டும் இந்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பழங்குடியினர் திட்டப் பகுதி மாவட்டங்களான திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, வட ஆற்காடு, (திருவண்ணாமலை—சம்புவராயர் வட ஆற்காடு—அம்பேத்கார்) தர்மபுரி மற்றும் சேலம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் மொத்தம் 2.10 இலட்சம் பழங்குடி மக்கள் உள்ளனர். இவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்தும் வகையிலும், காட்டுப் பகுதிகளில் வாழும் பழங்குடியினருக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கும் வகையிலும், தோட்டங்கள் எழுப்புதல், பழைய தோட்டங்களை பராமரித்தல், பழைய சாலைகளை பராமரித்தல், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், விடுதிக் கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் கிராமக் காடுகள் திட்டம் என்ற தலைப்பின் கீழ் சந்தன மர எஸ்டேட் திட்டம் போன்ற பல வகையான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தோட்டங்கள் எழுப்பும் வேலைகளைத் தவிர ஐந்து பழங்குடி கிராம நலக்காடுகள் சந்தன எஸ்டேட் பண்ணைகள் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 42 பழங்குடியினர் கிராமங்களில் வசிக்கும் 2,062 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இதனால் 2.85 இலட்சம் மனித நாட்கள் வேலை வாய்ப்பு கிடைக்கப் பெறுகிறது.

1990 மார்ச் 31]

2. இத்திட்டத்தின் வேலை மற்றும் நிதி இலக்குகள் சாதனைகள் கீழே தரப்பட்டுள்ளன :—

(1)	1988–89 சாதனை. (2)	1989–90 உத்தேசம். (3)	1990–91 இலக்கு. (4)
1. வேலை			
தோட்டம் எழுப்புதல் (எக்டரில்).	627	860	1,115
சாலைத் தோட்டம் (கிலோ மீட்டரில்).	54	40	40
தீவிரப் பண்படுத்தும் பணிகள் (எக்டரில்).	103	100	259
2. நிதி (ரூபாய் இலட்சத்தில்)	128.67	124.86	118.39

3. மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நலப் பணிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன :—

(அ) பயிரிடுவதற்காக 1,990 எக்டேர் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றன.

(ஆ) வேலூர், தர்மபுரி, திருப்பத்தூர், சேலம் ஆகிய வனப் பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினர் தங்களுடைய கால்நடைகளை மேய்ச்சல் நிலங்களில் இலவசமாக மேய்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் வனத்துறையில் தொழிலாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். தகுதியுடைய பழங்குடியினர் வனப் பணியாளர், வனக் காப்பாளர், வனக் காவலாளி, யானைப் பாகன், காவடி போன்ற அரசுப் பணிகளில் இத்துறையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(இ) பழங்குடியினருக்காக 16 தொடக்கப் பள்ளிகளையும், ஒரு மேல்நிலைப்பள்ளி மற்றும் ஒரு உயர்நிலைப் பள்ளியையும் வனத்துறை நடத்தி வருகின்றது. இப்பள்ளிகளில் மொத்தம் 2,485 மாணவர்களும், 109 ஆசிரியர்களும் உள்ளனர். தற்சமயம் பழங்குடியினர் நலனுக்காக இரண்டு உயர்நிலைப்பள்ளி விடுதிகளும், எட்டு ஆரம்பப்பள்ளி மாணவர் விடுதிகளும், வட ஆற்காடு (திருவண்ணாமலை-சம்புவராயர் மற்றும் வட ஆற்காடு-அம்பேத்கார்) மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன. இந்த பத்து விடுதிகள் மூலம் மொத்தம் 750 பழங்குடி மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

[1990 மார்ச் 31

(ஈ) டாப்சிலிப்பில் உள்ள மருத்துவமனை ஒரு உதவி மருத்துவர் தலைமையில் இதர மருத்துவப் பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. முதுமலையிலுள்ள மருத்துவ மனை, மருந்தாளுனர் மற்றும் ஒரு பகுதி நேர ஊழியரின் உதவி யுடன் செயல்பட்டு வருகிறது.

(உ) பழங்குடியினருக்கு பயனளிக்கும் வகையில் 19 தொழி லாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காடுபடு சிறு பொருட்கள் இக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு 10 சதவீதம் சலுகை விலையில் குத்தகைக்கு விடப்படுகின்றது.

(ஊ) தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின்கீழ் 5 வயது முதல் 15 வயது வரையில் பயிலும் 2,465 பழங்குடி யினரின் பிள்ளைகளுக்கு வனத்துறையால் நடத்தப்படும் எல் லாப் பள்ளிகளிலும் சத்துணவு வழங்கப்படுகிறது. பள்ளிச் சீருடைகள், எழுது பலகைகள் மற்றும் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

(எ) பழங்குடியினரின் குடிசைத்தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களான மூங்கில், பிரம்பு மற்றும் சிறிய மரங்கள் முதலியன சலுகை விலையில் வழங்கப்படுகின்றன. மேலும், விவசாயம் செய்வதற்குத் தேவையான சிறிய மரம், விறகு மற்றும் வனப்பொருட்கள் இலவசமாக பழங்குடியினருக்கு வழங் கப்படுகின்றன.

(ஏ) காப்புக் காட்டிற்குள் பழங்குடியினர் தங்களது நிலங் களின் உரிமையை மாற்ற அனுமதிக்கப்படுவதில்லை.

(ஐ) பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட் டத்தின்கீழ் அவர்கள் வாழும் பகுதிகளில், இத்துறையினரால் பின் வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

1. தோட்டங்களை வளர்த்தல்—வருடத்திற்கு சுமார் 1,000 எக்டேர்.

2. பழங்குடியினர் பகுதிகளில் சாலை போடுதல்—வரு டத்திற்கு சுமார் 5 முதல் 10 கிலோ மீட்டர் வரை.

3. பள்ளிக் கட்டிடங்கள், ஆசிரியர்கள் மற்றும் பாது காப்பு வனப்பணியாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல் வருடத்திற்கு 5 முதல் 10 வரை குடியிருப்பு இல்லங்களும் ஒன்று அல்லது இரண்டு பள்ளிக் கட்டிடங்களும் கட்டப்பட்டு வருகின் றன.

1990 மார்ச் 31]

4. பழங்குடியினரின் வாழ்க்கைக்குத் தகுந்தாற்போல் அவர்களின் பண்பாடுகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஒத்த வகையில் உள்ளூர் மூலப் பொருட்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட வீடுகள் கட்டிக் கொடுக்கும் பணியே இத்துறையின் ஒரு நம்பிக்கையான திட்டமாக உள்ளது.

6.3.17. நீலகிரி உயிரினச் சூழல் பாதுகாப்பு :

உயிரின பாதுகாப்புத் திட்டம் என்ற இந்நாளைய புதிய கொள்கை செயலாக்க முறை பரந்த பாரம்பரிய மிக்க உயிரினச் சூழலை பாதுகாக்கும் முயற்சியில் ஓர் அங்கமாகும். மேற்கு மலைப் பகுதியில் உள்ள உயிரினங்களின் முழுமையான தன்மையினைப் பாதுகாக்க வன இயல் பாதுகாப்பு திட்டம் அக்டோபர் 1980 முதல் நீலகிரி பகுதிக்காக தயார் செய்யப்பட்டது.

2. நீலகிரி வன உயிரின இயல் பாதுகாப்பு திட்டமானது தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடக மாநிலங்களின் பகுதிகளையும் கொண்டதாக செப்டம்பர் 1986-ல் அறிவிக்கை செய்யப்பட்டது. நீலகிரி வன உயிரின பாதுகாப்புத் திட்டம் மூன்று தென் மாநிலங்களின் 5,520 சதுர கிலோ மீட்டர் வனப் பரப்பினைக் கொண்டுள்ளது. இதில் தமிழகம் மிகுதியான வனப் பரப்பை, அதாவது 2,538 சதுர கி.மீ. பரப்பினைக் கொண்டுள்ளது. இதனில் உள்மைய பகுதி 274 சதுர கிலோ மீட்டரும் கையாளும் வனப்பகுதியாக (Manipulation Zone) 2,082 சதுர கிலோ மீட்டரும், சுற்றுலா பகுதியாக 66 சதுர கிலோ மீட்டரும் வன முன்னிலை மீட்புப் பகுதியாக 116 சதுர கிலோ மீட்டரும் அமைந்துள்ளன. முதுமலை, சத்தியமங்கலம், ஈரோடு, நீலகிரி வடக்கு, நீலகிரி தெற்கு மற்றும் கோவை வனக் கோட்டப் பகுதிகளை உள்ளடக்கிய நீலகிரி, கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் இப்பகுதி அடங்கும்.

3. கீழே குறிப்பிட்டுள்ள காரணங்களால், நீலகிரி உயிரினச் சூழல் பாதுகாப்பு முழுவதும், செழிப்பான, ஒப்பற்ற தனித்தன்மை கொண்டுள்ளதாய் இருக்கிறது.

(அ) இது மேற்கு மலைத் தொடர்ச்சியில் விசேஷமான முக்கியமான மலை தொடர்ச்சி நிலப் பகுதியாகவும், பரவலான தொடர் தட்ப வெப்பநிலை கொண்டதாகவும், இதன் மூலம் விஸ்தாரமான உண்மையான இயற்கை சூழல் நிறைந்ததாக வெளிப்படுகிறது.

(ஆ) இந்நிலப் பகுதி 60 சதவீதத்திற்கும் மேலான காடுகளைக் கொண்டது. காவிரி நீரின் காவிரி உதயத்தின் மகா உபநதியாக முக்கியமான நீரியல் தன்மை உடையதாகவும், நீலகிரியில் ஏற்படும் வன அழிவு தமிழ்நாட்டின் சமவெளிப் பகுதியினை பாதிக்கும் தன்மை உடையதாய் உள்ளது.

[1990 மார்ச் 31

(இ) மேலான நீர் மின் இயல் திட்டம் நீர் பாதுகாப்பு நிறைந்த இடமாக நீலகிரி அமைந்துள்ளது. வன சூழலின் பாதிப்பு மாநில முழுவதுமாக நீரோட்டம் குறைந்து, வண்டல்-தடுப்பு அதிகரிக்கும் இயற்கை தன்மையை உடைத்தாயுள்ளது.

(ஈ) இந்நிலப் பகுதி தாவர வகைகள் நிறைந்ததாகவும், பிராணி வகைகள் நிறைவுற்றதாகவும், மக்களிடையே சாதாரண மாக காணப்படும் பொருள்கள் மிக அதிக அளவில் கொண்டுள்ள தாகவும் மேலும் பல அபாயத்திற்குள்ளாக்குகிற வகைகளின் புகலிடமாக விளங்குகிறது.

(உ) இந்நிலப் பகுதி பல வகைப்பட்ட இயற்கையில் தோற்றுவிக்கப்பட்ட செடிகளையும், மரங்களையும் உடைய தாய் இருக்கிறது.

(ஊ) இந்நிலப் பகுதி பழங்குடி இனத்தவர்களையும், அபூர்வமாக பரவலாக பயிர் செய்து வாழ்பவர்களையும், வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகளையும் கொண்டதாய் அமைந் துள்ளது.

4. 1986–87 மற்றும் 1987–88 ஆம் ஆண்டுகளில் மொத்த மாக ரூ. 50.50 இலட்சம் அரசு அங்கீகரித்துள்ளது.

5. 1989–90-ம் ஆண்டில் ரூ. 58.50 இலட்சம் அளவில் இத்திட்டத்தினை செயல்படுத்த பல்வேறு பணிகளை உள்ளடக் கிய செயல் திட்டம் வடிவமைத்து மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளது. மத்திய அரசின் ஆணைகள் எதிர்பார்க்கப்படு கின்றன.

6. மேலும், இந்நிலப் பகுதிகளில் விரிவுபடுத்த தேவை யான முக்கிய நிலப்பகுதிகளில் தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு துறைகள் மூலம் நடைமுறைப்படுத்த நிர்வாக திட்டம் தயாரிக்க பலவகை துறையின் தீர்மானிக்கப்பட்ட நட வடிக்கைகளையும் உள்ளடக்கிய ஒரு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

6.3.18. ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாடு திட்டம்—மேற்கு மலைத் தொடர் பகுதி

மேற்கு தொடர்ச்சி மலைகளின் தரிசு நிலக் காடுகளை மேம் பாடு செய்ய ரூ. 504.00 இலட்சத்திற்கு முன்னோடித் திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெறப் பட்டுள்ளது. இதில் ரூ. 287.00 இலட்சம் அளவிற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்து 1989–90-ல் இப்பணியை மேற் கொள்ள ரூ. 100 இலட்சம் வழங்கியுள்ளது. மலைச் சரிவுகளி லும் மற்றும் தரம் தாழ்ந்த பகுதிகளிலும் 4,000 எக்டேர் பரப்

1990 மார்ச் 31]

பில் மரங்கள் நடும் பணியும் மற்றும் சோலைப்பகுதியில் 1,000 ஹெக்டேர் பரப்பளவில் மீண்டும் உற்பத்தி செய்யும் பணிகள் 1990—91-ல் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான முன்னோடி ஆயத்தப் பணிகள் 1989—90-ல் நிறைவேற்ற மத்திய அரசு அங்கீகாரத்துடன் தொடங்கப்படவிருக்கிறது.

6.3.19. புதுமையான திட்டங்கள் :

வனத்தின் நலனை மேலும் நல்ல நிலையில் பாதுகாத்திடவும் சமூக விரோதிகளிடமிருந்து பாதுகாக்கவும், கீழ்க்கண்ட புதிய திட்டங்கள் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் இயற்கை சூழலியலை மேம்படுத்துவதுடன் கூழ் மர இனமான மூங்கில் பண்ணைகளை உருவாக்கி நாட்டின் வளத்தை பெருக்குவதும் மனிதனால் உருவாக்கப்பட்ட வனத்தை பாதுகாத்தல், வனவிலங்கு அழிந்து கொண்டிருக்கும் நான்கு கொம்புகளை உடைய மானைப் போன்ற ஒரு உயர்ந்த இன மிருகத்தை பாதுகாத்தல் மற்றும் சிறந்த விஞ்ஞான மேதையான டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் பரிந்துரையின்படி ஆராய்ச்சி பகுதி ஒன்றினை தோற்றுவித்து அதற்கான ஆராய்ச்சி இயக்குநர் மற்றும் உதவி அலுவலர்களை நியமித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

திட்டத்தின் பெயர் :

காடு வளர்ப்பும் —நிருவாகமும்—சீரமைக்கப்பட்ட வனப் பாதுகாப்பு—அறிவியல் பூர்வமாகவும், உண்மை நிலவர அடிப்படையிலும் களப்பணியாளரிடம் வனப் பாதுகாப்புப் பணியை ஒப்படைத்தல்.

(ரூபாய் 15.50 இலட்சம்)

மரங்களைக் கள்ளத்தனமாக வெட்டி யெடுத்துச் செல்வோர், திருட்டுத்தனமாக வேட்டையாடுவோர், ஏனைய சமூக விரோதிகள் ஆகியோரின் சட்ட விரோதமான பழிபாவங்களுக்கு அஞ்சாத செயல்களிலிருந்து, காட்டு வளத்தைப் பாதுகாப்பது அபாயகரமான, சவால் மிகுந்த பணி ஆகும். காவல் சார்பணியாளர் ஒருவரின் பொறுப்பில் விடப்பட்டுள்ள வனப் பகுதியின் பரப்பு (இது வனத்துறையில் நடைமுறையிலுள்ள பாதுகாப்பு முறையின் அடிப்படை அலகு) மிக அதிகமாகவும், திறம்பட பாதுகாப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளுக்கு மேற்பட்டதாகவும் உள்ளது.

தற்போதுள்ள பரந்துப்பட்ட கடத்தலுக்கு வாய்ப்புள்ள மரங்கள் வளர்ந்துள்ள பகுதிகளின் எல்லைகளை மாற்றியமைப்பதன் மூலம், கூடுதல் காவல் பகுதிகளை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, 1988—89 ஆம் ஆண்டிற்

குரிய பகுதி II திட்டத்தின் கீழ் ரூ. 12.00 இலட்சம் செலவில், கூடுதலாக 60 வனக் காப்பாளர்கள், 60 வனக் காவலாளிகள் பதவிகளை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பப்பட்டது. அரசு, இச்செயற்குறிப்பை ஏற்றுக் கொண்டு, முதல் கட்டமாக 60 வனக் காப்பாளர்களையும், 60 வனக் காவலாளிகளையும் பணியமர்த்த அனுமதி வழங்கியுள்ளது.

அறிவியல் பூர்வமாகவும் உண்மை நிலவர அடிப்படையிலும், களப் பணியாளர்களுக்கு பாதுகாப்பு பணியை ஒப்படைக்கும் பொருட்டு, ரூ. 15.50 இலட்சம் செலவில், இரண்டாம் கட்டமாக, மேற்கொண்டும் 60 வனக் காப்பாளர், 60 வனக் காவலாளிகள் பதவிகளை 1990–91 ஆம் ஆண்டில் ஏற்படுத்த அரசு கருதியுள்ளது.

திட்டத்தின் பெயர் :

தற்போதுள்ள வனப் பணியாளர்களுடன் கூடுதல் பணியாளர்களை நியமிப்பதன் மூலமாக, வனப் பகுதிகளில் திருட்டு நடை பெறக் கூடிய இடங்களில் சோதனையிடும் ரோந்துப் பிரிவுகளை அமைத்தல்.

(ரூபாய் 7.40 இலட்சத்தில்).

காடுபடு பொருட்களின் தேவை, நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், வன வளம் குறைந்து கொண்டே வருவதுடன், கள்ளத்தனமாக மரங்களை வெட்டியெடுத்துச் செல்வதாலும், வன விலங்குகளைத் திருட்டுத்தனமாக வேட்டையாடுவதாலும், இவற்றைக் கள்ளத்தனமாக கடத்துவதாலும், நம்முடைய உயிரின் வளம், இயற்கை வளம், வன வளம் பெரிதும் பாதிக்கப் படுகிறது. கள்ளக்கடத்தல் செய்வோர், விலங்குகளைக் கள்ளத்தனமாக வேட்டையாடுவோர் போன்ற சமூக விரோத சக்திகள், நவீன ஆயுதங்கள், போக்குவரத்து சாதன வசதிகள் ஆகியவற்றை வைத்துக் கொண்டு கூட்டாகச் சேர்ந்து இத்தகைய சமூக விரோதக் காரியங்களில் ஈடுபடுகின்றனா. இத்தகைய சட்ட விரோதக் கும்பல்களிடமிருந்து வன வளத்தை பாதுகாப்பது என்பது மிகுந்த இடர்பாடுடைய சவாலை சமாளிக்க வேண்டிய ஆபத்தான பணியாகும். இத்தகைய சட்ட விரோதக் கும்பலுக்கும் வனப் பணியாளர்களுக்குமிடையே மோதல்கள் பல நிகழ்ந்த வண்ணமிருக்கின்றன.

வனச் செல்வத்தைப் பாதுகாக்கின்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள வனப் பணியாளர்கள் இடையூறுக்கு ஆளாகின்றனர். தங்களின் உயிரையும் தியாகம் செய்கின்றனர். மேலும் வனச் செல்வம் சமூக விரோத சக்திகளால் சுரண்டப்படுகின்றன.

1990 மார்ச் 31]

நம்முடைய வனச் செல்வத்தைத் திறம்பட்ட முறையில் பாதுகாக்க, முக்கியமான விலை மதிப்புள்ள வனச் செல்வங்கள் (மரங்கள்) நிறைந்திருக்கின்ற வனப் பகுதிகளில் அமைந்துள்ள மூன்று சோதனைச் சாவடிப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், அவற்றின் நிருவாக முறையை திறம்பட்டதாகச் செய்யவும் கருதப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வலம் வரும் சோதனைச் சாவடியையும் சேர்ந்த பணியாளர்களின் அதிகார வரம்பின் கீழ் 25 கிலோ மீட்டர் சுற்றளவுப் பகுதி இருக்கும். காடுகளைப் பாதுகாக்கவும், வனக் குற்றங்கள் நிகழாவண்ணம் தடுக்கும் பொருட்டும், சோதனைச் சாவடியைச் சுற்றியுள்ள 25 கிலோ மீட்டர் வனப் பகுதியை இவர்கள் கண்காணிக்க வேண்டும்/சோதனையிட வேண்டும். முதல் கட்டமாக, 1990–91-ல் வலம் வரும் மூன்று சோதனைச் சாவடிகளை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

திட்டத்தின் பெயர் :

உயிரின வாழ்க்கைச் சூழல் மேம்பாடு—வாழ்க்கை ஆதாரம்—பெரியார் மாவட்டத்தில் மூங்கில் எஸ்டேட் அமைப்பதற்கான செலவு.

(ரூபாய் 10 இலட்சத்தில்).

இம்மாநிலத்தில் காட்டில் வளரும் மர வகைகளில் மூங்கில் ஒரு முக்கியமான இனமாகும். இது மிகவும் பயனுள்ள உள்நாட்டு காடுபடு பொருள் என பெரும்பான்மையான கிராம மக்களால் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. உண்மையில், மூங்கிலைப் போல கிராமத்தவருக்குப் பலவகையில் பயன் படக்கூடிய தாவரம் வேறு எதுவுமே அநேகமாக இல்லை என்றே கூறலாம். மேலும், இரண்டாம் நிலையிலிருந்து மூங்கில், காகிதத் தயாரிப்புத் தொழிலுக்கும் ரேயான் தொழிலுக்கும் மிக முக்கிய மூலப் பொருளாகப் பயன்படுவதையடுத்து அதன் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது.

திட்டத்தின் பெயர் :

சுற்றுச் சூழல் மேம்பாடு—அண்ணா உயிரியல் பூங்காவைச் சுற்றி சோலை ஏற்படுத்துதல்.

(ரூபாய் 3.20 இலட்சத்தில்.)

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவின் மேற்கே ஜி.எஸ்.டி. சாலையும், தெற்கே கேளம்பாக்கம் சாலையும், வடக்கே வண்டலூர் காப்பு வனமும் கிழக்கே வருவாய் நிலமும் பாசன ஏரி ஒன்றும் அமைந்துள்ளன.

[1990 மார்ச் 31

உயிரியல் பூங்கா அமைந்துள்ள பகுதிக்கு மேலுள்ள வண்டலூர் காப்பு வனத்தின் ஒரு பகுதியும், ஜி.எஸ்.டி. சாலையை நோக்கியுள்ள வண்டலூர் காப்பு வனத்தின் மேற்குச் சரிவுப் பகுதியும், சோலையை அமைப்பதற்கு மிகச் சிறந்த இடமாகும்.

மூன்று இடங்களில் ஜி. எஸ்.டி. சாலையை நோக்கியுள்ள மலைச் சரிவின் தாழ்வான பகுதி நெடுக, சோலையை அமைப்பது மிகச் சிறப்பாக இருக்கும்.

இப்பகுதிகளில் சோலையை அமைப்பதால், பின்வரும் நன்மைகள் கிட்டும் :—

(1) அழிந்துபட்ட காடுகள் மீண்டும் பசுமை பெறும்.

(2) ஜி.எஸ்.டி. சாலை வழியாகச் செல்லும் பொது மக்கள் இச்சோலையை இளைப்பாறுவதற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(3) மரம் வளர்ப்பு திட்டத்திற்கும், பசுமையான மரங்களைப் பாதுகாப்பதன் அவசியத்திற்கும். இச்சோலை சிறந்ததொரு விளம்பரமாகவும் அமையும்.

திட்டத்தின் பெயர் :

உற்பத்தியும் மேம்பாடும்.

உற்பத்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட மேம்படுத்தப்பட்ட நாற்றுப் பண்ணை தொழில் நுட்பம் செயலாக்கம்—'மரக்கன்று வளர்ப்பவர்' பதவி ஒன்றை ஏற்படுத்துதல்.

(ரூபாய் 0.90 இலட்சத்தில்.)

நடப்படும் கன்று நன்றாக இருந்தால்தான், மரம் நன்றாக வளரும். மரத்தின் தரம், கன்றுகள் வளர்க்கப்படும் தன்மையைப் பொருத்தது என்பது ஓரளவு உண்மை என்றாலும், பெரும்பாலும் நாற்றுப் பண்ணையில் வளர்க்கப்படும் மூலவிதையின் தரத்தைப் பொறுத்தே அமையும்.

மரம் வளர்ப்போர், மேம்பட்ட மரவளர்ப்புப் பணிகளுக்குத் தேவையான அனைத்து வகை அனுபவங்களையும் உடையவர்களாவர். அவர்கள் இத்தகைய மரம் வளர்ப்பு பணியை மட்டுமே கவனிப்பதால் அவர்களுக்கு நடைமுறை அனுபவமும் இருக்க வேண்டும். தன் கீழ் பணிபுரியும் பணியாளர்களிடம் ஒப்படைக்கக்கூடிய மரம் வளர்ப்பு மேம்பாட்டுப் பணிகள் குறித்து நாளது வரையிலான கல்வி அறிவு—பட்டறிவு உடையவராக இருப்பதோடு மரம் வளர்ப்புப் பணி சிறப்பாக நடைபெறுவதற்கான வழிவகைகளையும் அறிந்திருக்க வேண்டும்.

1990 மார்ச் 31]

திட்டத்தின் பெயர் :

ஆராய்ச்சி—கல்விப் பிரிவை மேம்படுத்துதல்—மாநில வன ஆராய்ச்சி நிலையத்திற்குத் தலைமை ஏற்று நடத்த ஆராய்ச்சி இயக்குநர் பதவி ஒன்றை ஏற்படுத்துதல்.

(ரூபாய் 8.00 இலட்சத்தில்)

காடு வளர்ப்புத் துறையில், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான பரிந்துரைகளை அளிப்பதற்காக தமிழ்நாடு வனத்துறை ''இயற்கைவள வாயில்களைப் பாதுகாத்தலும் நீடித்த வளர்ச்சியும்'' என்ற பொருள் குறித்து ஆய்வுக்குழு ஒன்றை அமைத்தது. பெரும் புகழ் வாய்ந்த அறிவியல் வல்லுநரான டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்கள் தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட க் குழு அதன் அறிக்கையில் பின்வருமாறு பரிந்துரை செய்துள்ளது.

''காடு வளர்ப்பு—வனவிலங்குகள் குறித்த அனைத்து முக்கிய அம்சங்கள் குறித்தும் ஆராய்ச்சி செய்வதற்காக அனைத்து வசதிகளும் போதுமான பணியாளர்களும் கொண்ட திறமையாக நிருவகிக்கப்படுகின்ற மாநில காடு வளர்ப்பு—வனவிலங்கு ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதில் இனியும் கால தாமதம் காட்டக்கூடாது''. '' நமது இயற்கைச் செல்வங்களை பாதுகாப்பதில் எதிர் நோக்குகின்ற சவால்களைச் சமாளிக்க காடு வளர்ப்பு—சுற்றுச் சூழல் ஆராய்ச்சி—பயிற்சி குறித்து தற்போது எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் போதுமானவையல்ல.'' காடு வளர்ப்புத் துறையில், பயிற்சி ஆராய்ச்சி கல்வி, விரிவாக்கப் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்வதற்காக மாநில காடுவளர்ப்பு—வனவிலங்கு ஆராய்ச்சிப் பயிற்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று பரிந்துரை செய்யப்படுகின்றது.

மாநில வன ஆராய்ச்சி—பயிற்சி நிலையம், ஆராய்ச்சி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் வகையில் ஏற்படுத்தப்படும். வனத்துறையின் ஆராய்ச்சி கல்விப் பணிகளை நிலையான செயலாட்சியின் கீழும் நிருவாகத்தின் கீழும் கொண்டுவர இது உதவும். அப்போதுதான் வனத்துறையின் ஆராய்ச்சி மேம்பாடு விரிவானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கும்.

திட்டத்தின் பெயர் :

காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த நவீன முறைகளைச் செயல்படுத்தல்—அடிப்படை வசதிகளுடன் கூடிய பாதுகாப்புப் பிரிவை ஏற்படுத்தல்.

(ரூபாய் 4.50 இலட்சத்தில்.)

நம் நாட்டுச் செல்வமான காடுகளை அழிவிலிருந்து காப்பது நம் நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகவும் இன்றியமையாததாகும். காட்டுத் தீ பெரும் அழிவை ஏற்படுத்தும் கூறுகளில் ஒன்றாகும்.

காட்டுத் தீ பெரும்பாலும் இயல்பாகத் தோன்றுவதல்ல பிற தூண்டுதல்களால் தான் உருவாகின்றது. முறையான நடவடிக்கைகளாலும், உய்த்துணர்ந்து அறியும் முன்னறிவாலும் காட்டுத் தீ ஏற்படுவதைக் கட்டுப்படுத்த இயலும்.

தீ பிடிப்பதை முன்கூட்டியே கட்டுப்படுத்தும் திட்டத்தில் கீழ்க்காணும் கூறுகள் அடங்கும் :—

(அ) மனித ஆற்றல், சாதனங்கள் தேவை.

(ஆ) மனித ஆற்றலையும், பொருள்களையும் திரட்டுதல்.

(இ) தீ பிடித்த இடத்திற்குச் செல்ல போக்குவரத்து வசதிகள்.

மத்திய அரசின் உதவியுடன் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. எனவே, மாநில அரசின் 50 சதவீத பங்கு 4.50 இலட்சம் ரூபாயாகுமென காட்டப்பட்டுள்ளது.

திட்டத்தின் பெயர் :

பிச்சாவரம் வெப்ப மண்டலச் சதுப்பு நிலக் காடுகளின் பாதுகாப்பும் மேம்பாடும்.

(ரூபாய் 1.15 இலட்சத்தில்.)

பிச்சாவரத்திலுள்ள வெப்ப மண்டலச் சதுப்பு நிலக் காடுகள் பிற நாடுகளிலிருந்து வருகின்ற பறவைகளுக்கும். உள் நாட்டுப் பறவைகளுக்கும் புகலிடமாகவும் விளங்குகின்றன. இப்பகுதி தாவர வகைகளுக்கும், விலங்கினங்களுக்கும் ஏற்ற சூழல் அமைந்த பகுதியாகவும், இயற்கையிலேயே உயிரின வாழ்க்கைக்கு ஏற்ற நிலையில் அமைப்புகளைக் கொண்ட பகுதியாகவும் விளங்குகிறது, எனவே, இப்பகுதியைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

உள்ளூர் மக்கள் குறிப்பாக மீனவர்களும், சுற்றுலாப் பயணிகளும் இங்கு பெருமளவில் வருவதால், தற்போது பிச்சாவரத்தின் தனித்தன்மை வாய்ந்த உயிரின வாழ்க்கைச் சூழலுக்கு போதிய பாதுகாப்பு அளிக்க இயலவில்லை.

ஆகவே, அனுமதியின்றி இப்பகுதிக்குள் நுழைவதைத் தடுத்து தனித்தன்மை வாய்ந்த இப்பகுதியைப் பாதுகாக்கும் பொருட்டு இப்பகுதியில் தக்க இடத்தில் சோதனைச் சாவடி ஒன்றை அமைக்க வேண்டியது அவசியமென்று கருதப்படுகிறது.

1990 மார்ச் 31]

திட்டப்பணியின் பெயர்:

'சவ்சிங்கா' அல்லது நான்கு கொம்புகள் கொண்ட மான் இனத்தை அடைப்புகளில் வளர்த்தல்.

(ரூபாய் 1.00 இலட்சத்தில்)

'சவ்சிங்கா' அல்லது 'டெட்ராசிரஸ் குவாட்ரிகார்னிஸ்' என்ற நான்கு கொம்புகள் கொண்ட மான் இனம், தமிழ்நாட்டில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் தான் உள்ளன. அழிந்து வரும் வன உயிரின வகைகளில் இதுவும் ஒன்றாகும்.

இந்த இனத்தைப் பெருக்கும் பொருட்டு, இந்த விலங்கினத்தை அடைப்புகளில் அடைத்து வைத்து வளர்த்து, பின்னர் காடுகளில் விட வேண்டும் என்று கருதப்படுகிறது.

திட்டத்தின் பெயர்:

கரிக்கிலி பறவைகள் சரணாலயம் அமைத்தல்—மேம்படுத்துதல்.

(ரூபாய் 1.45 இலட்சத்தில்)

கரிக்கிலி பறவைகள் சரணாலயம், சென்னையிலிருந்து 83 கி.மீ. தொலைவில், வேடந்தாங்கலுக்கு மிக அருகாமையில் அமைந்துள்ளது. இச்சரணாலயம் 151.26 ஏக்கர் அல்லது 61.21 எக்டேர் பரப்பளவு கொண்டது. 5 கி.மீ. அளவுக்கு அகலமாக உள்ளது. இச்சரணாலயம், தமிழ்நாட்டில் சுற்றுலா மற்றும் வனவிலங்குப் பாதுகாப்பு அரங்கில் சிறப்பிடம் வகிக்கிறது.

திட்டத்தின் பெயர்:

யானை பாதுகாப்புத் திட்டம்—ஆனைமலை—முதுமலை.

(ரூபாய் 1.90 இலட்சத்தில்)

தமிழ்நாட்டில் சத்தியமங்கலம், பொள்ளாச்சி, திருப்பத்தூர், ஓசூர், திருநெல்வேலி ஆகிய இடங்களும் இவற்றிற்கு அருகிலுள்ள ஏனைய இடங்களும் யானைகள் வாழும் பகுதிகளாகும்.

புலி பாதுகாப்புத் திட்டத்தைப் போன்றே, யானை வாழிடங்களையும், யானைகளையும், பாதுகாப்பதற்கான திட்டமொன்றை மத்திய அரசு தீட்டியுள்ளது. இத்திட்டம், பெருமளவில் யானைகள் வாழும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளையும், புலி பாதுகாப்புத் திட்டப் பகுதியின் கீழ் வரும் பகுதிகளையும் பாதுகாக்க வகை செய்கிறது. மக்கள் வாழ்க்கையையும், ஏனைய சார்ந்த கூறுகளையும் கருத்திற்கொண்டு, அலைந்து திரியும் யானைகளை ஒன்று சேர்த்து, தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் அவை வாழ வகை செய்வதன் மூலம் சுற்றித்திரியும் யானைகளினால் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்க இயலும். இத்திட்டம் தொடர்பாக மாநில அரசிற்கு ஏற்படும் தொடரா செலவு முழுவதையும் மத்திய அரசு ஈடு செய்வதுடன் தொடரும் தன்மையுடைய பணிகளுக்கு 50 சதவீத நிதியுதவியும் அளிக்கிறது.

7. வன உயிரினங்களின் பாதுகாப்பு பராமரிப்பு மற்றும் நிர்வாகம்.

7.1. வன உயிரின நிர்வாகம் என்பது இயற்கையான சூழ்நிலையில் வாழும் முதுகெலும்புள்ள வன உயிரினங்கள் எண்ணிக்கை மற்றும் தாவர உயிரின சேர்க்கை அவற்றில் தேவையை சமமாக வைத்திருக்கலாகும். 1960 ஆம் ஆண்டுக்கு முன்னர் வேட்டை நிர்வாகமாக இருந்து வந்ததை வன உயிரின மேம்பாட்டு திட்டமாக 1972 ஆம் ஆண்டில் மாற்றப்பட்டது. 1972 ஆம் ஆண்டு வரை வன விலங்கு மேம்பாட்டிற்கு ஒரு தனியான கொள்கை கூட வகுக்கப்படவில்லை. எனவே நீண்ட நாள் தொலை நோக்குடன் தேசீய வனக் கொள்கையுடன் சேர்க்கப்பட்டு வன உயிரின மேம்பாட்டுக்கு உரிய கவனம் செலுத்தப்பட்டு வரப்படுகிறது. வன உயிரின நிர்வாகம் வன உயிரினங்களைப் பாதுகாத்தலும், பராமரித்தலும், அதிகரித்தலுமாகும். குறிப்பாக சரணாலயங்களிலுள்ள அழியக் கூடிய உயிரினங்களுக்காகவும் அறிவியல் ஆராய்ச்சி கல்வி பொழுது போக்கு மற்றும் வன உயிரின பொருட்களுக்காக வன உயிரின உறைவிடங்களை பாதுகாத்து அதனால் வன உயிரின எண்ணிக்கை இயற்கைக்கு உகந்த அளவு அதிகரிக்க திட்டங்களில் இடமளிக்கப்பட்டுள்ளது.

7.2. வன உயிரின மேலாண்மைத் திட்டம் :

வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972 மற்றும் வன உயிரின (பாதுகாப்பு) (தமிழ்நாடு) விதியின் 1975-ன் கீழ் வன உயிரின பாதுகாப்பு மற்றும் வன உயிரின உறைவிடங்கள் அபிவிருத்தி ஆகிய பணிகள் திட்டமிடப்பட்டு வன உயிரின மேலாண்மை திட்டத்தின்கீழ் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

(1) வன உயிரின பராமரிப்பு (பாதுகாக்கப்பட்ட பரப்பளவு விவரம்).

1990 மார்ச் 31]

(1) தமிழ்நாட்டில் 8 பாதுகாக்கக்கப்பட்ட இடங்கள் உள்ளன. அவைகளின் விவரம் பின்வருமாறு :—

		பரப்பளவு (ச.கிலோ.மீ.)
1.	புலிகாட் வன உயிரின சரணாலயம் ..	60.000
2.	கிண்டி தேசிய பூங்கா ..	2.82
3.	வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் ..	0.30
4.	வேட்டன்குடிபட்டி பறவைகள் சரணாலயம் ..	0.13
5.	வல்லநாடு வெளிமான் சரணாலயம் ..	16.41
6.	கரிக்கிலி பறவைகள் சரணாலயம் ..	0.60
7.	கஞ்சரான் குளம் பறவைகள் சரணாலயம் ..	0.3755
8.	சித்தரான்குடி பறவைகள் சரணாலயம் ..	0,6666

(2) வன உயிரின உறைவிடங்களின் மேம்பாட்டு வேலைகள் மேற்கொள்ளல்—மத்திய திட்டம் :—

		1989–90	1990–91
		(ரூபாய் இலட்சத்தில்)	
1.	புலிகள் காப்பகம் ..	42.24	80.00
2.	முதுமலை வன உயிரின சரணாலயம்.	12.99	7.25
3.	இந்திராகாந்தி வன உயிரின சரணாலயம்.	10.40	3.00
4.	கோடிக்கரை வன உயிரின சரணாலயம்.	5.50	4.00
5.	முக்குர்தி வன உயிரின சரணாலயம்.	5.86	5.99
6.	கிண்டி தேசிய பூங்கா ..	17.19	3.00
7.	புலிகாட் ஏரி பறவைகள் சரணாலயம்.	2.75	0.01
8.	வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்.	1.50	0.01
9.	கரிக்கிலி பறவைகள் சரணாலயம்	...	1.45
10.	வேட்டையாடுதல் மற்றும் சட்ட விரோத வர்த்தகம் தடுத்தல்.	12.50	0.01

7.3 மாநிலத் திட்டம் :

(1)	1989–90 (2)	1990–91 (3)
	(ரூபாய் இலட்சத்தில்)	
1. இயற்கை பாதுகாப்பு ..	48.93	23.31
2. தேசிய பூங்காவாக அறிவித்தல்	..	..

இந்திராகாந்தி வன உயிரின சரணாலயம் பகுதியில் 227.37 ஹெக்டேர் பரப்பினை தேசிய பூங்காவாக அரசு அறிவித்துள்ளது.

7.4. புலிகள் காப்பகத் திட்டம் :

1988–89-ல் அமுல்படுத்தப்பட்ட புலிகள் காப்பகத் திட்டம் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள களக்காடு—மூண்டந்துரை சரணாலய மையப் பகுதியினை மத்திய நிதி உதவியின் கீழ் ''புலிகள் காப்பகமாக'' பராமரிக்க இந்திய அரசு ஒப்புதல் தந்துள்ளது.

தொடராத செலவினம் கீழ் 100 சதவீதம் தொடரும் செலவினத்தின் கீழ் 50 சதவீதம் என்ற நிதி உதவி அடிப்படையில் இத்திட்டம் இந்திய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்திய அரசு ஒப்பளித்துள்ள ரூ. 19.81 லட்சத்தில் 5.41 லட்சம் தொடரும் செலவினத்தின் கீழ் 50:50 சதவீதம் அடிப்படையிலும் 100 சதவீத உதவியடிப்படையில் ரூ. 14.50 லட்சம் வழங்கவும் இந்திய அரசு ஒப்புளித்துள்ளது.

சரணாலயத்திற்குள் இருக்கும் தனியார் பாதுகாப்பு பகுதிகளை கையகப்படுத்த ரூ. 80 லட்சத்தினை அரசு வழங்கியுள்ளது. 1989–90 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் ரூ. 42.24 லட்சம் செலவில் நடை முறைப்படுத்தப்பட்டது. 1990–91-ல் இத்திட்டம் ரூ. 80 லட்சம் மதிப்பீட்டில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

7.5. கல்வி மற்றும் பொருள் விளக்கத் திட்டம் :

இந்திய அரசின் 7-வது ஐந்தாண்டு திட்டத்தின் வனவிலங்கு கல்வி மற்றும் பொருள் விளக்கத் திட்டம் மத்திய நிதி உதவி பெறும் திட்டமாக சேர்க்கப்பட்டு 1986–87 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் 1990–91-ல் ரூ. 3.80 இலட்சம் செலவில் தொடர்ந்து செயல்பட உள்ளது.

1990 மார்ச் 31]

7.6. தேசிய கடல் வாழ் உயிரின பூங்கா :

கடற்பகுதி மற்றும் கடல்வாழ் இனங்கள் இயற்கை பாதுகாப்பு பகுதி சுற்று சூழல் உற்பத்தி பராமரிப்புக்கு பெரிதும் உதவிகரமாக இருக்கிறது. இத்திட்டத்தின் நோக்கம் சுற்றுபுறச் சூழலுக்கு பங்கம் செய்யும் இடையூறுகளை தகர்த்தெறிந்து இயற்கை சூழல் வளர்ச்சி முறையினை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகும். இவைகளில் சில செயல் முறைகள் நீரோட்டம், வெள்ளம், ஈர்ப்பு அலைகள், நீரோட்டம் முதலியவற்றால் நீர் உணவு மண் அரிப்பு, கடல் அலைகள், வறட்சி ஆகியவைகளாலும் மற்றும் இரசாயனங்களின் சேர்க்கையாகும். மற்றவை இரசாயனம், வாயு மற்றும் தாதுப் பொருட்கள் பரிமாற்றம் மற்றும் ஒரு முறைப்படுத்தல் உயிரியலில் மாற்றங்களால் அதாவது ஒரு நிலை சீதோஷ்ணத்திலிருந்து மற்றொரு நிலை சீதோஷ்ணத்திற்கு மாறும்போது ஏற்படும் சுற்று சூழல் பாதிப்பிலிருந்து காக்க உதவுகிறது.

சீதோஷ்ண மாற்றங்களிலிருந்து பாதுகாக்க மேற்கொள்ள உள்ள கீழ் வரும் நோக்கங்களில் :—

சுற்றுப் புறச் சூழல் சார்பு மாதிரி வடிவங்களை பாதுகாத்தல்,

நீண்ட கால அடிப்படையில் வெவ்வேறான மரபியல் பாதுகாப்பு நிலையங்கள் அமைத்தல்.

இந்திய இலங்கைக்கு அருகாமையில் உள்ள மன்னார் வளைகுடா பகுதி ஒரு ஒருங்கிணைந்த கடல்வாழ் உயிரின சூழல் பகுதியினை உயிரின சூழல் பாதுகாப்பு பகுதியாக 18–2–1989 முதல் இந்திய அரசால் அறிவிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. தேசிய கடல் வாழ் உயிரின பூங்கா மன்னார் வளைகுடாவில் உள்ள 21 தீவுகளை உள்ளடக்கியது. அதில் 4 தீவுகள் சிதம்பரனார் மாவட்ட கிழக்கு கடலோர பகுதியில் உள்ளது. 17 தீவுகள் இராமநாதபுரம் மாவட்ட தெற்கு கடலோர பகுதியில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 21 தீவுகளின் மொத்த பரப்பளவு சுமார் 623.12 ஹெக். ரூ. 535.47 லட்சம் முதலீட்டில் செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு தமிழக அரசின் மூலம் இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதில் 50 சதவீதம் முதலீடாக ரூ. 29 லட்சம் ஒப்பளிப்பு செய்து ரூ. 14.50 லட்சம் இந்திய அரசு அளித்துள்ளது. தமிழ்நாடு அரசு ரூ. 29 லட்சத்திற்கு ஒப்பளிப்பு செய்துள்ளது. மேற்படி திட்டம் 1989–90-ல் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மண்டபம் தலைமையிடமாக வைத்து வன உயிரின காப்பாளரின் கீழ் செயல்படும் புதிய கோட்டம் ஒன்றும் இயங்கி வருகிறது.

[1990 மார்ச் 31

8. மண் வளப் பாதுகாப்பு.

8.1.1. இயற்கையினால் மனிதனுக்கு வழங்கப்பட்ட பரிசுகளில் மனித வாழ்க்கைக்கு மண் மிக முக்கியமானது ஆகும். அதிலும் பூமியில் மேல் பரப்பில் உள்ள மண் மிக முக்கிய பங்கு கொண்டது. பூமியில் மேற்பரப்பிலிருந்து 7 முதல் 8 அங்குலங்கள் ஆழத்திற்குள் உள்ள மேல் மண் அடுக்கு மனித இனத்திற்கும் கால் நடைகளுக்கும் தேவையான உணவு மற்றும் உடைகளுக்குத் தேவையான நூல் இழை மற்றும் வீடுகள் முதலியன கட்டுவதற்கான தடிமரம் முதலியவைகளைப் பூர்த்தி செய்யும் செடியினங்களுக்கு சத்து வழங்கும் பகுதியாகும். வேளாண்மை வனத் திட்டத்திற்கு மண் அடிப்படையாக உள்ளது. நூல் இழை மற்றும் மரம் உற்பத்திக்கு மண் வளம் மிக முக்கிய அடிப்படையாகும். எனினும் பல சந்தர்ப்பங்களில் மண்வளம் மற்ற பெரும் இயற்கை வளங்களைப் போல் நிலையானதாக இல்லை.

8.1.2. பூமியில் மேற்பரப்பில் ஓடும் தண்ணீர் மற்றும் வீசும் காற்று மிக விரைவாகத் தேய்ந்து மண் துகள்களை வெளியே எடுத்துச் சென்று விடுகின்றன. இயற்கையான சலனமற்ற சுற்று சூழலில் அடர்த்தியான தாவரங்கள் இம்மாதிரியான மண் அரிப்பில் வேகத்தை மிகமிக குறைத்து விடுகிறது. இதனால் மேல்மண் அடித்து செல்லும் அதே வேகத்தில் அடியிலிருந்து தாய்மண் மேற்பரப்பிற்கு வந்து புதிதாக மண்மேல் அடுக்கினைத் தோற்றுவித்து விடுகிறது. ஆகவே மண் அரிப்பைத் தடுத்து மேல் மண் பரப்பினை நிலை நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது.

8.1.3. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வனத் துறையும் விவசாயப் பொறியியல் துறையும் முறையே வன நிலங்களிலும் தனியார் நிலங்களிலும் மண் அரிப்பை தடுப்பதற்கான கீழ்க் காணும் வேலைகளை திட்டமிட்டு செயல்படுத்துகின்றன :—

(1) மண் வளப் பாதுகாப்புப் பணிகளாகிய சுற்றுச் சுவர் எழுப்புதல், பக்கப் பாதுகாப்புப் பணிகள் மற்றும் சிறு நீரோடைகளின் குறுக்கே தடுப்பு அணை கட்டுதல் முதலிய பணிகளால் மண் அரிப்பு தடுக்கப்பட்டு, மண்ணின் ஈரத்தன்மை மேற்படுத்தப் படுகிறது ;

(2) கசிவு நீர்க்குட்டை/குளங்கள் ஆகியவை ஓடைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மண் அரிப்பு தடுக்கப்பட்டு ஓடைகளுக்குப் பக்கத்திலுள்ள கிணறுகளில் நீர்மட்டம் உயருகிறது. இதன் மூலம் கூடுதல் உணவு உற்பத்திக்கு வழி செய்யப்படுகிறது ;

(3) சரிவான வன நிலப் பகுதிகளில் மேற்படி தரையை சமன்படுத்துதல் மற்றும் அரண்கள் அமைத்தல் ;

(4) ஆறு மற்றும் ஓடைகளின் கரைகளில் மரம் வளர்த்தல் ;

1990 மார்ச் 31]

(5) ஆற்றோரங்களின் பக்கங்களில் நீர் வடியாமல் தடுக்க கூழாங்கற்களைக் கொண்டு அடைப்புப் போடுதல் ;

(6) ஆறு மற்றும் ஓடைகளின் கரைகளில் செடி மற்றும் மரங்களை வளர்த்து மண் அரிப்பு தடுத்தல் ;

(7) குன்று உள்ள பகுதிகளில் எங்கெங்கு தோட்டங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் தடுப்பு அணை மூலமும் கல் சுவர் கட்டப்பட்டும் மண் அரிப்பு தடுக்கப்படுகிறது ;

(8) வன நிலப்பகுதிகளில் தீவிர தோட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன ;

(9) வளரும் செடிகளில் முன்னேற்றத்தையொட்டி பக்க இடைவெளிகளில் கற்களை பொருத்தியும் தடுப்பு அணை கட்டியும் அல்லது தகுதியான மரங்களை நடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன ;

(10) தோட்டம் எழுப்பும் பகுதிகளில் இடைவெளியிட்டு குழிகள் தோண்டுதல்.

(11) குன்றுகளில் சரிவுப் பகுதிகளில் வன மரங்களைத் தவிர வேறு பயிர்கள் வளர்த்தல் தடுக்கப்படுகிறது ;

(12) எல்லா உப நீர்ப்பிடிப்பு பகுதிகளிலுள்ள குளங்களும் தூர் எடுக்கப்படுகின்றன.

மண் வளத்தின் பாதுகாப்பிற்கென வனத் துறை கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது :—

மேட்டூர் மண்வளப் பாதுகாப்புத் திட்டம் :

மேட்டூர் ஸ்டான்லி நீர்த்தேக்க நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண் அரிப்பைத் தடுப்பதும் வண்டல் படிவதைக் குறைப்பதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டம் 1965-66-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பகுதிகளில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏராளமான தரிசு நிலங்கள் உள்ளன. இத்திட்டத்தின்கீழ் 37,022 ஹெக்டர் பரப்பளவில் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன. வேளாண்மைப் பொறியியல் பணிகள் தவிர 630 தடுப்பு அணைகளும், 39 கசிவுநீர்க் குட்டைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1988-89 வரை இத்திட்டத்தின் கீழ் ரூ. 1,668 லட்சம் செலவிடப்பட்டுள்ளது, 1989-90ஆம் வருடத்தில் 71.59 லட்சம் ரூபாய் செலவில் 1,000 ஹெக்டர் நிலப்பரப்பில் காடு வளர்ப்பு பணிகளும் மண் வளப் பாதுகாப்பு பணிகளும் மேற்

கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம் 1990-91ஆம் வருடத்தில் ரூ. 71,56 லட்சம் செலவில் 1,000 ஹெக்டர் நிலப் பரப்பில் காடு வளர்ப்பு பணிகள் மற்றும் மண்வளப் பாதுகாப்புப் பணிகளையும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

2. வைகை மண்வளப் பாதுகாப்புத் திட்டம் :

இத் திட்டம் 1966-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப் பட்டு வருகிறது. ஆரம்ப காலத்தில் தோட்டம் எழுப்பும் வேலைகள் மட்டுமே செயல்பட்டன. பிறகு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் வண்டல் படிவதையும் மண் அரிப்பையும் தடுக்கவும், வேளாண்மை பொறியியல் பணிகள் தேவையான இடங்களில் மேற்கொள்ளப்பட்டன. இதுவரையில் இத் திட்டத்தின்கீழ் 17,667 எக்டர் நிலத்தில் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன. தவிர 422 தடுப்பு அணைகளும், 11 கசிவு நீர்க்குட்டைகளும் கட்டப்பட்டுள்ளன. 60,000 மீட்டர் நீளத்திற்கு தடுப்புச் சுவர் எழுப்பப்பட்டுள்ளன. இத் திட்டத்தின்கீழ் இதுவரை ரூபாய் 236.44 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1989-90-ஆம் ஆண்டில் ரூபாய் 28.72 லட்சம் ரூபாய் செலவில் 600 ஹெக்டர் தோட்டங்கள் எழுப்பும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1990-91-ஆம் வருடத்தில் ரூ. 28.72 லட்சம் செலவில் 400 எக்டர் நிலப் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகள் மற்றும் மண் வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளது.

3. பொன்னையாறு மண்வளப் பாதுகாப்புத் திட்டம் :

1987-88-ஆம் ஆண்டு முதல் இத் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. 1989-90-இல் வருடத்தில் ரூபாய் 40.33 லட்சம் செலவில் 400 ஹெக்டர் நிலப்பரப்பில் காடு வளர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1990-91-ஆம் வருடத்தில் ரூபாய் 0.02 லட்சம் செலவில் 400 ஹெக்டர் நிலப் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகள் மற்றும் மண் வளப் பாதுகாப்புப் பணிகளையும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

9. வறட்சி நிவாரணப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

வறட்சி நிவாரணப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மத்திய அரசு உதவி திட்டமாகும். இதற்கான செலவினத்தை மத்திய அரசும் மாநில அரசும் 50:50 விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. இவ் வேலைகள் வனத் துறையால் செய்யப்படுகிறது. ஆனால் இதற்குத் தேவையான ஒதுக்கீடு வேளாண்மைத் துறை அளிக்கிறது.

1990 மார்ச் 31]

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு :—

1. இயற்கை கடின நிலங்களைப் பாதுகாத்து, மேம்பாடு செய்வது, இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், அதன் மூலம் சுற்றுச் சூழலை நிலைப்படுத்துதல்.

2. பயிர்கள் மற்றும் கால்நடைகள் வறட்சியின் கடுமையைக் குறைப்பதற்கு ஒருங்கிணைந்த நிலநீர் மேம்பாட்டின் மூலம் உரிய தொழில் நுட்பத்தின் மூலமும் வழிவகுத்தல்.

3. மாநிலத் திட்டம் மற்றும் சிறப்பு திட்டங்கள் மூலமாகவும் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளை ஒருங்கிணைந்த திட்டமிட்ட நடவடிக்கைகள் மூலம் மேம்பாடு செய்வது.

வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் கீழ்க்கண்ட ஏழு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1. தர்மபுரி
2. சிதம்பரனார்
3. இராமநாதபுரம்
4. பசும்பொன் தேவர் திருமகன்
5. காமராஜர்
6. திருநெல்வேலி கட்டபொம்மன்
7. புதுக்கோட்டை

10. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

10.1 மத்திய அரசு நிதியுதவியுடன் நீலகிரி மாவட்டத்தில் இயற்கை சூழலை உயர்த்த இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் குறிக்கோள் நிலையான பசுமை சூழலை அதிகமாக்குவதுடன் அதனை சீர் செய்து இயற்கை வனச் சூழலில் மனிதனுடைய தலையீட்டினை தவிர்ப்பதும் வனத்தை பாதுகாத்தல் மற்றும் இயற்கை சூழ்நிலையை அதிகமாக்குவதுடன் மண் வளப்பாதுகாப்பு மற்றும் இதர முன்னேற்ற வேலைகள் மேற்கொள்வதாகும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 536.60 லட்சம் ஒதுக்கப்பட்டு முதல் நான்கு வருடங்களில் ரூ. 494.96 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எதிர்பார்க்கும் சாதனை ரூ. 688.76 லட்சமாகும். வேலை குறியீட்டு அளவான 1,170 ஹெக்டேருக்கு பதில் 3,469 ஹெக்டேர் பரப்பிற்கு இந்த திட்டத்தின்கீழ் செய்யப்படும்.

[1990 மார்ச் 31

10.2. காடு வளர்ப்பு தோட்டங்களில் செம்மரம் மற்றும் அதன் தொடர்புடைய மரங்கள் வளர்த்தல், மரஞ்சூழ்ந்த பசுமை காடுகளைத் தக்கவைத்தல் மற்றும் இயற்கை இனங்களுடன் சேர்ந்த அன்னிய மரவகைத் தோட்டங்கள் எழுப்புதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதியதாக நடப்பட்ட தோட்டங்களுக்கு தீவிர களப்பணி மேற்கொள்வது, மண் மற்றும் நீரினை பாதுகாக்க தடுப்பு அணை கட்டுதல் போன்றவை. சோலை மற்றும் ஆபத்திற்குள்ளான செடி வகைகளை இரும்பு சங்கிலி வேலிகள் அமைத்து பாதுகாத்தல் போன்ற பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெரிய பாலூட்டிகளுக்கு நீர்வசதி செய்யப்பட்டுள்ளது. வனத்தில் ஆக்கிரமிப்புகளை தடுக்க எல்லைக் கற்கள் கட்டப்படவுள்ளது. திருட்டுத்தனமாக மரம் கடத்துதல் மற்றும் வேட்டையாடுதல் போன்றவைகளிலிருந்து வனத்தை பாதுகாக்க மலைவாழ் மக்களை காவலராக நியமித்து செயல்படுத்தப்படுகிறது. வனச் செடிகள் உற்பத்தி செய்து பொது மக்களுக்கு அவர்களுடைய சொந்த பகுதியில் நடவு செய்ய விற்பனை செய்யப்படுகிறது. நகர்ப்புற பகுதிகளில் சுற்று சுவர்கள் எழுப்பி செடிகள் நட்டு வளர்க்கப்படுகிறது. பொது மக்களுக்கு வனத்தினை பாதுகாத்தலின் அவசியத்தினை உணர்த்த வனம் மற்றும் மலைப்பகுதியிடையே நடைப்பயணம் மேற்கொள்ள உற்சாகப்படுத்தப்பட்டு அதற்கென வசதிகளை ஏற்படுத்துதல், 1989-90-ல் 985 ஏக்கர் பரப்பில் ரூபாய் 188.92 லட்சத்தில் தோட்டப்பணி நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

10.3. 1990-91-ல் இத்திட்டத்தின்கீழ் 238.09 லட்சத்தில் 1,560 ஹெக்டேர் பரப்பில் தோட்டம் எழுப்பும் பணி மற்றும் இதர முன்னேற்றப் பணிகள் மேற்கொள்வதென உத்தேசிக்கப்பட்டுள்ளது.

11. மேற்கு மலைத்தொடரில் வன மேம்பாட்டுத் திட்டம்:

11.1. மத்திய அரசு நிதியுதவியுடன் இத்திட்டம் மேற்கு மலைத் தொடரில் ஒப்புதல் தரப்பட்டுள்ள தெற்கு மாவட்டங்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் இப்பகுதியை இயல்பியல்படி உயர்த்துவதும் மற்றும் மரபியல் மாறாவண்ணம் தகுந்த தோட்டங்களை பாதுகாத்தல் மண் வளம் மனித வாழ்விற்கு ஏற்ற வண்ணம் சுற்றுப்புற சூழ்நிலையினை சமப்படுத்தி மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதுடன் இயற்கை சூழலை பாதுகாத்து அதனை விருத்தி செய்து பசுமையானதொரு சூழலில் அனைத்து பகுதிகளை பாதுகாத்து நீர் உற்பத்தியை நிலைப்படுத்துவது போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 மார்ச் 31]

11.2. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முன்னேற்ற பணிகளுக்கு ரூபாய் 471.75 லட்சம் ஒதுக்கப்பட்டு முதல் 4 வருடங்களில் ரூபாய் 432.70 லட்சங்கள் செலவழிக்கப்பட்டுள்ளது. ஏழாவது திட்டத்தில் எதிர்நோக்கும் சாதனை ரூபாய் 617.42 லட்சமாகும். 5,715 ஹெக்டேர் செயலாக்க குறியீட்டில் 5,443 ஹெக்டேர் நடவு தோட்டமும், 250 கி.மீ. வரிசை நடவும் நிறைவு செய்யப்படலாம். அஃதில் 1989-90-இல் 1,805 ஹெக்டேர் நடவு தோட்டமும், 230 கி.மீ. வரிசை நடவு தோட்டமும் ரூபாய் 184.72 லட்ச செலவில் அடங்கும்.

11.3. 1990-91-ல் ரூபாய் 196.87 லட்சத்திற்கு திட்டங்கள் செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2,500 ஹெக்டர் பரப்பளவில் தோட்டம் எழுப்புதல் மண் வளப்பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளல் மற்றும் இதர முன்னேற்ற வேலைகளும் அடங்கும்.

12. புதிய இருபது அம்ச திட்டம்—மரம் வளர்ப்பு:

தமிழக அரசு வனத்துறை கிராமப்புற ஏழை மக்களையும், நலிந்த பிரிவினரையும் மேம்படுத்துவதற்காக புதிய இருபது அம்ச திட்டத்தை தீவிரமாக செயல்படுத்தி வருகிறது.

புதிய 20 அம்ச திட்டத்தின் இனம் 16-ன்படி பொது மக்களின் முழுமையான ஈடுபாட்டுடன் அதிக அளவில் மரங்கள் வளர்ப்பதும், வன வளத்தைப் பெருக்குவதும், முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். மலைசாதி மற்றும் பழங்குடியினரின் பாரம்பரிய உரிமைகள் காக்கப்படவும், கிராமப்புற மற்றும் உள்ளூர் மக்களுக்கு எரிபொருள் காடுபடு பொருட்கள் எளிதில் கிடைப்பதற்கு ஏதுவாகவும் மலைக்குன்றுகள், தரிசு நிலம் மற்றும் கடலோரப் பகுதிகளில் பொருத்தமான பசுமை மரங்களை வளர்த்து அவற்றை விளை நிலங்களாக்குவதும் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம் 1981-82 ஆம் ஆண்டிலிருந்து 1988-89 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டு பின் வரும் அளவில் மரம் நடும் வேலைகள் செய்து முடிக்கப்பட்டு உள்ளன.

இன விவரம்.	1981-82 முதல் 1988-89 வரை.
(1)	(2)
1. காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் நடப்பட்ட மரக்கன்றுகள் (எண்ணிக்கை இலட்சத்தில்) ..	10,719.84
2. சமூகக் காடுகள் வளர்ப்பு (நடப்பட்ட பரப்பு ஹெக்டரில்) ..	2,76,945.00
3. வனப்பண்ணை திட்டத்தின் கீழ் பொது மக்கள்/நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்ட மரக்கன்றுகள் (இலட்சத்தில்) ..	2,583.86

1989-90 ஆம் ஆண்டுக்கு அரசினால் நிர்ணயிக்கப்பட்ட குறியீடும் 1990 ஜனவரி மாதம் வரை எட்டப்பட்ட இலக்கின் விபரமும் கீழ்க்கண்டவாறு :—

விபரம்.	அலகு.	1989-90 குறியீடு	எட்டப்பட்ட இலக்கு.
(1)	(2)	(3)	(4)
1. நடப்பட வேண்டிய மரக்கன்றுகள்.	இலட்சம்	850.00	810.02 (ஜனவரி 90 வரை).
2. நடப்பட வேண்டிய பரப்பின் அளவு.	(ஆயிரம் ஹெக்டர்)	37,000 ஹெக்.	35,502 ஹெக். (ஜனவரி 90 வரை).

13. வனக் கழகங்கள்

13.1. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், திருச்சி.

13.1.1. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் 13—6—1974 அன்று துவக்கப்பட்டது. இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் 73,232.606 ஹெக்டேர் வனப் பகுதி, குத்தகை அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனுடைய அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் இரண்டு கோடியாகும். இதுவரை ரூபாய் 72.06 இலட்சங்கள் தமிழக அரசால் இதற்கு மூலதனம் செலுத்தப்பட்டுள்ளது.

13.1.2. 1988-89 வரை இக்கழகம் கீழ்க்கண்ட தோட்டங்களை எழுப்பியுள்ளது:—

இனங்கள்.	நிலப்பரப்பு (ஹெக்டேரில்).
(1)	(2)
யூகலிப்டஸ் கமால்டுலென்சிஸ்	3,915.20
முந்திரி	24.38
சவுக்குத் தோட்டங்கள்	208.10
பலவகை தோட்டங்கள்	1,034.99
தீவிர பண்படுத்தும் பணி	6,172.43

1990 மார்ச் 31]

13.1.3. 1989-90-ல் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு விவரங்கள்:—

இனங்கள்.	பரப்பளவு (ஹெக்டேரில்).
(1)	(2)
யூகலிப்டஸ் கமால்டு லென்சிஸ்	2,322
முந்திரி	457
சவுக்குத் தோட்டங்கள்	280
பலவகை தோட்டங்கள்	200
தீவிர பண்படுத்தும் பணி	5,465

13.1.4. இக்கழகத்தின் சட்டுப்பாட்டில் உள்ள நிலப் பகுதிகளின் மண் வகைகள், மழையளவு மற்றும் இது சம்பந்தப் பட்ட முன் அனுபவங்கள் முதலானவற்றை நன்கு ஆய்வு செய்த தன் அடிப்படையில் வனத் தோட்டக் கழகத்திலிருந்து அதிக பட்ச பயனைப் பெறத்தக்க வகையில் குறிப்பிடத்தக்க தாவர வளர்ப்புக்கு ஆவன செய்யப்பட்டுள்ளது. இக்கழகத்தின் செயல் பாடுகள் கீழ்க்கண்டவாறு திட்டமிடப்பட்டுள்ளது:—

இனங்கள்.	நிலப்பரப்பு (ஹெக்டேரில்).
(1)	(2)
(அ) முந்திரித் தோட்டங்கள் வளர்த்தல் மற்றும் பராமரிப்பு.	15,000.00
(ஆ) யூகலிப்ட்ஸ் கமால்டு லென்சிஸ் (கூழ்மரம்) தோட்டங்கள் வளர்த்தல் மற்றும் பராமரிப்பு.	40,000.00
(இ) அக்கேசியா ஹோலோசெரியா (விறகு மரம்) தோட்டங்கள் வளர்த்தல் மற்றும் பராமரிப்பு.	12,000.00
(ஈ) இதர பலவகை இனங்கள்	6,000.00

13.1.5, நிதி சேகரம் ;

(1) இக்கழகம் இதுவரை 4,147 ஹெக்டேர் நிலப் பரப்பில் கற்பூரத் தோட்டங்கள் பயிரிட தேனா வங்கியிலிருந்து ரூ. 120 லட்சமும், 2,754.47 ஹெக்டேர் நிலப் பரப்பில் கற்பூரத்

தோட்டங்கள் பயிரிட மற்றும் பராமரிக்க கனரா வங்கியிலிருந்து ரூ. 60 லட்சமும் கடன் பெற்றுள்ளது. மேலும் காரைக்குடி மற்றும் புதுக்கோட்டை பகுதிகளில் 5,000 ஹெக்டேர் பரப்பில் முந்திரி உற்பத்தித் திறனை தற்போதைய ஹெக்டேருக்கு முறையே 70 கிலோ/500 கிலோ கிராமிலிருந்து உயர்த்த ரூ. 322 லட்சம் கடன் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான கடனுதவியினை இந்தியன் வங்கி அளிக்க முன்வந்துள்ளது. இத்திட்டம் பயன் தரத்தக்கதா மற்றும் லாபகரமானதா என்பதனை முழுவதும் ஆராய்ந்து பார்த்தபின் இவ்வங்கி இத்திட்டத்திற்கு அரசின் உத்தரவாதமின்றியே நிதியுதவி செய்ய முன் வந்துள்ளது. இதே போன்று வேறு இரு முந்திரி பயிரிடும் திட்டங்களை விருத்தாசலம் மண்டலத்தில் செயல்படுத்துவது குறித்து வங்கியின் பரிசீலனையில் உள்ளது.

(2) தேனா வங்கி மற்றும் கனரா வங்கியின் கடனுதவியுடன் மொத்தம் 6,796.41 ஹெக்டேரில் கற்பூரத் தோட்டங்கள் பயிரிடும் இரு திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அக்கேசியா ஹொலோசெரியா தோட்டங்களை 6,000 ஹெக்டேர் நிலப் பரப்பில் பயிரிடும் ரூ. 373.82 லட்சம் செலவில் இரு திட்டங்களுக்கு கனரா வங்கி கடனுதவி செய்ய கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளது.

(3) தமிழ்நாடு வனத்துறை, செங்கை-அண்ணா மாவட்டத்திலிருந்து மேலும் 2,000 ஹெக்டேர் நிலத்தை மத்திய தேசிய தரிசு நில மேம்பாட்டுக் குழுவின் உதவியுடன் அக்கேசியா ஹோலிசெரிசியா பயிரிடுவதற்காக அரசாணை பிறப்பித்து இதுகுறித்து மேல் நடவடிக்கை தொடரப்படுகின்றது. இத்திட்டம் சென்னை மாநகரின் விறகு தேவையினை கருத்திற் கொண்டு தயாரிக்கப் பட்டுள்ளது.

மேலும் இவ்வனத் தோட்டக் கழக நிர்வாகம் பல்வேறு வங்கிகளிலிருந்து ரூ. 20 கோடி வரை கடன் வாங்க இக்கழகத்தின் நிர்வாக இயக்குநருக்கு ஒப்புதல் வழங்க ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

13.1.6. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகள் :

(i) இவ்வனத் தோட்டக் கழகம் வனத் துறையின் நிலப் பரப்பிலிருந்து தமது மேம்பட்ட வளர்ச்சிக்காக இதுவரை கீழ்க்கண்ட பல்வேறு வழிகளைக் கையாண்டு வருகிறது.—

(அ) அடர்த்தியான தோட்டங்களைப் பெருக்குதல், மேலும்,

1990 மார்ச் 13]

(ஆ) மரபியல் வழியில் தோட்டங்களை மேம்படுத்துதல், மேலும் இக்கழகம் CMT (மூலம்) முந்திரி மற்றும் யூகலிப்டஸ் கமால்டுவென்சிஸ் தோட்டங்களை மிகுந்த அளவில் பயிரிடும் முறையில் மிகுந்த முன்னேற்றம் மற்றும் வெற்றியும் கண்டுள்ளது.

(ii) நபார்ட் மற்றும் நேஷனல் கெமிக்கல் லேபரட்டரி, பூனா ஆகியவற்றுடன் மேற்படி ரசாயன தொழிற்கூடத்தின் (என்.சி.எல்.) மேன்மையான தொழில் நுட்பவியலை பயன்படுத்தி தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் ''மண்டல டிஷ்யூ கல்சுரல் சோதனைக் கூடம்'' ஒன்றினை வனத் தோட்டக் கழகத்தின் நிர்வாகத்தின்கீழ் தொடங்குவது குறித்து ஒரு ஒப்பந்தமும் செய்யப்பட்டுள்ளது.

13.1.7. நிர்வாகம் :

(1) தற்போது இக்கழகம் திருச்சிராப்பள்ளியில் தலைமை அலுவலகத்தினையும் வேறு நான்கு இடங்களில் மண்டல அலுவலகங்களையும் கொண்டு இயங்கி வருகின்றது. மதுரையில் ஒரு அரக்கு உற்பத்தி தொழிற்சாலையும், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் தெக்குப்பட்டு என்ற இடத்தில் சந்தனப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையும் உள்ளது.

(2) வனத் தோட்டக் கழகத்தின் திட்டப்படி இன்னமும் 5 மண்டல அலுவலகங்களை அதற்கான களப் பணியாளர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களுடன் தொடங்க வேண்டும். மேலும் இக்கழகத்தில் கம்ப்யூட்டர் முறையினை பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டு அதன்படி ஒரு PC/XT with ET & T (பிசி/எக்ஸ்டி மற்றும் ஈடி அண்டு டி) வாங்க முயற்சி எடுத்து 1989-90 நிதியாண்டின் முடிவிற்குள் அந்த கம்ப்யூட்டர் விநியோகம் செய்யப்பட உள்ளது.

(3) மேலும் இக்கழகம் தமது தேவைக்கு கட்டிடங்கள் கட்டவும் தீர்மானித்துள்ளது. இதன் அடிப்படையில் இக்கழகத்தின் நிர்வாகக் குழு தற்போது திருச்சியில் நிர்வாக இயக்குநர் அலுவலகம் கட்டிட ரூ. 10 இலட்சம் அனுமதித்துள்ளது. இக்கட்டிடம் 1991-க்குள் கட்டி முடிக்கப்படவுள்ளது.

[1990 மார்ச் 31

13.1.8. 1988-89ஆம் வருடத்திய வருவாய்களின் வரவு-செலவு மற்றும் 1989-90ன் நிதிநிலை விபரங்கள் கீழ்க்கண்டவாறு தரப்படுகின்றன:—

வரவு.	1988–89 சரியானபடி.	1989–90 பட்ஜெட்.	1990–91 உத்தேசம்.
(1)	(2)	(3)	(4)
		(இலட்சத்தில்)	
விற்பனை—			
முந்திரி	62.47	150.00	153.00
கூழ்மரம்	148.61	150.00	300.00
மற்ற வனவினைப் பொருட்கள்.	32.18	17.45	40.00
தொழிற்சாலை பொருட்கள்.	76.27	52.00	..
மொத்தம் ..	319.53	369.45	493.00
கழி—			
நிலுவையிலுள்ள வித்தியாசங்கள் சரி செய்தல்.	36.92	..	..
	282.61	369.45	493.00
கூட்டு—			
இதர வருவாய் ...	13.53	10.53	20.00
(ஏ) ...	296.14	379.98	513.00
செலவினங்கள்—			
பணப்பிரிவு செலவுகள்	69.56	89.92	102.00
தொழிற்சாலைக்கு மின் சாரம் மற்றும் உபரி பொருட்கள்.	29.27	40.92	...

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 மார்ச் 31]

(1)	(2)	(3)	(4)
தோட்டப்பணி செலவுகள்	78.82	56.63	238.00
பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல்	5.50	0.90	5.00
தேய்மானம் ..	1.30	1.75	2.00
வட்டி	13.53	26.50	23.00
இதர செலவினங்கள்	19.31	30.29	19.00
(பி) ..	217.29	246.91	389.00
குத்தகைத் தொகைக்கு முன்னர் லாபம் (எ—பி)	78.85	133.07	124.00
குத்தகை தொகை ...	104.16	111.58	110.00
குத்தகை தொகைக்கு பின்னர் நிலையான லாபம் (+) அல்லது நட்டம் (—).	(—) 25.31	(+)21.49	(+)14.00

13.1.9. 1990-91 ஆம் ஆண்டிற்கான பிரேரணை :

1990-91 ஆம் வருடத்தில் வனத் தோட்டம் எழுப்புதல் மற்றும் பராமரித்தலுக்கான செலவு வங்கியில் தயாரித்து அளித்த படி ரூ. 289 இலட்சம் எனவும் அதற்கான பகுதி வாரியான செலவின விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

	(ரூபாய் லட்சத்தில்)
1. முந்திரி	94.00
2. நீலகிரி தைலம்	100.00
3. அக்கேசியா ஹொலோசெரிசென் ...	95.00
மொத்தம் ...	289.00

13.2. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் வளர்ச்சிப் பணிகள்:

13.2.1. இந்தியா மற்றும் இலங்கை நாடுகளுக்கிடையே உருவான சாஸ்திரி சிரிமாவோ ஒப்பந்தத்தை அடுத்து இந்தியாவில் குடியேறிய இந்திய வம்சா வழியினரின் மறுவாழ்வுக்காக தமிழக அரசு செயல்படுத்திய பல திட்டங்களில் நீலகிரி மாவட்டத் தேயிலைத் தோட்டங்கள் உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்றாகும். இத்திட்டம் 1968-ல் ஆரம்பித்து 31—3—1976 வரை வனத் துறையால் செயற்படுத்தப்பட்டது. 1—4—1976 முதல் இது ஒரு கழகமாக மாற்றப்பட்டு 2,328 குடும்பத்தினர் இக்கழகத்தில் தொழிலாளர்களாக அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

13.2.2. 2,760.20 எக்டேர் பரப்பு கொண்ட தேயிலைத் தோட்டங்களை இக்கழகம் பராமரித்து வருகிறது. சேரங்கோடு, சேரம்பாடி, கூனூர் மற்றும் பாண்டியார் ஆகிய நான்கு தேயிலைத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. தேயிலை உற்பத்தியும் ஏலத்தில் ஈட்டப்பட்ட வருவாய் விவரமும் :—

வருடம்.	அறுவடை செய்யப் பட்ட பசுமை தேயிலை (கிலோ லட்சத்தில்).	உற்பத்திச் செய்யப் பட்ட பதனிட்ட தேயிலை	பெறப் பட்ட தொகை. (ரூபாய் லட்சத் தில்).	விலை கிலோவிற்கு ஆர்த்த டாக்ஸ் ரூ.	விலை கிலோவிற்கு சி.டி.சி. ரூ.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1989–90 (டிசம்பர் 1989 வரை).	214.22	49.27	1611.80	40.00	40.00

13.2.3. வரிசைப்படுத்தப்பட்ட ஏல மையங்கள்:

1989-90 ஆம் ஆண்டில் நமது கழக தேயிலை ஏல விற்பனையில் முதலிடத்தை எட்டியுள்ளது. 1–4–1989 முதல் 31–12–1989 வரையிலான காலத்தில் கொச்சி ஏலத்தில் சி.டி.சி. தேயிலைதர நிர்ணயம் செய்யப்பட்டு விற்கப்பட்ட விபரம் பின்வருமாறு:—

	தர நிர்ணயம். 1989	தர நிர்ணயம் 1988
(1) பாண்டியார் தேயிலைத் தொழிற்சாலை.	13	34

1990 மார்ச் 31]

	தர நிர்ணயம் 1989.	தர நிர்ணயம் 1988.
(2) சேரம்பாடி தேயிலைத் தொழிற் சாலை.	25	55
(3) சேரங்கோடு தேயிலைத் தொழிற் சாலை.	29	52

முதல் 50 தேயிலை பண்ணைகளிலிருந்து நமது கழகத் தேயிலை வரிசைப்படுத்தி கணக்கிடப்பட்டுள்ளது.

டைகர் ஹில் தேயிலை (ஆர்தெடக்ஸ்) சமீபத்திய ஏல மையத்தில் அதிக விலை பெற்ற விவரங்கள் பின்வருமாறு :—

விற்பனை எண்.	தேதி.	ஏல மையம்.	தர வரிசை.	விலை. ரூ. பை.	குறிப்புரை.
1.	2—1—1990	கொச்சி	பானிங்ஸ்	41.10	ஏலத்தில் முதல் விலை.
2.	9—1—1990	கொச்சி	பாப் சுப்ரிம்	50.20	ஷ
3.	16—1—1990	கொச்சி	பானிங்ஸ்	43.60	ஷ
4.	23—1—1990	கொச்சி	பாப் சுப்ரீம்	53.30	ஷ

பாப் சுப்ரீம்தான் அதிக விலைக்கு போய்க்கொண்டுள்ளது என்றும், ஏல விற்பனையில் முதல் இடத்தில் உள்ளது என்பதும் அட்டவணையிலிருந்து தெரிகிறது. கூனூர் மற்றும் கோத்தகிரி மண்டலங்களில் உள்ள கோளான் சி.ஆர். 6017 என்ற தேயிலைச் செடியில் இருந்து மேற்படி பாப் சுப்ரீம் தயாரிக்கப்படுகிறது.

கூனூரில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவு அக்டோபர் 1989 முதல் இக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தோட்டங்களின் தரத்தையும் முன்னேற்றத்தையும் பரிசோதிக்கும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளது.

13.2.4. உற்பத்தி பெருக்கம்:

(1) உற்பத்தி பெருக்கத்திற்காக மண்வளத்தைப் பெருக்கி மண்வளப் பணிகளை மேற்கொண்டு நீர்ப்பாசன வசதிகளின் மூலம் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

[1990 மார்ச் 31

இத்திட்டத்தின்கீழ், 285 எக்டேர் பரப்பில் நீர்த்தெளிக்கும் பாசன முறையை கடைப்பிடிக்கவும், 693 எக்டேர் பரப்பில் மண்வளப் பணிகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(2) புதிய தொழிற்சாலைகள்:

பசுமை தேயிலை இலைகள் பத்தாண்டுக்குள் 26.330 மி. கிலோகிராமிலிருந்து 42.132 மி. கிலோகிராமாக உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே அடுத்த 10 ஆண்டுக்குள் மேலும் 4 தொழிற்சாலைகள் ரூ. 1085 லட்சம் செலவில் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. 1989–90-ம் ஆண்டில் இரண்டு தொழிற்சாலைகள் கட்டப்படவுள்ளன. ஒன்று ஆர்த்தடாக்ஸ் வகையில் உற்பத்தி செய்யவும் மற்றொன்று சி.டி.சி. வகையில் உற்பத்தி செய்யவும் கட்டப்படவுள்ளது.

	கொள்ளளவு.	தொகை.
கோத்தகிரி தேயிலைத் தொழிற்சாலை (ஆர்த்தடாக்ஸ்).	ஆண்டுக்கு 0.75 மி.கி.கி. தயாரிக்கப்பட்ட தேயிலை.	ரூ. 160 லட்சம்.
நெல்லியாளம் தேயிலை தொழிற்சாலை (சி.டி.சி.).	ஆண்டுக்கு .150 மி.கி.கி. தயாரிக்கப்பட்ட தேயிலை.	ரூ. 2.75 லட்சம்.

ஏறக்குறைய 4,000 தொழிற்சாலை வேலையாட்களுக்கும் 1,000 தோட்ட வேலையாட்களுக்கும், 4,000 பருவகால தோட்ட வேலையாட்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்க ஏதுவாகும்.

(3) 1990-91–ம் ஆண்டு திட்டம்:

பகுதி-1 திட்டத்தின்கீழ் தற்போதுள்ள தோட்டங்களை முழுமையாக பயன்படுத்தும் நோக்குடன் 1,000 எக்டேர் பரப்பளவில், ஊடு பயிராக நான்காண்டு காலத்தில் ரூ. 100.23 இலட்சம் செலவில் மிளகு உற்பத்தி செய்ய 1988–89-ம் ஆண்டு முதல் இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 300 எக்டேர் பரப்பளவில், 1988–89-ல் 100 எக்டரும், 1989–90–ல் 200 எக்டரும் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும் 1990–91-ம் ஆண்டில் 350 எக்டரில் பயிர் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி தேசிய வங்கியின் மூலம் இத்திட்டம் பொருளாதார ரீதியில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

1990-மார்ச் 31]

(2) தேயிலை இலை, தயாரிக்கப்பட்ட தேயிலை, அதனால் கிடைக்கப்பெற்ற வருவாய் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

(அ) தேயிலை இலையின் மகசூல் ..	2,94,50,000	கி.கி.
(ஆ) தயாரிக்கப்பட்ட தேயிலை—		
ஆர்த்தடாக்ஸ்	10.00	லட்சம் கி.கி.
சி.டி.சி.	55.00	லட்சம் கி.கி.
	65.00	லட்சம் கி.கி.
(இ) விற்பனை	ரூ. 2176.99	லட்சம்

13.2.5. தொழிலாளர் நலம்:

(1) இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 2,338 பேருக்கு கழகம் நிரந்தரமாக வேலை வாய்ப்பு வழங்கியுள்ளது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு நபர்கட்கு வேலை அளித்துள்ளது. இது தவிர, அவர்களின் குடும்ப வாரிசுகளுக்கு இக் கழகம் தற்காலிக வேலைவாய்ப்பு வழங்குகிறது. (ஏறக்குறைய 2,000 தொழிலாளர்கள்) கொலப்பள்ளி தேயிலைத் தோட்டத்தில் 485 வேலையாட்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதில் உள்ளூர் மற்றும் மலைவாசிகளும் அடக்கம்.

(2) தொழிலாளர்களின் நலம் கருதி ஈட்டுத் தொகை, மருத்துவம், மகப்பேறு வசதி, மித வெப்ப ஆடை, கல்வி, பயிற்சி, குடும்பக் கட்டுப்பாடு முதலிய வசதிகள் தரப்பட்டுள்ளன.

1989–90-ம் ஆண்டில் டிசம்பர் 1989 வரை ரூ. 33.33 லட்சம் நலப் பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

(3) தோட்ட மருத்துவ மனை:

இரண்டு மருத்துவமனைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள, ரூ. 130 லட்சம் செலவில் சேரம்பாடியில் ஒன்றும் மற்றொன்று கோத்தகிரியிலும் கட்டப்படவுள்ளது. கட்டிடம் கட்டப்படவுள்ள இடம் தயாராக உள்ளன. சேரம்பாடியில் உள்ள மருத்துவ மனையில் 4,000 வேலையாட்களுக்கு மருத்துவ தேவைகளும் உள் நோயாளிகளுக்கான 75 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை நீலகிரி-வயனாடு பகுதியிலும் கட்டப்படவுள்ளது. கோத்தகிரியில் உள் நோயாளிகளுக்கான மருத்துவ மனையும், கட்டப்படவுள்ளது. அது கூனூர், கோத்தகிரி, தோட்டங்களிலும்

டைகர் ஹில் தேயிலைத் தொழிற்சாலைகளிலும் உள்ள தொழிலாளர்களுக்கான மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்யப் பயன்படும்.

(4) அலுவலகக் கட்டிடம்:

கூனூரில் (எஸ்ஸெக்ஸ் லாட்ஜ்) இருக்கிற அலுவலகக் கட்டிடம் அருகில் ரூ. 10 லட்சம் மதிப்பில் புதிய அலுவலகக் கட்டிடம் கட்டப்படவுள்ளது. கட்டிடப் பணிகள் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன. இதுவரை அஸ்திவார நிலையில் ரூ. 6.65 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இவ்வருடம், அக்டோபர் 1990-க்கு முன்னால் இக்கட்டிடம் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

13.3 அரசு ரப்பர் தோட்டக் கழகம், நாகர்கோவில்:

13.3.1. ரப்பர் மக்களின் அன்றாட வாழ்க்கை உபயோகத்திற்கும் பல்வேறுபட்ட தொழிற்சாலைகள் மற்றும் விஞ்ஞான ரீதியான நுட்பமான தொழில்களுக்கும் உபயோகப்படக்கூடிய இன்றியமையாப் பொருளாக உள்ளது. இன்று வருவாய் தரக்கூடிய தாவர பொருள் உற்பத்தியில் ரப்பரும் ஒன்றாகும். 1960 முதல் 1979–80 வரை கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களின்கீழ் 4,785.7 எக்டர் பரப்பளவில் ரப்பர் பயிரிடப்பட்டு வந்துள்ளது. அரசு ரப்பர் தோட்டம் 30-9-1984 வரை தமிழக அரசு வனத்துறையின் கீழ் இயங்கி வந்த இத்தோட்டங்கள் 20–8–1984 அன்றைய தேதியில் 1956-ம் வருட கம்பெனிகள் சட்டத்தின்கீழ் தனிக் கழகமாக பதிவு செய்யப்பட்டு 1–10–1984 முதல் இயங்கி வருகிறது.

13.3.2. ரப்பர் பால் மற்றும் உலர்ந்த ரப்பர் பால் கழிவு முதலானவை ரப்பர் தோட்டக் கோட்டங்கள் மூலம் சேகரிக்கப்பட்டு கீரிப்பாறை மற்றும் பெருஞ்சாணியில் அமைந்துள்ள ரப்பர் தொழிற்சாலைகளுக்கு பதப்படுத்துவதற்காக அனுப்பி வைக்கப்படுகிறது. ரப்பர் மரங்களிலிருந்து பால்வடிக்கும் பணி ஞாயிறு மற்றும் அரசால் அறிவிப்பு செய்யப்பட்ட விடுமுறை தினங்களைத் தவிர அனைத்து நாட்களிலும் நடைபெறுகிறது.

பெருஞ்சானி ரப்பர் தொழிற்சாலையில் விரிப்பு ரப்பர் (Rubber Sheet) மட்டுமே தயாரிக்கப்படுகிறது. கீரிப்பாறை ரப்பர் தொழிற்சாலையில் பதப்படுத்தப்பட்ட ரப்பர் பால், ரப்பர் சீட் மற்றும் இ.பி.சி. கிரேடு மற்றும் இதர ரப்பர் பொருட்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. கீரிப்பாறை ரப்பர் தொழிற்சாலையில் ரப்பர் பாலை பதப்படுத்துவதற்காக நான்கு ரப்பர் பால் பதப்படுத்தும் இயந்திரங்கள் பொறுத்தப்பட்டுள்ளன. இதற்கான இயந்திரங்கள் ரூ. 26.78 லட்சம் செலவில் சுவீடன் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. மைலார் கோட்டத்தில் ரப்பர் பால் பதனிடும் தொழிற்சாலை

1990 மார்ச் 31]

ரூ. 62.5 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் கழிவு நீரினால் சுற்றுப்புற சூழல் மாசு அடையாமல் இருக்க மேற்படி கழிவு நீரை சுத்திகரித்து வெளியில் அனுப்பிட (Effluant Treatment Plant) ஒன்றினை நிறுவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து ஏற்புச் சான்றிதழ் பெற்றபின் இத்தொழிற்சாலை இயக்கத்தை ஆரம்பிக்கும்.

13.3.3. உற்பத்தி:

1989—90 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 3,100 டன்னில் டிசம்பர் 1989 முடிய 2,467 டன் உலர்ந்த ரப்பர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

உலர்ந்த ரப்பரின் மொத்த உற்பத்தி மற்றும் விற்பனை விவரம் வருட வாரியாக கீழே தரப்பட்டுள்ளது :—

வருடம்.	உற்பத்தி.	விற்பனை.	விலை மதிப்பு.
(1)	(2)	(3)	(4)
	(டன்னில்)	(டன்னில்)	(ரூபாய் லட்சத்தில்)
1986—87 ..	2,359	2,380	401.47
1987—88 ..	2,678	3,022	601.18
1988—89 ..	3,160	3,500	767.77
1989—90 (திருத்திய மதிப்பீடு).	3,100	3,300	780.26
1990–91 (நிதி இலக்கு).	3,350	3,350	857.32

3.3.4. வருவாய்:

1989—90ஆம் ஆண்டில் ரப்பர் பொருட்கள் விற்பனையில் எதிர்பார்க்கப்பட்ட வருவாயானது ரூ. 780 லட்சத்தில் 31–12–89 முடிய ரூ. 600.00 லட்சம் வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளது அவை கீழ்க்கண்டவாறு :—

ரப்பர் பொருட்கள்.	டன்.	மதிப்பு.
(1)	(2)	(3)
	(உலர்ந்த எடை)	(ரூபாய் லட்சத்தில்)
(1) ஆர்.எம்.ஏ.தரம்	906.300	212.00
(2) இ.பி.சி.	517.100	100.64
(3) பதப்படுத்தப்பட்ட பால்	894.460	273.04
(4) ஸ்கிம் கிரிப்	86.160	13.72
(5) மற்றவை	23.470	1.20
	2,427.490	600.60

[1990 மார்ச் 31

ரப்பர் விற்பனையில் கிடைத்த வருவாயுடன் 1989–90 ஆம் ஆண்டில் பல இன வருவாயில் கிடைக்கும் ரூ. 16.05 லட்சமும் சேர்த்து நடப்பாண்டின் மொத்த வருவாய் ரூ. 796 லட்சமாக இருக்கும்.

ரப்பர் விற்பனையின்போது அரசால் வரையறுக்கப்பட்ட வியாபார கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

13.3.5. தேய்மானக் கழிவு மற்றும் மறுவாழ்வுப்படி இவைகளுக்கான செலவுத் தொகை நீங்கலாக, ஆனால் வரிவிதிப்பிற்கு முன் மற்றும் கடந்த நிதியாண்டில் செய்த செலவுகள் சிலவற்றை சரி செய்த பின்னரும் வந்த லாப நஷ்ட விபரம் கீழ்க்கண்டவாறு:—

வருடம்.	ரப்பர் விற்பனையின் மூலம் வருவாய்.	செலவினம்.	நிகர லாபம்.
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்.)	
1984–85 (6 மாதங்களுக்கு)	299.20	288.43	(+) 1.77
1985–86 ..	483.33	480.78	(+) 2.55
1986–87 ..	412.30	473.88	(—) 61.58
1987–88 ..	619.50	566.08	(+) 53.42
1988–89 .. (தோராயம்)	775.62	730.18	(+) 45.44
1989–90 (திருத்திய மதிப்பீடு)	796.81	770.92	(+) 25.89
1990–91 (திட்ட இலக்கு)	873.72	780.50	(+) 93.22

13.3.6. தொழிலாளர் நல நடவடிக்கைகள்,

(1) ரப்பர் தோட்டக் கழகம், தொழிற்சாலை பணியாளர்கள், பால்வடிக்கும் தொழிலாளர்கள் மற்றும் களப் பணியாளர்கள் என மொத்தம் 2,482 பணியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். மேற்படி தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, சம்பளத்துடன் கூடிய விடுப்பு, மருத்துவ வசதிகள், பேறுகாலப்படி, பொழுதுபோக்கு வசதி, குழந்தைகள் காப்பகம், குழந்தை

1990 மார்ச் 31]

களுக்கான ஆரம்ப கல்வி வசதி, குடிநீர் வசதி செய்து கொடுத்தல் மற்றும் சத்துணவு போன்ற பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளன.

(2) சித்தார் மற்றும் குத்தியார் கோட்டங்களில் இலங்கை யிலிருந்து குடி பெயர்ந்த இந்திய வம்சாவளியினர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக ரப்பர் தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. அனைத்து அகதி பணியாளர்களுக்கும் தோட்டங் களின் நடுவிலேயே குடியிருப்பு வசதி செய்து தரப்பட்டுள்ளது. இதன்படி 285 குடும்பங்களுக்கு வாழ்வளிக்கப்பட்டுள்ளது.

(3) 1989–99 ஆம் ஆண்டில் தொழிலாளர் நலப்பணிகளுக் காக ரூ. 95.96 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 31–12–1989 வரை ரூ. 45.33 லட்சம் செலவு செய்யப்பட் டுள்ளது. ரூ. 78.9 லட்சம் 1990–91 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகளுக்காக செலவு செய்யப்பட்டுள்ளது :—

இனம்.	31-12–89 வரை ஏற்பட்ட செலவினம்.	1990–91 ஆம் ஆண்டு செலவு செய்ய உத் தேசிக்கப் பட்டுள்ள தொகை.
(1)	(2)	(3)
	(ரூபாய் லட்சத்தில்)	
(1) போனஸ்	19.84	26.88
(2) தொழிலாளர்கள் வசதிகள்	12.14	29.15
(3) மருத்துவமனை, பள்ளி, குழந்தைகள் காப்பகம் மற்றும் பொழுதுபோக்கு கூடம் இவைகள் பராமரிப்புக்கு.	1.55	2.84
(4) ஊழியர் சேம நல நிதி ..	11.80	20.08
மொத்தம்..	45.33	78.95

14. கோவை தென் பிராந்திய வனச்சரகக் கல்லூரியை தமிழ்நாடு அரசாங்கம் ஏற்று நடத்துதல் :

கோவை தென் பிராந்திய வனச்சரகக் கல்லூரியானது 1912 முதல் 1948 வரை மாநில அரசின் கீழ் இயங்கி வந்தது. அதன் பிறகு இந்த கல்லூரியை மத்திய அரசு ஏற்றுநடத்த தீர்மானித்தது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அதன்படி 1952-ல் மாநில அரசானது அக்கல்லூரியை சேர்ந்த நிலம், கட்டிடங்கள் மற்றும் இதர தளவாடங்களை 99 வருட குத்தகையின் அடிப்படையில் மத்திய அரசுக்குக் கொடுக்க சம்மதித்து அதன் அடிப்படையில் இக்கல்லூரியானது இதுவரையில் மத்திய அரசால் நடத்தப்பட்டு வந்தது. வனச்சரகர்களுக்கு பயிற்சி அளிப்பதை மாநில அரசுகளிடையே விட்டு விடவேண்டுமென்ற கொள்கையை 1986-ல் மைய அரசு எடுத்து அதன்படி 31-12-1987 முதல் இக் கல்லூரியை மத்திய அரசு மூடிவிட்டது. இந்திய வனப்பணி மற்றும் மாநில வனப்பணி அலுவலர்களுக்குரிய பயிற்சியைத் தொடர்ந்து மத்திய அரசே அளித்து வரும் என்ற முடிவை 1987-ல் இக் கல்லூரியை மூடுவதற்கு முன்னர் மத்திய அரசு தெரிவித்தது. மேற்கண்ட மத்திய அரசின் கொள்கையின்படி கோவை தென் பிராந்திய வனச்சரக கல்லூரி தமிழக அரசால் எடுக்கப்பட்டு முன்பு இயங்கி வந்த அதே இடத்தில் தமிழ்நாடு அரசு வனத்துறையால் இக்கல்லூரியானது நடத்தப்பட்டு வரும் என்ற உத்திரவை அரசு வெளியிட்டுள்ளது. அரசு உத்திரவுப்படி இக்கல்லூரி 1990 பிப்ரவரி முதல் வனத்துறையின்கீழ் இயங்கி வருகிறது.

15. சட்ட வடிவமைப்பு :

15.1. இந்த மாநில அரசு வனங்களைப் பாதுகாக்கவும், மேலாண்மை செய்யவும் கீழ்க்கண்ட சட்டங்களை நிறைவேற்றி யுள்ளது :—

(1) தமிழ்நாடு வனச் சட்டம், 1882.

(2) தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949.

(3) தமிழ்நாடு மலைப் பகுதிகள் (மரங்கள் பாதுகாப்பு) சட்டம், 1955.

15.2. 1979 ஆம் ஆண்டில் சில விலை உயர்ந்த மர இனங்களை சில நோக்கங்களைக் கருத்தில் கொண்டு அட்டவணைப் படுத்தப்பட்ட மரங்களாக அறிவிக்கை செய்து தமிழக அரசு சட்டம் எண் 45/79 என்ற சட்டத்தை உருவாக்கியது. தமிழ்நாட்டின் வனங்களிலிருந்து இந்த அட்டவணைப் படுத்தப்பட்ட மரங்கள் கடத்தப்படுவதைத் தடுப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டே இத்திட்டம் அமுலாக்சப்பட்டது. குறிப்பாக, காப்புக் காடுகளிலிருந்து கள்ளத் தனமாக மரங்களை வெட்டி அகற்றும் குற்றங்களைத் தடுப்பதற்கு தமிழ்நாடு வனச் சட்டம் 1982-ல் போதிய விதிகள் இல்லாததைக் கருத்தில் கொண்டும், அதிலுள்ள சில தடைகளை நீக்குவதன் பொருட்டும் சட்டம் எண் 45/79-ல் அட்டவணைப்படுத்தப்பட்ட மர சம்பந்தமான எந்த குற்றங்களுக்கும் கடுமையான தண்டனைகளை உள்ளடக்கி

1990 மார்ச் 31]

அரசு இதை உருவாக்கியது. இச்சட்டத்தின்படி அட்டவணைப் படுத்தப்பட்ட மர சம்பந்தமான குற்றங்கள் செய்யப்பட்டால் அவர்களை ஜாமீனில் விடப்படாத மற்றும் பிடியாணையின்றி கைது செய்வதற்குரிய வழக்காக தீர்மானிக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின் தண்டனை விதிப்படி வழக்கமாகக் குற்றங்களைச் செய்யும் குற்றவாளிகளுக்கு அதிக பட்சமாக ரூபாய் 10,000 அபராதமும், அதிகபட்ச சிறைத்தண்டனையாக 5 வருடமும் தண்டனை வழங்கப்படும். மேலும், இச்சட்டத்தின்படி, அட்டவணைப்படுத்தப்பட்ட மர சம்பந்தமாக பதிவு செய்யப்படும் வழக்குகள் அனைத்தும் தேவையான சட்ட முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வழக்கு மன்றத்தில் வழக்காடப்பட வேண்டுவனவாகும்.

15.3. அரசு காடுகளில் அட்டவணைப்படுத்தப்பட்ட மரங்களைக் கள்ளத்தனமாக கடத்தல் செய்தால் கடுமையான தண்டனை வழங்கத் தக்க விதிகளை இச்சட்டம் கொண்டிருந்தாலும் வழக்கு மன்றங்களில் தற்போது இவ்வழக்கு நடத்துவதற்குத் தாமதமாவதாலும், குறைந்த அபராதங்களே வழங்கப்படுவதாலும், இவ்வழக்குகள் திறம்பட வழக்கு மன்றத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. மேலும் கள்ளத்தனமாக மரங்களை வெட்டுவதைத் தடை செய்வதில் தவிர்க்க முடியாத சில இடர்பாடுகளை வன அதிகாரிகள் சந்திக்க வேண்டியுள்ளது. உதாரணமாக 1973-74-லிருந்து 1987-88 ஆம் ஆண்டு வரை கண்டுபிடிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட சந்தன மரக் குற்றங்கள் இன்னமும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இது போன்ற நிலுவையில் இருப்பதற்குக் காரணம், அட்டவணைப் படுத்தப்பட்ட மரக் குற்றங்களின் மீது ஒரே மாதிரியான சட்ட நடவடிக்கை எடுப்பதேயாகும். மேலும் நீதி மன்றத்தில் அளவிட முடியாத காலதாமதத்தினால், முடிவில் குற்றங்களை விரைவாகவும், சரியாக நிரூபிக்க முடியாமலும், ஆகிவிடுகிறது. மாறாக கடத்தல்காரர்களையும் குற்றவாளிகளையும் ஜாமீனில் வெளியே விட்டுவிடுவதால் அவர்கள் மறுபடியும் அதே கடத்தலில் தீவிரமாக ஈடுபட ஏதுவாகிறது.

15.4. இதேபோன்று துறையினால் எதிர்கொள்ளப்படும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, இந்த அட்டவணைப்படுத்தப்பட்ட மரக் குற்றங்களை செய்வதற்கு பயன்படும் வாகனங்கள் மற்றும் கருவிகள் ஆகியவற்றைக் கைப்பற்றிப் பறிமுதல் செய்வதற்கு வன அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கும் சட்டத் திருத்தத்தை 1882 ஆம் ஆண்டின் தமிழ்நாடு வனச் சட்டத்திற்கு கொண்டுவர திருத்த மசோதா ஒன்று பரிசீலனையிலுள்ளது.

மேலும் இதேபோன்ற குற்றங்களை எல்லாம் நீதி மன்றத்தில் வழக்காடுவதற்குக் கொண்டு செல்வதற்கு பதிலாக அக்குற்றங்களை இழைத்தவர்களிடமிருந்து வன அதிகாரிகளே அபராதத்தினைப் பெற்றுக்கொண்டு விடுவிக்கும் குற்றமாக கொள்வதற்கு வழிவகை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற வனக் குற்றங்களை செய்பவர்களிடமிருந்து அபராதம் பெற்றுக் கொண்டு விடுவிக்கும் முறையினால் குற்றங்களை விரைவாக முடிக்க இது ஒரு சிறந்த வழியாகும். தமிழ்நாடு வனச்சட்டம் 1882-ல் அட்டவணைப்படுத்தப்பட்ட மரப்பட்டியலைத் தொடர்ந்து வருங்காலத்திலும் அமுல் செய்வது குறித்து கடந்த கால அனுபவத்தையும் நடவடிக்கைகளையும் கருத்திற்கொண்டு ஆலோசிக்கப்படும்.

மேலும் தமிழ்நாடு வனச்சட்டம் 1882-ல் உள்ள தப்பிக்கும் வழிகளை நீக்குவதை கருத்தில் கொண்டு, இச்சட்டத்தில் உள்ளடக்கியுள்ள சில விதிகளை திருத்துவதற்கு முழுமையான மசோதா வடிவில் திருத்தம் கொண்ட மசோதா ஒன்றை வடிவமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

15.5. தமிழ்நாடு தனியார் காடுகள் (பாதுகாப்பு) சட்டம், 1949 :

தனியார் காடுகள் தாறுமாறாக அழிக்கப்படுவதைத் தடுக்கவும், அக்காடுகளின் வாடிக்கையான நடைமுறைகளிலும் முறையான உரிமைகளிலும் தலையிடுவதைத் தடுப்பதற்கும் மற்றும் பல நோக்கத்திற்காகவும் இச்சட்டம் (தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம்) நிறைவேற்றப்பட்டது. இச் சட்டத்திற்காக மாவட்ட ஆட்சியாளரால் இம்மாநிலத்திலுள்ள 2 ஹெக்டேர் பரப்பிற்கு மேற்பட்டுள்ள நிலங்களைக் கொண்ட தனியார் காடுகளை வனங்களாக மாவட்ட அரசிதழில் அறிவித்துள்ள இடங்களனைத்தும் இச்சட்டத்தின் விதிகளுக்குப் பொருந்தும்.

15.6. தமிழ்நாடு மலைப்பகுதிகள் (மரப் பாதுகாப்பு) சட்டம், 1955:

இச்சட்டம் காடுகளை அழிவிலிருந்தும் மண் அரிப்பிலிருந்தும் காக்கவும் மற்றும் மலைப் பகுதிகளுக்கே உரிய சிறப்பு இயல்புகளைப் பாதுகாக்கவும் நில அமைப்பு இயற்கை சூழ்நிலை மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலை அழிவிலிருந்து பாதுகாக்கும் பொருட்டும் தமிழ்நாடு மலைப் பகுதிகள் (மரப் பாதுகாப்பு) சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1990 மார்ச் 31]

தகவல் தொடர்பு அமைப்பை நவீனமாக்குதல்.

15.7. பாதுகாப்பு பணிகளை மேலும் சிறப்பாக செய்யவும், வனச் செல்வங்களை பாதுகாக்கவும், யானை வேட்டை, சந்தன மர கள்ள வெட்டுகள் முதலியவைகளை தீவிரமாக கட்டுப் படுத்தவும், உடனுக்குடன் தகவல்கள் தெரிவிக்கவும், ஒருங் கிணைந்த செய்தி தொடர்பு அமைப்பு (உயர்வேக மின் அலை தொடர்பு வசதி) ஒவ்வொரு கட்டமாக எடுத்துக் கொள்ளப் பட்டு வருகிறது. அதன்படி முதல் கட்டமாக 18 உயர்வேக மின் அலை தொடர்பு வசதி சுமார் ரூ. 16.46 லட்சம் செலவில் நீலகிரி மாவட்டத்தில் 1986-87-ல் நிறுவப்பட்டுள்ளது. இரண் டாவது கட்டமாக சுமார் ரூ. 4.96 லட்சம் செலவில் 7 நிலை யான (Startic Stations) நிலையங்கள் தர்மபுரி, சேலம் மற்றும் ஓசூர் கோட்டங்களில் 1988-ல் நிறுவப்பட்டுள்ளன. மேலும் மூன்றாவது கட்டத்தில் விலை மதிப்புள்ள வனச் செல்வமான சந்தன மரங்கள் நிறைந்துள்ள வட ஆற்காடு (திருவண்ணா மலை சம்புவராயர்-வடாற்காடு அம்பேத்கார்) மாவட்டத்தில் ஜவ்வாது குன்றுகளில் நிறுவ வேண்டி பரிசீலனையிலுள்ளது. இதே போல் நாளடைவில் படிப்படியாக மற்ற வனப் பகுதி களிலும் உயர்வேக மின் அலைத் தொடர்பு வசதி விரிவுபடுத் தப்படவுள்ளது. இதற்கு மத்திய அரசின் ஆணை எதிர்பார்க் கப்படுகிறது.

15.8. வனப்பிரிவு (குற்றப் புலனாய்வுத் துறை) :

முக்கியமான வனக் குற்றங்களை புலனாய்வு செய்யவும் வன செல்வங்கள் கடத்தலை தடுக்கவும் குற்றப் புலனாய்வுத் துறை யில் ஒரு பிரிவு 1983-84-ல் வனத்துறையில் அமைக்கப்பட்டது. ஜூன் 1984 முதல் ஒரு காவல்துறைத் துணைத் தலைவர் பதவி ஏப்ரல் 1986-ல் காவல்துறை தலைவராக பதவி உயர்த்தப் பட்டது. இரண்டு காவல் கண்காணிப்பாளர் மற்றும் 50 சார்நிலைப் பணியாளர்களுடன் இக்குழு அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. 1-4-1989 முதல் 30-11-1989 முடி யவும் ரூ. 32.71 இலட்சம் மதிப்புள்ள வனப்பொருட்கள் 88 வழக்குகளில் கைப்பற்றப்பட்டுள்ளன. இதில் சந்தன மரத்தின் மதிப்பு ரூ 20.63 இலட்சமாகும். பாம்புத்தோலின் மதிப்பு ரூ. 6.82 லட்சமும், மற்றும் இதர வனப்பொருட்களின் மதிப்பு ரூ. 5.26 லட்சமும் அடங்கும். குறைந்த மதிப்புள்ள சிறு குற்றங்கள் வனத் துறைக்கு புலனாய்வு மற்றும் மேல் நடவடிக் கைக்கு மாற்றப்பட்டுள்ளன. அதைப் போலவே முதன்மை வனத்துறைத் தலைவர் 60 வனக் குற்றங்களை மேல் நட வடிக்கைக்காகவும், புலனாய்வு செய்யவும், இந்த பிரிவிற்கு மாற்றியுள்ளார். 30 வழக்குகள் நீதிமன்ற நிலுவையிலும், 26 வழக்குகள் புலனாய்விலும், 2 வழக்குகள் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டும், ஒரு வழக்கு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டுமுள்ளன. மற்றும் ஒரு வழக்கு முடிவுற்று எதிரிக்கு தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

[1990 மார்ச் 31

15.9. சந்தன மரக்கடத்தல் :

1989-90ல் டிசம்பர் வரை ரூ. 192.83 லட்சம் மதிப்புள்ள 184 டன்கள் எடையுள்ள சந்தன மரங்கள் கடத்தப்பட்ட 649 குற்றங்கள் பதிவு செய்யப்பட்டன. இக்குற்றங்களில் கைது செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 1,371. மேலும் 168 வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

சத்தியமங்கலம் மாவட்ட வன அலுவலரால் எடுக்கப்பட்ட அதிரடி நடவடிக்கையின் விளைவாக மாக்காம்பாளையம் பகுதியில் 6 லோடு சந்தன மரங்கள் கைப்பற்றப்பட்டன. இதுவே வீரப்பன் மற்றும் அவனது கையாட்களால் கடத்தி வைக்கப்பட்ட சந்தன மரங்களை பெரிய அளவில் முதன் முதலாக கைப்பற்றப்பட்டதாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தமிழகம் மற்றும் கர்நாடக மாநிலங்களின் காவல் துறையினரும் வனத்துறையினரும் இணைந்து எடுத்த நடவடிக்கையின் மூலம் 60 (அறுபது) டன் சந்தன மரங்கள் கைப்பற்றப்பட்டன. இதனையடுத்து, வீரப்பனிடம் வேலை செய்து வந்த 83 பேர் கைது செய்யப்பட்டனர். இந்தப் பெரிய அளவு மீட்பு மற்றும் கைதுக்குப் பின்னர், சந்தன மரக்கடத்தல் தடுத்து கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

15.10. வனக் குற்ற விவரம்:

1989—90 ஆம் ஆண்டில் ஜனவரி 1990 முடிய 29,878 வனக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு இணக்கக் கட்டணமாக ரூ. 25.99 லட்சம் வசூலிக்கப்பட்டது.

1,160 வனக் குற்றங்கள் நீதிமன்றத்தில் தற்போது நிலுவையில் இருந்து வருகிறது.

16. வனப்பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட திறமையான வீரச் செயல்கள்.

16.1. நல்ல முறையில் பணியாற்றிய வன அலுவலர்களுக்கு அவர்களுடைய திறமையினை போற்றும் அளவில் நற்சான்றிதழ் மற்றும் சுழற் கேடயம் கீழ்க்கண்டவைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது:—

1. வீரச் செயல்கள் புரிந்தவர்கள்

2. நல்ல முறையில் தோட்டம் எழுப்புவதற்கு

3. சிறந்த வன விலங்கு மண்டலம் நிர்வகித்தது

1990 மார்ச் 31]

4. சிறந்த் சந்தன மர வழக்கு பிடித்தது

5. சிறந்த வனப் பாதுகாப்பு குழுவிற்கு

16.2. விலையுயர்ந்த காட்டினை பாதுகாக்கவும் அதனுடைய வளத்தினை கெடுக்க முயற்சிக்கும் சமூக விரோதிகள் கடத்தல்காரர்கள், வேட்டையாடுபவர்கள், திருட்டுத் தனமாக மரம் வெட்டுபவர்கள் இவர்களிடமிருந்து காட்டினை பாது காக்க எல்லாவித முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வனத்தினை சமூக விரோதிகளிடமிருந்து காப்பாற்ற வனக் காவலர்கள் தங்களுடைய உயிரையும் பணயம் வைத்த பல்வேறு நிகழ்ச்சிகள் உண்டு.

17. முடிவுரை :

17.1. நாட்டின் மொத்த நிலப் பரப்பில் குறைந்த பட்சம் மூன்றில் ஒரு பகுதியாவது வனப் பரப்பாக இருக்க வேண்டு மென்ற தேசிய இலக்கை அடைய தகுந்த வழிமுறைகளை தேசிய வனக் கொள்கை வகுத்துள்ளது. தேசிய இலக்கினை எய்த வனப் பரப்பை அதிகரிப்பதற்கு தமிழக வனத் துறை முனைப்போடு பாடுபட்டு வருகிறது. இதற்கென, இயற்கை வளத்தைப் பாதுகாத்து வளர்க்கும் நோக்கில் பரந்த மரபியல், உயிரியல் அடிப்படை மற்றும் உயிரியல் மாறுபாடுகளைச் சார்ந்து வனத் துறையின் வளர்ச்சி அமைந்துள்ளது.

17.2. எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலமான 1990–95-ன் தொடக்க ஆண்டான 1990–91-ல் செயற் குழு வகுத்துத் தந்த கொள்கை, செயல்முறை நோக்கு மற்றும் ஆலோசனை களை கருத்திற் கொண்டு, துறையின் முழு சக்தியையும் தூண்டிவிட்டும் செயல்முறைப்படுத்தியும், முன்னுரிமை அடிப் படையில் திட்டங்கள் செயற்படுத்தியும் இயற்கைச் சூழலை சமநிலைப்படுத்தி சுற்றுப்புற ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதும் அதன் மூலம் அனைவரின் வாழ்க்கை தரத்தினை எல்லா வகையிலும் உயர்த்துவதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

மானியக் கோரிக்கை எண். 47

சுற்றுலாத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு 1990-91

சுற்றுலா இடங்களுக்குச் சென்று ஓய்வெடுக்கவும், பொழுது போக்கவும் வேண்டுமென்ற, அறிவார்ந்த ஆர்வமே இன்று சுற்றுலா வளர்ச்சிக்கு அடிப்படை ஆதாரமாக விளங்குகின்றது.

ஊதியத்துடன் விடுப்பு எடுப்பதற்குரிய வசதி, செலவிட அத்யாவசிய தேவைக்கு மேல் கூடுதல் வருமானம் ஆகியவையும் ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்கு பெருமளவில், விரைவில் பயணிகளை கொண்டு செல்லத் தக்க அளவிற்குப் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்டுள்ள மேம்பாடும், சுற்றுலா வளர்ச்சிக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளன. உலக அளவில் சுற்றுலா என்பது, முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக விளங்குகிறது. சிறிய, வளர்ந்து வரும், வளர்ச்சியடைந்த, நாடுகள் பலவற்றிற்கும் அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தருவதில் சுற்றுலா பெரும் பங்கு வகிக்கிறது. இத்துடன் சுற்றுலாவானது ஒரு தொழிலாகும். இது நாட்டிற்குள் தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கவும், இந்தியா போன்ற பெரு நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களிடையேயும், உலக மக்களிடையேயும் ஒருமைப்பாட்டையும் பண்பாட்டு பரிவர்த்தனையையும் ஏற்படுத்தவும் ஒரு கிரியா ஊக்கியாகச் செயல்படுகிறது. இந்தியாவில் சுற்றுலாவானது கடந்த பத்தாண்டுகளில் தான் விரைந்து வளர்ச்சியடையத் தொடங்கியது. தற்போது நாம் சுற்றுலாத் தொழிலில் தன்னியக்க வளர்ச்சியின் தொடக்க நிலையில் உள்ளோம்.

தமிழ்நாட்டில் சுற்றுலா வளம்

விடுமுறையை மகிழ்ச்சியாகக் கழிப்பதற்கும், சாகசச் செயல் புரிவதற்கும் தற்போது முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. தமிழ்நாடு, எழில்மிகு கடற்கரைகளைக் கொண்ட சுமார் 1,000 கி.மீ. நீளமுள்ள கடற்கரையோரப் பகுதியைக் கொண்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையில் மலை யேறுதல் போன்ற, சாகசச் செயல் புரிவதற்கும், வன விலங்குகளைக் கண்டு களிக்கவும் ஏராளமாக வாய்ப்புகள் உள்ளன. முட்டுக்காட்டிலும், பழவேற்காட்டிலும், கடலூரிலும், வட்டக்கோட்டையிலும் ஏனைய இடங்களிலும் பரந்த நீர்ப் பரப்பு உள்ளன. இவை நீச்சல், விளையாட்டுப் போட்டிகள், படகு விளையாட்டுப் போட்டிகள் போன்ற பலவகை நீர் விளையாட்டு போட்டிகள் நடத்த ஏற்ற இடங்களாகப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்புடையவை. இவை தவிர, பாரம்பரியமாக மக்களைக் கவர்ந்து வருகின்ற கலை, கட்டிடக் கலை, கோயில்கள், நுண்கலைகள், கைவினைப் பொருட்கள் ஆகியவையும் சுற்றுலா வளங்களின் ஏனைய கூறுகளாகும். அதோடு மலைவாழ் இடங்களும், அருவிகளும், தமிழ்நாட்டில் உள்ளன.

சுற்றுலாப் பயணிகள் வருகை

1988 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வருகை புரிந்த வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 12,39,992 ஆகும். 1989 ஆம் ஆண்டில் 13,37,232 வெளிநாட்டுச்

1990 மார்ச் 31]

சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர். 1988 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டிற்குச் சுற்றுலா வந்த வெளி நாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை 3,62,030 ஆகும். 1989 ஆம் ஆண்டில் இவர்களின் எண்ணிக்கை 3,69,883 ஆக உயர்ந்தது. 1988 ஆம் ஆண்டில் 51.56 மில்லியன் உள்நாட்டுப் பயணிகள் சுற்றுலாவை மேற்கொண்டனர். 1989 ஆம் ஆண்டில் சுற்றுலா மேற்கொண்ட உள்நாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை 58.86 மில்லியனாக அதிகரித்துள்ளது. அடிப்படை வசதிகளுக்கான தேவை ஆண்டுக்காண்டு அதிகரித்து வருவதை இப்புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்வதற்குரிய வசதிகளைப் பெருக்க உடனடியாக நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பதை, இது முன்கூட்டியே நமக்கு அறிவிக்கிறது. இயல்பான திட்டங்களைத் தீட்டி, குறிப்பிட்ட கால அளவில் அவற்றைச் செயல்படுத்த ஒருங்கிணைந்த திட்டமிட்ட உறுதியான அணுகு முறையை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தையும் இவை உணர்த்துகின்றன.

இந்தியா சுற்றுலா ஆண்டு 1991

இந்தியாவை குறிப்பிட்ட காலத்திற்குள் பன்னாட்டுச் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடமாக மேம்படுத்தத் திட்டம் ஒன்றை மத்திய அரசு வகுத்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, 1991 ஆம் ஆண்டு, "இந்தியச் சுற்றுலா ஆண்டாக" அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியப் பொருளாதாரத்தின் ஒரு முக்கிய ஊக்குவிக்கியாக சுற்றுலா உணரப்பட வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். இந் நோக்கம் ஈடேற பல்வேறு நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தென்னிந்தியாவின் சுற்றுலா வளம் குறித்து வெளிநாடுகளில் விளக்கமாக எடுத்துரைப்பது இந்த நடவடிக்கைகளில் ஒன்றாகும். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சுற்றிப் பார்க்க ஏதுவான வகையில் தென் மாநிலங்களில் உள்ள சுற்றுலா மையங்களை இணைத்து பல சுற்றுலாத் தடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தச் சுற்றுலா தடங்களில் வருகின்ற சுற்றுலா இடங்களை ஆய்வு செய்து, இந்தியச் சுற்றுலா ஆண்டின்போது எதிர்பார்க்கப்படும், அடிப்படை வசதிகளுக்கான தேவையை நிறைவு செய்ய, அடிப்படை வசதிகள் குறைவாக உள்ள அல்லது போதுமானதாக இல்லாத சுற்றுலா இடங்களில் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கும்படி மாநில அரசுகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்தியச் சுற்றுலா ஆண்டுக்கான ஏற்பாடுகளைக் கவனிக்க, வசதி மேம்பாட்டுக் குழு விற்பனை மற்றும் பிரச்சாரக் குழு ஆகியவற்றை அமைத்துள்ளோம்.

[1990 மார்ச் 31

இந்தியச் சுற்றுலா ஆண்டைக் கருத்தில் கொண்டு, நாடு முழுவதும் பல சுற்றுலாத் தடங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் கீழ்க்காணும் நான்கு சுற்றுலாத் தடங்கள் தமிழ்நாடு சம்பந்தப்பட்டவையாகும்.

1. கொச்சி—தேக்கடி—மதுரை—கொடைக்கானல்.

2. கோயம்புத்தூர்—உதகமண்டலம்—முதுமலை—மைசூர்—பெங்களூர்.

3. சென்னை—காஞ்சிபுரம்—மாமல்லபுரம்—பாண்டிச்சேரி—சென்னை.

4. சென்னை—திருச்சிராப்பள்ளி— தஞ்சாவூர்—நாகப்பட்டினம்—சிதம்பரம்—கங்கைகொண்டசோழபுரம்—திருச்சிராப்பள்ளி—சென்னை.

மத்திய அரசு அளித்துள்ள வழிமுறைகளின்படி, இந்த நான்கு சுற்றுலாத் தடங்களில் தமிழகத்தில் உள்ள சுற்றுலா மையங்களின் தேவைகளைக் கண்டறிவதற்காக ஆய்வு ஒன்று நடத்தப்பட்டுள்ளது. குறிப்பாக இந்தியச் சுற்றுலா ஆண்டில் வரவிருக்கும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்தில் கொண்டு இந்த ஆய்வு முடிவின் அடிப்படையில் சுற்றுலா மையங்கள் ஒவ்வொன்றின் தேவையையும் நிறைவேற்றக் கருதியுள்ளோம்.

அதே சமயத்தில் உள்நாட்டுச் சுற்றுலாவையும் நாம் மறந்துபடவில்லை. உள்நாட்டுச் சுற்றுலாப் பயணத்தை ஊக்கப்படுத்த முக்கியமான சுற்றுலா இடங்கள் மற்றும் புனிதத் தலங்கள் ஆகியவற்றின் அடிப்படை வசதிகள் அனைத்தையும் செய்து கொடுக்க முடிவு செய்துள்ளோம்.

மாநில அளவிலான ஆலோசனைக் குழு :

சுற்றுலா மேம்பாட்டுக் கொள்கைகளை வகுப்பதில் அரசுக்கு ஆலோசனை நல்க, மாநில அளவிலான சுற்றுலா ஆலோசனைக் குழு ஒன்றை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. சுற்றுலாத் தொழிலில் சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்கள், அரசு அலுவலர்கள் அல்லாதோர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

சுற்றுலா வளம் பற்றிய ஆய்வு :

சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த எந்த ஒரு பகுதியையும் வெளி உலகுக்குத் தெரிவிக்கவும், சுற்றுலாப் பயணிகளைக் கவரும்

1990 மார்ச் 31]

அதன் தனித் தன்மையை முழு அளவில் பயன்படுத்திக்கொள்ளவும் வேண்டுமாயின், அப்பகுதி பற்றிய விவரங்களை உரிய முறையில் கண்டறிய வேண்டும். எனவே, இம்மாநிலத்தில் வெளிநாட்டு, உள்நாட்டு, உள்ளூர் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்தில் கொண்டு, சுற்றுலாத் தொழிலின் மாறிவரும் பாங்குக் கேற்ப வருங்காலத் தேவைகளை மதிப்பிடுவதற்காகத் தமிழ் நாட்டின் சுற்றுலா வளம் குறித்து ஆய்வு ஒன்றை நடத்தக் கருதப்பட்டுள்ளது. மாநில அரசைக் கலந்து ஆலோசித்து மைய அரசின் செலவில் நடத்தப்படவிருக்கும் இந்த ஆய்வை மேற்கொள்ளக்கூடிய நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கும் பணி நடந்து வருகிறது. இந்த ஆய்வின் முடிவை அடிப்படையாகக் கொண்டு, எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயல்படுத்த மாநிலம் முழுவதற்குமான தொலைநோக்கு பெருந்திட்டம் ஒன்றைத் தயாரிக்கக் கருதப்பட்டுள்ளது. பெருந் திட்டத்தைத் தயாரிக்கையில், ஒவ்வொரு சுற்றுலா இடத்திலும் உயிரின வாழ்க்கைச் சூழலைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் சிறப்பாக முக்கியத்துவம் அளிக்கப்படும்.

சுற்றுலாத் தொழில் :

1986 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், தமிழ்நாட்டில், சுற்றுலா, ஒரு தொழிலாக அறிவிக்கப்பட்டது. சுற்றுலா ஒரு தொழிலாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இம்மாநிலத்தில் சுற்றுலாத் துறைக்கு அளிக்கப்பட வேண்டிய அனுகூலங்கள், சலுகைகள் ஆகியவற்றைக் கண்டறிவதற்கு அமைக்கப்பட்ட குழு, அதன் பரிந்துரைகளை அரசுக்கு அளித்துள்ளது. இந்தப் பரிந்துரைகள் குறித்து அரசு சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள், அமைப்புகள் ஆகியவற்றுடன் கலந்தாலோசித்து பரிசீலித்து வருகிறது.

சுற்றுலா திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு :

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநில திட்டப் பணிகளின் கீழ் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களுக்காக ரூ. 238.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், மத்தியச் சுற்றுலாத் துறை, இம்மாநிலத்தில் 37 சுற்றுலாத் திட்டங்களுக்கு ரூ. 442.93 இலட்சம் நிதியுதவி செய்துள்ளது.

மத்திய அரசு நிதியுதவி அளித்த 37 திட்டங்களில், 9 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. அவையாவன—பிச்சாரவம் மற்றும் குற்றாலத்தில் உணவகம் கட்டுதல், சிதம்பரத்தில் சுற்றுலா

வசதிகள் ஏற்படுத்துதல், கன்னியாகுமரியில் எட்டு கடற்கரை யோரக் குடில்கள் கட்டுதல், நாகபட்டினம் மற்றும் காஞ்சி புரத்தில் ஓட்டல் தமிழ்நாடு என்ற யாத்திரி நிவாஸ் பயணியர் விடுதி கட்டுதல், முதுமலை வனவிலங்கு உய்விடத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு வசதியாக இரண்டு சிறிய பேருந்துகளை வாங்குதல்' திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையில் பேரொளி வசதிகளை ஏற்படுத்தல், உதகமண்டலம் ஏரியில் விடுவதற்காக உல்லாசப் படகுகள் வாங்குதல்.

மத்திய அரசு நிதியுதவி அளிக்கும் பின்வரும் 15 திட்டங்களின் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன :—திருத்தனி, திருக்கழுக்குன்றம், ஓசூர், உத்திரகோசமங்கை ஆகிய இடங்களில் சாலையோர வசதிகள் ஏற்படுத்துதல், இராமேஸ்வரத்தில் தங்கும் இட வசதிகளுடன் சுற்றுலா வரவேற்பு மையம் அமைத்தல், பழவேற்காடு ஏரியில் படகுப் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்துதல். பாறை மற்றும் மலையேறும் மலை யேற்ற சாதனங்களை வாங்குதல், ஒகேனக்கல், திருவரங்கம், மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் குளியல் துறையில் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள் செய்து தருதல், ஏற்காட்டில் சுற்றுலா வளாகம் கட்டுதல், மதுரை வண்டியூர் கண்மாயில் உணவகம் கட்டுதல், கன்னியாகுமரிக்கும் விவேகானந்தர் நினைவுப் பாறைக்குமிடையே படகு விடுவதற்காகப் படகு வாங்குதல், மாமல்லபுரத்தில் பல்லவபுர சுற்றுலா வளாகம் அமைத்தல், பிச்சாவரம், சிதம்பரம், தரங்கம்பாடி, பூம்புகார், ஆகிய இடங்களின் மேம்பாட்டிற்கு ஒருங்கிணைந்த பெருந் திட்டம் தயாரித்தல்.

மத்திய அரசு நிதியுதவி அளிக்கும் பின்வரும் 13 திட்டங்கள் அண்மையில் எடுத்துக் கொள்ளப்பட்டன. கூடலூரில் வன ஓய்வு இல்லம் கட்டுதல், மேட்டுப்பாளையம், தூத்துக்குடி, கொடை ரோடு, திருநெல்வேலி, புதுக்கோட்டை, பழனி மற்றும் மேல் மருவத்தூரில் வழித்தட வசதிகள் ஏற்படுத்துதல், கன்னியாகுமரி விவேகானந்தர் நினைவுப் பாறையில் பேரொளி வசதிகள் ஏற்படுத்துதல், கன்னியாகுமரியில் சிற்றுண்டிச் சாலை அமைத்தல், பூம்புகாரில் பார்வையாளர் ஓய்வுக் கூடம் கட்டுதல், கடலூரில் சுற்றுலா வளாகம் அமைத்தல், பாபநாசம் குளியல் துறையில் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள் செய்து கொடுத்தல்.

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநில திட்டப் பணிகள் மற்றும் மத்திய அரசு நிதியுதவியுடன் முறையே 19 மற்றும் 37 திட்டங்கள் ரூ. 680.93 இலட்சம் செலவில் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இது தவிர மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 63.20 இலட்சம் செலவில் 9 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1990 மார்ச் 31]

எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம் :

இந்தியச் சுற்றுலா ஆண்டிற்காகத் தொகுக்கப்பட்ட சுற்றுலா தடங்களில் அமைந்துள்ள சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பது உடனடியாக கவனிக்க வேண்டிய பணியாகும். ஆனால் நீண்ட கால தேவைகளைக் கருத்திற்கொண்டும் நாம் திட்டங்கள் வகுக்க வேண்டியுள்ளது. சுற்றுலாத்துறை சம்பந்தப்பட்ட வரையில் எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 12,548 இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுலா திட்டங்கள் மேற்கொள்ள செயற் குறிப்புகளை மாநிலத் திட்டக் குழுவிற்கு அனுப்பியுள்ளோம்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்—மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உதகமண்டலத்தில், ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் வரவேற்புக் கூடம்—அருங்காட்சியகம் ஒன்றை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் லான்ஸ் அருவி (Lans Falls), டால்பின் முனை (Dolpein's No e) லாம்ஸ் பாறை (Lamb's rock), முதலிய இடங்களை ரூ. 6.00 இலட்சம் செலவில் மேம்படுத்தவும் கருதப் பட்டுள்ளது.

மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 15.00 இலட்சம் செலவில், கொடைக்கானல், குற்றாலம் ஆகிய இடங்களில் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களைச் செயல் படுத்த கருதப்பட்டுள்ளது.

எட்டம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், மாநிலத் திட்டப் பணிகளின்கீழ், தீட்டப்படும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளின் இலக்கை எய்துவதும், மத்திய அரசிடமிருந்து அதிக நிதியுதவியைப் பெறுவதும் நம் நோக்கமாகும். இந்த நோக்கத்தின் அடிப்படையில், முன்கூட்டியே நாம் பல திட்டங்களையும், திட்டப் பணிகளையும் தீட்டி வருகிறோம்.

தரங்கம்பாடி :

சிதம்பரத்திலிருந்து 45 கிலோ மிட்டர் தொலைவில் அமைந்துள்ள அழகிய கடற்கரையையுடைய தரங்கம்பாடியில் சில டேனிஷ் நினைவுச் சின்னங்களுள்ளன. இங்குள்ள நினைவுச் சின்னங்களை மேம்படுத்திப் பாதுகாப்பதில் டென்மார்க் அரசு ஆர்வம் காட்டியுள்ளது. டென்மார்க் அரசிடமிருந்து நிதி உதவி பெறுவது தொடர்பாக நாம் மத்திய அரசை அணுகி

யுள்ளோம். இந்நோக்கத்திற்காக, தரங்கம்பாடி மேம்பாட்டிற்கென ஒருங்கிணைந்த பாதுகாப்புத் திட்ட அறிக்கையைத் தயாரித்து வருகிறோம். இந்த விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்கும் பணி, அகமதாபாத்திலுள்ள வடிவமைப்பு தேசிய நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பூம்புகார் சுற்றுலா வளாகம் :

தமிழர்களின் பழம் பெருமையை விளக்கும் வகையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 1973 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பூம்புகார் சுற்றுலா வளாகம் கடல் அரிப்பினால் பாதிக்கப்படக் கூடிய நிலைமை உள்ளது. கடலரிப்பிலிருந்து இந்த நினைவுச் சின்னத்தை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். மாநில நீரமுத்தம், நீரியல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மாநிலப் பொதுப்பணித்துறை ஆகியவற்றைச் சேர்ந்த வல்லுநர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், கடல் அரிப்பிலிருந்து பூம்புகார் சுற்றுலா வளாகத்தைப் பாதுகாக்க கடற்கரை நெடுக ரூ. 65.00 இலட்சம் செலவில் சுமார் 900 மீட்டர் நீளத்திற்கு, கூழாங்கற்களைக் கொண்டு சுவர்கட்ட கருதப்பட்டுள்ளது. மேற்சொன்ன கட்டுமானப் பணியைத் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கக் கருதப் பட்டுள்ளது. இத்துடன், இவ்வளாகத்தை அழகுப்படுத்தி மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக 1989–90 ஆம் ஆண்டில், ரூ. 25.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கட்டபொம்மன் நினைவுக்கோட்டை, பாஞ்சாலங்குறிச்சி :

பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள கட்டபொம்மன் கோட்டை பெருமளவு உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து வருகிறது. இந்த நினைவுச் சின்னத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் சுற்றியுள்ள பகுதியை அழகுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது, குழந்தைகள் பூங்கா, விளையாட்டு வசதிகள் செலவில் ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது.

குடிநீர், கழிப்பிட வசதி போன்ற பிற வசதிகள் ரூ. 8.00 லட்சம்.

மாவட்ட சுற்றுலா மையங்கள் :

பொதுமக்களிடையே சுற்றுலா குறித்த விழிப்புணர்ச்சியை எற்படுத்தவும், உள்ளூர் மக்களிடையே சுற்றுலா செல்லும் பழக்கத்தை ஊக்குவிக்கவும் அரசு ''மாவட்ட சுற்றுலா மையம்'' திட்டத்தை வகுத்துள்ளது, இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள அணைக்கட்டுகள், நீர் வீழ்ச்சிகள் போன்ற இடங்களை தெரிந்தெடுத்து மாவட்ட சுற்றுலா மையங்களாக மேம்படுத்த கருதப்பட்டுள்ளது. இத்திட்டம் குறித்த செலவு

1990 மார்ச் 31]

சம்பந்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், உள்ளூர் நிதி ஆதாரங்கள், சுற்றுலாத்துறை ஆகியவற்றின் மூலம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், குடிநீர் வசதி, கழிப்பறைகள், உடை மற்றும் அறைகள், பேருந்து நிற்குமிட நிழற்குடைகள் முதலிய வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இச்செயல் நோக்கத்திற்காக, தற்போது எல்லா மாவட்டங்களிலுமாக 41 சுற்றுலா மையங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. 1983-84 ஆம் ஆண்டு முதல் 1889-90 ஆம் ஆண்டு வரையில், 16 மையங்களை மேம்படுத்த இது வரையில் ரூ. 50.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

விடுமுறை ஓய்வு கிராமம் :

ஜப்பான் அரசின் ஒத்துழைப்புடன் இந்தியாவில் தகுதி வாய்ந்த மையங்களில் விடுமுறை ஓய்வு கிராமங்கள் அமைக்க மத்திய அரசு கருதியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த 100 ஏக்கர் நிலம் தேவைப்படும். தமிழகத்தில் ஒரு விடுமுறை ஓய்வு கிராமம் அமைக்கத் தேவையான நிலத்தை கொடுக்க மத்திய அரசுக்கு நமது சம்மதத்தைத் தெரிவித்திருக்கிறோம்.

ஓட்டல்களை வகைப்படுத்துதல் :

தமிழ்நாடு அரசு ஓட்டல் வகைப்படுத்தும் குழு, ஒன்று மற்றும் இரண்டு நட்சத்திர ஓட்டல்களை ஆய்வு செய்து வகைப்படுத்தும் பணியை செய்து வருகிறது. தங்கும் இடவசதி சுற்றுலாவின் முக்கிய அம்சமாகும். எனவே தனியார் நிறுவனங்கள் ஓட்டல் கட்ட கடனுதவிபெற பரிந்துரைசெய்து வருகிறோம்.

சுற்றுலா புள்ளி விவரங்கள் :

சுற்றுலாத் துறையிலுள்ள புள்ளி விவர பிரிவு உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் குறித்த புள்ளி விவரங்களை சேகரிப்பதோடு மத்திய அரசின் சுற்றுலாத்துறை விற்பனை வசதி ஆராய்ச்சி பிரிவின் ஒத்துழைப்புடன் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களையும் தொகுத்து வருகிறது. சுற்றுலா மேம்பாட்டுத்திட்டம் வகுக்க மாவட்டங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களை அட்டவணைப்படுத்தி பகுப்பு செய்யப்படுகிறது.

உணவுக் கலைப்பயிற்சி நிறுவனம் :

மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் கூட்டாக நடத்தும் திருச்சிராப்பள்ளியிலுள்ள உணவுக் கலை நிறுவனம் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நிறுவப்பட்டது.

[1990 மார்ச் 31

இந்நிறுவனம், பின்வரும் முழு நேர ஓராண்டு சான்றிதழ் பயிற்சி வகுப்பினை நடத்தி வருகிறது :—

(அ) ஓட்டல் வரவேற்பு—கணக்கு வைப்பு முறை

(ஆ) சிற்றுண்டியகம்—நிலையப்பணி

(இ) ரொட்டித் தயாரிப்பு—இனிப்புப் பண்டம்

(ஈ) சமையல்

(உ) ஓட்டல் பராமரிப்பு

இந்நிறுவனம், ரொட்டி தயாரிப்பு, சமையல் இல்லப் பராமரிப்பு ஆகிய துறைகளில் இல்லத்தரசிகளுக்கு பகுதிநேர பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது. தென்னக இரயில்வே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முதலிய துறைகளில் பணியாளர்களுக்கு குறுகிய கால நினைவுகூர் பயிற்சி அளிக்கிறது இந்நிறுவனம், 1986 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் தமிழக அரசின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது. வெவ்வேறு உணவகத் தொழில் நுட்பவியல் பிரிவுகளில் ஆண்டு தகுதிப் பட்டயப் வகுப்பு நடத்தும் வகையில் இந்நிறுவனத்தின் நிலையை உயர்த்தக் கருதப்பட்டுள்ளது.

மலையேற்றத் திட்டம்

இந்திய இளைஞர் இல்லங்கள் சங்கத்தின் ஒத்துழைப்புடன் நீலகிரி (உதகமண்டலம்), பழனி மலைத் தொடர், கொடைக்கானல், பாபநாசம், குற்றாலம், ஏலகிரி மலை ஆகிய இடங்களிலும் ஏனைய இடங்களிலும் மலை ஏற்றத் திட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் அடுத்த ஆண்டும் தொடர்ந்து நடத்தப்படும்.

சாகசச் சுற்றுலா பயிற்சி நிலையம்

மலையேறுதல், ஹேங் கிளைடிங், நீர் விளையாட்டுகள் போன்ற சாகச விளையாட்டுகள் இளைஞர்களை பெரிதும் கவர்ந்துள்ளன. மேற்கு மலைத் தொடரிலுள்ள நீலகிரி மலையும், ஏனைய மலைத் தொடர்களும் சாகசச் சுற்றுலா முயற்சிக்கு அதிக வாய்ப்புள்ள இடங்களாகும். சாகசச் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு மத்திய அரசும் அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. எனவே, நீலகிரியில் ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் சாகசச் சுற்றுலாப் பயிற்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது; இதற்கு மைய அரசு நிதியுதவி அளிக்கும் என எதிர்பார்க்கிறோம்.

பாட

1990 மார்ச் 31]

சுற்றுலா மேம்பாடும் விளம்பரமும்

சுற்றுலா பயணிகளுக்கான விவரக் குறிப்புகள், புகைப் படங்கள், ஸ்லைடுகள், திரைப்படங்கள், வீடியோக்கள் போன்ற பல்வேறு விளம்பர உத்திகள் மூலம் இத்துறை சுற்றுலா குறித்து விளம்பரம் செய்து வருகிறது. பொருட்காட்சி, திரு விழாக்கள் போன்ற பொதுமக்கள் திரளாகக் கூடும் இடங்களில் விளம்பரம் செய்வதற்காக, சுற்றுலா அலுவலங்களுக்கு தேவை யான பொருட்காட்சி பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தின் சுற்றுலா சிறப்புகளை நாட்டின் பல்வேறு பகுதி களிலும், விளம்பரம் செய்ய, செய்தித் தாள்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றை பயன்படுத்துகிறோம். நாட்டிலுள்ள பல்வேறு மொழிப் பத்திரிகைகளில் வண்ண விளம்பரங்கள் வெளியிடப் பட்டு வருகின்றன. மேலும், இந்த பத்திரிகைகளைப் படிக்கும் வாசகர்களிடையே தமிழகத்து சுற்றுலா பற்றிய விழிப்புணர் வை தூண்டிவிடும் பொருட்டு 1989-90 ஆம் ஆண்டில் விளம் பர இயக்கம் ஒன்று செய்யப்பட்டது. இதற்கு நல்ல வர வேற்பு கிடைத்தது. இந்த விளம்பரங்களில் திருவிழாக்கள் பொருட் காட்சிகள், திருக்கோயில்கள், கடற்கரைகள், மலை வாழிடங்கள், நீர்விழ்ச்சிகள், புண்ணிய தலங்கள், சாகசச் சுற்றுலா வன விலங்கு சுற்றுலா முதலானவை குறித்து பல் வேறு கவர்ச்சிமிகு விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

பயண வர்த்தகர்களை விருந்தினராக அழைப்பது, சுற்று லாத் துறையின் மற்றொரு முக்கியமான நடவடிக்கையாகும். இத்திட்டத்தின் கீழ் பயண முகவர்கள், பயண எழுத்தாளர்கள், படமெடுப்பவர்கள், வீடியோ எடுக்கும் குழுவினர் ஆகி யோரை நமது விருந்தினர்களாக அழைத்து, நமது மாநிலத்தில் உள்ள உள்ளம் கவர் இடங்களையும் அவர்கள் நேரடியாகக் காண்பதற்கு வகை செய்வதன் மூலம் அவர்கள் நேரில் கண்டு மகிழ்ந்தவற்றையும், அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தை யும் குறிப்பிட்டு கட்டுரைகள், புகைப்படங்கள் வீடியோ படங்கள், திரைப்படங்கள் மூலம் தெரிவிப்பதால் நம் மாநில சுற்றுலாத் தலங்களுக்கு அவர்களது நாட்டில் நல்ல விளம்பரம் கிடைக்கிறது.

பொருட்காட்சிகளும் திருவிழாக்களும்

சுற்றுலா மேம்பாடு மற்றும் விளம்பரம் ஆகிய முயற்சிகளின் ஒரு பகுதியாக, சுற்றுலாத் துறை திருவிழாக்களிலும், பொருட் காட்சிகளிலும் பங்கு கொள்கிறது. மலைவாழிடங்கள் அனைத் திலும் கோடை விழாக்களுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. முக்கியமான சுற்றுலா இடங்கள் அனைத்திலும் பொங்கல் திருவிழா கொண்டாடப்படுகிறது. பூம்புகாரில், சித்திரை முழு

நிலவு விழா, குற்றாலத்தில் சாரல் விழா, பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் திருவிழா ஆகியவை சுற்றுலாத் துறை கொண்டாடும் வேறு சில திருவிழாக்களாகும். தமிழ்நாட்டின் சுற்றுலா வளத்தை எடுத்துக் காட்டுவதற்காக மாநிலத்திற்குள்ளும், வெளியேயும் நடைபெறும் பொருட்காட்சிகளில் அரங்கம் அமைக்கப்படுகிறது.

திருவிழாக்கள் விவரக் குறிப்பு

இந்தியாவின் முக்கிய திருவிழாக்கள் குறித்து மத்திய அரசு வெளிநாடுகளில் விளம்பரம் செய்கிறது. இதனால், இந்த திருவிழாக்களுக்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பெரும் எண்ணிக்கையில் வருகின்றனர். எனவே, தமிழ்நாட்டின் முக்கியமான திருவிழாக்கள் பற்றிய விளம்பர குறிப்புகளைத் தயாரித்து வெளிநாட்டில் நடத்தப்படும் விளம்பர இயக்கத்தில் அவற்றைச் சேர்க்க அனுப்பியுள்ளோம்.

தமிழ்நாட்டின் சுற்றுலா வளர்ச்சியை எடுத்துக் காட்ட இந்திய சுற்றுலா முகவர்கள் சங்கம் ஆண்டுதோறும் நடத்தும் கருத்தரங்கிலும், இதே போன்ற ஏனைய அமைப்புகளிலும் சுற்றுலாத்துறை பங்கு கொள்கிறது.

சுற்றுலாத் தகவல்

இம்மாநிலத்தில் மொத்தம் 11 சுற்றுலா அலுவலகங்கள் உள்ளன. மேலும், புது தில்லி, கல்கத்தா ஆகிய நகரங்களிலும் சுற்றுலா அலுவலகங்கள் உள்ளன. முக்கிய ரயில் சந்திப்புக்கள், விமான நிலையங்கள் போன்றவற்றில் சம்பந்தப்பட்ட சுற்றுலா அலுவலகங்களின் கட்டுப்பாட்டின்கீழ் 13 சுற்றுலாத் தகவல் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. 1990-91 ஆம் ஆண்டில், சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் சுற்றுலா தகவல் மையம் ஒன்றை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி வகுப்பு

சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்திலும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்ட அந்த இடங்கள் பற்றி நன்கு அறிந்துள்ளவர்கள் வழிகாட்டிகளாக இருப்பதும், அவர்கள் போதிய எண்ணிக்கையில் கிடைக்கப் பெறுவதும், சுற்றுலா வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாகும். சென்னை தவிர, பிற இடங்களில் சுற்றுலா வழிகாட்டிகள் இல்லை. ஆகவே, சுற்றுலாத் துறை, சென்னையில் உள்ள மத்திய அரசு வட்டாரச் சுற்றுலா அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் முக்கியத்துவம் வாய்ந்த பிற இடங்களில் பயிற்சி பெற்ற சுற்றுலா வழிகாட்டிகள்

1990 மார்ச் 31]

கிடைக்கச் செய்யும் பொருட்டு, மதுரை, உதகமண்டலம் ஆகிய இடங்களில் சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி வகுப்பு நடத்த ஏற்பாடு செய்தது. சுற்றுலா வழிகாட்டிப் பணி முழுநேரப் பணியாக இல்லாததால், சுற்றுலா வழிகாட்டிகள் தங்களுக்கு முழுநேர வேலைவாய்ப்பு கிடைத்தவுடன் இந்தப் பகுதி நேர வழிகாட்டிப் பணியை விட்டுச் செல்கின்றனர். ஆகவே, சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பயிற்சி பெற்ற புதிய சுற்றுலா வழிகாட்டிகளை நியமிக்க, குறித்த காலத்திற்கொருமுறை சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி வகுப்புகளை நடத்துவது இன்றியமையாததாகிறது. எனவே 1990-91 ஆம் ஆண்டில் மற்றுமொரு சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி வகுப்பை நடத்தக் கருதப்பட்டுள்ளது.

புகார் பிரிவு :

சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் கவனிப்பதற்கென்று சுற்றுலா இயக்ககத்தில் புகார்ப் பிரிவு ஒன்று உள்ளது. இப்பிரிவு, புகார்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்று, விரிவான விசாரணை நடத்தி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் :

தமிழ்நாட்டில் சுற்றுலாவிற்குத் தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகளை அமைத்து, சுற்றுலாவை, வணிக முறையில் மேம்படுத்தும் முக்கிய நோக்கத்துடன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இக்கழகம் தொடங்கப்பட்டபோது தமிழ்நாடு அரசிடமிருந்து ஐந்து சுற்றுலா மாளிகைகளை எடுத்துக் கொண்டது. தொடக்கத்தில், இக்கழகம், சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிட வசதி அளித்தல், அவர்கள் சுற்றிப் பார்க்க விரும்பும் இடங்களுக்கு அவர்களை அழைத்துச் செல்லுதல் ஆகிய இரு முக்கிய நோக்கங்களில் கவனம் செலுத்தியது. பின்னர், இக்கழகம் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் வழித்தட வசதிகளை ஏற்படுத்தியது. தற்போது, இக்கழகம், தமிழ் நாட்டில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து இடங்களிலும், ''ஓட்டல் தமிழ்நாடு'' வாயிலாகப் பின்வரும் சுற்றுலா வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து வருகிறது;—

1.	ஓட்டல்கள்	23
2.	இளைஞர் இல்லங்கள்	11
3.	சிற்றுண்டிச் சாலைகள்	4

[1990 மார்ச் 31

4. சுற்றுலா வளாகங்கள் 2

5. படகு வீடுகள் 8

6. தொலைநோக்கு கருவி அமைத்துள்ள இல்லங்கள். 4

இந்த 23 ஓட்டல்களில், 12 ஓட்டல்கள் நட்சத்திர ஓட்டல்களாகும். 1988-89 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட உள் அலங்காரம் உட்பட மேம்பாட்டுத் திட்டம். 1989-90 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. இதனை சுற்றுலாப் பயணிகள் பெரிதும் பாராட்டியுள்ளனர். உணவு வசதிகள் உட்பட ஓட்டல்களின் தரத்தை மேம்படுத்த பெரிதும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. 1989-90 ஆம் ஆண்டில் பின் வரும் பிரிவுகள் தொடங்கப்பட்டன.—

1. கன்னியாகுமரியில் கடற்கரைக் குடில்கள்

2. நாகப்பட்டினத்தில் யாத்ரி நிவாஸ் (ஓட்டல் தமிழ் நாடு) என்ற பயணியர் இல்லம்

3. குற்றாலத்தில் சிற்றுண்டிச் சாலை.

கழகத்தின் அடுத்த முக்கிய பணி, சுற்றுலாப் பயணிகளுக்குப் போக்குவரத்து வசதிகளை அளிப்பதாகும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்யும், சுற்றுலாக்கள் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளிடையேயும், வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளிடையேயும் மிகவும் பிரபலமாக உள்ளது. சுற்றுலாப் பயணிகளின் தேவை அதிகரிப்பதற்கேற்ப, போக்குவரத்துப் பிரிவு முழுவதும் சீரமைக்கப்பட்டுள்ளது.

கழகம் தற்போது பின்வரும் சுற்றுலா பயணங்களுக்கு ஏற்பாடு செய்கிறது :—

1. சென்னை மாநகரைச் சுற்றிப் பார்த்தல்— அன்றாட சுற்றுலா.

2. சென்னை-காஞ்சிபுரம்-மாமல்லபுரம்— அன்றாட சுற்றுலா.

3. சென்னை — வண்டலூர் விலங்குக் காட்சியகம் — அன்றாட சுற்றுலா.

4. சென்னை-திருப்பதி— அன்றாட சுற்றுலா

5. ஐந்து நாள் தென்னிந்திய சுற்றுலா

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 மார்ச் 31]

6. எட்டுநாள் தமிழ்நாடு சுற்றுலா

7. ஏழுநாள் மந்திராலயா—கோவா சுற்றுலா

8. ஐந்து நாள் மூகாம்பிகை சுற்றுலா

9. வார இறுதி சுற்றுலா

10. மாணவர்கள் சுற்றுலா

11. 14 நாள் தென்னிந்திய சுற்றுலா

தற்போது இக் கழகத்திடம் 25 பேருந்துகள் உள்ளன. இவற்றில் குளிர்சாதன வசதியுடைய 2 பேருந்துகள், குளிர் சாதன வசதியுடைய 5 சிறு பேருந்துகள், சாதாரண சிறு பேருந்து ஒன்றும், குளிர் சாதன வசதியுடைய 3 கார்கள் ஆகியவையும் அடங்கும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஒரு பிரிவான ''தமிழ் டூர்ஸ் அண்டு ட்ராவல்ஸ்'' தனியார் உரிமையாளர்களிடமிருந்து கார்களையும், பேருந்துகளையும் வாடகைக்கு வாங்கி சுற்றுலாப் பயணிகளுக்கு அளிக்கிறது. சொகுசுப் பேருந்துகளையும், கார்களையும் பராமரிப்பதற்கு இக்கழகத்திடம் தொழில் நுட்பத் தகுதி வாய்ந்த பணியாளர்களைக் கொண்ட பணிமனை உள்ளது. மூன்றாண்டுகளுக்கும் மேலாக சாலையில் ஓடிய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 1989-90 ஆம் ஆண்டில், பழைய பேருந்துகளுக்குப் பதிலாக 8 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகளுக்கு மேம்பட்ட வசதிகளையும், நவீன வசதிகளையும் அளிப்பதற்காக, நவீன தொழில் நுட்ப உத்தியுடன் இப்பேருந்துகள் கட்டப்பட்டுள்ளன.

1989-90 ஆம் ஆண்டில் மேலும் அதிக சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பொருட்டு, சுற்றுலாப் பயணங்களில் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயமும், வண்டலூர் விலங்கியல் பூங்காவும் சேர்க்கப்பட்டுள்ளன. ஆந்திரப் பிரதேசம், கேரளம், கருநாடகம், தமிழ்நாடு ஆகிய தென் மாநிலங்கள் அடங்கிய தென்னிந்திய சுற்றுலா 1989-90 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

போக்குவரத்துப் பணிகள் பரவலாக்கப்பட்டுள்ளன. கோடைக் காலங்களில் மலை வழியிடங்களில் சுற்றுலாப் பயணங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பேருந்துகளில் பயணம் செய்யும் சுற்றுலாப் பயணிகளின் கருத்துக்களை அடிக்கடி தெரிந்து அதன் அடிப்படையில் இச் சுற்றுலாக்கள் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன.

[1990 மார்ச் 31

பொருட்காட்சிகள் :

சென்னையில் ஆண்டு தோறும் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை நடத்துவது இக் கழகத்தின் முக்கிய டணிகளில் ஒன்றாகும். 1988-89 ஆம் ஆண்டில், இப் பொருட்காட்சி 1989 ஜனவரி 5 முதல் ஏப்ரல் 10 வரை 102 நாட்களுக்கு பொருட் காட்சித் திடலில் நடை பெற்றது. 1989-90 ஆம் ஆண்டு பொருட் காட்சி 22—12—1989 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. 1989-90 ஆம் ஆண்டு பொருட்காட்சி, அரசு, தனியார் அரங்குகளுடன் வழக்கமான கவர்ச்சியுடன் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. புதுதில்லி பிரகதி மைதானம் போன்று நிரந்தரமான பொருட்காட்சியை ஏற்படுத்துவதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந் நோக்கத்திற்காக ரூ. 1.50 கோடிக்குத் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

செயல் திட்டங்கள் :

1989-90 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன:—

1. கன்னியாகுமரியில் 8 கடற்கரைக் குடில்கள் (தமிழ்நாடு ஓட்டல்).

2. நாகப்பட்டினத்தில் யாத்ரி நிவாஸ் (ஓட்டல் தமிழ்நாடு) என்ற பயணியர் விடுதி.

3. மண்டபத்தில் இளைஞர் இல்லம்.

4. மண்டபத்தில் 6 கடற்கரை இரட்டைக் குடில்கள்.

5. குற்றாலத்தில் சிற்றுண்டிச் சாலை (ஓட்டல் தமிழ்நாடு).

6. காஞ்சிபுரத்தில் யாத்ரி நிவாஸ் (ஓட்டல் தமிழ்நாடு) என்ற பயணியர் விடுதி.

1990-91 ஆம் ஆண்டில், பின்வரும் செயல் திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன :—

1. திருக்கழுக்குன்றத்தில் வழித்தட வசதிகள்.

2. திருத்தணியில் வழித்தட வசதிகள்.

3. ஒசூரில் வழித்தட வசதிகள்.

1990 மார்ச் 31]

4. மேல்மருவத்தூரில் வழித்தட வசதிகள்.

5. இராமேஸ்வரத்தில் சிற்றுண்டிசாலைக் கட்டிடம்.

6. ஏற்காட்டில் சுற்றுலா வளாகம்.

7. பூம்புகார் சுற்றுலா வளாகம் மேம்படுத்தல்.

8. உதகமண்டலத்தில் உள்ள படகு இல்லம் மேம்படுத்தல்.

9. உதகமண்டலத்திற்கு சிறிய பேருந்து ஒன்றை வாங்குதல்.

10. திருச்செந்தூரில் 64 படுக்கைகள் கொண்ட துயிற்கூடம் கட்டுதல்.

11. திருச்சியில் இளைஞர் இல்லம்.

12. உதகமண்டலம் இளைஞர் இல்லத்திற்குக் கூடுதல் கட்டிடம்.

நிதி :

இக்கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 2.79 கோடியாகும். அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 7.00 கோடியாகும். இக் கழகம் 1987-88 ஆம் ஆண்டில் ஈட்டியத் தொகை, ரூ. 499 இலட்சமாக இருந்தது. இது 1988-89ஆம் ஆண்டில் ரூ. 659 இலட்சமாக உயர்ந்துள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 32 சதவீதம் அதிகமாகும். இக் கழகத்தின் நிலையான இருப்புகள் 1988-89 ஆம் ஆண்டில் ரூ. 45.94 இலட்சம் கூடுதலாயிற்று. இக் கழகத்தைச் சேர்ந்த ஓட்டல்கள் மூலம் 1987-88 ஆம் ஆண்டில் ஈட்டிய தொகை ரூ. 345 இலட்சமாக இருந்தது. இது 1988-89ஆம் ஆண்டில் ரூ. 424 இலட்சமாக உயர்ந்துள்ளது.

இது 1987-88 ஆம் ஆண்டைவிட 23 சதவீதம் அதிகமாகும். 1988-89 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொருட்காட்சியின் மூலம் ஈட்டிய தொகை ரூ. 74.22 இலட்சமாகும். 1989-90 ஆம் ஆண்டில் ஈட்டும் தொகை ரூ. 778 இலட்சத்தை எய்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் போக்குவரத்துப் பிரிவின் மூலம் வருமானம் ரூ. 160 இலட்சமும், ஓட்டல்களின் மூலம் வருமானம் ரூ. 533 இலட்சமும், சுற்றுலாப் பொருட்காட்சி நடத்துவதன் மூலம் வருமானம் ரூ. 85 இலட்சமும் அடங்கும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS